தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

March 97, vol 26, no 1

D
V211, 31N97
N97 26.1
49

வெளியீடு 16-4-98 Issued 16-4-98

1158/98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 27, 1997 – தொகுதி 26 – எண் 1

**Thursday the 27th March, 1997 – Volume 26 – No. 1**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai-600 009**


216649

Price Rs. [illegible]

27-03-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| *உடுக்குறியிடாத வினாக்கள் (ஏழாம் பட்டியல்)* | 1-38 |
| *2.* **தகவல் கோரல்--** | |
| அமரர் ராஜிவ் காந்தி வழக்கில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதாவுடன் எடுத்துக் கொண்டதாக பத்திரிகைகளில் வெளிவந்த புகைப்படம் குறித்து | 39-60 |
| *3.* **பேரவை விதி *110*-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை--** | |
| பெரியார் மாவட்டத்தில் தென்னை மரங்களைப் பூச்சி தாக்கியுள்ளமை | 60-62 |
| *4.* **மானியக் கோரிக்கைகள், *1997-98*, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் *27* - ஊரக வளர்ச்சி<br>(ஆ) கோரிக்கை எண் *48* - குடிநீர் வழங்கல்<br>(இ) கோரிக்கை எண் *49* - நகராட்சி நிருவாகம் | 62-247 |
| மாண்புமிகு திரு. கோ. சி. மணி | 62,65,68, 71, 185-241 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 71-77 |

பக்கங்கள்


4. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி.

| | |
|---|---|
| திரு. உ. திசைவீரன் | 77-82 |
| *திரு. கே. கே. வீரப்பன் | 82-88 |
| திரு. சி. வேலாயுதன் | 88-93 |
| *திரு. கு. ரவி அருணன் | 94-98 |
| *திரு. டி. மணி | 98-104 |
| திரு. எல். மூக்கையா | 104-109 |
| திரு. வி. முத்து | 109-112 |
| திரு. ஜி. பழனிசாமி | 113-121 |
| *டாக்டர் அ. மணி | 121-126 |
| திரு. த. பூவேந்தன் | 126-130 |
| திரு. எஸ்.எஸ். மணி நாடார் | 130-133 |
| திரு. வ. வேலுசாமி | 133-137 |
| *திரு. பி. வெங்கடசாமி | 138-142 |
| திரு. மாரி அய்யா | 142-148 |
| திரு. எஸ்.எஸ். முகமது இஸ்மாயில் | 148-154 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 155-161 |
| திரு. வி.ஜி. தனபால் | 161-165 |
| திரு. ப. கோவிந்தன் | 165-169 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 169-175 |
| திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் | 175-185 |

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- 247-248


216647



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—செல்வி எம். ஃபாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச்சீட்டு.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற் கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்.** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.** : **மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப் பணித் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர். : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர். : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. கே. என். நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பாற் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. வணிக வரிகள் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:
வணிக வரிகள்.

15. கைத்தறித் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:
வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.

21, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
இந்து சமய அறநிலையத் துறை.

22. சமூக நலத் துறை அமைச்சர். : மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :
சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:
சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.

26. மீன்வளத் துறை அமைச்சர். : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity.** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration.** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru S. Arumugham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works.** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport.** .. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Madras Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture.** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation.** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies and Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms.** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes.** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry.** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration.** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity.** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Pulavar B.M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare.** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Schemes.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare.** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:**
Adi-D-avidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**
Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi and Printing** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:**
Khadi Board. Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press.

26. **Minister for Fisheries**.. **The Hon. Tmt. S. Jenefer Chandran:**
Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

*மாண்புமிகு* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

**பேரவைத் துணைத் தலைவர்**

*மாண்புமிகு* **திரு. பரிதி இளம்வழுதி**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. திரு. வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ. சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
## முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| *1.* | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| *2.* | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| *3.* | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| *4.* | திரு. டி. சுந்தரராஜலு, எம். ஏ. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| *5.* | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| *6.* | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| *7.* | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| *8.* | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| *9.* | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| *10.* | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| *11.* | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| *12.* | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| *13.* | திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| *14.* | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| *15.* | திரு. க. ராஜகுரு, | .. குழு அலுவலர் |
| *16.* | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எட். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 32. | திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | .. உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்திப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு

22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

23. ஆறுமுகம், திரு. சோ. .. வீரபாண்டி

24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு

25. ஆற்காடு வீராசாமி, திரு. நா. .. அண்ணாநகர்

26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)

31. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

32. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை

33. இராமசாமி, திரு. வை. .. பண்ருட்டி

34. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்

35. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்

36. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

37. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

38. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

39. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு

40. இராமஜெயம், திரு. ந. பூ. .. மைலாப்பூர்

41. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

42. இராஜேந்தர், திரு. டி. .. பூங்காநகர்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி

48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்

49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்

54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை

58. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா. .. சிவகங்கை

59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி

61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்

62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

65. கோபால், திரு. பா. .. மேட்டூர்

66. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

67. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

68. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

69. கோவிந்தன், திரு. வி. .. பேரணாம்பட்டு (செ.வ.)

70. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

71. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

72. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

73. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

74. சந்தானம், திரு. எல். .. சோழவந்தான்

75. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

76. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

77. சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ்... சமயநல்லூர் (செ.வ.)

78. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

79. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

80. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

81. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

82. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

83. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

84. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

85. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

86. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

87. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி



88. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

89. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

90. சீனிவாசன், திரு. ஏ. ஆர். ஆர். .. விருதுநகர்

91. சுகவனம், திரு. இ. ஜி. .. பர்கூர்

92. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

93. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

94. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

95. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

96. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

97. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

98. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

99. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

100. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

101. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

102. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

103. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

104. செங்குட்டுவன், புலவர் பூ. ம. .. மருங்காபுரி

105. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

106. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

107. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

108. செல்வராஜ், திரு. டி. .. உடுமலைப்பேட்டை

109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

110. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் (மேற்கு)
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி



134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே. என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல்ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர். கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என்... பவானி
158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161. புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என். கே. கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (.ஆ.வா)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, திரு. எஸ். எஸ். .. பல்லடம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.
173. மகேந்திரன், திரு. .ஆர். .. நாட்ராம்பள்ளி
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்
176. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்



179. மணிக்கண்ணன், திரு. ஆ. ஜெ. .. திருநாவலூர்
180. மணி நாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்
181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
187. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை
188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
191. முத்து, திரு. வி. .. சங்கிரி (செ.வ.)
192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
193. முபாரக், திரு. பா. மு. .. கூடலூர்
194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
196. முனிரத்தினம், திரு. ஆ. மு. .. சோளிங்கர்
197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ். கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி. கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
213. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே. எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி. சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கோ. க. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே. வே. ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்



223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்.
224. வேடம்மாள், திருமதி ஏ. ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ். கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ. அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு. ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு. க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி'மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 14, தாது திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 மார்ச் 27, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வான்இன்று அமையாது ஒழுக்கு."*

*உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்
### (ஏழாம் பட்டியல்)

1—

### நாகவேடு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்

**வினா எண் 2867—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, நாகவேடு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

[1997 மார்ச் 27

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி நாகவேடு அரசினர் உயர்நிலைப் பள்ளி தற்போது 7 வகுப்பறைகளுடன் இயங்கி வருகிறது. பள்ளியில் மொத்தம் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 750 ஆகும். இன்னும் இப்பள்ளிக்கு 6 வகுப்பறைகள் கூடுதலாகத் தேவைப்படுகிறது. பள்ளிக்கு 2.17 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. பகுதி 2 இணை மானியத் திட்டத்தின்கீழ் கூடுதலாக வகுப்பறைகள் கட்டிக்கொள்ள 25 சதவிகிதம் பெற்றோர் ஆசிரியர் கழக பங்குத்தொகை செலுத்த இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் இசைவினை தெரிவித்துள்ளது. இப்பள்ளியின் சார்பாக கருத்துருக்களை பெற்றபின் நாகவேடு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டிக்கொடுக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

### அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்

**வினா எண் 2961—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 5 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1997 மார்ச் 27]

3—

### அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி

**வினா எண் 3468—திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம், செவல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டிட வசதி செய்து தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 718, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை நாள் 4-10-1996-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி ரூ. 6.03 இலட்சம் செலவில் மூன்று வகுப்பறைகள் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுள் திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம், செவல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியும் ஒன்றாகும்.

4—

### விளையாட்டு மைதானம் ஏற்படுத்துதல்

**வினா எண் 3523—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், வேலூர், தோட்டப்பாளையம் பெண்கள் நகராட்சி மேல்நிலைப்பள்ளிக்கு விளையாட்டு மைதானம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பள்ளி வளாகத்தில் 10 சென்ட் விஸ்தீரணமுள்ள காலியிடம் விளையாடுமிடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிக்கருகில் புறம்போக்கு இடம் ஏதுமில்லை. கொடைக்குணமிகுந்த செல்வந்தர்கள் பள்ளிக்கு, விளையாட்டு மைதானத்திற்கு நிலம் கொடுக்க முன்வந்தால், விளையாட்டு மைதானம் அமைக்க ஆவன செய்யப்படும்.

5—

### சாத்தனூரில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி துவங்குதல்

**வினா எண் 4178— திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூரில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி துவங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சாத்தனூரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் பெண்கள் தற்சமயம் கல்வி பயின்று வருகிறார்கள். சாத்தனூரிலிருந்து 4 கி.மீ. தொலைவில் சி. செண்பனந்தல் என்னும் ஊரில் ஒரு அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. ஒவ்வொரு கல்வியாண்டிலும் சாத்தனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே, அப்பகுதியில் மகளிர் உயர்நிலைப் பள்ளி துவங்குவதற்கான தேவை உள்ளது. இதற்கான இடம், தளவாட வசதி மற்றும் பொது மக்கள் பங்குத் தொகை போன்றவற்றை அளிக்க உள்ளூர் பொது மக்கள் முன்வந்தால் சாத்தனூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி துவங்க அரசு விதிகளின்படி நடவடிக்கை எடுக்கும்.

6—

### அரசு மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்

**வினா எண் 4344—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்ட ஆவன செய்யப்படுமா?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் போதிய இடவசதி உள்ளது. மேலும் புதிதாக கட்டிடம் கட்டப்பட வேண்டிய அவசியம் இல்லை. பழுதடைந்த கட்டிடங்களைப் பழுதுபார்க்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

**வினா எண் 1160— திரு. பா. மு. முபாரக்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் வட்டம் மூனநாடு கிராமம் எண் 2 அம்பளமூலாவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அம்பளமூலா ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டிடங்கள் கட்ட ஒரு ஏக்கர் நிலம் பெறப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அம்பளமூலா மற்றும் சோரூர்முட்டம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ. 30 இலட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற்கான நிலம் 29-5-1996-ம் நாளில் பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுப்பணித் துறையினர் விரைவில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு முடிப்பார்கள்.

8—

[1997 மார்ச் 27

**பகுதி நேர மருத்துவமனை தொடங்குதல்**

**வினா எண் 2139—திரு. ஆ. வெங்கடாசலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மின்சார வாரிய மத்திய அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பகுதி நேர மருத்துவமனை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) விழுப்புரம் உட்பட தமிழ்நாடு மின்வாரிய விநியோகப் பிரிவில் தலைமை அலுவலகங்கள் உள்ள இடங்களில் பகுதி நேர மருத்துவமனை தொடங்க தற்சமயம் போதுமான நிதிவசதி இல்லை. எனவே, தற்போது பகுதிநேர மருத்துவமனை தொடங்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

9—

**தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம்**

**வினா எண் 5365—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வரக் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

தமிழக அரசு குடும்ப நலத் திட்டங்களை சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறது. தமிழகத்தின் பெரும் தலைவர்களும் இத்திட்டத்திற்கு ஊக்கம் அளித்துள்ளனர். இதனால் கருத்தடை செய்து கொள்வோர் எண்ணிக்கை அதிகரித்ததுடன் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோரும் அதிக அளவில் உள்ளனர். மேலும் பல்வேறு தாய்சேய் நலத் திட்டப் பணிகள் மூலம் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் பிறந்த குழந்தைகள் இறப்பு தவிர்க்கப்படுகிறது. இவ்வாறு பல்வேறு காரணங்களால் பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது.



10—

**மன்னார்குடி தொகுதியில் புதிய டிரான்ஸ்பார்மர்கள் அமைத்தல்**

**வினா எண் 5371—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, களப்பால், குறிச்சிமுலை ஊராட்சிக்குட்பட்ட மீளம்பநல்லூர் சோலைக்குளம், நெய்க்குன்னம், நல்லநாயகிபுரம், சீலத்தநல்லூர், கீழ்புத்தூர் ஆகிய கிராமங்களில் மின்சக்தி குறைவு உள்ளதால் இக்கிராமங்களில் புதிய டிரான்ஸ்பார்மர் கூடுதலாக அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, களப்பால், குறிச்சிமுலை ஊராட்சிக்குட்பட்ட மீளம்பநல்லூர், சோலைக்குளம், நெய்க்குன்னம், நல்லநாயகிபுரம், சீலத்தநல்லூர், கீழ்புத்தூர் ஆகிய கிராமங்களில் நிலவி வரும் மின் அழுத்தக் குறைவினை நீக்க மீளம்பநல்லூரில் புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

11—

**பெரியார் மாவட்டத்தில் டெக்னிக்கல் அசிஸ்டெண்ட் பணியாளர் நியமனம்**

**வினா எண் 5725—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் மின் இணைப்பு வழங்குவதற்கு மீட்டர்களை டெஸ்ட் செய்ய டெக்னிக்கல் அசிஸ்டெண்ட் பணியாளரை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பெரியார் மின் பகிர்மான வட்டத்தில் காலியாக உள்ள தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள், போதுமான பணியாளர்கள் இல்லாமையால் நிரப்பப்படவில்லை. கடந்த 23-12-1996 பத்திரிகைகளின் விளம்பரத்தின்படி நேர்முகத் தேர்வின் மூலம் பணியாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். தேர்வு செய்தவுடன், காலியாக உள்ள தொழில் நுட்ப உதவியாளர்கள் பதவிகள் நிரப்பப்படும்.

12—

**குடியிருப்பு பகுதிகளுக்கு பட்டா வழங்குதல்**

**வினா எண் 2339-திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் மாவட்டம், காரைக்குடி நகரில் மீனாட்சிபுரம், ஜீவா நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளின் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நகராட்சிப் பகுதிகளில் ஒப்படை செய்வதற்கு கட்டுப்பாடு உள்ளது. எனவே, விதிகளின்படி ஆய்வு செய்து, ஒப்படை செய்வது பற்றி பரிசீலிக்கப்படும்.



13—

**சோளிங்கர் வட்டம் அமைத்தல்**

**வினா எண் 3151—திரு. ஆ. மு. முனிரத்தினம்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், சோளிங்கரைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சோளிங்கரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

**எர்ணாபுரம் கிராமத்திற்கு சாலை வசதி செய்து தருதல்**

**வினா எண் 475—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், மேட்டுத் தொகுதியிலிருந்து நம்பியாம்பட்டி வரை சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எர்ணாபுரம் கிராமம், மேட்டுத் தெருவிலிருந்து நம்பியாம்பட்டி வரை தார்ச்சாலை அமைத்து கொடுக்கும் பணி 1996-97ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

15—

## ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்

**வினா எண் 2220—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், கள்ளிக்காட்டு குடியிருப்பு மற்றும் மின்னலூர், சீனிவாசபுரம் தெருவில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கள்ளிக்காட்டு குடியிருப்பு பேரூராட்சியைச் சார்ந்ததாகும். எனவே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் குடியிருப்பு வீடுகள் கட்டித்தர இயலாது. மேலும் மின்னலூர், சீனிவாசபுரம் தெருவில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

16—

## ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்க நடவடிக்கை

**வினா எண் 2977—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்ணாமலை நகரியத்தில் தனியார்களால் ஆக்கிரமிப்பு செய்யப்படும் பொது நிலங்களையும், சாலை ஓர நிலங்களையும் மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அண்ணாமலை நகர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட ரீ சர்வே எண் 91/3, திருவக்குளம் நத்தம் புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சிதம்பரம் வட்டாட்சியர் மற்றும் காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1997 மார்ச் 27]

17—

## மீஞ்சூர் ஒன்றியத்தில் துப்புரவுத் தொழிலாளர்கள்

**வினா எண் 3537—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எம்.ஜி.ஆர். மாவட்டம், மீஞ்சூர் ஒன்றியத்தில் எத்தனை துப்புரவுத் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எம்.ஜி.ஆர். மாவட்டம், மீஞ்சூர் ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளில் 9 (ஒன்பது) துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

18—

## சின்னாற்றில் பாலம் கட்டுதல்

**வினா எண் 4049-திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை-மதுகொண்டபள்ளி தார்ச்சாலையின் குறுக்கே சின்னாற்றில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தேன்கனிக்கோட்டை-மதுகொண்டபள்ளி தார்சாலையின் குறுக்கே சின்னாற்றில் ஒரு உயர்மட்ட பாலம் கட்ட, தோராயமாக ரூ. 72 இலட்சமும், அணுகு சாலை அமைப்பு மேம்பாடு செய்ய ரூ. 10 இலட்சமும், மொத்தம் ரூ. 82 இலட்சம் தேவைப்படுகிறது. போதிய நிதி ஆதாரம் இல்லாமையினால் இப்பணியை தற்போது எடுத்துக்கொள்ள இயலாது.

[1997 மார்ச் 27

19—

### தொப்பையாறு அணை அருகில் பாலம் கட்டுதல்

**வினா எண் 4611—திரு. கே. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், முத்தம்பட்டி-ஜொல்லன் கொட்டாய் பாலம், நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பையாறு அணை அருகில் ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி ஒன்றியம், முத்தம்பட்டி-ஜொல்லன் கொட்டாய் செல்லும் பாதையின் குறுக்கே வேப்படியாறு செல்வதால், அதன் குறுக்கே பாலம் கட்டி, போக்குவரத்து சீர் செய்ய சுமார் ரூ. 30.00 இலட்சம் செலவாகும். இப்பணிக்காக நிதி ஒதுக்கீடு ஏதும் தற்போது செய்ய இயலாது.

நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பையாறு அணை அருகில் கனிப்பள்ளம் என்ற இடத்தில், மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ், பாலம் கட்டும் பணி, நெடுஞ்சாலை துறையினரால் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது பணி நடைபெற்று வருகிறது.

20—

### பள்ளிகொண்டா பேரூராட்சியில் காந்தி சிலையைப் பராமரித்தல்

**வினா எண் 4765—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட—ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், பள்ளிகொண்டா பேரூராட்சியில் காந்தி சிலை பராமரிப்பின்றி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



1997 மார்ச் 27]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 10-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்கீழ், பள்ளிகொண்டா பேரூராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதியிலிருந்து காந்தி சிலை சுற்றுச்சுவர் பழுதுபார்த்திட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

21—

### பள்ளிக் கட்டிடங்கள் பராமரிப்பு

**வினா எண் 4875-திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக (உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்) மாற்றியும், இன்னும் கட்டிடம் பராமரிப்பு போன்றவற்றை நகராட்சிகளிடமே உள்ளதை மாற்றி அரசிடமே (பொதுப் பணித் துறையிடம்) ஒப்படைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சிப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக இன்னும் மாற்றப்படவில்லை. அரசாணை எண் 347, கல்வித் துறை, நாள் 9-3-1990-ன்படி நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களின் ஊதியம் நேரிடையாக அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. எனவே, பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்பை அரசிடம் (பொதுப் பணித் துறை) ஒப்படைக்கும் கேள்வி எழுவில்லை.

[1997 மார்ச் 27

22—

**மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம்**

**வினா எண் 5203—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பகுதி-II திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்திற்கு கூடுதல் கட்டிடங்கள் கட்ட நிதி வழங்கப்படுவதில்லை. திட்ட அலுவலர் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலகங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. எனவே, தற்போது ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்ட வாய்ப்பில்லை.

23—

**ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம்**

**வினா எண் 5204—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பகுதி-II திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்திற்கு கூடுதல் கட்டிடங்கள் கட்ட நிதி வழங்கப்படுவதில்லை.



1997 மார்ச் 27]

திட்ட அலுவலர் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலகங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. எனவே, தற்போது ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்ட வாய்ப்பில்லை.

24—

**ஊராட்சி மன்றங்களுக்கு எழுத்தர் பதவிகள்**

**வினா எண் 5485—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களுக்கான எழுத்தர்களை அரசே பொறுப்பெடுத்து நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஊராட்சி மன்றங்களில் எழுத்தர்களை அரசே பணி அமர்த்தும் செயற்குறிப்பு ஆய்வு செய்யப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

25—

**கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம்**

**வினா எண் 3768-திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் இதுவரை அடைந்துள்ள நட்டம் எவ்வளவு?

(ஆ) அதற்குக் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் 1981-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1984-85-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தற்பொழுது 1995-96-ம் ஆண்டு முடிய இணையம் அடைந்துள்ள மொத்த நட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. செயல்முறை திட்டம் | .. | ரூ. 11.46 கோடி |
| 2. தேய்மானம் | .. | ரூ. 4.58 கோடி |
| 3. வட்டி | .. | ரூ. 3.32 கோடி |
| மொத்தம் | .. | **ரூ. 19.36 கோடி.** |

(ஆ) இணையம் நட்டம் அடைந்ததற்கு காரணங்கள்:

டான்காப் கொள்முதல் செய்த மணிலாவை ஆலைகளில் அரைத்து அதிலிருந்து கிடைக்கும் எண்ணெயின் அடக்கவிலை சந்தை விலையை விட அதிகமாகவே இருந்தது. இணையம் மணிலா எண்ணெய் விற்பனை விலையை அடக்க விலைக்கு நிர்ணயம் செய்யாமல் சந்தை விலைக்கே நிர்ணயம் செய்ய வேண்டியிருந்தது. பின்னர் படிப்படியாக நுகர்வோர் மனதில் நல்ல தரமான எண்ணெயை இணையம் தருகிறது என்ற பெயரைப் பெற்றது.

2. இந்த நிலையில் தேசிய பால்வள வாரியம் (மத்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க) சமையல் எண்ணெயின் விலையில் ஒரு ஸ்திரத்தன்மையைக் கொண்டுவர சந்தை குறுக்கீட்டுத் திட்டத்தைப் பல்வேறு மாநிலங்களில் உள்ள எண்ணெய் வித்து இணையம் மூலம் செயல்படுத்தியது. இத்திட்டத்தில், தேசிய பால்வள வாரியம் இணையத்திலிருந்து எண்ணெயை உற்பத்தி செலவுகள் உள்ளிட்ட அடக்க விலைக்கே கொள்முதல் செய்யாமல் அங்காடி விலைக்கே கொள்முதல் செய்தது. இதனால் ஆரம்ப காலத்தில் (1985-90) ஏற்பட்ட நட்டம், மற்றும் சந்தை குறுக்கீட்டுத் திட்டத்தினால் (1990-93) ஏற்பட்ட நட்டத்தினாலும் மணிலா கொள்முதல் மற்றும் பதப்படுத்துதலை நிறுத்தி வைக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது.

3. மணிலா பருவப்பயிர் என்பதால் வருடம் முழுவதும் ஆலைகளை இயக்குவதற்குத் தேவையான மூலப்பொருட்களை அறுவடை காலங்களில் கொள்முதல் செய்து இருப்பு வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்கு அதிகமான நடைமுறை மூலதனம் தேவைப்பட்ட காரணத்தால், இதற்குண்டான வட்டிச் சுமையையும் ஏற்க வேண்டியதாயிற்று.





26—

## புதிய பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 1662—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், நெல்லைபேட்டை-முக்கடல் மருதம்புத்தூர் ராம்நகர்-ஐந்தாம் கட்டளை-மாதாப்பட்டினம் ஆலங்குளம்-ஆண்டிப்பட்டி-கோவிலூத்து-பூலாங்குளம்-மாதாப்பட்டினம் ஆலங்குளம்-ஆண்டிப்பட்டி-கோவிலூத்து-பூலாங்குளம்-வெங்கடாம்பட்டி-மைலப்புரம்-ஆவுடையாலூர் நெல்லையப்பப்புரம் வெங்காலிபட்டி-அரியப்புரம்-மேல அரியப்புரம் திரவியநகர்-தென்காசி-குற்றாலம்-செங்கோட்டை ஆகிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை.—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) வினாவில் அடங்கிய கிராமங்கள் அனைத்தும் ஏற்கனவே போதுமான பேருந்து வசதி பெற்றவையாகும். அப்பகுதிகளில் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளின் விவரம் வருமாறு:

| வ. எண். | தடம் எண் மற்றும் வழித்தடம் | | செல்லும் வழி | பேருந்து | நடைகள். |
|---|---|---|---|---|---|
| 1. | 120-ஏ | திருநெல்வேலி-அச்சம்புதூர் | ஆண்டிப்பட்டி பூலாங்குளம் கோவிலூத்து, வெங்கடாம்பட்டி மைலப்புரம், ஆவுடையாலூர் அரியப்புரம், வைக்காலிப்பட்டி. | 1 | 4 |
| 2. | 113-சி | அம்பாசமுத்திரம்-புளியங்குடி | மைலப்புரம், ஆவுடையாலூர் | 1 | 4 |
| 3. | 513-ஏ | [illegible] | மைலப்புரம், ஆவுடையாலூர் | 1 | 2 |
| 4. | [illegible] | சங்கரன்கோவில்-[illegible] | [illegible] | 1 | 4 |
| 5. | தனியார் | சங்கரன் கோவில்/ விளாத்திகுளம்/ அம்பாசமுத்திரம். | ராம் நகர், மருதம்புத்தூர் | 1 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | " | முக்கூடல்-விஸ்வநாதபேரி/ சங்கரன்கோவில் | ராம் நகர். மருதம்புத்தூர் | 1 | 4 |
| 7. | 9. | முக்கூடல்-ஆலங்குளம் | மருதம்புத்தூர். ராம்நகர் | 1 | 4 |
| 8. | | காரையார்-சங்கரன்கோவில் | ராம்நகர் | 1 | 4 |
| 9. | 5 | ஆலங்குளம்-முத்துமாலைபுரம் | ராம் நகர். பாபநாசம் | 1 | 4 |
| 10. | 5ஏ | ஆலங்குளம்-பாபநாசம் | ராம்நகர் | 1 | 4 |
| 11. | 5பி | ஆலங்குளம்-பாபநாசம் | ராம்நகர் | 1 | 2 |
| 12 | 6ஏ | தென்காசி-கடையம் | ஆவுடையானூர். அரியப்பபுரம். வைக்காலிப்பட்டி | 1 | 4 |
| 13. | 2ஏ | முக்கூடல்-ஆலடிப்பட்டி | மருதம்புத்தூர். ராம்நகர் | 1 | 6 |
| 14. | 14பி | சேர்மாதேவி-ஆலங்குளம் | மருதம்புத்தூர். ராம்நகர் | 1 | 8 |
| 15. | 34ஏ | ஆலங்குளம்-முக்கூடல் | மருதம்புத்தூர். ராம்நகர் | 1 | 8 |
| 16. | 243பி | திருநெல்வேலி-காசிநாதபுரம் | மருதம்புத்தூர். ராம்நகர் | 1 | 8 |
| 17. | (கணபதி) | திருநெல்வேலி-செங்கோட்டை (தனியார்) | மருதம்புத்தூர். ராம்நகர் ஆவுடையானூர். வைக்காலிப்பட்டி. அரியப்பபுரம் | 1 | 4 |
| 18. | 3டி | விகேபுரம்-பாவூர்சத்திரம் | ஆவுடையானூர். அரியப்பபுரம் வைக்காலிப்பட்டி. | 1 | 10 |
| 19. | 6 | அம்பாசமுத்திரம்-பாவூர் சத்திரம் | மைலப்புரம். ஆவுடையானூர் | 1 | 4 |
| 20. | 43ஏ | ஆலங்குளம்-கடையம் | ஐந்தாம் கட்டளை. ஆலடிப்பட்டி | 1 | 8 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | 17 | ஆலங்குளம்-கடையம் | ராம்நகர். ஐந்தாம்கட்டளை. மாதாபட்டினம் | 1 | 10 |
| 22. | 17 | ஆலங்குளம்-கடையம். | நெல்லையப்பபுரம். வைக்காலிப்பட்டி. மைலப்புரம். | | |
| 23. | 16 | தென்காசி-கடையம்/ வீராசமுத்திரம் | ஆவுடையானூர். மைலப்புரம் | 1 | 12 |
| 24. | 16 | தென்காசி-கடையம்/ வீராசமுத்திரம் | ஆவுடையானூர். அரியப்பபுரம் வைக்காலிப்பட்டி | | |
| 25. | 3 | சிவந்திபுரம்-ஆவுடையானூர் | மைலப்புரம் | 1 | 6 |
| 26. | 3 | சிவந்திபுரம்-ஆவுடையானூர் | வைக்காலிப்பட்டி. அரியப்பபுரம். ஆவுடையானூர். | | |
| 27. | 3சி | சிவந்திபுரம்/ விகேபுரம் ஆவுடையானூர்/ பாவூர்சத்திரம். | மைலப்புரம் | 1 | 8 |
| 28. | 3சி | சிவந்திபுரம் சத்திரம்-விகேபுரம்-ஆவுடையானூர் பாவூர்சத்திரம் | வைக்காலிப்பட்டி, அரியப்பபுரம் ஆவுடையானூர் | | |
| 29. | 5டி | ஆலங்குளம்-முத்துமாலைபுரம் | ராம்நகர். ஐந்தாம்கட்டளை மாதாபட்டினம். கோவிலூர். பூலாங்குளம். நெல்லையப்பபுரம். மைலப்புரம். | 1 | 12 |
| 30. | 5டி | ஆலங்குளம்-அம்பாசமுத்திரம் | ராம்நகர். | | |
| 31. | 130டி | பாபநாசம்-சங்கரன்கோவில் | மாதாபட்டினம் கோவிலூர். பூலாங்குளம். நெல்லையப்பபுரம். வெங்காடம்பட்டி. மைலப்புரம். ஆவுடையானூர் | 1 | 10 |

[1997 மார்ச் 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 32. | 21 | சுரண்டை - ஆழ்வார் குறிச்சி கல்லூரி | ஆவுடையானூர், மேலப்பாவூர் | 1 | 4 |
| 33. | 21 | சுரண்டை - ஆழ்வார் குறிச்சி கல்லூரி | ஆவுடையானூர், அரியப்பபுரம் [illegible] | | |
| 34 | முருகன் (தனியார்) | அம்பாசமுத்திரம்-சங்கரன்கோவில் | மேலப்பாவூர், ஆவுடையானூர் | 1 | 6 |
| 35. | " | பாபநாசம்-சங்கரன்கோவில் | [illegible] | 1 | 4 |
| 36. | " | அம்பாசமுத்திரம்-சங்கரன்கோவில் | மேலப்பாவூர், ஆவுடையானூர் | 1 | 4 |

மேலும் கோரிக்கையில் குறியிடப்பட்டுள்ளதும் பிரதான சாலையில் அமைந்துள்ளதுமான பேட்டை, முக்கூடல், ஆலங்குளம் போன்ற ஊர்களுக்கு ஏராளமான புறநகர் மற்றும் நகரப்பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

எனவே வினாவில் கேட்டுள்ள வழித்தடங்களில் புதிதாக பேருந்து வசதி அளிப்பதற்கான தேவை தற்போது பரிசீலனையில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**27—**

### சாலையை பொதுப்பணித்துறையிடம் ஒப்படைத்தல்

**வினா எண் 1831-திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal to handover the road laid by Public Works Department from Arulapalli to Kelavarapalli dam in Hosur Taluk? and

(b) If so, when?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆருலப்பள்ளி கெலவரப்பள்ளி சாலையானது பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சாலையாகும். அப்பகுதி பொதுமக்களின் நலன்



1997 மார்ச் 27]

கருதி 4.089 கி.மீ. நீளமுடைய இச்சாலை முழுவதையும் நெடுஞ்சாலைத் துறைக்கு பராமரிப்பிற்காக எடுத்துக்கொள்ளலாம் என்ற கருத்து ஏற்புடையதாயினும், பல்வேறு திட்டங்களின் கீழ் மேம்பாடு செய்யப்படும் ஊரகச்சாலைகள் அனைத்தும் பராமரிப்பிற்காக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்படுவதால் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சாலைகளின் நீளம் வருடா வருடம் அதிகரிப்பதாலும், நிதி நெருக்கடி காரணமாகவும், இச்சாலை முழுவதையும் நெடுஞ்சாலைத் துறைக்கு எடுத்துக்கொள்ள இயலாது.

**28—**

### பாலம் கட்டுதல்

**வினா எண் 2343-திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டு பேரூராட்சிக்கு உட்பட்ட ஆடுசாப்பட்டி என்ற கிராமத்தில் மஞ்சளாற்றின் குறுக்கே பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மஞ்சளாற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்பட
வேண்டிய சாலை ஆடுசாப்பட்டி. சாலை எனும் 2.00 கி.மீ. (கி.மீ.
0/0-2/0) நீளமுடைய சாலை வத்தலக்குண்டு பேரூராட்சி சாலையாகும்.
இச்சாலை கி.மீ. 0/0-1/0 வரை கற்தளமாகவும், கி.மீ. 1/0-2/0 வரை மண்
சாலையாகவும் உள்ளது. இச்சாலை கி.மீ. 0/4-ல் மஞ்சளாறு 30.00
மீட்டர் நீர்வழிப்பாதை அகலத்துடன் குறுக்கிடுகிறது. இவ்விடத்தில்
வருடத்திற்கு ஆறு மாதங்கள் நீர் தேங்கி நிற்கும். ஆற்றில் நீரில்லாத
காலங்களில் இப்பகுதி மக்கள் ஆற்றின் மணற்பரப்பில் நடந்து ஆற்றினைக்
கடக்கின்றனர். எனவே இவ்விடத்தில் இருவழித்தட பாலம் ஒன்று
அமைப்பது மிகவும் அவசியமாகும். இதற்கு தோராயமாக ரூ.30.00
இலட்சம் தேவைப்படும். இப்பணியின் முக்கியத்துவத்தை
கருத்திற்கொண்டு மாநிலத்திட்டக் குழுவுக்குப் பரிந்துரை
செய்யப்பட்டுள்ள 1997-98ஆம் ஆண்டு பகுதி 2 திட்டப் பிரேரணைகளில்

தலைமைப் பொறியாளரால் இப்பணி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**29—**

### அரசம்பட்டு ஆற்றில் மேம்பாலம் கட்டுதல்

**வினா எண் 3080—திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஒன்றியம், அரசம்பட்டு ஆற்றில் கட்டப்பட்டு இடிந்துள்ள மேம்பாலத்தை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சங்கராபுரம் ஒன்றியம், அரசம்பட்டு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு இடிந்துள்ள மேம்பாலம் ஊராட்சி ஒன்றிய சாலையான அரசம்பட்டு பாவளம் சாலையில் கி.மீ. 0/8-ல் மணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள பாலமாகும். தற்போது பழுது அடைந்த பகுதியை திருத்திய வடிவமைப்பு செய்ய வேண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் மற்றும் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) வடிவமைப்பு மற்றும் புலனாய்வு அவர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு அப்பாலத்தை மீண்டும் கட்டுவதற்கு தலைமைப் பொறியாளரால் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**30—**

### சாலைகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 3230—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியிலுள்ள வைகுந்தம்-காளிப்பட்டி கி.மீ. 0/0-3/2, வைகுந்தம்-கொங்கணாபுரம் கி.மீ. 6/0-7/4, கச்சுப்பள்ளி-எளம்பிள்ளை, அ. புதூர் ஆகிய நெடுஞ்சாலைத்துறைச் சாலைகளை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1. வைகுந்தம்-காளிப்பட்டி சாலை கி.மீ. 0/0-3/2

இச்சாலை 10.2 கி.மீ. (கி.மீ.0/0-10/2) நீளமுடைய ஓர் அரசு இதர மாவட்ட சாலையாகும். முழுவதும் தார் தளமுடைய இச்சாலை கி.மீ. 0/0-2/0 வரை செப்பனிட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி தொடங்கப்பட உள்ளது. கி.மீ. 2/0-3/2 வரையுள்ள பகுதியில் தார் நொடிகள் போடப்பட்டு சாலை நல்ல நிலையில் உள்ளது.

2. வைகுந்தம்-கொங்கணாபுரம் சாலை கி.மீ. 6/0-7/4

இச்சாலை 6.8 கி.மீ. (கி.மீ. 0/0-6/8) நீளமுடைய (இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் 7/4 அல்ல) ஓர் அரசு இதர மாவட்ட சாலையாகும். முழுவதும் தார் தளமுடைய இச்சாலை தார் நொடிகள் போடப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

3. கட்சுப்பள்ளி-எளம்பிள்ளை-ஆ. புதூர் சாலை

இச்சாலையின் பெயர் கட்சுப்பள்ளி அழகப்பம் பாளையம் சாலை முதல் எளம்பிள்ளை சாலை வரை 13.0 கி.மீ. நீளமுடைய ஓர் அரசு இதர மாவட்ட சாலையாகும். முழுவதும் தார் தளமுடைய இச்சாலை தார் நொடிகள் போடப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையின் இரு பக்கங்களிலும் உள்ள முட்செடிகளை இயந்திரங்களைக் கொண்டு வேருடன் பிடுங்கி அகற்றப்பட்டு, சாலை நல்ல நிலையில் உள்ளது.

**31—**

### பரமக்குடி-முதுகுளத்தூர் சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 3389- திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1997 மார்ச் 27

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி—முதுகுளத்தூர் சாலையானது 25.4 கி.மீ. நீளமுடைய ஓர் அரசு பெரிய மாவட்டச் சாலையாகும். முழுவதும் தார் தளமுடைய இச்சாலையில் கி.மீ.0/0 முதல் கி.மீ. 24/0 கி.மீ. முடிய உள்ள பகுதி ஒருவழித்தட அகலத்துடனும், கி.மீ. 24/0 முதல் கி.மீ. 25/4 கி.மீ. வரையிலான 1.4 கி.மீ. நீள சாலைப்பகுதி இருவழித்தட அகலத்துடனும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இச்சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 3/0 வரையிலான பகுதியை 1994-95-ஆம் ஆண்டு அரசு சாலைகளின் மிகவும் பழுதடைந்த பகுதிகளை சீரமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 17.00 இலட்சம் செலவில் அகலப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இச்சாலையில் கி.மீ. 3/0 முதல் கி.மீ. 5/0 வரையிலான பகுதியை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிக்கு ரூ. 20.00 இலட்சத்திற்கு 1996-97-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மீதமுள்ள 19.4 கி.மீ. நீளமுடைய சாலைப்பகுதியை இருவழித்தட அகலமுடையதாக மாற்றுவதற்கு தற்போதைய விலை விகிதப்படி தோராயமாக ரூ. 388.00 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி நெருக்கடியின் காரணமாக இப்பணி தற்போது செயலாக்க இயலாது.

32—

## தார்ச்சாலை அமைத்தல்

**வினா எண் 3526—திரு. ஏ. இராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு—வள்ளலார் மாவட்டம், கொள்ளிடம் வடக்குக்கரைச் சாலையை அகலப்படுத்தி தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1997 மார்ச் 27]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், கொள்ளிடம் வடக்குக்கரை சாலை சீர் அமைக்கும் பணி சிதம்பரம்-சீர்காழி சாலை கி.மீ. 8/4-லிருந்து கருப்பூர் செல்லும் சாலை என்ற பெயரில் 4.6 கி.மீ. நீளத்திற்கு ரூ. 46.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய அரசாணை (நிலை) எண். 171, நெடுஞ்சாலைத்துறை, நாள் 17-10-1996-இல் ஆணை வழங்கப்பட்டு உள்ளது.

33—

## கோவில்பட்டி-சென்னை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து

**வினா எண் 3633—திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டியிலிருந்து சென்னை, சென்னையிலிருந்து கோவில்பட்டி ஆகிய வழித்தடங்களில் சென்று கொண்டிருந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விதிகளின்படி, வழித்தடத்தின் தூரம் 250 கி.மீட்டருக்கு மிகுதியாக உள்ள வழித்தடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகம் மட்டுமே நிரந்தரமாக பேருந்துகள் இயக்க முடியும். எனினும் கடந்த கோடை கால விடுமுறை நாட்களில் சென்னைக்கு பெருமளவிலான பயணிகள் கூட்டம் காணப்பட்டதால் பயணிகளின் நலன் கருதி கோவில்பட்டியிலிருந்து சென்னைக்கு தற்காலிகமாக மட்டுமே சிறப்புப் பேருந்துகள் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டன. எனவே, அப்பேருந்துகளை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் நிரந்தரமாக இயக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை.

34—

## சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 4206—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி-ஆற்காடு சாலையை அகலப்பாதையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையான ஆரணி-ஆற்காடு சாலை என்பது முக்கிய பெரிய மாவட்ட சாலைகளில் ஒன்றாகிய ஆற்காடு-விழுப்புரம் சாலை (வழி) ஆரணி மற்றும் செஞ்சி என்ற சாலையாகும். இச்சாலை 3.8 கி.மீ. நீளத்திற்கு இருவழிப்பாதையாகவும், 14.20 கி.மீ. நீளத்திற்கு ஒருவழிப் பாதையாகவும் உள்ளது.

இதற்கு இருவழிப் பாதையாகிய 3.8 கி.மீ. மேம்படுத்த ஒரு கி.மீ.க்கு ரூ.5.20 இலட்சம் வீதம் மொத்தம் 19.76 இலட்சமும், மற்றும் ஒருவழிப் பாதையாகிய 14.20 கி.மீ.க்கு அகலப்படுத்தி மேம்படுத்த ஒரு கிலோமீட்டருக்கு ரூ.8.50 வீதம் மொத்தம் ரூ. 120.70 இலட்சம் மற்றும் இதர செலவினம் உட்பட ஆக மொத்தம் ரூ. 150 இலட்சம் தேவைப்படும். அரசு நிதி நெருக்கடி காரணமாகவும், அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் மேற்கண்ட பணிகள் இடம் பெறாததாலும் அண்மைக் காலங்களில் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

## மேம்பாலம் அமைத்தல்

**வினா எண் 4535—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டு, தானிப்பாடி சாலையில் அரசமரம் கிராமத்திற்கு அருகில் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அக்டோபர் 1996-இல் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் தற்போதுள்ள தரைப்பாலத்தின் பழுதடைந்த பகுதிகளைச் செப்பனிட ரூ. 1.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பணியை விரைவில் முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்விடத்தில் ஓர் உயர்மட்டப்பாலம் அமைக்கத் தற்போதைய விலைவிகிதப்படி தோராயமாக ரூ. 140 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி நெருக்கடி காரணமாக இப்பணியை தற்பொழுது ஏற்றுக்கொள்ள இயலாது.

36—

## சேரன்மகாதேவி ஆற்றுச்சாலையை சீரமைத்தல்

**வினா எண் 4802-திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதியில், சேரன்மகாதேவி ஆற்றுச்சாலை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி என்கின்ற ஆற்றுச்சாலை கி.மீ. 0/0-4/4 நெடுஞ்சாலைத் துறையின் மூலம் இதர மாவட்டச் சாலையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலை பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம் சாலையில் கி.மீ. 23/8-ல் பிரிந்து சென்று திருநெல்வேலி பொட்டல் புறச்சாலை கி.மீ.14/01-ல் இணைகிறது. இச்சாலை ஒருவழிப்பாதைக் கொண்ட தார்ச்சாலையாகும். தற்போது இச்சாலை தடையற்ற வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[1997 மார்ச் 27

37—

## சிற்றுந்து இயக்குதல்

**வினா எண் 5177-திரு. அ. வ. அப்துல்நாசர்:** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், விருத்தாசலம்-எறும்பூர் வழியாக சின்ன நற்குணத்திற்கு சிற்றுந்து (Mini Bus) இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விருத்தாசலத்திலிருந்து கம்மாபுரம், வளையமாதேவி, எறும்பூர் வழியாக சின்னநற்குணம் வரையிலான வழித்தட நீளம் 26.7 கி.மீ. ஆகும். இதில் எறும்பூரிலிருந்து சின்னநற்குணம் வரையிலான 2.7 கி.மீ தூரப்பகுதி இதுவரை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இப்பகுதியடங்கும் சாலை கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் சிறிய பேருந்து போக்குவரத்துக்கு ஏற்றதல்ல.

(அ) இச்சாலை மிகக் குறுகலான கப்பிச்சாலையாகும்.

(ஆ) எறும்பூரிலிருந்து சின்னநற்குணம் நோக்கிய சாலையில், எறும்பூரிலிருந்து 0.6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள மதகினருகே சாலை மிகவும் சிதைந்துள்ளது.

(இ) எறும்பூரிலிருந்து சின்னநற்குணம் நோக்கிய சாலையில் 1.2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள மற்றொரு மதகை ஒட்டியுள்ள சாலை வளைவு, பேருந்து போக்குவரத்துக்கு ஏற்ற போதிய அகலமுடையதாக இல்லை.

(ஈ) சின்னநற்குணம் கிராமத்தில், பேருந்து திரும்புவதற்கு ஏற்ற வகையில் போதிய இடவசதி இல்லை.

எனவே, இக்குறைபாடுகளைக் களைந்து சாலை, பாதுகாப்பான போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் சீரமைக்கப்பட்ட பின்பே இக்கிராமத்திற்கு பேருந்து வசதி அளித்திட வாய்ப்பு ஏற்படும்.



1997 மார்ச் 27]

38—

## நியாயவிலைக்கடை அமைத்தல்

**வினா எண் 2443-திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டம், கண்டமங்கலத்தில் உள்ள நியாயவிலைக் கடையை இரண்டாகப் பிரித்து வேட்டைக்காரன் குளம், கடபோளத்தி, ராமலிங்கபுரம், மேலமெஞ்ஞானபுரம் ஆகிய ஊர்களை உள்ளடக்கி மேலமெஞ்ஞானபுரத்தில் நியாயவிலைக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டம், கண்டமங்கலத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் நியாயவிலைக் கடையில் தற்போது 933 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் வேட்டைக்காரன்குளம், கடபோளத்தி, ராமலிங்கபுரம், மேலமெஞ்ஞானபுரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த 716 குடும்ப அட்டைகளை தனியாகப் பிரித்து மேலமெஞ்ஞானபுரத்தில் புதிய முழுநேர நியாயவிலைக்கடை திறக்கவும் மீதமுள்ள 217 குடும்ப அட்டைகளைக் கொண்டு தற்போது செயல்பட்டு வரும் கண்டமங்கலம் கடையை பகுதிநேரக் கடையாக மாற்றி செயல்படவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

39—

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாளர் விவரம்

**வினா எண் 7541—திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

[1997 மார்ச் 27

(ஆ) அவர்கள் எத்தனை ஆண்டுகளாக தற்காலிக நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்களில் பட்டியல் எழுத்தர், உதவியாளர் (helper) மற்றும் காவலர் பணிக்கு தற்காலிகமாக 3,213 பணியாளர்கள் நெல் கொள்முதல் காலங்களில் மட்டும் பணியாற்றி வருகிறார்கள்.

(ஆ) 1984ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பணியாளர்கள் தேவைக்கேற்ப கூடுதலாக பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். அவர்கள் பணிமூப்பு அடிப்படையில் கழகத்தில் நிரந்தரப் பணியாளர்களாக அமர்த்தப்படுகின்றனர். இதுவரை 189 தற்காலிக பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

**40—**

**காட்டு நாய்க்கன் இனத்தை மக்கள் தொகை கணக்கெடுப்பில் கொண்டு வருதல்**

**வினா எண் 3934—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நாடோடிகளாக வாழும் காட்டு நாய்க்கன் இனத்தைச் சேர்ந்த மாட்டுடன் தாளமடித்து வருவோர் கோசங்கி என்கிற ஜோசியர்கள், வித்தை காட்டும் டொம்பர்கள் ஆகியோர் மக்கட் தொகைக் கணக்கெடுப்பில் கொண்டு வரப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இந்திய அரசின் குடியரசுத் தலைவரின் அறிவிக்கையின்படி தமிழ்நாட்டிற்கான ஆதிதிராவிட பழங்குடியினர்



1997 மார்ச் 27]

பட்டியலில் "காட்டு நாய்க்கன்" இன மக்கள் பழங்குடியினர் பட்டியலின் கீழும் "டொம்பன்" மற்றும் "கோசங்கி" இனமக்கள் ஆதிதிராவிட வகுப்பு பட்டியலின் கீழும் சேர்க்கப்பட்டுள்ளது. மக்கட் தொகைக் கணக்கெடுப்பு சமயத்தில் மேற்குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த ஒருவர்தான் "காட்டுநாய்க்கன்" வகுப்பினைச் சார்ந்தவர் என்று கூறுங்கால் அவரை பழங்குடியினர் பட்டியலிலும் 'கோசங்கி அல்லது டொம்பன்' என்று கூறுங்கால் அன்னாரை ஆதிதிராவிட வகுப்பு பட்டியலிலும் மக்கட்தொகை கணக்கெடுப்பாளரால் சேர்த்துக் கொள்ளப்படும். 1991 மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி தனிப்பட்ட ஆதிதிராவிட /பழங்குடியினர் மக்கட் தொகை விவரம் இறுதியாக்கப்படாத நிலையில், தமிழ்நாட்டில் 1981-ம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் "காட்டுநாய்க்கன்", டொம்பன் மற்றும் "கோசங்கி" ஆகியோரின் மக்கள் தொகை வருமாறு:

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1. காட்டுநாய்க்கன் | (ST) | 13,385 | 12,998 |
| 2. டொம்பன் | (SC) | 4,293 | 3,018 |
| 3. கோசங்கி | (SC) | 80 | 77 |

**41—**

**பயிர்க்கடன் வழங்கப்பட்ட விவரம்**

**வினா எண் 5549—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் பயிர்க்கடன் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டு உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நடப்பாண்டில் நவம்பர் 1996 வரை (ஏப்ரல் 1996 - நவம்பர் 1996) 37,161 நபர்களுக்கு ரூ. 3,438.67 இலட்சம் பயிர்க்கடன்

வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட பயிர்க்கடன் விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு | நபர்கள் | கடன்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1993-94 | 61,984 | 4,128.27 |
| 1994-95 | 59,090 | 4,811.55 |
| 1995-96 | 64,559 | 5,461.72 |

மேலும் மத்திய கூட்டுறவு வங்கிகள், அவற்றுடன் இணைந்துள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமே பயிர்க்கடன் வழங்கி வருகின்றன. அதே போன்று சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, அதனுடன் இணைந்த 379 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் மேற்கூறிய வகையில் பயிர்க்கடன் வழங்கியுள்ளது.

**42—**

### கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் விவரம்

**வினா எண் 5550—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் சிறிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம் அல்லாத திட்டப் பணிகளுக்கு எத்தனை பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் 1-4-1996 முதல் 30-11-1996 முடிவுற்ற காலத்தில் வழங்கிய கடன் விவரங்கள்:

(ரூபாய் இலட்சத்தில்)

| சிறிய நீர்ப்பாசனம் திட்டப்பணி எண்ணிக்கை | கடன் தொகை | நீர்ப்பாசனம் அல்லாத திட்டப்பணி எண்ணிக்கை | கடன் தொகை |
|---|---|---|---|
| 171 | 153.61 | 4,586 | 1,916.15 |



(ஆ) சேலம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனம் மற்றும் சிறிய நீர்ப்பாசனமற்ற திட்டங்களுக்கு 1-4-1996 முதல் 30-11-1996 வரை வழங்கப்பட்ட கடன்களின் விவரம் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| சிறிய நீர்ப்பாசன திட்டப்பணி எண்ணிக்கை | வழங்கிய கடன் தொகை | சிறிய நீர்ப்பாசனம் அல்லாத திட்டப்பணி எண்ணிக்கை | வழங்கிய கடன் தொகை |
|---|---|---|---|
| — | 0.06 | 482 | 168.75 |

**43—**

### கூட்டுறவுத் துறையில் புதிய திட்டங்கள்

**வினா எண் 5675—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழகத்தில் கூட்டுறவுத் துறையில் தேசியக் கூட்டுறவு (National Co-operative Development Corporation) மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்த உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் கூட்டுறவுத் துறையில் தேசியக் கூட்டுறவு (National Co-operative Development Corporation) வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஏற்கனவே பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) (1) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்;

(2) கூட்டுறவுச் சங்கங்களின் வியாபார வளர்ச்சிக்கு தேவையான நிதியுதவி, ஊரக நுகர்வோர் திட்டத்தின் கீழ் கிராமப்புறத்தில் நுகர்பொருட்கள் விநியோகிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி;

(3) மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு நவீன கடைகள் அமைக்க நிதியுதவி;

(4) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு புத்துயிரூட்டவும், அவற்றின் விற்பனை நடவடிக்கையை அதிகரிக்கவும் நிதியுதவி;

(5) கூட்டுறவுச் சங்கங்கள் பல்வகையான பதப்படுத்தும் மையங்கள் நிறுவ நிதியுதவி; மற்றும்

(6) கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் சாதாரண திட்டத்தின் கீழ் கிடங்கு கட்ட நிதியுதவி.

**44—**

### சென்னையில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் விவரம்

**வினா எண் 5320—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை இயங்குகின்றன?

(ஆ) அவற்றில் முறைகேடுகள் நடப்பதாக அரசிற்குப் புகார் வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்சமயம் சென்னையில் 45 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) மேற்கண்டுள்ள சங்கங்களில் ரங்கராஜபுரம் மற்றும் கிழக்கு கே.கே. நகர் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் முறைகேடுகள் நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**45—**

### பஞ்சாலைக் கழகத்தின் கீழ் உள்ள பஞ்சாலைகள்

**வினா எண் 5604—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் கீழ் இயங்குகிற பஞ்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை —

**மாண்புமிகு திரு. என். கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் கீழ் சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை என்ற நூற்பாலை மட்டும் இயங்கி வந்தது.

(ஆ) சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையில் சுமார் 200 தொழிலாளர்கள் மற்றும் 16 அலுவலர்கள் பணி புரிந்தனர்.

**46—**

### சத்துணவுக் கூடங்களைச் செப்பனிடுதல்

**வினா எண் 4755-திரு சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் பெரும்பாலான சத்துணவுக்கூடங்கள் மேற்கூரையின்றியும், தக்க பாதுகாப்பின்றியும் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் நகராட்சியில் இயங்கும் பழுதடைந்த நிலையிலுள்ள 32 குழந்தைகள் நல மையங்களை வேலூர் நகராட்சியின் பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டு பழுது பார்க்க தேவையான நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சியாளர் மூலமாக வேலூர் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

47—

**திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலய சொத்துக்கள்**

**வினா எண் 958—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் தேவஸ்தானத்தில் எத்தனை ஏக்கர் நன்செய், புன்செய் நிலம் உள்ளது?

(ஆ) இவைகள் எந்தெந்த ஊர்களில் யார் யார் வைத்துள்ளனர்?

(இ) இவைகளால் தடையில்லாமல் மகசூல் வருகின்றதா?

(ஈ) மேற்படி தேவஸ்தானத்திற்கு சென்னயில் உள்ள சொத்து என்ன?

(உ) எந்த இடம் யாருடைய மேற்பார்வையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) நன்செய் 52.25 ஏக்கர், புன்செய் 120.52 ஏக்கர்.

(ஆ) மேற்படி ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் செங்கை வட்டம் மற்றும் மதுராந்தகம் வட்டத்தில் 23 கிராமங்களில் உள்ளது.

16 நபர்கள் குத்தகைதாரர்களாக உள்ளனர்.

(இ) திருக்கோயிலுக்கு பசலி 1405 முடிய 13 நபர்களிடமிருந்து வசூலாக வேண்டிய குத்தகை பாக்கி ரூ. 9220-ல் 30-7-1996 முடிய ரூ. 2,550 வசூல் செய்யப்பட்டுள்ளது. வருவாய் நீதிமன்றத்தில் குத்தகை பாக்கிக்காக தொடரப்பட்டுள்ள 13 வழக்குகளில் 5 வழக்குகள் ஆலயத்திற்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் பழைய பாக்கிக்காக ரூ.2,000 வசூல் செய்யப்பட்டது. ஆக 30-9-1996 முடிய ரூ. 4,550 குத்தகை பாக்கிக்காக வசூல் செய்யப்பட்டது.

(ஈ) மற்றும் (உ): சென்னை-5 திருவல்லிக்கேணி, நெடுஞ்சாலையில் எண் 133-ல் உள்ள கட்டிடம் மிகப் பழுதடைந்து முற்றிலும் இடிந்து தற்போது காலியாக ஆலய சுவாதீனத்தில் உள்ளது. மேற்படி ஆலய கட்டிடத்திற்கு பக்கத்து வீட்டில் உள்ள திரு. வீராசாமி மற்றும் அவர்



1997 மார்ச் 27]

மனைவி திருமதி மஞ்சுளா ஆகியோர் ஆலய இடம் 10' x 25' விஸ்தீரணத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். ஆக்கிரமிப்பு அகற்ற காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் இடைக்காலத் தடையுத்தரவு பெற்றனர். தற்போது ஆலய ஆவணங்களை நீதி மன்றத்தில் தாக்கல் செய்து 12-12-1995-ல் தடை நீக்கப்பட்டது. ஆக்கிரமிப்புப் பகுதியில் கட்டப்பட்ட கட்டிடத்தை இடிக்கக் கோரி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கும், மாநகராட்சிக்கும் 16-2-1996 மற்றும் 17-5-1996-ல் செயல் அலுவலரால் மனு செய்யப்பட்டுள்ளது. 5-7-1996-ல் வேலூர் துணை ஆணையரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுவின் கட்டுமான மேலாளருக்கு ஆக்கிரமிப்பு பகுதியினை அகற்றக் கோரியுள்ளார்.

48—

**தாம்பரம் தொகுதியில் கோயில்கள் விவரம்**

**வினா எண் 3169—திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்கள் எத்தனை?

(ஆ) கட்டுப்பாட்டில் இல்லாத கோயில்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதியில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் மொத்தம் 12.

(ஆ) கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்கள் மொத்தம் 14.

49—

**சுய வேலைவாய்ப்பு பெண்களுக்கு கடனுதவி**

**வினா எண் 4231—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், சுய வேலவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எத்தனை பெண்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) பயனாளிகளின் செயல்பாடு எவ்வாறு உள்ளது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1991-92 முதல் 1995-96 வரை 11,513 பெண்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 9.05 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) பயனாளிகளின் செயல்பாடு திருப்திகரமாகவும், வெற்றிகரமாகவும் உள்ளது.

**50—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 3038—திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கான இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் வழக்குகள் எத்தனை நிலுவையில் உள்ளன?

(ஆ) அவ்வழக்குகளை விரைவில் முடிப்பதற்கு காலக்கெடு நிர்ணயித்து சட்டம் கொண்டு வரப்படுமா?

விடை—

**மாண்புமிகு சமயநல்லூர் திரு. எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) காமராசர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் 104 வழக்குகளும் சென்னை உயர்நீதி மன்றத்தில் 178 வழக்குகளும் நில எடுப்பு சம்பந்தமாக நிலுவையில் உள்ளன.

(ஆ) நீதிமன்றங்களில் இத்தனை நாட்களுக்குள் வழக்கை முடிக்க வேண்டும் என்ற சட்டத்தை இயற்ற இயலாது.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. தகவல் கோரல்

### அமரர் ராஜீவ் காந்தி வழக்கில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதாவுடன் எடுத்துக் கொண்டதாக பத்திரிகைகளில் வெளிவந்த புகைப்படம் குறித்து

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down first. நான் கூப்பிடுகிறேன். திரு. சி. ஞானசேகரன்,

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இன்று காலை, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, ஜூனியர் விகடன் போன்ற பத்திரிகைகளில் உண்மையிலேயே தமிழ் மாநிலக் காங்கிரசைச் சார்ந்திருக்கிற எங்களுக்கெல்லாம் பேரதிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய ஒரு கலர் போட்டோவை நாங்கள் பார்த்தோம்.

21-ஆம் நூற்றாண்டிற்கு இந்தியாவை அழைத்துச் செல்வேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு, எங்களுக்கெல்லாம் இணையில்லாத் தலைவனாக விளங்கிய அருமைத் தலைவன் ராஜீவ் காந்தி அவர்கள் ஸ்ரீ பெரும்புதூரிலே 1991 மே 21-ஆம் தேதி மனித வெடிகுண்டு தாணு என்பவரால் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அவர்களுக்கு இதுபோன்ற கொடிய திட்டத்தைத் தீட்டித் தந்திருக்கிற சிவராஜன் போன்றவர்களும், தாணு போன்றவர்களும் 1990-ஆம் ஆண்டே முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தினுடைய எதிர்கட்சித் தலைவராக இருந்த காலத்தில், அவரோடு மனித வெடிகுண்டு தாணு பக்கத்திலேயே மிகமிக நெருக்கமாக, அதேபோல் அந்தத் திட்டத்தைத் தீட்டுவதற்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்த சிவராஜன் போன்றவர்களும், முன்னாள் அமைச்சர் திரு. ஹண்டே, முன்னாள் அமைச்சர் திரு. சௌந்தரராஜன், முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திருநாவுக்கரசு போன்றவர்களோடு நின்று ஒரு படத்தை அவர்கள் எடுத்துக்கொண்ட செய்தி இன்று பத்திரிகையிலே வெளியாகியிருக்கிறது. அவ்வளவு நெருக்கமாக அப்போது புகைப்படங்கள் எல்லாம் எடுத்துகொண்டவர்கள்—பின்னாலேயே எங்களுடைய அருமைத் தலைவன் ராஜீவ் காந்தி அவர்கள், நாங்களெல்லாம் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட காலத்தில், சுதந்திரப் பறவையாக தமிழகத்தைத் தாயகமாக நினைத்து வந்த எங்களுடைய அருமைத் தலைவன் ராஜீவ் காந்தி,

[திரு. சி. ஞானசேகரன்] [1997 மார்ச் 27

"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்கின்ற நல்ல கொள்கை விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய இந்தத் தமிழகத்திலுடைய மண்ணாகிய ஸ்ரீபெரும்புதூருக்கு வருகிறபோது படுகொலைக்கு ஆளாக்கப்பட்டார். அப்படிப்பட்ட படுகொலையைச் செய்தவர்கள் முன்னாள் அமைச்சர், முன்னாள் முதலமைச்சர் போன்றவர்களோடு படத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதுபோன்ற ஒரு செய்தி-இதற்காகத் தனியாக நியமிக்கப்பட்ட 'ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீமில்' எப்படி இந்தப் புகைப்படம் கிடைக்காமல் போனது? எங்களுடைய அருமைத் தலைவன், ராஜீவ் காந்தி அவர்கள் ஸ்ரீபெரும்புதூருக்கு வருகிறபொழுது அவரோடு அப்போது ஓட்டு வேட்டைக்குத் துணையாக வரவேண்டிய முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் ஏனோ வராமலேயே இருந்துவிட்டார்கள் கிருஷ்ணகிரியிலேயே சந்தித்துக்கொள்வதாக அவர்கள் சொல்லிவிட்டு அங்கேயே நின்றுவிட்டார்கள். அப்பொழுது எங்களுடைய மக்கள் தலைவர், எங்களையெல்லாம் வழி நடத்திக்கொண்டிருக்கிற ஐயா மூப்பனார், திருமதி ஜெயந்தி நடராஜன் ஆகியவர்களும் தான் பக்கத்திலேயிருந்து எங்களுடைய அருமைத் தலைவன் ராஜீவ் காந்தியினுடைய உடல் சின்னாபின்னம் ஆக்கப்பட்டு, அவர் உருவம் கூடத் தெரியாத அளவுக்குச் சிதைக்கப்பட்ட நேரத்தில், அவருடைய ஷூவை வைத்து அடையாளம் கண்டு, அவருடைய துணியை வைத்து அடையாளம் கண்டு, அவர்களையெல்லாம் கொண்டுவந்து சென்னைக்குச் சேர்த்த நேரத்தை நாங்கள் எண்ணிப்பார்க்கிறோம். இப்படிப்பட்ட தலைவனை இழந்து நாங்கள் எல்லாம் வாடியிருக்கிற நேரத்தில், அப்போதிருந்த 'ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீம்' எப்படி இது போன்றதொரு முக்கியமான தடயத்தைக் கண்டறியாமல் போனார்கள்? அந்தக் கோணத்தில் ஏன் அவர்கள் இந்தப் புலன் விசாரணையை எடுக்கவில்லை, உண்மை நாட்டிற்கு தெரிந்தாக வேண்டும்.

முற்பகல் 9-35

இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு இளைய தலைவன் இல்லாத காரணத்தினாலே இந்தியத் திருநாட்டிலே பாரத நாட்டிலேயே இன்று காங்கிரஸ் பேரியக்கம் எப்படியெல்லாம் உருத்தெரியாமல் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அந்தத் தலைவன் இருந்திருந்தால் நிச்சயமாக அடுத்த பிரதமராக அந்த இடத்தில் அமர்ந்து இந்தியத் திருநாட்டைக் கட்டுக்கோப்போடு எடுத்துச் சென்றிருப்பார்.



1997 மார்ச் 27] *[திரு. சி. ஞானசேகரன்]

அத்தகைய தலைவனை இங்கே சின்னாபின்னமாக்கிய கும்பல் இன்னும் வெளியே உலவிக்கொண்டிருக்கிறது. ராஜீவ் காந்தியினுடைய கொலையில் இவர்கள் ஏன் அப்போது விசாரிக்கப்படவில்லை, அவர்களை விசாரிக்காததற்குக் காரணம் என்ன? மாண்புமிகு முதல்வர் அவர்கள் உளவுத் துறையை வைத்தாவது எப்படி அந்த நேரத்தில் அவரோடு மிக நெருக்கமாக இருந்தவர்களை விட்டுவிட்டார்கள் என்பதையெல்லாம் நீங்கள் ஆய்ந்து—காரணம் உண்மையான குற்றவாளிகள் யாராக இருந்தாலும்—அவர்கள் முன்னாள் முதல்வராக இருந்தாலும் கூட—நிச்சயமாக கைது செய்யப்பட்டு குற்றவாளிக் கூண்டிற்கு வந்து அவர்கள் தண்டனை அனுபவித்தே தீர வேண்டும். உண்மை நாட்டிற்கு வெளிவரவேண்டும். இளைய தலைவனை உருக்குலைத்த இப்படிப்பட்டக் கும்பல் நிச்சயமாக இந்த நாட்டில் தண்டிக்கப்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய மிகமிகத் தாழ்மையான கருத்து என்பதை நான் இந்த மாமன்றத்தில் வைத்து தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—இன்று ஜெயின் கமிஷனிலே கூட இதுபோன்ற செய்திகள் வரவில்லை. ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீமிலே இதுபோன்ற செய்திகள் வரவில்லையே ஏன்? திட்டமிட்டே இப்படிப்பட்ட படங்கள் மறைக்கப்பட்டனவா என்பதை எல்லாம் தயவுசெய்து நீங்கள் அறிந்து இந்த நாட்டிற்கு உண்மையை நீங்கள் நிலைநிறுத்த வேண்டும். இதுதான் உண்மை என்பதை நீங்கள் சித்தரித்துக் காட்ட வேண்டும். எங்களுடைய தலைவனுடைய உயிரைக் குடித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டித்தே தீர வேண்டும் என்கிற ஒரு நிலையை நீங்கள் உருவாக்கித் தந்தால் தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக இருக்கக்கூடிய நாங்கள் நிச்சயமாக உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லி, உண்மையை வெளிக்கொணர்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் வழிகோலுவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று காலையில் பரவலாக பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிற இந்த மிக முக்கியமான படம் பற்றிய செய்தியைப் படித்த அனைத்துத் தரப்பு மக்கள் ம்த்தியிலேயும் பல்வேறு ஆழமான சந்தேகங்களை எழுப்பியிருக்கின்றன. நான் இந்தப் பிரச்சினையை ஏதோ ஒரு உணர்ச்சி நிலையில் இருந்து மட்டுமே முன்வைக்க விரும்பவில்லை. அறிவுபூர்வமான

[திரு. கே. சுப்பராயன்]

[1997 மார்ச் 27

சிந்தனையோடு சிலவற்றைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதற்காகத்தான் இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, பொதுவாழ்க்கையில் இருக்கிற ஒருவரோடு பலர் பல்வேறு கட்டங்களில் புகைப்படங்கள் எடுத்துக் கொள்வதில் மாறுபாடு கொள்ள இயலாது. ஆனால் இங்கே முன்வைக்கப்பட்டிருக்கிற, வெளிவந்திருக்கிற இந்தப் புகைப்படம் என்பது பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று என்பதுபோல் பார்த்துவிட முடியாது. புகைப்படத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்களோடு நின்று புகைப்படம் எடுக்கப்பட்டபோது அநேகமாக அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரோடு, முன்னாள் முதலமைச்சரோடு-இந்தியாவினுடைய மனச்சாட்சியையே உலுக்கிய ஒரு மிகப்பெரிய கொலைச் சம்பவத்தில் தொடர்புள்ள இருவர் மிக நெருக்கமான நிலையில் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய புகைப்படம் எடுக்கப்பட்டு ஏழு ஆண்டு காலத்திற்கு பின்னர் இந்தப் புகைப்படம் வந்திருப்பதென்பது ஒரு மிகப்பெரிய பிரச்சினையை உருவாக்கியிருக்கிறது. இந்தப் புகைப்படம் அநேகமாக 1990-ம் ஆண்டில் எடுக்கப்பட்டிருக்கலாம் என்றால் இன்றைக்கு 7 ஆண்டு காலம் ஆகிறது. இந்தப் புகைப்படம் வேறொரு முக்கியமான சந்தேகத்தையும் கிளப்பியிருக்கிறது. அது என்னவென்றால் இந்தியாவினுடைய புலனாய்வுத் துறை முற்றிலும் தன்னுடைய புலனாய்வின் மோப்ப ஆற்றலை இழந்து விட்டதா என்பதே இன்றைக்கு ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக வந்திருக்கிறது. அநேகமாக 7 ஆண்டு காலமாக பல்வேறு வகைப்பட்ட புலனாய்வினுடைய பார்வையிலும் அவர்களுடைய சல்லடைக் கண்களிலேயும் படாமல் இன்றைக்கு பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறதென்றால் இந்தப் படம் இந்திய புலனாய்வுத் துறைக்கே விடப்பட்ட மிகப்பெரிய சவால் என்று நான் கருதுகிறேன். இத்தகைய குருட்டுத்தனம் நிறைந்த புலனாய்வுத் துறை எப்படி உண்மையிலேயே பிரச்சினைகளை ஊடுருவிக் கண்டறிந்து, குற்றங்களைக் குறைக்க அல்லது குற்றவாளிகளைத் தடுக்க முயற்சிக்கும் என்பது பற்றிய சந்தேகத்தையும் இந்தப் புகைப்படம் நமக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

முற்பகல் 9-40

மேலும், நான் இங்கே குறிப்பிட விரும்புவது ஊர் அறிந்த நிலையில் ஒரு மனித வெடிகுண்டு என்ற முறையில் தாணுவும், அவரை



[திரு. கே. சுப்பராயன்]

1997 மார்ச் 27]

கொலைக்குத் தூண்டிய பின்னணியில் இருந்து இயக்கிய பிரதான குற்றவாளியான சிவராஜனும் படத்தில் இருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் பார்க்கவில்லை. இந்தப் புகைப்படத்தில் இருக்கின்றவர்களில் உண்மையிலேயே அந்தக் கொலைச் சம்பவத்திற்கு சம்பந்தப்பட்ட வேறு யாராவது இருக்கிறார்களா என்பதும் கண்டறியப்பட வேண்டிய ஒரு விஷயம் ஆகும். இதுவரையிலும் இந்தப் புகைப்படம் வெளிவராத காரணத்தால், நான் மாநில முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இது மாநில மட்டத்தில் மட்டுமே ஆராய்கிற விஷயம் அல்ல; இது முற்றிலும் மத்திய அரசு சம்பந்தப்பட்ட ஒரு விஷயம்தான்; மத்திய புலனாய்வுத் துறை சம்பந்தப்பட்ட விஷயம்தான். முதலமைச்சர் அவர்கள்கூட இந்த விஷயத்தில் முழுக்க முழுக்க பதில் சொல்வதற்குரிய நிலையில் இருக்க இயலாது என்றுகூட நான் அறிகிறேன். ஆனால், மாநில அரசு, மத்திய அரசிற்கு மிகத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டிய ஒன்று, அதாவது மர்ம முடிச்சு அவிழ்க்கப்பட வேண்டிய ஒன்று, இந்தப் புகைப்படம் மாநில மட்டத்திலும் சரி, அகில இந்திய மட்டத்திலும் சரி, எந்தப் புலனாய்வுத் துறையாலும் கண்டறியப்படாமல் இருந்ததா? அல்லது இந்தப் புகைப்படம் கண்டறியப்பட்டும், வெளியிடாமல் மறைத்துக் கொண்டார்களா? அல்லது, கண்டறியப்பட்டு, அந்த இலாக்கா மட்டத்தில் மட்டும் அது பரிசீலிக்கப்பட்டது என்றால், அதனுடைய விவரங்கள் என்ன என்று இன்றைக்கு நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும். அதேபோல, இந்த புகைப்படத்தில், நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்களும்—இந்த நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டிய ஒரு மிக முக்கியமான விஷயம், இவ்வளவு மிகப் பெரிய குற்றவாளியை, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் நெருக்கமாக போட்டோ எடுக்க அழைத்துச் சென்றவர் யார்? அழைத்துச் செல்வதற்கு மிக முக்கியப் பங்கு ஆற்றியவர் யார்? அவருக்கும் இவருக்கும் என்ன உறவு? ஜெயலலிதா அவர்களுக்கும் முன்னரேயே தாணுவைத் தெரியுமா? சிவராஜனைத் தெரியுமா? தெரியாமலேயே திடீரென்று இவ்வளவு நெருக்கமாகப் புகைப்படம் எடுக்க இயலுமா? இந்த விஷயங்கள் முழுக்க முழுக்க விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். நான் இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்த மாநிலத்திற்கு, மாநில அரசு மத்திய அரசின் மூலம் தெரிவிக்க வேண்டியது, 'இது சம்பந்தப்பட்ட விஷயங்களில் இந்தப் படங்களில் உள்ளே இருப்பவர்கள் யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்பது பற்றிய மறு விசாரணைக்கு உத்தரவிட மாநில அரசு மத்திய அரசை நிர்ப்பந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி மற்றும் ஜூனியர் விகடன் போன்ற பிரபலமான பத்திரிகைகளில் வந்து இருக்கிற சில புகைப்படங்களை எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல, 7 ஆண்டுகளுக்குப் பின்னாலே தமிழகக் காவல் துறையின் கண்களிலோ அல்லது மத்திய புலனாய்வுத் துறை, இதற்கு என்றே தனி நீதிமன்றம், தனி விசாரணைக் குழுக்கள் என்றெல்லாம் நியமிக்கப்பட்டு, 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து மிக முனைப்போடு குற்றவாளிகளை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும்; அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலை இந்திய மண்ணுக்கு, குறிப்பாகத் தமிழ் மண்ணுக்கு ஏற்பட்ட களங்கமாகவே நாம் எல்லோரும் கருதுகிறோம்; அப்படிப்பட்ட ஒரு மாபெரும் தலைவனை வீழ்த்திய குற்றவாளிகள்—அந்தக் குற்றவாளிகள் யாராக இருப்பினும் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும், இரண்டுபட்ட கருத்தும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட மிகப் பெரிய தலைவனுடைய கொலையிலே சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படுகிற குற்றவாளிகள் குறித்து நடந்து வருகிற தொடர் விசாரணைகளுக்குப் பின்னைலேயும், அவர்களிடத்திலே எல்லாம் கிடைக்காத, சிக்காத, கண்டுபிடிக்க முடியாத, அந்தப் புகைப்படங்கள், 7 ஆண்டு கழித்து இப்போது பத்திரிகையிலே வந்து இருக்கிறது.

முதலிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், முன்னாள் முதலமைச்சர், அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி அவர்கள் ஏன் போகவில்லை என்றெல்லாம் சொன்னார். அதற்கெல்லாம் ஏற்கெனவே பதில் சொல்லப்பட்டு இருக்கிறது. இதுபோல கூட்டுக் கூட்டங்கள் நடத்துவதாக ஏற்பாடு இல்லை; தனித் தனிக் கூட்டங்கள் தான் நடத்துவதாக இருந்தது; போகவில்லை என்றெல்லாம் ஏற்கெனவே பதில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஜெயின் கமிஷனிலும் பதில் சொல்லப்பட்டு இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளராலே, எங்கள் கட்சியினுடைய பொதுச் செயலாளர் அவர்களாலே. அதற்குள்ளேகூட நான் போக விரும்பவில்லை. அவர் சொன்ன காரணத்தினாலே நான் பதில் சொன்னேன்.



[திரு. எஸ். திருநாவுக்கரசு]

1997 மார்ச் 27]

முற்பகல் 9-45

இந்தப் புகைப்படத்தைப் பொறுத்தவரை எனக்குக் கிடைத்து இருக்கிற தகவல், இந்தப் புகைப்படம் உண்மை அல்ல என்பது. இந்தப் புகைப்படம் ஒரு போர்ஜரி. தவறாகத் தரப்பட்டிருக்கிறது. இதை எடுத்தது 1990-லே என்கிறபோது ஒரு நிலைமையைச் சொல்ல வேண்டும். 1990 ஜூலையில் நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டேன். கட்சியிலிருந்து விலக்கப்பட்டேன். ஜூலை 13-ந் தேதி என்னுடைய பிறந்தநாள். 12-ந் தேதி கட்சியிலிருந்து நீக்கப்பட்டேன். ஏனென்றால் நானும் புகைப்படத்தில் இருக்கிறேன் என்பதால் நிச்சயமாக 1990 ஜூலை 13-ந் தேதிக்குப் பின்னாலே இந்த படம் எடுக்கப்பட்டிருக்க முடியாது. அதற்கு முன்னாலேதான் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். 1991 மே மாதத்தில் தான் ராஜீவ் காந்தி படுகொலை நடந்தது. வாதத்திற்குச் சொன்னால்கூட, இந்த தாணுவோ, சிவராஜனோ அதற்குப் பிறகுதான் குற்றவாளிகள். 1990 ஜூலைக்கு முன்னாலே அல்லது 90 துவக்கத்தில் எடுக்கப்பட்டிருக்கிற இந்த படத்தில் இருக்கிற அவர்கள் உண்மையிலேயே, அவர்களாக இருந்தாலும்கூட, அவர்கள் குற்றவாளிகள் என்றோ அல்லது ராஜீவ் காந்தியை 1991 மே மாதத்தில் கொல்லப் போகிறவர்கள் என்றோ, அப்போது புகைப்படம் எடுத்துக்கொண்ட அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் பொதுச் செயலாளருக்கோ, மற்றவர்களுக்கோ, எனக்கோ தெரிந்திருக்க நியாயமில்லை. அந்தக் காலக் கட்டங்களில் எல்லாம் பலபேர் வந்து, அது தி.மு.க.வாக இருந்தாலும் சரி, அ.இ.அ.தி.மு.க.வாக இருந்தாலும் சரி, இன்னும் சொல்லப்போனால், ராஜீவ் காந்தியின் முன்னால் நாம் எல்லாக் கட்சிகளுமே போட்டி போட்டுக்கொண்டு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருந்த காலம் உண்டு. தி.மு.க.விலும், அ.இ.அ.தி.மு.க.விலும் கடும் போட்டி இருந்தது. யார் அதிகமாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருவது என்று போட்டி இருந்தது. அப்படி இருந்த காலக்கட்டம். ஆகவே அந்தக் காலக் கட்டங்களில் யாராவது அங்கே வந்திருந்தவர்கள், உண்மையிலேயே புகைப்படம் எடுத்திருந்தாலும்கூட, அதிலே உள்நோக்கம் கற்பிப்பதும் அல்லது அதையும், பின்னாலே நடந்த படுகொலையையும் சம்பந்தப்படுத்துவதும் நிச்சயமாக ஒரு நியாயமான கருத்தாக இருக்க முடியாது. ஆனால் அதை விசாரிப்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. தமிழ்நாடு போலீஸ் விசாரிக்கட்டும், சி.பி.ஐ. விசாரிக்கட்டும். அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

[திரு. எஸ். திருநாவுக்கரசு]

[1997 மார்ச் 27

ஆனால், எனக்குக் கிடைத்திருக்கிற ஒரு தகவல் என்னவென்றால், 1990-ல் இவர்கள் எல்லாம் தர்மபுரியைச் சேர்ந்தவர்கள் என்றும், கழகப் பொதுச் செயலாளருக்குப் பக்கத்தில் நிற்கிற இந்தப் பெண்மணி, தாணு என்று போட்டிருக்கின்ற இந்தப் பெண்மணி, ஓசூரிலே வழக்கறிஞராக இருக்கிற தாட்சாயிணி என்பவர். அவருக்குப் பக்கத்திலே அதாவது தாணு என்று சொல்லப்படுகின்ற- நான் சொல்கின்ற தாட்சாயிணிக்கு அடுத்து இருப்பவர், இப்போதும் கழகத்தில் ஒன்றியச் செயலாளராக இருக்கின்ற நாராயணசாமி என்கிற கழகத் தோழர். இரண்டாவது புறத்திலே நிற்பவர் முன்னாள் மாவட்டச் செயலாளராக இருந்து எம்.எல்.ஏ.வாக இருந்து, எம்.பி.யாக இருந்த சேகர்.

புகைப்படத்தைப் போட்டு இவர்தான் தாணு, இவர்தான் ஒற்றைக்கண் சிவராஜன் என்று போட்டிருக்கிறார்கள். சிவராஜன் என்று போடப்பட்டிருப்பவர், தர்மபுரி மாவட்டம் தளியைச் சேர்ந்தவர், ஓசூரில் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற நஞ்சே கவுடா என்பவர். அதற்கு அடுத்து மாராப்பன். அதற்கு அடுத்து நான். அதற்கு அடுத்து பாப்பா சுப்பிரமணியன் என்கிற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். பொதுச் செயலாளருக்கு இந்தப் பக்கத்தில் பேண்ட் போட்டு ஷூ போட்டுக் கொண்டு இருப்பவர்தான் விஜயகுமார் என்பவர். ஓசூரில் இப்போதும் பார் அசோசியேஷனில் பிரசிடெண்ட் ஆக இருக்கிறார். அவருக்குப் பக்கத்தில் இருக்கிற இன்னொருவர் கிருஷ்ணப்பா என்பவர். அ.இ. அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளராக இருப்பவர். பேண்ட்டோடு கருப்புச் சட்டை போட்டிருப்பவர் சுகுமார் என்பவர். இன்னொருவர் முன்னாள் பஞ்சாயத்து யூனியன் துணைத் தலைவர் கிருஷ்ணப்பா. அடுத்தவர் ஹண்டே. அதற்குப் பின்னால் முன்னாள் அமைச்சர் சௌந்தரராஜன்.

இது குறித்து நான் விசாரித்தபோது, ஓசூரில் இருக்கின்ற வழக்கறிஞர் குழுவிலிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் வந்து இணைந்து கொண்டார்கள் என்றும், அந்த வழக்கறிஞர்கள்தான் இவர்கள் என்றும், இவர்கள் எல்லாம் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார்கள் என்றும், ஓசூரிலும், தளியிலும் உயிரோடு இருக்கிறார்கள் என்றும், செத்துப்போன தாணு அல்ல, சிவராஜன் அல்ல என்றும் கழகத் தோழர்கள் எனக்குத் தகவல் தந்திருக்கிறார்கள்.

எனவே எனக்குத் தெரிந்த இந்தத் தகவலை இந்த மன்றத்திற்கு நான் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றையும் சேர்த்து, இவர்கள் எல்லாம்



[திரு. எஸ். திருநாவுக்கரசு]

1997 மார்ச் 27]

உயிரோடு இருக்கிறார்களா, அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னதைப்போல செத்துப்போன தாணுவா அல்லது உயிரோடு இருக்கின்ற தாட்சாயிணி தானா என்பதையும் சேர்த்துக் கண்டுபிடித்து, முதலமைச்சர் அவர்களும் குறிப்பிட்ட காலத்தை எடுத்துக்கொண்டு, அவர்கள் தமிழ்நாடு போலீஸ் மூலம் விசாரித்தாலும் சரி, அல்லது மத்திய உளவுத் துறை அல்லது சி.பி.ஐ. மூலம் விசாரித்தாலும் சரி, விசாரித்து நாட்டு மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால், கூடி தாரோடு கண்ணாடி போட்டிருக்கிறவர்கள் எல்லாமே தாணு என்றும், பக்கத்திலே பேண்ட் போட்டுக்கொண்டு கண் ஒருமாதிரியாகப் பார்க்கிற காரணத்திலேயே ஒற்றைக்கண் சிவராஜன் என்றும், இப்படி உள்நோக்கம் கற்பித்து அதற்கு ஒரு பின்னணியைத் தந்து, இதற்குப் பின்னால் ஒரு சதி இருக்கிறது என்று சொல்வது என்பதும் எவ்வளவு அவசரத்திலே இந்தப் பிரபலமான பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதும் ஏன் என்றுதான் தோன்றுகிறது. உண்மையில் இது தாணுதான், சிவராஜன்தான் என்றால் அதிலேகூட ஒரு நியாயம் இருக்கிறது பத்திரிகையில் வந்திருப்பதிலே. அப்படியில்லை என்றால் இந்த பிரபலமான பத்திரிகைகள் எல்லாம் இவர்களுக்கு இது தாணு என்று சொன்னது யார், சிவராஜன் என்று சொன்னது யார்? எந்த அடிப்படையில் இந்தச் செய்தியை வெளியிட்டார்கள்?

முற்பகல் 9-50

நான் சொன்ன மாதிரி கூடி தாரும் கண்ணாடியும், பேண்ட்டும் கண்ணாடியும் போட்டிருக்கிற காரணத்தாலே இப்படி எழுதி விட்டார்களா? அல்லது இதற்கு ஏதாவது பின்னாலே பின்னணி, சதி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது பழி சுமத்த வேண்டும், முன்னாலே முதலமைச்சராக இருந்த கழகப் பொது செயலாளர் மீது பழி சுமத்த வேண்டும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக உள்நோக்கத்தோடு வெளியிடப்பட்டிருக்கிறதா? இதற்குப் பின்னணி இருக்கிறதா, சதி இருக்கிறதா? இதற்கு பின்னாலே என்ன நடந்து இருக்கிறது என்பதை எல்லாம் முழுமையாக விசாரித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு அறிவிக்க வேண்டும். அல்லது தமிழகக் காவல் துறையைச் சார்ந்தவர்கள், சி.பி.ஐ.-யை சார்ந்தவர்கள் இதை சாதாரணப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல் இதற்கு

[திரு. எஸ். திருநாவுக்கரசு]

[1997 மார்ச் 27

சரியான அறிக்கையை வெளியிட வேண்டும். நாட்டு மக்களுக்கு உண்மை விளக்கப்பட வேண்டும் என்பதை எனக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் உங்களுக்கு சொல்லி அமர்கிறேன்.

***டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் அனுமதி கிடையாது உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதலில் உட்காருங்கள். அனுமதி கிடையாது என்றால் நீங்கள் உட்கார வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** முக்கியமான சமாச்சாரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தச் சமாச்சாரமாக இருந்தாலும் அனுமதி கிடையாது, உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எங்களுக்கு கிடைத்த தகவல், **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு பேச அனுமதி கிடையாது, உட்காருங்கள். அதெல்லாம் நீங்கள் பேசக் கூடாது. (குறுக்கீடு) நான் உங்களை 'நேம்' பண்ண வேண்டிய அவசியம் ஏற்படும். (குறுக்கீடுகள்)

**திரு. ப. ரங்கநாதன்:** அவர் என்ன கருத்து சொல்கிறார் என்று கேளுங்கள் தலைவரே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு உறுப்பினரும் கருத்துச் சொல்வதற்கு நீங்கள் என்ன சிபாரிசா? (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சொக்கர்:** மரியாதையாகக் கேட்டுக்கொள்கிறோம். வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு உறுப்பினர் தான் பேச வேண்டுமென்று நான் ஏற்கெனவே அறிவுரை வழங்கி இருக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1997 மார்ச் 27]

**திரு. ப. ரங்கநாதன்:** எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. தலைவர் அவர்களே. அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) நான் அனுமதி கொடுக்க முடியாது.

**திரு. ப. ரங்கநாதன்:** அப்படியானால் நாங்களும் உட்கார முடியாது. (உட்கார்ந்திருந்த தம் கட்சியினரைப் பார்த்து) எல்லோரும் எழுந்து நில்லுங்கள்.

(தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினர் எழுந்து நின்றனர்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இப்போது எல்லோரும் அவரை அக்யூஸ் பண்ணி விட்டார்கள்...

**திரு. ஆர். சொக்கர்:** நான் உங்கள் பேச்சுக்குக் கட்டுப்பட்டவன். எங்களுக்கு வாய்ப்பு கொடுங்கள்.

(தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலர் பேச முற்பட்டனர்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அனுமதி கொடுங்க ஐயா..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நான் சொல்வது, ஆறு பேர் இப்படி எழுந்து பேசக் கூடாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சரி, எனக்கு அனுமதி கொடுங்கள் ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள். திரு. ரங்கநாதன், இனிமேல் அவைத் தலைவரை மிரட்டுகிற வேலையை வைத்துக் கொள்ளாதீர்கள். இது தான் கடைசி எச்சரிக்கை. அதை வேறு ஏதாவது தலைவரிடத்திலே வைத்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி, மறைந்த தலைவர் ராஜிவ் காந்தி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாக ஒரு வரியில் சொல்லுங்கள் .

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடுகிறபோது இவர்கள் எல்லாம்

சம்பந்தப்பட்டவர்கள் இல்லை, தனி நபர்கள் என்று சொல்கிறார்.
ஆனால் இதிலே பத்திரிகைகள் மிகத் தெளிவாக தாணுவும் சிவராஜனும்
இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள் ஒருவேளை
திருநாவுக்கரசு அவர்கள் அவர்களோடு இருந்தால் இந்தச் சதித்
திட்டத்துக்கு உடந்தையாக இருக்க மாட்டார் என்று சொல்லி, அவரைக்
கட்சியிலிருந்து நீக்கிவிட்டுக்கூட இந்தத் திட்டத்தை அவர்கள் தீட்டியிருக்க
முடியும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் பேசியதற்கு பதில் சொல்கிறேன்
சார். எனவே திருநாவுக்கரசு அவர்கள் அதிலே இருந்தால் இந்த சதித்
திட்டத்துக்கு உடந்தையாக இருக்க மாட்டார் என்று சொல்லி
அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-விலிருந்து நீக்கிவிட்டுக்கூட இவர்கள்
இந்தக் கொலை திட்டத்தைத் தீட்டியிருக்க முடியும். (மேஜையைத்
தட்டும் ஒலி) நான் பார்க்கிறபோது இந்த ரூபத்தில் அனைத்திந்திய
அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரை நான் பார்த்த அனுபவம்
எனக்கு இல்லை. எப்போதும் கோட்டோடுதான் நான் அவரைப்
பார்த்து இருக்கிறேன். ** அப்படி செய்தால்தான் நாட்டு மக்களுக்கு
இந்த அரசின் மீதே நம்பிக்கை ஏற்படும். அப்படி இல்லாமல் இருந்தால்,
முன்னாள் முதலமைச்சர் அவர்களைக் கைது செய்யாமல்
விட்டுவிடுவார்கள் என்கிற உணர்வு ஏற்படுகின்றபோது குற்றங்கள்
பெருகிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே, தமிழ்
மாநிலக் காங்கிரசின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். **
தீவிரமான விசாரணையை நடத்த வேண்டும். இந்த உலகுக்கு உண்மையை
எடுத்துக் காட்ட வேண்டும். சிவராஜனோடும் தாணுவோடும் எடுத்துக்
கொண்ட புகைப்படத்தைப் பற்றிக் கூற வேண்டும் என்று கேட்டு
அமைகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:.** சரி, நீங்கள் சொல்லி விட்டீர்கள்.
உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. இதே சிவராஜன், தாணு இவர்கள் எல்லாம், இவர்கள்
ஒன்றாக இருந்த காங்கிரஸ் கட்சியிலே அப்போது மத்திய அமைச்சராக
இருந்த திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்களுடைய மகள் லதா
பிரியகுமார், இவர்களோடு எல்லாம் இருந்து புகைப்படம் எடுத்து,
அந்தப் படங்கள் எல்லாம் பத்திரிகையிலே செய்தியாக வந்திருக்கிறது.
ஒன்றாக இருந்த காங்கிரஸ், தமிழ் மாநிலக் காங்கிரஸ் உருவாவதற்கு
முன்னாலே, ஒன்றாக நீங்கள் எல்லாம் காங்கிரசிலே இருந்தபோது,
எனவே, அப்போது நாங்கள், இதற்காக மரகதம் சந்திரசேகர் அவர்களைக்
கைது செய்ய வேண்டும், லதா பிரியகுமாரைக் கைது செய்ய வேண்டும்
என்று நாங்கள் சொல்லவில்லை. அவர்களுக்கும் அந்தக் கொலைக்கும்
சம்பந்தம் இருக்கிறது என்றுகூடச் சொல்லவில்லை. அது எங்கள்
வேலையும் அல்ல. அதை விசாரிக்கின்ற விசாரணை அதிகாரிகள்
விசாரிக்க வேண்டும்; கண்டுபிடிக்கவேண்டும். ஆனால் நான் இவ்வளவு
சொன்னதற்குப் பின்னாலே, இதிலே சந்தேகம் இருக்கிறது என்று
எனக்குக் கிடைத்த ஒரு தகவலையும் நான் சொன்னதற்குப்
பின்னாலேயும் ** என்றெல்லாம் மிக எளிதாகப் பேசுவது சரியான
அணுகுமுறை அல்ல. இதை நீங்கள் தயவுசெய்து சபைக் குறிப்பிலேயிருந்து
நீக்க வேண்டும். ஏன் என்றால், இது சந்தேகத்திற்குரிய பிரச்சினை. யார்
என்றே தெரியவில்லை; ஆள் யார் என்றே தெரியவில்லை. இரண்டாவது,
கொலைக்குப் பின்னாலே எடுத்த படமும் அல்ல. இன்னும் சொல்லப்
போனால், 1990 துவக்கத்திலே எடுக்கப்பட்ட படம். அப்போது அவர்கள்
கொலையாளிகளும் அல்ல. இதை எல்லாம் விளக்கமாகச் சொன்னதற்குப்
பின்னாலே, ** என்று சொல்வது விளம்பரத்திற்கு வேண்டுமானால்
அது பயன்படலாம். அதே நேரத்திலே, இது எங்களை, அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இழிவுபடுத்த அவர் பேசிய
பேச்சுக்கள். (குறுக்கீடு) படம்தானே, படத்தை எப்படிப் போட்டார்கள்
என்பதை நீங்கள் விசாரியுங்கள் என்று நானே சொன்னேனே, அப்படி
விசாரிப்பதற்கு முன்னாலே ஆதாரமற்ற குற்றச்சாட்டை இங்கே சொல்வது
மிகுந்த கண்டனத்திற்குரியது. இதை நீங்கள் தயவுசெய்து, அந்தப்
பகுதியையாவது, சபைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இல்லை என்றால்,
நாங்கள் இதை எதிர்த்து, அதற்குக் கண்டனம் தெரிவித்து, அனைத்திந்திய
அண்ணா தி.மு.க. சார்பிலே வெளிநடப்புச் செய்ய வேண்டியிருக்கும்,
எங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு. ஆகவே, அந்தப்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1997 மார்ச் 27

பகுதியையாவது, நீங்கள் சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** இனிமேல் வேறு யாருக்கும் பேசுவதற்கு அனுமதி கிடையாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போது, போயஸ் கார்டனிலே எடுத்ததைப் போல் இருக்கிறது. கீழே இருக்கிற கார்ப்பெட் எல்லாம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். இது தேவையில்லாத வேலை.

***THIRU B. VENKATASAMY:** I am on a point of order Sir. Because this issue is pertaining to Hosur....

**Mr. SPEAKER:** There is no point of order, please sit down. இன்று காலை நாளேட்டிலே வந்த புகைப்படத்தை வைத்து, நம்முடைய தமிழ மாநிலக் காங்கிரஸ் உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்கள். அதிலே எனக்கு ஒன்றும் வருத்தம் கிடையாது. ஆனால் நீங்கள் அனைவருமே பேசிய ஒரு மையக் கருத்தை மறந்துவிடக் கூடாது. இந்தக் கொலை விசாரணையை நடத்தியது மாநில அரசு அல்ல. சிறப்பு விசாரணைக் குழு— 'ஸ்பெசல் இன்வெஸ்டிகேட்டிங் டீம்' என்ற மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு, அந்த விசாரணையை நடத்தியது. ஆகவே, நீங்கள் எவ்வளவு உணர்ச்சிவசப்பட்டு இங்கே எழுப்புகிறீர்களோ, அதே உணர்ச்சியை நீங்கள் நாடாளுமன்றத்திலே காட்டவேண்டும். இந்தக் கொலை தமிழ்நாட்டிலே நடந்த ஒரேயொரு காரணத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே பதில் சொல்ல விரும்பினால் பதில் சொல்லலாம் என்று கூறுகின்றேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அவர் பேசியது பத்திரிகையிலே வந்துவிடும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கடுமையாக இருப்பேன். நீங்கள் இந்த மாதிரி எழுந்திருந்து, ஒருவருக்கொருவர் பேசுவதை எல்லாம் நான் நிச்சயமாக சட்டமன்றத்திலே அனுமதிக்க முடியாது. உங்களுக்கு அனுமதி கொடுத்த மாதிரி நான் அவர்களுக்கு அனுமதி கொடுத்தால் அவர் பேசுவார், நான் பதில் சொல்லிக் கொள்வேன்.



1997 மார்ச் 27]

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோள், இதிலே முன்னாள் முதலமைச்சர் சம்பந்தப்பட்டிருக்கிறார். ** என்றெல்லாம் பத்திரிகையிலே ஒன்றும் வரவில்லை. இந்தப் படம் வந்த செய்தி பத்திரிகையிலே வந்து இருக்கிறது. இந்தப் படமே உண்மையானதுதானா, அதில் இருப்பவர்கள் எல்லாம் உண்மையானவர்கள்தானா என்ற சந்தேகத்தை நானே சொல்லியிருக்கிறேன். எல்லாவற்றையும் விசாரித்ததற்குப் பின்னாலே உண்மை தெரியும். அதற்குள்ளாகவே அவர்கள் ** என்று சொல்வது இதெல்லாம் ஜெயின் கமிஷன் விசாரிக்கிறது. இங்கே நாம் வந்து விசாரணை நடத்தி, யார் மேலே குற்றம் சுமத்தி, யாரையும் ** இங்கே நாம் உரையாற்றிக் கொண்டிருக்கவில்லை. அது இந்தச் சட்டமன்றத்தினுடைய வேலையும் அல்ல. அதற்காக தனி... (குறுக்கீடு) ஒரே நிமிஷம்தான். முடித்துவிடுகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் ராஜீவ் காந்தி அவர்கள் இறந்த பிறகு, இந்த நாட்டின் முதலமைச்சராக வந்த பிறகு, முதல் மாநாட்டை மதுரையிலே நடத்தி, ராஜீவ் காந்தி அவர்களுடைய அனுதாபத்தினால் நாங்கள் வெற்றி பெறவில்லை என்று ஆணித்தரமாகப் பேசியதன் மூலமே எங்களுக்கு அப்போதே சந்தேகம் வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றையவிருந்து ஜெயலலிதாவை எதிர்ப்பதே எங்களுடைய பணியாக நாங்கள் மேற்கொண்டு, இன்று தனிக் கட்சி தொடங்கி, அவருடைய ஆட்சியை அன்றே அகற்றி, இப்போது இந்த நாட்டில் ஒரு நல்ல ஆட்சியை உருவாக்கியிருக்கிறோம். ஆகவே ஜெயலலிதா மீது முழுக்க முழுக்க எங்களுக்குச் சந்தேகம் உண்டு என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-00

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாநாட்டிலே ராஜீவ் காந்தி சிந்திய ரத்தத்தால் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வரவில்லை என்று முன்னாள் முதலமைச்சர் பேசியது ஒரு அரசியல் ரீதியான விமர்சனம். இப்போதுகூட தி.மு.க.விற்கும்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

த.மா.கா.விற்கும் கூட்டணி இருக்கிறது. நாளையேகூட கருத்து வேறுபாடுகள் வந்து உங்களால் நாங்கள் வெற்றி பெறவில்லை, எங்களால் நீங்கள் வெற்றி பெறவில்லை என்று ஒருவருக்கொருவர் குற்றம் சொல்கிற நிலைமையும், பிரச்சினையும் ஏற்படுகிற காலமும் வரலாம். அது வேறு பிரச்சினை. ஆனால் ராஜிவ் காந்தி மரணத்திற்கு நியாயம் கற்பித்தோ, படுகொலை நியாயம் என்று சொல்லியோ, முன்னாள் முதலமைச்சர் பேசவில்லை. அவர் மரணத்தால், அந்த அனுதாபத்தால் நாங்கள் வெற்றிப் பெறவில்லை. எனக்குள்ள செல்வாக்கால், கூட்டணியால் வெற்றி பெற்றிருக்கிறேன் என்ற அர்த்தத்தில் சொல்லியிருக்கலாம். அதற்கும் ராஜிவ் காந்தியினுடைய படுகொலையை நியாயப்படுத்தினார் என்பதற்கும் முடிச்சு போடக்கூடாது. அதற்கும் இதற்கும் அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன சம்பந்தம்? இரண்டிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சு போடக்கூடாது. எனவே நான் சொல்ல விரும்புவது, அவர் சொன்ன அந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டை நீங்கள் தயவுசெய்து நீக்க வேண்டும். அவர் சந்தேகம் இருக்கிறது என்று சொல்கிறார். அது அவருடைய உரிமை; நான் இல்லை என்று சொல்கிறேன். அது என்னுடைய உரிமை. ஆனால் இப்படி ** என்று சொல்வது தவறு. அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். நீங்கள் இப்படி ஒவ்வொருவராக எழுந்து நின்றால், அது என்ன முறை?

**திரு. ஆர். சொக்கர்** முக்கியமான பிரச்சினை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமான பிரச்சினை என்பதால்தான் நான் இன்று காலை 8 மணிக்கு வந்ததை உடனே எழுப்ப அனுமதித்தேன். அதற்காக, ஒரு கட்சியில் இருக்கிற நீங்கள் எல்லோருமே பேசிக் கொண்டிருப்பதா? அவர் பதில் சொல்லி விட்டார். அவர் ரெய்ஸ் பண்ணிய பாயின்டிற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா? நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்கு, பிறகு அனுமதியளிக்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** பிரச்சினை முடித்து விட்டால் பேசாமல் இருக்கலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பதில் சொன்ன பிறகு நீங்கள் பேசலாம். உட்காருங்கள். இதிலே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது தங்களுக்கு சந்தேகம் இருப்பதாகச் சொன்னார்கள். அது பாராளுமன்ற மரபுப்படி உபயோகிக்கக் கூடிய வார்த்தை. அதில் எந்தத் தவறும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொன்னது, ** என்று எல்லாம் சொன்னார்கள். ஆகவே, நிச்சயமாக இன்றைய முதலமைச்சர் அவர்கள் அப்படிச் செய்ய மாட்டார்கள். செய்யவும் முடியாது. ஏனென்றால், தீவிர விசாரணை செய்து விட்டுத்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியும். ஆகவே, இதிலே யாரும் உணர்ச்சிவசப்பட்டு முறையான விவாதத்தைத் தடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். நான் எதை நீக்க வேண்டும், எதை நீக்க வேண்டாம் என்று முதலமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு சொல்கிறேன். திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமை உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ஏதோ எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அரசியல் ரீதியாக அவசரப்பட்டுப் பேசுகின்றார்கள் என்று சொல்கிறார்கள். நாங்கள் அவசரப்பட்டோ, ஆத்திரப்பட்டோ உணர்ச்சிவசப்பட்டோ பேசவில்லை. பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

அவை சாதாரணப் பத்திரிகைகள் அல்ல. இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, ஜூனியர் விகடன் போன்ற தரம் வாய்ந்த பத்திரிகைகள். அந்தப் பத்திரிகைகளிலே என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால் ..

**"Dhanu, the human bomb, who killed the former Prime Minister Rajiv Gandhi at Sriperumbudur, on May 21st, 1991 and one-eyed Sivarajan, who masterminded the assassination, seen with the AIADMK General Secretary J. Jayalalitha in this photo taken in early 1990."**

அந்தப் பத்திரிகையில் வந்த செய்தியைத்தான் இங்கே சுட்டிக்காட்டுகின்றோம். இதில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஆர். சொக்கர்]

[1997 மார்ச் 27

அவர்களுக்கு நிச்சயமாக இந்தச் சதித் திட்டத்திலே பங்கு இருக்கும் என்ற எங்கள் ஐயப்பாட்டைத் தீவிரமாக விசாரிக்கவேண்டுமென்ற கருத்தைத்தான் நாங்கள் வலியுறுத்துகின்றோமே தவிர, சொன்னதிலே எதுவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படக்கூடிய சொற்களாக எங்களுக்குப் படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். நீங்கள் ஐயப்பாடு என்று சொல்வது, சந்தேகம் என்று சொல்வது எல்லாம் பாராளுமன்ற மரபுப்படி அனுமதிக்க வேண்டிய வார்த்தைகள். அதிலே எனக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். நான் அதற்குப் பிறகு என் தீர்ப்பைச் சொல்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன் அவர்கள், சுப்பராயன் அவர்கள், திருநாவுக்கரசு அவர்கள், ஆகியோர் ஒரு மிக மிக முக்கியமான பிரச்சினை குறித்து கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படித் தெரிவிக்கிற நேரத்திலே, தாங்கள் குறிப்பிட்டதைப் போல உணர்ச்சிவயப்படக் கூடிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டதை மறுக்க முடியாது. அதில் ஒன்றும் ஆச்சரியம் இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. ஆனால், இன்றைக்கு ஒருபுறம் திரு. ராஜிவ் காந்தி அவர்களுடைய கொலை வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னொருபுறம், டெல்லியில் ஜெயின் கமிஷனுடைய் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நேரத்தில், இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, ஜூனியர் விகடன் ஏடுகளில் வந்துள்ள இந்தப் புகைப்படம் ஒரு புதிய திருப்பமாக அமைந்துள்ளது. இது குறித்து மாநில அரசு விசாரித்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கும் என்பதை நான் இந்த அவையிலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)·

முற்பகல் 10-05

இடையிலே இந்தக் கருத்தோட்டத்திலே திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, எல்.டி.டி.இ.க்கு தி.மு.க.வும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும் போட்டி போட்டுக் கொண்டு ஆதரவும் கொடுத்ததாகச் சொன்னார்கள். அது விரிவாக விவாதிக்க வேண்டிய விஷயம் என்றாலும், குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். பத்மநாபாவும், அவரோடு சேர்ந்து 10 பேரும் கொலை செய்யப்பட்ட பிறகு, திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது திராவிட முன்னேற்றக் கழக அரசோ விடுதலைப் புலிகளுக்கு எந்தவிதமான தார்மீக ஆதரவையும் தர விரும்பவில்லை என்பதை வெளிப்படையாகவே அறிவித்தது என்பதையும் நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் மிகத் தெளிவாக அறிவார்கள். அந்த இடைக்காலத்திலேதான் செல்வி ஜெயலலிதா அவர்கள் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அவர்கள், 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய பத்திரிகைகளுக்கு அளித்த தனி பேட்டியில், தனித்த பேட்டியில் — அந்த இரண்டு பத்திரிகைகளிலும் ஏறத்தாழ ஒரு பக்கம் ஒன்றரைப் பக்கம், அந்த அம்மையாருடைய பேட்டி அப்போது வெளியாகி இருந்தது. அதிலே—அவர்கள் விடுதலைப் புலிகளை திராவிட முன்னேற்றக் கழக அரசு கைவிட்டுவிட்டதைப் போலவும், அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு தர வேண்டும் என்றும். குறிப்பிட்டபோது, நிருபர்கள், பத்மநாபா கொலைக்குப் பிறகுமா என்று ஒரு தொக்கி நிற்கின்ற கேள்வியை உள்வைத்துக் கேட்டபோது, 'இரண்டு மாத காலமாக அவர்கள் சரியாகி விட்டார்கள், அந்த பத்மநாபா கொலைக்குப் பிறகு அவர்கள் சரியாகி விட்டார்கள், எனவே, அவர்களுக்கு ஆதரவு தரவேண்டும், தி.மு.க. ஆட்சி எம்.ஜி.ஆர். கொடுத்ததைப் போல ஆதரவை விடுதலைப் புலிகளுக்குத் தரவில்லை, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு, ஈழத்திலே ஏதாவதொரு ஆபத்து ஏற்பட்டால் தமிழ்நாடு கொந்தளிக்கும் என்றெல்லாம் சொல்லி, பத்மநாபா கொலைக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் வாபஸ் வாங்கிக் கொண்ட ஆதரவைக் கூட பொருட்படுத்தாமல், திராவிட முன்னேற்றக் கழக அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தர வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால், திரு. ராஜிவ் காந்தி அவர்கள் இருந்த ஒரு மேடையிலே அம்மையார் அவர்கள் அதைப் பேசியதும் திருநாவுக்கரசு அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். தெள்ளத் தெளிவாக, 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைகளிலும் அந்தப் பேட்டி வெளியாகி இருந்தது. இங்கே குற்றம் சாட்டப்பட்ட நிலையிலே, முன்னாள் முதலமைச்சர், அந்நாள் எதிர்க்கட்சித் தலைவர் குற்றவாளி என்று சொல்லப்பட்ட அந்தச் சொற்களை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால், எந்த ஒரு முடிவுக்கும் வருவதற்கு முன்பு, இங்கே சொல்லப்பட்ட் அந்த வார்த்தைகள் சற்று அதிகமானவை என்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன். ஆனால், சந்தேகத்தைத் தெரிவிப்பது தவறல்ல என்று தாங்கள், தங்களுடைய இடைநிலைத் தீர்ப்பிலே



[கலைஞர் மு. கருணாநிதி]

1997 மார்ச் 27]

வெளியிட்டிருக்கின்றீர்கள். அந்தச் சந்தேகம் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் படத்தைப் பற்றியும் வேறொரு வியாக்கியானத்தை, வேறொரு நிலையை திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதுவும் அலட்சியப்படுத்தக் கூடியது அல்ல என்பதை நான் மிக நன்றாக உணர்கிறேன். ஒன்றை நினைவிலே கொள்ள வேண்டும். திரு. ராஜிவ் காந்தி 21-ஆம் தேதி கொல்லப்படுகிறார் என்றால், அன்று மாலை விமான நிலையத்திலிருந்து அவர் இறங்குகிறார். குறிப்பாக, நாங்கள் திரு. வி.பி. சிங் அவர்களோடு கூட்டணி வைத்திருக்கிற காலத்தில் திரு. வி.பி. சிங் வருகிறார் என்றால் விமான நிலையத்திற்குச் சென்று நாங்கள் வரவேற்பது வழக்கம், அதுதான் மரியாதையும்கூட. நான் இல்லாவிட்டால், பொதுச் செயலாளர், அவர் இல்லாவிட்டால் பொருளாளர், அவர் இல்லாவிட்டால் கட்சியினுடைய வேறொரு தலைவர் என்ற முறையிலே சென்று வரவேற்பதுதான் வாடிக்கை. இல்லாவிட்டால் கட்சியிலே உள்ள உறுப்பினர்களாவது சென்று வரவேற்பது வாடிக்கை. ஆனால், அன்றைக்கு சென்னை விமான நிலையத்திலே வந்து இறங்கிய ராஜிவ் காந்தியை,—அம்மையார் செல்வி ஜெயலலிதா கிருஷ்ணகிரிக்குப் போய்விட்டார் என்றாலும்கூட,— எந்தவொரு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழரும் சென்று விமான நிலையத்திலே ராஜிவ் காந்தியை வரவேற்கவில்லை என்பது ஒரு ஆச்சரியத்திற்குரிய செய்தியாகும். அன்று செங்கற்பட்டு மாவட்டத்திலே அல்லது சென்னை மாவட்டத்திலே அல்லது ஓர மாவட்டங்களிலே போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வேட்பாளர் ஒருவர்கூட சென்று ராஜிவ் காந்தியை அன்றைக்கு வரவேற்கவில்லை. அந்தப் பயங்கர படுகொலை நடந்து முடிந்த பிறகுகூட, அவருடைய சிதறிப்போன அந்தச் சடலம் டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்ட அந்த நேரத்திலேகூட எந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வேட்பாளரும்கூட—அப்போது தேர்தல் நடைபெறுகிற நேரம்—சென்று வழியனுப்பி வைக்கக்கூட செல்லவில்லை. இதெல்லாம் அப்போதே ஒரு சந்தேகத்திற்கிடமாக எல்லோராலும் பேசப்பட்டது. ஆனால் பாவம் ஒரு இடம் பழி ஒரு இடம் என்பது போல நாங்கள்தான் மாட்டிக் கொண்டோம்.

இன்றைக்கு நடைபெற்ற விவாதத்தைப் பார்க்கும்போது எனக்கு ஒரு வகையிலே திருப்திதான். ஆனால் இப்படி நடைபெற்றிருக்கக் கூடாது. ராஜிவ் காந்தி கொல்லப்பட்டிருக்கக் கூடாது என்பதிலே என்னுடைய உணர்வு என்ன என்பது என்னை உணர்ந்தவர்களுக்கு நன்றாகத்



தெரியும். ஒன்பது முறை அதற்கு முன்பு ராஜிவ் காந்தி அவர்கள் நான் முதலமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்திலே தமிழ்நாட்டிற்கு வந்து சென்றார். பத்திரமாகத்தான் அவரை நாங்கள் வழியனுப்பி வைத்தோம். ஆனால் நாங்கள் ஆட்சி இழந்த பிறகு கவர்னருடைய ஆட்சியிலேதான் ராஜிவ் காந்தி அவர்களுடைய உயிர் இங்கே பாதுகாப்பற்ற நிலையிலே ஸ்ரீபெரும்புதூரிலே படுகொலைக்கு ஆளாகி சிதறிப் போன காட்சியும், மூப்பனாரும் மற்றும் சிலரும்தான் அவருடைய உடலைத் தூக்கி வந்து அன்றைக்கு டெல்லிக்கு அனுப்பிய அந்த நிலையும் இருந்தது என்பதையும் மறந்துவிடுவதற்கில்லை. எனவே நான் இதை விவரமாக மேலும் மேலும் பெருக்கி விவாதத்தை வளர்க்க விரும்பவில்லை. நான் தங்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். ** என்று குமாரதாஸ் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட்டு மற்ற விவாத உரைகளையெல்லாம் அவைக் குறிப்பிலே இடம்பெறச் செய்யலாம் என்ற கருத்தைத் தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**THIRU B. VENKATASAMY:** Point of order, Sir.

**MR. SPEAKER:** What is the point of order?

**THIRU B. VENKATASAMY:** Sir, a reference has been made about Hosur. The lady who is seen standing besides the previous Chief Minister is Dhakshayini, an advocate. I know them personally. That is why, I wanted to raise it. The Hon. Member referred about Hosur. The person who is called as Sivarasan is Vijayakumar who is now an advocate and there is also Krishnappa. All these people are from Hosur. So, the entire thing is misleading. I request the Hon. Chief Minister and the Hon. Speaker to see that it is enquired into.

**Mr. SPEAKER:** Hon. Chief Minister has already stated that he will enquire into the matter.

**THIRU. B. VENKATASAMY:** Actually the Chief Minister should enquire into the depiction of these persons.

**MR. SPEAKER:** Hon. Chief Minister has already stated that he is not going to ignore the point made by the Hon. Member Thiru Thirunavukkarasu..

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1997 மார்ச் 27

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவரே . . . .

**Mr. SPEAKER:** Alright. He has said it. அதற்குப் பிறகு நீங்கள் அவரே. அவரே என்றால் என்ன அர்த்தம்? I have allowed him to say it. It is on record.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், தாட்சாயிணி, விஜயகுமார் எல்லாம் எனக்கே பர்சனலாகத் தெரியும் என்று அவரே சொல்கிறார். இருந்தாலும் இதற்குப் பின்னாலே உங்களுக்கு சந்தேகம் இருந்தால் நீங்கள் விசாரித்து உண்மையை நாட்டுக்குச் சொல்லுங்கள். ஆனால் அதற்குள்ளே எவ்வளவு அவசரம்? அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். முன்னாள் முதலமைச்சர் மீது, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. மீது களங்கம் கற்பிப்பதிலே த.மா.கா. உறுப்பினர்கள் எவ்வளவு வேகமாகப் பேசினார்கள் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்; தவறு என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் சொன்ன அந்த வாசகங்களை நீக்கிவிட்டு இந்தப் பிரச்சினைக்கு இத்தோடு முடிவு கூறுகின்றேன்.

## 3. பேரவை விதி 110-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை

### பெரியார் மாவட்டத்தில் தென்னை மரங்களைப் பூச்சி தாக்கியுள்ளமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கும் பொருட்டு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளித்திருக்கின்றேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும்.

* **மாண்புமிகு வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் ஓர் அறிக்கையை அளிக்க தங்களது அனுமதியைக் கோரியிருக்கின்றேன். அந்த அடிப்படையில் இந்த அறிக்கையை இங்கே வைக்கின்றேன்.

பெரியார் மாவட்டத்தில் மொடக்குறிச்சி, எருமாத்தாஜூர், அவல்பூந்துறை, அரசலூர் மற்றும் எல்லா பகுதிகளிலும் திடீரென



[வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம்]

1997 மார்ச் 27]

தென்னை மரங்களில் புது வகை பூச்சியான ஸ்தலக் கம்பளிப் புழுவின் தாக்குதல் ஏற்பட்டது. இதற்கு முன்னர் இவ்வகைப் பூச்சிகள் இப்பகுதியில் காணப்படவில்லை. இப்பூச்சியின் முதல் அறிகுறி தென்பட்டவுடனேயே வேளாண்மைப் பொறியாளர்களால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தென்னை மரங்கள் உயரமாக இருப்பதால் மருந்து அடிப்பதில் பிரச்சினை இருந்தபோதிலும் போர்க்கால அடிப்படையில் விவசாயிகள் உதவியுடனும் தென்னை வளர்ப்போர் சங்கத்தின் உதவியுடனும் செயல்பட்டு புதிய மருந்து அடிக்கும் இயந்திரத்தை விவசாயிகள் உருவாக்கியும், வெளிமாவட்டங்களிலிருந்து வாடகைக்கு அமர்த்தியும் இப்பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. மொத்தம் 54,948 மரங்கள் இப்பூச்சியின் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளன. தென்னை வளர்ச்சி வாரியத்தின் நிதியிலிருந்து ரூ.1,20,000 செலவு செய்து 15,000 மரங்களுக்கு பயிர் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தலைவர், தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி, வேளாண்மைத் துறை இயக்குனர், வேளாண்மை கூடுதல் இயக்குநர், எண்ணெய் வித்து, மாவட்ட ஆட்சியர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பூச்சி இயல் துறை விஞ்ஞானிகள் மற்றும், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜ்குமார் மன்றாடியார் ஆகியோர் 22-3-97 அன்று, பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்த்து, நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பது குறித்து விரிவான விவாதம் மேற்கொள்ளப்பட்டது.

முற்பகல் 10-15

மேலும், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் பவானி சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் ஆகியோர் அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக, வல்லுனர்களின் ஆலோசனைப்படி, பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மரத்தில் வேர் மூலமாக மருந்து செலுத்தி நேர்த்தி செய்தால் உடனடிப் பலன் கிடைத்தாலும், அனைத்து மரங்களுக்கும் தெளிப்பான் மூலம் நேர்த்தி செய்வதற்கு மரத்திற்கு 16 மில்லி துவான் மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 39,948 மரங்கள் இப்பூச்சியின் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு மொத்தம் சுமார் 800 லிட்டர் மருந்து தேவைப்படுகிறது. தேவைக்கு உண்டான மருந்துகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம்]

[1997 மார்ச் 27

தென்னை வளர்ச்சி வாரியம். கொச்சி உதவியுடன் மருந்து தெளிக்கப்பட உள்ளது. இதற்கு சுமார் 4 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தலைவர். தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி அவர்களும். களப் பணிப் பார்வையின்போது உடனுதவி தருவதாகக் கூறியுள்ளார்கள். மாவட்டக் களப் பணியாளர்கள் முடுக்கி விடப்பட்டு. போர்க்கால அடிப்படையில் பூச்சித் தாக்குதல் உள்ள கிராமங்களில். சிறப்பு முகாமிட்டு. பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கையில் விவசாயிகளுக்கு உதவி புரிந்து வருகிறார்கள்.

பல்வேறு தகவல், விளம்பர சாதனங்கள் மூலமாக விரிவான விளம்பரம் செய்து இப்பூச்சி பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இதன் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி
### (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்
### (இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு. பேரவைத் தலைவர் :** அடுத்து, 1997-98-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27—ஊரகவளர்ச்சி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.789,69,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1173, திரு. சி. ஞானசேகரன்.



1997 மார்ச் 27]

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் தொகுதி. பெருமுகை. அலமேலுமங்காபுரம். வெங்கட்டாபுரம், கொணவட்டம். கருகம்பத்தர். சதுப்பேரி, சிறுகாஞ்சி, பாலமதி கிராமங்களுக்கு சிமெண்ட் ரோடு அமைத்துத் தரவேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.789,69,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டு தீர்மானம் எண் 491, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையம் துவக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.789,69,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 183, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருப்பூர், வீரபாண்டி ஊராட்சி ஜனசக்தி நகரிலுள்ள பகுதிகளுக்கு தெருவிளக்கு வசதி செய்யப்பட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.789,69,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 941, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் அசாவீரன்குடிக்காடு, வஞ்சினபுரம் காலனி, நக்கம்பாடி, நமங்குணம், சேந்தமங்கலம், சொக்கநாதபுரம், தளவாய், இரும்புலிக்குறிச்சி, வெண்ணங்குறிச்சி அயன்தத்தனூர், வீராக்கன், கீழ்மாளிகை பெரியாக்குறிச்சி காலனி, மாமனாரங்குடிக்காடு, இலைக் கடம்பூர்

காலனி, மருங்கூர் ஆகிய கிராமங்களில் குடிநீர் மேல் நிலைத் தொட்டிகள் அமைப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.789,69,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 511. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இடைப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமத்தில் ஓமலூர்-சங்ககிரி சாலையிலிருந்து மணமேடு செல்லும் சாலையில் ஒரு சிறு பாலம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.789,69,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 179. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாகை, கீழையூர் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.789,69,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 1279. திரு. டி. மணி.

**திரு. டி. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், மங்காடு ஊராட்சிக்குத் தேவையான நிதி ஒதுக்க வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.789,69,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 1621. திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY** : Hon. Speaker Sir, 'To discuss the need to sanction more bore-wells in drought prone Dharmapuri District especially in Hosur taluk' I move—

"that the allocation of Rs.789,69,84,000/-under Demand No.27 - Rural Development - be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 935. திரு. பா. வேல்துரை.

* **திரு. பா. வேல்துரை** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.789,69,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

## (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மானியக் கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.184,31,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1191, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூரில் மேட்டுப் பகுதிகளில் குடிநீர்ப் பஞ்சம் போக்க 120 ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. சி. ஞானசேகரன்] [1997 மார்ச் 27

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.184,31,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 670, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சி மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 3 லிட்டர் என்ற நிலையை மாற்றி குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.184,31,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 260, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருப்பூர் கிராமப்புறங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் விரைவாக முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.184,31,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 2829, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் குடிநீர் வசதியில்லாத 1. பங்கு நத்தம் கொட்டாய், 2. சவுளூர், 3. குரும்பட்டி, 4. முத்தம்பட்டி, 5. மாட்டுக்காரனூர், 6. சோம்பட்டி, 7. சின்ன பங்கு நத்தம், 8. ராமர் திகூடல், 9. பரப்பட்டி, 10. முத்தம்பட்டி ஆகிய ஊர்களில் தனித்தனியே மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.184,31,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



1997 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 674, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இடைப்பாடி நகராட்சிக்கு சம்பந்தப்பட்ட கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கப்படாமல் விடுபட்டுப்போன பகுதிகளுக்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.184,31,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 1080, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகை நகராட்சியின் குடிநீர் செல்லும் பிரதானக் குழாயை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.184,31,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 1079, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேரன் மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், கடையம் ஒன்றிய கிராமங்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு குடிநீர்த் தட்டுப்பாடு அதிகம் உள்ளதால் உடனடியாக குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேற்றுவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.184,31,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெட்டுத் தீர்மானம் எண் 1222, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY :** Hon. Speaker Sir, To discuss the need to construct over-head tanks and provide drinking water in the villages mentioned below 1. Soothalam Hosur Block; 2. Devaripillai, Hosur Block; 3. Koladasapuram, Hosur Block; 4. Nellore Agraharam; 5. Punudan Poddi, Hosur Block; 6. Kothur, Hosur Block; 7. Samanapalli, Shoolagiri Block; 8. Gudisadavapalli, Shoolagiri Block; 9. D. Barandur, Hosur Block, I move—

"that the allocation of Rs.184,31,07,000 under Demand No.48 - Water Supply—be reduced by Rs.100".

**(இ) கோரிக்கை எண் 49 — நகராட்சி நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.375,67,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1193, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் நகராட்சியில் ரூ.17 கோடி செலவில் உடனே பாதாள சாக்கடைத் திட்டம் இப்போது நகராட்சி கைவசம் உள்ள கழிவு நீர்ப்பண்ணை நிலம் 45 ஏக்கரைப் பயன்படுத்தி நிறைவேற்ற வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.375,67,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 679, திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை' பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.375,67,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 273, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருப்பூர் ஏ.வி.பி. லே அவுட் 6-வது வீதியின் கடைசிப் பகுதியில் சிலரது ஆக்கிரமிப்பால் சாக்கடை நீர் வடிகால் போக்கிடம் இல்லாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.375,67,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 683, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி, நிதிநிலையில் மிகவும் பின்னடைந்து, நலிவுற்று இருப்பதினால் நகரின் அடிப்படை வசதிகளைச் செய்து தர அரசு சிறப்பு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.375,67,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 68, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'நகராட்சிப் பள்ளிகளில் ஆசிரியர் நியமனம் செய்வதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.375,67,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1285. திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழுதேசம் பேரூராட்சிக்குத் தேவையான நிதி ஒதுக்க வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.375,67,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1221. திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY :** Hon. Speaker Sir, To discuss the need to lay a road from Berikai to Saparapalli in Hosur Taluk, I move—

"that the allocation of Rs.375,67,12,000 under Demand No.49 - Municipal Administration be reduced by Rs.100".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1088. திரு. பா. வேல்துரை.

* **திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.375,67,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் ஏதாவது தேவையானால் அவைக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 20 பேர் இன்று பேச இருக்கின்றார்கள். ஆகவே, கண்டிப்பாக எந்த ஒரு உறுப்பினரும் 10 நிமிடத்திற்குமேல் பேசக் கூடாது. நேற்றையதினம் கடைபிடிக்கப்பட்ட முறை இன்றையதினமும் கடைபிடிக்கப்படும். 1.30 மணி வரை அவை நடந்து, அதற்குப் பிறகு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நமக்குக் கொடுக்கின்ற உணவை அருந்திவிட்டு மீண்டும் 2.30 மணிக்கு அவை கூடும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களை விவாதத்தைத் துவக்கி வைக்குமாறு அழைக்கின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மனிதருள் மாணிக்கம், ஜவஹர்லால் நேருவினுடைய பேரன், அருமை அன்னை இந்திரா காந்தியினுடைய குமாரன், நம்மையெல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு சதிகாரர்களால் கொல்லப்பட்ட நம்முடைய உத்தமத் தலைவர் ராஜிவ் காந்தி, இந்த நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கை ஒளிபெற வேண்டும் என்பதற்காகப் பஞ்சாயத்து சட்டத்தை அவர்கள் காலத்திலே கொண்டு வந்தார்கள். இந்த நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி என்பது ஒரு பெயருக்கு நடந்துகொண்டிருந்த சூழ்நிலையை மாற்றி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை கண்டிப்பாக பஞ்சாயத்துத் தேர்தல் நடத்த வேண்டுமென்று உத்தரவிட்டு, அதேபோல அந்தச் சட்டத்தையும் நிறைவேற்றி நமக்குத் தந்தார்கள்.

*@ 249 முதல் 336 வரை உள்ள பக்கங்களில் இணைப்புகள் 1, 2, 3 ஆக அச்சிடப்பெற்றுள்ளன.*

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)**

அந்தச் சட்டம் முழுமையாகப் பாராளுமன்றத்தில் நிறைவேறாத நேரத்தில், பிறகு வந்த ஆட்சியால் அந்தச் சட்டம் அரைகுறையாக நிறைவேற்றப்பட்டு, இன்று பல ஒழுங்கீனங்களுக்கு ஆளாகியிருந்தாலும்கூட, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தவுடன் உடனடியாக, இந்தப் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தி இன்று ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் பதவிக்கு வந்திருக்கிறார்கள். அதிலேயும், குறிப்பாக, தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் 40 ஆயிரம் பேர் இன்று உள்ளாட்சித் தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அதேபோல, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த சகோதரர்கள், சகோதரிகள் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். தாய்க்குலத்திற்கும், ஆதிதிராவிட சகோதர சகோதரிகளுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் அருமையான அந்தச் சட்டத்தின் மூலம், இந்தத் தேர்தலின் மூலம் அவர்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் ஏற்படுகின்றன என்றெல்லாம் இன்று விரிவாக, விவரமாக இங்குள்ள அத்தனை பேரும் பேசவிருக்கிறார்கள்.

முற்பகல் 10-25

கடந்த 21-ஆம் தேதி திருச்சி மாநகரில் 300-க்கு மேற்பட்ட நம்முடைய, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன். அங்கே நம்முடைய ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், இந்த ஆறு மாதகாலத்தில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துச் சொன்னார்கள். சில அனுபவங்கள் மிகவும் வேதனை அளிப்பதாக இருந்தன, சில அனுபவங்கள் மிகவும் வேடிக்கையாக இருந்தன. ஒரு அனுபவம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருக்கின்ற திருமதி தனலட்சுமி என்கின்ற அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் அந்த மேடையிலே ஏறி பேசும்போது, கோவை கொங்குத் தமிழில் அவர் பேசும்போது, அதிகாரிகள் எங்களையெல்லாம் மனிதர்களாகக்கூட மதிப்பதில்லை என்றார். நாங்கள் ஜீப்பு கேட்டால்கூட தர மறுக்கிறார்கள். எங்களுடைய அறைக்கு அதிகாரிகள் வந்து பார்ப்பதே கிடையாது. எந்தவிதமான தபாலும் எங்களுக்குக் கிடைப்பதில்லை என்று மிக வருத்தத்தோடு, வேதனையோடு குறிப்பிட்டார். இன்னும் சில பேர்கள், எங்களுக்கு முறையாக எந்தவிதமான தகவல்களும் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற அதிகாரிகள் கொடுப்பதில்லை என்று வருத்தப்பட்டார்கள். அதிலே, மிகப் பழமை வாய்ந்த, நீண்டகாலமாக ஊராட்சி ஒன்றியப்



பெருந்தலைவராக இருந்த திரு. அய்யண்ணன் அம்பலம் அவர்கள்கூட, என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தில் என்ன நடக்கிறது என்று எனக்கே தெரியவில்லை என்று வேதனைப்பட்டார்கள். வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருக்கின்ற ஒருவர் அங்கே பேசுகின்றபோது, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன், 'இந்த ஊராட்சி ஒன்றியத்தில், இன்னின்ன குறைபாடுகள் இந்தச் சட்டத்திலே இருக்கின்றன, நீங்கள் அவற்றைக் கவனித்து புதியச் சட்டத்தை உருவாக்க வேண்டும்' என்று எழுதினேன், அதற்கு பி.டி.ஓ.-க்குப் பதில் வந்திருக்கிறது. இன்னார் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார், பரிசீலனை செய்து, விசாரித்து அனுப்பவும் என்று பி.டி.ஓ.-வுக்குப் பதில் வருகிறது. இப்படி நம்முடைய அரசாங்க அதிகாரிகளே நடந்துகொள்கிறார்கள் என்று வேதனைப்பட்டார். இப்படி ஏராளமான குறைபாடுகள், கோரிக்கைகள் எல்லாம் வைத்தார்கள். அந்த ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து 40, 50 தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். நம்முடைய அரசுக்கு அந்தத் தீர்மானங்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்று ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரை மூன்று கட்டமாக, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், மாவட்டப் பஞ்சாயத்து என்று மூன்று அங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துக்களுக்கு என்னென்ன அதிகாரங்கள், ஊராட்சி ஒன்றியத்திற்கு என்னென்ன அதிகாரங்கள் என்றெல்லாம் சரியாக வரையறுக்கப்படாத காரணத்தால் பல இடங்களில் பல குழப்பங்கள் நிலவுகின்றன.

உதாரணமாக, நம்முடைய ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில், 65 சதவீதம் பஞ்சாயத்துக்கு என்று சொல்கிறார்கள். அதேபோல், 20 சதவீதம் ஊராட்சி ஒன்றியத்திற்கு என்று சொல்கிறார்கள். 15 சதவீதம் மாவட்டப் பஞ்சாயத்துக்கு என்று சொல்கிறார்கள். ஆனால், ஊராட்சி ஒன்றியத்திலேயிருக்கின்ற அதிகாரிகள், பஞ்சாயத்துக்கு, பஞ்சாயத்து போர்டு தலைவர்களுக்கு அந்தத் தொகைகளைப் பிரித்துக் கொடுக்கின்றார்களா என்றால் அது இல்லையென்றுதான் சொல்லவேண்டும். எல்லா இடங்களிலேயும், ஊராட்சி ஒன்றியத்தில் அந்த மாதிரி நடைபெறுகின்றது. அதன் காரணமாக பஞ்சாயத்திலே இருக்கின்ற தலைவர்கள் மிகுந்த வேதனைப்படுகிறார்கள். இதிலே என்னுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், இந்த ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் இருக்கின்ற அனைத்துத் தொகைகளையும் நம்முடைய பஞ்சாயத்திற்கே ஒதுக்கிவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 65 சதவீதம், 20 சதவீதம், 15 சதவீதம்

என்பதெல்லாம் ஒரு பெரிய குழப்பத்திலே ஆழ்த்திவிடும் என்ற காரணத்தால், முழுமையாக ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் அனைத்தையும் பஞ்சாயத்திலேயே பொறுப்பு ஏற்று செயல்படுத்துகின்ற வகையிலே செயல்படுத்த வேண்டும். அதேபோல, நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகின்ற தொகைகள், உதாரணமாக பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒரு கோடி ரூபாய் மத்திய அரசு வழங்குகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நம்முடைய தமிழக அரசு 25 இலட்சம் ரூபாய் வழங்குகிறது. இந்த பணமெல்லாம் செலவழிக்கப்படுகின்றபோது, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், நம்முடைய ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் ஆகியோர் எல்லாம் ஒன்றாக அமர்ந்து, எந்தெந்த வேலைகளுக்குப் பணம் எடுக்க வேண்டும் என்று ஒரு வரையறை செய்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் இந்தப் பணம் செலவழிக்கப்படுகின்றபோது பல குளறுபடிகள் ஏற்படக்கூடும்.

முற்பகல் 10-30

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நான் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருந்தபோது, அந்த ஒன்றியத்தில் ஒரு குறைபாடு இருந்ததைக் கண்டுபிடித்தேன். அதாவது ஒரு இடத்தில் ஏரியை வெட்டுவதற்காக கான்ட்ராக்ட் விடப்பட்டது. அதற்குப் பில் வாங்கினார்கள். பிறகு, அதே ஏரியின் கரை அருகே ரோடு போடுவதற்காக ஒரு கான்ட்ராக்ட் விடப்பட்டது. அதற்கும் பில் வாங்கினார்கள். பின்னர், மீண்டும் அதே ஏரிக்கு ஒரு கால்வாய் வெட்ட வேண்டுமென்று சொல்லி மற்றொரு கான்ட்ராக்ட் விடப்பட்டது. அதற்கும் தனியாக பில் வாங்கினார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், வெட்டப்பட்ட இடம் ஒன்றுதான். முதல் தடவை கண்மாயை ஆழப்படுத்துவதற்கென்று பில் வாங்கியிருக்கிறார்கள். இரண்டாவது தடவை ரோடு போடுவதற்கு என்று பில் வாங்கியிருக்கிறார்கள், மூன்றாவது தடவையாக, கால்வாய் என்று சொல்லி அதற்கும் பில் வாங்கியிருக்கிறார்கள். இதைக் கண்டுபிடித்தபோது எப்படி ஒரே வேலைக்கு மூன்று தடவை பில் வாங்கினார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. மேலும், இப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் போன்றவர்களுக்கெல்லாம் மக்கள் பணியாற்றுவதற்கென்று பணம் கொடுக்கின்றோம். அப்படிக் கொடுக்கின்ற பணம் ஒரே இடத்திற்குச் சென்று அந்தப் பணம் பாழ்பட்டு விடக்கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, பஞ்சாயத்துக்களில் கூட்டங்கள் நடைபெறுகின்றபோது, அந்தக் கூட்டங்களில் கிராமத்தில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள், கிராம சேவகர்கள், மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் போன்றவர்களெல்லாம் கலந்துகொண்டு எப்படி சட்டமன்றத்தில் கூட்டங்கள் நடைபெறும் போது அதிகாரிகள் வந்து விளக்கம் அளிக்கின்றார்களோ அதுபோன்று அங்கேயும் அந்த அதிகாரிகள் வந்து விளக்கம் அளிக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதுபோல, ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் அந்த வட்டத்திலுள்ள எல்லா அதிகாரிகளும் கலந்துகொண்டு, அங்கே கேட்கப்படுகின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடிய சூழ்நிலையையும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே, மாவட்டப் பஞ்சாயத்துக் கூட்டங்களிலேயும், மாவட்டத்திலுள்ள அனைத்து அதிகாரிகளும் கலந்துகொண்டு அந்தக் கூட்டங்களில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும். ஏனென்றால், இதுவெல்லாம் இப்போது சட்டத்தில் இல்லை. அதேபோன்று, நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் அதிகாரிகள் முறையாக வந்தமர்ந்து பணியாற்றுவதைப் போல, கிராமப் பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து, மாவட்டப் பஞ்சாயத்து ஆகிய இவைகளிலும் அதிகாரிகள் முறையாக வந்த அமரவேண்டும். மாவட்டப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவரிலிருந்து கடைநிலை அதிகாரிகள் வரை அனைவரும் அங்கே பொறுப்பேற்று செயல்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

மாவட்டப் பஞ்சாயத்துக்களில் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவரும், பஞ்சாயத்து உறுப்பினர்களும் அமர்ந்து விவாதிக்கும் இடத்தில் ஒரே ஒரு அதிகாரி வந்து உட்கார்ந்து கொண்டிருப்பதை மக்கள் பார்த்து, அதை ஒரு வெட்டி வேலையாகக் கருதுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்ற வேண்டும்.

நகராட்சிகளைப் பற்றிச் சொல்லும்போது ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். தஞ்சாவூரில் சிவகங்கைப் பூங்கா என்று ஒரு பூங்கா இருக்கிறது. அந்தப் பூங்காவுக்கு நான் ஒருமுறை சென்றிருக்கிறேன். அந்தப் பூங்கா மிகவும் அழகான பூங்கா. நான் அந்தப் பூங்காவைச் சுற்றிப் பார்த்துவிட்டு, அங்குள்ள குளியல் அறையையும், கழிப்பிடத்தையும் பார்த்தபோது, மிகவும் வியந்து போனேன். ஏனென்றால், மிகவும் அழகாக உள்ள அந்தப் பூங்காவில், குளியல் அறையும்,

கழிப்பிடமும் மிகவும் மோசமான நிலையில் துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்ததைப் பார்த்தவுடன் அங்கு நிற்க முடியாமல் ஓடிவர வேண்டிய சூழ்நிலை இருந்தது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஒருவர் என்னைப் பார்க்க வந்திருந்தார். அப்போது அவர், "தமிழ்நாட்டில் பொது இடங்களில் சுகாதாரம் மிகவும் மோசமாக இருக்கிறதே, பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் போன்ற இடங்கள் மிகவும் மோசமாக இருக்கின்றதே. இதை மாற்றுவதற்கு வழியில்லையா" என்று கேட்டார். ஆகவே நகராட்சிகளில் பொது இடங்களில் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற இடங்கள் சுகாதாரமாக இருக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அடுத்து பஞ்சாயத்து தலைவர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களுக்கும், மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நாட்டில், பல இடங்களில் இதுபோன்ற அமைப்புகளில் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள், ஆகிய அத்தனை பேர்களுக்கும் நாம் சம்பளம் வழங்குவதன் மூலம், அதில் ஊழல் ஏற்படாமல் இருக்கும் சூழ்நிலையை உருவாக்க முடியும். எனவே, இதைப்பற்றி யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

இந்த நாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள் செம்மையாகச் செயல்படுவதற்கு குடிதண்ணீர் வழங்குவது என்பது மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு தென் மாவட்டங்களில் வறட்சி கோர தாண்டவம் ஆடுகிறது. குடிதண்ணீர் இல்லாததால் மக்கள் பல சிரமங்களுக்கு ஆளாகியிருக்கின்றனர். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் வைகை நதியிலிருந்து ராஜகம்பீரம் என்ற திட்டத்தின் மூலம், முதுகுளத்தூர், கடலாடி மற்றும் கமுதி போன்ற பகுதிகளுக்கு குடிநீர் கொடுக்கிறார்கள். அங்கேயுள்ள 90 ஹெச்.பி. மோட்டார், மின்சாரக் கோளாறின் காரணமாக செயல்பட முடியாமல் இருக்கிறது. காரணம் கேட்டால் 300 வோல்டேஜ்தான் வருகிறது, 350-லிருந்து 400 வோல்டேஜ் வரை வந்தால்தான் எங்களால் அந்த இயந்திரத்தை இயக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆற்றிலே தண்ணீர் இருந்தும், தண்ணீர் எடுப்பதற்கு மோட்டார் இருந்தும், மின்சாரம் கிடைக்காத ஒரே காரணத்தால் குடிதண்ணீர் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று அந்தப் பகுதிகளில்



ஏராளமான இடங்களில் உப்பு நீரை நல்ல நீராக ஆக்குகிறோம் என்று சொல்லி மெஷின்களைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மெஷின்கள் ஒரு இடத்தில்கூட வேலை செய்யவில்லை. எல்லாமே பழுதுபட்டுவிட்டன. லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து வாங்கப்பட்ட அந்த இயந்திரங்கள் அனைத்தும் வீணாகக் கிடக்கின்ற சூழ்நிலை நிலவுகிறது. ஆகவே நம்முடைய அமைச்சரை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதிகளுக்கு, குறிப்பாக இராமநாதபுரம், பசும்பொன், காமராசர், திருநெல்வேலி, வி.ஓ.சி. போன்ற மாவட்டங்களுக்கு, இந்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் குடிநீருக்காகப் படுகின்ற துன்பங்களையும், துயரங்களையும் தீர்க்க வேண்டுமானால் கேரளாவிலிருந்து — விவசாயத்திற்குக் கூட தண்ணீர் நீங்கள் தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன் — குடிநீரைப் பெற்று, நிரந்தரமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக் கொடுத்த நம்முடைய பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. உ. திசைவீரன்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், உள்ளாட்சித் துறையின் சார்பாக நடைபெறுகின்ற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை எடுத்துரைக்க விழைகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையிலே 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று குறிப்பிட்டதைப் போன்று, ஆட்சிக்கு வந்த 6 மாத காலத்திலேயே உள்ளாட்சிகளுக்குத் தேர்தல்களை முற்றிலுமாக நடத்தி, இந்தியாவிலேயே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். அதிலே அவர்கள் முதற்கட்டமாக அறிவித்துள்ள 'வருகின்ற காலகட்டங்களில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்' என்ற கருத்தை முழுமையாக நான் வரவேற்கிறேன். அதுமட்டுமல்லாமல், உள்ளாட்சி அமைப்புகளே அவற்றுக்குக் கொடுத்துள்ள பொறுப்புகள் குறித்து

முடிவுகள் எடுக்கும் என்றும், அதிகாரிகள் அம்முடிவுகளைச் செயல்படுத்தும் பொறுப்பை வகிப்பார்கள் என்றும் அறிவித்திருப்பதை, நான் உள்ளாட்சித் தலைவர் என்ற முறையில் வரவேற்று, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்களிலேயே, முதல் தடவையாக கேளிக்கை வரி நீங்கலாக அனைத்து வரி வருவாய்களிலும் 8 சதவீதத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கி, அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்து இருப்பது, வறண்ட பாலைவனமாக இருந்த உள்ளாட்சிகளுக்கு வற்றாத ஜீவநதியாக இருக்கிறது என்பதை நினைக்கும்போது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்த ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் கணக்கில் அளிக்கும் மானியமானது ரூ. 646 கோடியிலிருந்து ரூ. 1,174 கோடியாக அதிகரிக்கப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு திட்டம். ஆளுங்கட்சிக்கு ஒரு நல்ல பெயரையும், மக்களுடைய நன்மதிப்பையும் பெற்றுத் தருவது உள்ளாட்சித் துறைதான். அதன் அடிப்படையில் மானியக் கோரிக்கை 27-ன்கீழ், 'ஊரக வளர்ச்சி' என்ற தலைப்பின்கீழ் ரூ. 789.70 கோடியும், மானியக் கோரிக்கை 48-ன்கீழ், 'குடிநீர் வழங்கல்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 184.31 கோடி ரூபாயும், மானியக் கோரிக்கை 49-ன்கீழ், 'நகராட்சி நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 375.67 கோடியும், ஆக மொத்தம் ரூ. 1,350 கோடியை அள்ளித் தந்து, அதிகப்படியான நிதியை உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறைக்குத் தந்தமைக்காக எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

அதுமட்டுமல்ல், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், செய்தி மற்றும் தகவல் தொடர்புத் திட்டம் ஆகியவற்றிற்கு அதிகப்படியான நிதியினை ஒதுக்கி, உள்ளாட்சி அமைப்புகள் செவ்வனே நடைபெறுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தமைக்காக நான் என்னுடைய நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வேலை உறுதித் திட்டம். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் 80 சதவிகித நிதியுதவியுடன், 20 சதவிகித மாநில அரசின் நிதியும் சேர்ந்து, கிராமப்புற மக்கள் அதிகப்படியான நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.



அதேபோன்று, மாவட்ட பரவலாக்கும் திட்டத்திற்கு ரூ. 40 கோடி ஒதுக்கித் தந்திருப்பதையும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு கூடுதல் நிதியினை ஒதுக்கித் தந்திருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, இத்திட்டத்தின்கீழ் மாவட்டங்களுக்கு வழங்கப்படும் தொகை கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றால் 65:15:20 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும் என்று அறிவித்திருப்பது சரியானது அல்ல. ஏனென்றால், கிராமப்புறத்து மக்களுக்கு அனைத்து நன்மைகளையும் செய்து தருவது ஊராட்சி ஒன்றியங்கள்தான். எனவே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகப்படியான சதவிகித நிதியினை ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயன்தரக்கூடிய இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், வீடுகளைக் கட்ட கடந்த காலங்களிலே வழங்கப்பட்ட ரூ. 20,000 என்பதை மாற்றி வீடொன்றிற்கு ரூ. 27,000 என்று உயர்த்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதுமட்டுமல்ல, கட்டிக் கொடுக்கப்படுகின்ற அந்த வீடுகளுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பகுதியிலே கட்டப்பட்டுள்ள அத்தகைய வீடுகளுக்கு சாலை வசதி, மின் விளக்கு வசதி, குடிநீர் வசதி போன்றவை செய்து கொடுக்கப்படாமல், மக்கள் அங்கே குடியிருக்க இயலாத அளவிற்கு ஒரு அவல நிலை இருக்கின்ற காரணத்தால், அத்தகைய குடியிருப்புகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டத்தின்கீழ், எனது தொகுதியில் 'ஓப்பன் வெல்'-களாகத் தோண்டினால் பயனளிக்காது என்ற காரணத்தினால், 'போர் வெல்'-களாகப் போட்டுத் தருமாறு அன்போடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்கள் குறித்த பல்வேறு முக்கியமான கோரிக்கைகளை இங்கே எடுத்து வைக்க விழைகிறேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 74-வது பிரிவின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து அதிகாரங்களும் கண்டிப்பாகத் தரப்பட வேண்டும். அப்பொழுதுதான் உள்ளாட்சி அமைப்புகள் திறம்படச் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒன்றியத் தலைவர்களுக்கு தொலைபேசி இணைப்பு தந்தமைக்காக ஒன்றியத் தலைவர்களின் சார்பாக நன்றி

தெரிவித்துக் கொள்வதோடு, ஒவ்வொரு ஒன்றியத்திலுள்ள ஒன்றியத் தலைவர்களுக்கும் ஜீப் ஒன்று வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கின்ற நிதி நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற மரங்களை வெட்டுவதற்குரிய அதிகாரத்தினை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கே வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மின் விளக்குப் பிரச்சினை. மின்சார வாரியம் எங்களோடு சரிவர ஒத்துழைக்காத காரணத்தினால், மின் விளக்குகள் சரிவர எரியாததொரு மோசமான சூழ்நிலை இருக்கின்றது. எனவே, நகராட்சியிலே இருப்பதைப் போல, ஒவ்வொரு ஊராட்சிக்கும் குறைந்தது, 10 பிட்டர், எலெக்ட்ரீசியன் போன்றவர்களை ஒதுக்கித் தந்தால், நாங்களே அந்த மின் விளக்குகளைப் பராமரித்துக் கொள்வோம் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள பொது நிதி முழுவதும் அங்கே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கே ஊதியமாகப் போய்விடுகின்ற காரணத்தினால், அரசே சம்பளம் கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, மிகவும் நலிந்த நிலையிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான மின் விளக்குகள், மின் உபகரணங்கள் வாங்குவதற்கு 50 சதவிகித மானியத்தினை அரசு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், ஒவ்வொரு ஒன்றிய அலுவலகங்களிலும் நிரப்பப்படாமல் உள்ள பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்ற பதவிகளை நிரப்புவதற்குரிய அதிகாரத்தினை அந்தந்த ஒன்றியத்திற்கே தர வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு அலுவலர்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கின்றது. ரெவின்யூ துறையிலே பணிபுரிகின்றவர்களுக்கு 'கன்ஃபர்டு ஐ.ஏ.எஸ்.' கொடுக்கின்றார்கள். அதேபோல, கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கும் அந்த 'கன்ஃபர்டு ஐ.ஏ.எஸ்.' பதவி கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று மதிப்பீடுகள் தயாரிக்கும்போது, 'யூனிட் காஸ்ட்' என்ற அளவிலே ஒதுக்கப்படுகின்ற அந்த முறையை நான் கண்டிப்பாக எதிர்க்கிறேன். காரணம், ஒவ்வொரு மண்ணினுடைய தன்மை, 'குவாரி'-யினுடைய தன்மை போன்ற பல்வேறு காரணங்களினாலே, 'எஸ்டிமேட்' கூடும்; குறையும். 'யூனிட் காஸ்ட்' என்று வைத்திருப்பதனால், கட்டடம் முழுமையாகக் கட்டுவதற்கு மிகுந்த இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



முற்பகல் 10-45

முக்கியமாக, எனது தொகுதியிலே, எங்களது ஊராட்சி ஒன்றிய அலுவலகமானது, பல வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்டது. அது இடியும் நிலையில் இருக்கிறது. மழைக் காலங்களில், நாங்கள் அங்கு வந்து அமரக்கூட இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, முக்கியமாகக் குடிநீர்ப் பிரச்சினை. எங்கள் பகுதியில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, குடிநீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. எந்தக் கிராமத்திற்கும் சென்று மக்களைச் சந்திக்கக்கூட போக இயலாத ஒரு மோசமான சூழ்நிலை இருக்கிறது. போனவுடனே, தண்ணீர்தான் கேட்கிறார்கள். எனவே, மழை நீரைக் கொண்டு, 'பெர்கொலேஷன் பாண்ட்' என்ற வகையிலே, ஒவ்வொரு கிராமத்திற்கும் கண்டிப்பாக அமைத்துத் தர வேண்டும். அதுமட்டுமல்ல; அதற்கு 'ஃபென்ஸிங்' போட்டுப் பாதுகாத்தால், நிலத்தடி நீர் உயர்ந்து வருகின்ற காலகட்டத்திலே, குடிநீருக்கு மிக வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

பஞ்சாயத்துப் பிரிப்பு என்பதற்கு ஒன்றியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். ஒருசில பஞ்சாயத்துக்களைப் பார்த்தோம் என்றால், அவற்றின் கிராமங்களுக்கு 'லைட்'டே போடுவதில்லை. அதேபோல் என்னுடைய தொகுதியிலே பெருந்துறை என்கிற பஞ்சாயத்து இருக்கிறது. ஏறத்தாழ, 3,000 பேர் வசிக்கிறார்கள். அதை இரண்டாகப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும், சித்தா, ஆயுர்வேத, யுனானி மருத்துவமனைகளைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக, ஊரக வளர்ச்சித் துறையிலே பணிபுரிகின்ற ஆதிதிராவிட அலுவலர்களுக்கு, மற்றத் துறைகளிலே வழங்குவதைப் போல, பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக ஒன்றே ஒன்று; உள்ளாட்சிகளிலே பல திட்டங்கள் நடைபெறுகின்றன. அவ்வாறு பல்வேறு திட்டங்கள் நடைபெறுவதைத் தணிக்கை செய்வது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு

ஊராட்சி ஒன்றியத்திலேயும், தனியாக ஒரு தணிக்கைக் குழு அமைத்துக் கொடுத்தால், 'கன்கரன்ட் ஆடிட்' செய்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, நகரமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குகின்ற 'சிட்டிங் பீஸ்' போல, ஊராட்சித் தலைவர்களுக்கும், குழு உறுப்பினர்களுக்கும், சம்பளம், 'சிட்டிங் பீஸ்' போன்றவற்றை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொண்டு, இந்த அருமையான வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, திரு. கோ.க. வீரப்பன்.

***திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது, ஒருசில கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு வழங்கியமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே, அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டத்தக்க வகையிலே, இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே மட்டுமல்ல; அகில இந்திய அளவிலே இருக்கின்ற எல்லா மாநிலத்திலே இருக்கின்றவர்களும், இன்னும் சொல்லப்போனால், உலக அளவிலே இருக்கின்ற தமிழர்கள் எல்லாம் பாராட்டத்தக்க அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது.

நிதிநிலை அறிக்கையிலே, உள்ளாட்சி மன்றங்களுக்குப் படிப்படியாக அதிக பொறுப்புகளும், அதிகாரங்களும், நிதியாதாரங்களும் வழங்கப்படும் என்று சொல்லியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல், 'தகவல் பெறும் உரிமைச் சட்டம்' — 'Right to Information Act' — கொண்டுவர முடிவு செய்துள்ளது பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல், 'நமக்கு நாமே' என்று மக்கள் குறை தீர்க்கும் மனுநீதித் திட்டத்தைக் கொண்டுவர இருப்பது, பாராட்டத்தக்கதாகும்.



அதேபோல், 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை கொண்டுவர இருப்பது, பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல், அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீ
வசதி, அடிப்படை மருத்துவ வசதி, வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுவசதி
ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு, கிராமந்தோறும் நியாயவிலை
கடைகள், கட்டாய இலவசக் கல்வி, எல்லாக் கிராமங்களுக்கும் சாலை
வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கு இன்றைக்கு முன்னுரிமை
கொடுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல், சாலைகள் மேம்பாட்டிற்காக 'நபார்டு' –
நிறுவனத்திடமிருந்து 250 கோடி ரூபாயும், பாசன வசதிக்காக 22 கோடி
ரூபாயும், முந்தைய அரசால் பயன்படுத்தாததை, பெற்றிருப்பது
பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல், சாலை பராமரிப்பு நிதி என்று சொல்லி, இன்று
அதற்காக ஒரு தனி நிதி ஏற்படுத்தியதையும், 10 ஆயிரம் சாலை
பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்திருப்பது
பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல், பேருந்துகள் சென்ற ஆண்டு 2,200 வழங்கப்பட்டது
இப்போது 3,600 வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது
பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல், கல்விக்கு, கிட்டத்தட்ட மூவாயிரம் கோடி
ஒதுக்கியிருப்பதும் பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல், என்னுடைய சேலம் மாவட்டத்திற்கு, தந்தை பெரியார்
அவர்கள் பெயரிலே, ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்று
சொல்லியிருப்பது பாராட்டத்தக்கதாகும். ஆக, இன்றைக்கு எல்லா
வகையிலேயும், இந்த நிதிநிலை அறிக்கையிலே, இன்னும் பல்வேறு நல
திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

முற்பகல் 10-5

அதேபோன்று, பெண்கள் மேம்பாட்டுக்காக பல திட்டங்கள்
போடப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி
வளர்ச்சிப் பணிக்காக இன்றைக்கு 25 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பது
மிக மிகப் பாராட்டத்தக்கதாகும். உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சென்ற

ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 646 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். இந்த ஆண்டு 1.174 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும். இது சென்ற ஆண்டைவிட 528 கோடி ரூபாய் அதிகமாகும். அதுமட்டுமல்லாமல் கேளிக்கை வரி நீங்கலாக அனைத்து வரி வருவாயில் 8 சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் என்பதும், மொத்த கேளிக்கை வரியில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 90 சதவிகிதம் என உயர்த்தி வழங்கப்படும் என்பதும் பாராட்டத்தக்கதாகும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பதிலுரையில் உள்ளாட்சிகளுக்கு படிப்படியாக அதிக அதிகாரம் வழங்கப்படும் என்று சொல்லியிருப்பதும் பாராட்டத்தக்கதாகும். 1997-98 ஆம் ஆண்டுக்கு மாத்திரம்தான் இது சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு கேரளா, கர்நாடகா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையிலே அடுத்த ஆண்டிலே இது மாற்றியமைக்கப்படும் என்று சொல்லியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அதேபோல மாவட்ட திட்டக் குழு அமைக்கப்படும் என்று சொல்லி, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றில் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்டம் முழுமைக்கும் ஒரு வரைவுத் திட்டம் தயாரிக்கப்படும் என்றும் அதற்கேற்ப மாவட்ட திட்டக் குழு அமைக்கப்படும் என்றும் சொல்லியிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

அரசமைப்புச் சட்டம் 73-வது திருத்தத்திலே பிரிவு 243 (சி) உட்பிரிவு 3 (எ)-ல் ஊராட்சிமன்றத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்களாக வருவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று பிரிவு 243 (சி) உட்பிரிவு 3 (பி)-ல் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாவட்ட ஊராட்சி குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்று உள்ளது. கேரளாவை எடுத்துக்கொண்டால் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்திலும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாவட்ட ஊராட்சி குழுக் கூட்டத்திலும் 100 க்கு 100 சதவிகிதம் கலந்துகொள்கிற நிலை இருக்கிறது. ஆனால் இங்கே நம்முடைய மாநிலத்தில் அந்த நிலைமை இல்லாமல் இருக்கிறது.

அதுமட்டுமல்ல; நமது சட்டமன்ற உறுப்பினர்கள் பேரூராட்சி கூட்டத்திலே, நகராட்சிக் கூட்டத்திலே மாவட்ட ஊராட்சிக் கூட்டத்திலே கலந்துகொள்ளலாம். ஆனால் ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில் மட்டும் கலந்துகொள்கிற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அரசியலமைப்புச்



சட்டத்தில் அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கலந்துகொள்வது மட்டுமல்ல இன்றைக்கு பிரிவு 4-லே 243 (சி) உட்பிரிவு......

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அது என்ன விதியின்கீழ் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதாவது 73-வது திருத்தச் சட்டத்திலே பிரிவு 243 (சி)-யிலே உட்பிரிவு (3) ரூல் (எ)-விலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (பி)-ல் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாவட்ட ஊராட்சிக் கூட்டத்திலே கலந்துகொள்ளலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த ஊராட்சி ஒன்றியக் கூட்டத்திலும், மாவட்ட ஊராட்சிக் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு 243 (சி) உட்பிரிவு (4)-ல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லாம் கலந்துகொள்வது மட்டுமல்ல, இவர்களுக்கு ஓட்டுரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. இது அரசியலமைப்புச் சட்டத்திலே திருத்தச் சட்டத்திலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இது நம்முடைய 1994 ஆம் ஆண்டு சட்டத்திற்கு முரணாக, மாறுபட்டு உள்ளது என்பதை நம்முடைய. அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இந்த நேரத்திலே கொண்டுவர விரும்புகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், மாவட்ட ஊராட்சித் தலைவர் என்ற முறையிலும் இங்கே பேசுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஊராட்சிக் குழுக் கூட்டத்திலே கலந்துகொள்ளலாம் என்றிருக்கிறபோது......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. கே.கே. வீரப்பன்:** நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் மாவட்ட ஊராட்சித் தலைவர் என்ற முறையில் பேச வேண்டியிருக்கிறது. மாவட்டப் பஞ்சாயத்துக்களுக்கும் மற்ற ஊராட்சி அமைப்புகளுக்காகவும் பேச வேண்டியிருக்கிறது. அதனால் அதிக நேரம் வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று நான் சொல்வதற்கு காரணம் இருக்கிறது. பெரும்பான்மையான சட்டமன்ற தொகுதிகள் கிராமப்புறங்களாக இருக்கிற காரணத்தினாலே அங்கே இன்றைக்கு என்ன நடைபெறுகிறது என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படிச் செய்தால் ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலே ஒரு சுமூகமான உறவு ஏற்படுவதற்கு அது வாய்ப்பாக அமையும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் குறித்து முடிவுகள் எடுக்கப்படும் என்றும், அதிகாரிகள் அந்த முடிவுகளை செயல்படுத்தும் பொறுப்பை மட்டும் வகிப்பார்கள் என்றும் நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருப்பதைப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 10-55

அடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை மறுபடியும் நடத்த ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், திட்டங்களின் முன்னேற்றத்தைத் தெரிந்து கொள்ளவும், விரைந்து நடவடிக்கை எடுக்கவும், அங்கே முழுக்க முழுக்க மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் அதிகாரிகள் மெத்தனப் போக்கோடு இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்துகின்ற வகையில் மறுபடியும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை — டி.ஆர்.டி.ஏ. — கவர்னிங் பாடியானது இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரை சேர்மெனாகவும், மாவட்ட ஊராட்சி தலைவரை துணைத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவரை உறுப்பினராகவும் கொண்டு செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட அளவிலே நடைபெறுகின்ற திட்டங்கள் பற்றி விவாதிக்க, கலந்து ஆலோசிக்க ஏதுவாக பல்வேறு துறைகளில், மாவட்ட அளவிலே இருக்கின்ற அதிகாரிகள் கட்டாயம் மாவட்ட ஊராட்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வகை செய்யும் விதத்திலே அரசாணை வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



மாவட்ட ஊராட்சி என்று எடுத்துக்கொண்டால் அது செயல்படுகின்ற நிலைமையிலே இன்றைக்கு இல்லை. அதற்காக தனியாக அதிகாரிகள் இல்லை. திட்ட அலுவலரை எடுத்துக்கொண்டால், புதிதாக உருவாக்கப்பட்ட எங்களுடைய மாவட்டத்தின் திட்ட அலுவலர் சேலத்தில் இருக்கிறார். அவர் இதைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்வதில்லை, கண்டுகொள்வதில்லை. ஆகவே மாவட்ட ஊராட்சிகளுக்கு டி.டி.ஓ. அளவிலாவது தனி அதிகாரிகளை அவசியம் நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகாரங்களைப் பொறுத்தவரையில் அவை படிப்படியாக வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரங்களைப் படிப்படியாக வழங்கினாலும், நிதி ஆதாரத்தையாவது உடனடியாக அதிகரித்து வழங்க வேண்டும். ஆறுமுகம் கமிஷனில் எடுத்துச் சொல்லப்பட்ட வகையிலே நிதியினை அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி குறிப்பிட வேண்டியிருந்தாலும் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டை எடுத்து வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதியில் கபிலர்மலை, பரமத்தி மற்றும் திருச்செங்கோடு ஆகிய ஒன்றியங்கள் அடங்கிய பகுதிக்கும், மற்ற வழித்தட கிராமங்களான 110 வழித்தட கிராமங்களுக்கும் சேர்த்து ஒரு குடிநீர்த் திட்டத்தை தயாரித்து, குடிநீர் வடிகால் வாரியம் 8.91 கோடி ரூபாய் மதிப்பீட்டில், வாரியக் கடித எண் 85608 நாள் 19-12-1995-லே அரசுக்கு அனுப்பியுள்ளது. அதற்கான அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, நாமக்கல் ஒன்றியம், மோகனூர் ஒன்றியம் மற்றும் ஆட்டோ நகர் வரையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றுக்காக 1995 ஆம் ஆண்டில், பிப்ரவரி மாதத்தில் அரசினுடைய ஒப்புதலுக்காக கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் மிக வேகமாகச் செயல்பட்டு வருகிறார்கள். திறமையாகச் செயலாற்றி வருகிறார்கள். அவர்களுடைய துறையிலே இருக்கின்ற அதிகாரிகள்,

[திரு. கே. கே. வீரப்பன்] [1997 மார்ச் 27

மேல் மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள், செயலாளர், குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக அதிகாரி மற்றும் துறையின் இயக்குநர்கள் அத்தனை பேரும் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கீழே பணியாற்றுகிறவர்கள் அந்த அளவுக்கு வேகமாகப் பணியாற்றுகிறார்களா என்றால் இல்லை. குடிநீர் வடிகால் வாரியத்தில் நடைபெறுகின்ற வேலைகள் எல்லாம் மிகவும் காலதாமதமாக நடைபெறுகின்றன. அந்தப் பணிகளை துரிதப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நாமக்கல்லிலிருந்து மோகனூர் வழியாக கரூர் செல்லுகின்ற பாதையில் காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பாலம் அமைத்தால், கிட்டத்தட்ட 18 கி.மீ. — நாமக்கல்லிலிருந்து, வேலூர் வழியாக கரூர் செல்லும்போது அதிகமாக 18 கி.மீ. செல்வது — மீதமாகிறது. மேலும், டீசல் செலவு மற்றும் தேய்மானச் செலவுகளை பார்க்கும்போது பல கோடி ரூபாய் இதனால் மீதமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அரசாங்கம் இதை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். பொதுவாக, நம்முடைய மாநிலத்தில் காய்கறி மார்க்கெட்டுகள், பல இடங்களில் மிகவும் அசுத்தமாக இருக்கின்றன. அதனால் தொற்றுநோய் பரவக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அந்த இடங்களை எல்லாம் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதுபோன்று பஸ் நிலையங்கள். அங்கு பலவிதமான மக்கள் வந்து செல்கின்றார்கள். எனவே, பஸ் நிலையங்களையும் சுகாதார நோக்கோடு சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் ரோடுகளைச் செப்பனிடும்போது முதலில், மெட்டலை வைக்கின்றார்கள். பிறகு பல மாதங்களுக்கு அவைகளைக் கிடப்பில் போட்டுவிடுகிறார்கள். பின்னால் அதற்குத் தார் போடும்போது, அதில் சேதம் ஏற்பட்டு அதனுடைய உழைப்பு குறைய ஏதுவாகின்றது.



1997 மார்ச் 27] [திரு. சி. வேலாயுதன்]

எனவே, ரோடுகளுக்கு மெட்டலைப் போட்ட பிறகு அதிக காலதாமதம் ஏற்படுத்தாமல் உடனே தார் போட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில், திக்கனங்கோடு பஞ்சாயத்தில் மயிலோடு, வாழோடு, கொல்லாய் போன்ற ஊர்களை இணைக்கக்கூடிய அந்தப் பெரிய சாலைக்கு மெட்டல் இடப்பட்டு பல மாதங்கள் ஆகின்றன. இப்போது அந்த ரோடு மிகவும் பழையது போல அசிங்கமாக இருக்கின்றது. எனவே, அதற்குத் தார் போட்டுத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அதுபோன்று கைப்பம்பு உதவியாளர்கள் பல ஆண்டுகளாகப் பணியாற்றியும், நிரந்தர வேலைவாய்ப்பு இல்லாமல் அவதிப்படுகின்றார்கள். எனவே, அவர்களை எல்லாம் நிரந்தரமாக்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று நகராட்சிகளில் துப்புரவுப் பணியாளர்கள் மிகவும் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினால் பல இடங்களில் கழிவு நீர்த் தேக்கம், சாக்கடைகள் போன்ற பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எங்களது பத்மநாபபுரம் நகராட்சியைப் பொறுத்தவரையில், அங்கு 86 துப்புரவுப் பணியாளர்கள் இருக்க வேண்டும். ஆனால், இப்போது 22 பேர் தான் இருக்கிறார்கள். அவர்களது எண்ணிக்கையை உயர்த்துவதோடு, அவர்களைச் சரியான முறையில் கண்காணிக்க தக்க அதிகாரிகளையும் நியமிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தேர்வு நிலைப் பஞ்சாயத்துக்கள், அதாவது டவுன் பஞ்சாயத்துக்கள் என்று சொல்லக்கூடிய வகையில் சுமார் 15 பஞ்சாயத்துக்களைத்தான் எடுத்துக்கொள்ள முடியும். மீதமுள்ள அத்தனைப் பஞ்சாயத்துக்களும் வருமானம் இல்லாமல் சிரமப்படுகின்றன. எனவே, மத்திய அரசோடு தொடர்பு கொண்டோ அல்லது ஏதாவது சட்டத் திருத்தங்களை ஏற்படுத்தியோ, அவைகளைக் கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றி, மத்திய அரசினுடைய நிதியைப் பெற முடியுமா என்பதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே திக்கனங்கோடு பஞ்சாயத்தில், வாழோடு, மங்காரம் போன்ற பகுதிகளில் குடிநீர் இல்லாமல் மக்கள் பெரும் அவதிப்படுகிறார்கள். இப்போது, வறட்சிக் காலமாகையால், பல கிலோ மீட்டர் தூரம் சென்று தண்ணீரைக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை அங்கே ஏற்பட்டு இருக்கின்றது.

வில்லுக்குறி டவுன் பஞ்சாயத்தில், பாசேரி அம்மன் கோயில் ரோடு, பாறையடி ரோடு போன்ற இந்த ரோடுகள் எல்லாம் செப்பனிடப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன. அங்கு ஜல்லிகள் கிளம்பி, பெரிய குண்டுகளாக இருக்கின்றன. வாடகை வாகனங்களைக் கூட அங்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. அதேபோன்று திக்கணங்கோடு டவுன் பஞ்சாயத்தில் கூட கீழதிக்கணங்கோடு ஊருக்குச் செல்லக்கூடிய சாலை மிகவும் மோசமாக இருக்கின்றது. பஞ்சாயத்தைக் கேட்டால் பணம் இல்லை என்று சொல்கின்றார்கள். மேலும், சில ரோடுகளைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்துக்கள் எங்களுடைய ரோடுகள் இல்லையென்று சொல்கிறார்கள். ஒன்றியம் எங்களுக்கு இல்லை என்று சொல்கின்றார்கள், அப்படியானால் அந்த ரோடுகளையெல்லாம் யார் தான் சரி செய்வது என்ற நிலையில் பல ரோடுகள் இருக்கின்றன. எனவே, இவைகளையெல்லாம் ஏதாவது ஒரு துறையின் கீழ் கொண்டு வந்து, அந்த ரோடுகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சுத்தியறைப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில், வேளாங்கோடு, கஞ்சிகுழி, பள்ளியாடி, வாய்க்கால்கரை ரோடு இவைகள் எல்லாம் ஐந்தாறு ஊர்களை இணைக்கக் கூடிய ரோடுகள். இந்த ரோடுகள் கிட்டத்தட்ட 10, 20 ஆண்டுகளுக்கு முன்பு செப்பனிட்டது போலக் காட்சியளிக்கின்றன. அதனையும் மிக விரைவில் செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பல பஞ்சாயத்துக்களில் போதுமான அளவு குடி தண்ணீர் இருந்தும், பைப்புகள் வசதியிருந்தும், கிணற்றில் தண்ணீர் இருந்தும் அங்கு பம்புசெட்டுகள் இல்லாத நிலையிருக்கிறது. இரண்டு ஹெச்.பி. பம்புசெட்டு இருக்கிறது, ஆனால் 5 ஹெச்.பி. ஆக்கினால்தான் நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும் என்று சொல்லக்கூடிய நிலையிருக்கின்றது. வில்லுக்குறி டவுன் பஞ்சாயத்தில் கருப்புக்கோடு குடிநீர்த் திட்டத்தில் 2 ஹெச்.பி. பம்புசெட்டு இருக்கிறது. அதை 5 ஹெச்.பி. ஆக ஆக்க வேண்டும். பஞ்சாயத்தைக் கேட்டால் காசு இல்லை என்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால், அதனைப் பஞ்சாயத்துத்தான் செய்ய வேண்டும் என்று சொல்கின்றார். இதற்கு ஏதாவது ஒரு வழியில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று பல இடங்களில் குடி தண்ணீர் இருக்கின்றது. ஆனால், குழாய் வசதிகளைச் சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. பஞ்சாயத்துத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது, அதுபோன்று ஒன்றியத்



தலைவருக்கும், மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவருக்கும் அதிகாரம் இருக்கின்றது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர்கள் எந்தவிதமான பொறுப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வேலை, அவர்களுடைய அதிகாரம் என்னவென்று தெரியாமல் இருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் வேதனைப்படுவது போன்று காட்சியளிக்கிறது. அதையும் மாற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

பஞ்சாயத்துக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் புரிந்துகொண்டு, தேவையுள்ள பஞ்சாயத்துக்களுக்குச் சற்று அதிகமான நிதி உதவி வழங்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, திக்கணங்கோடு டவுன் பஞ்சாயத்தில் அமராவதி, புங்கரை, நங்கச்சிவிளை, தெங்கன்குழி ஆகிய ஊர்களை இணைக்கின்ற சேனல் கரை ரோடு பல ஆண்டுகளாக செப்பனிடப்படாமல் இருக்கிறது. இந்த சேனல் கரை ஓரமாக உள்ள ரோடுகளைச் செப்பனிடுவதால் இரண்டுவிதமான இலாபம் ஏற்படும். ஒன்று, சேனலும் உடைப்பு ஏற்படாமல் பாதுகாக்கப்படும், மக்களுடைய போக்குவரத்திற்கும் வசதியாக அது அமையும். எனவே, சேனல் கரை ரோடை செப்பனிட சற்று அதிகமாகச் செலவு செய்தாலும், அது பொதுப்பணித் துறைக்கும் உதவி செய்தது போன்று அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, சாக்கடை சரியான முறையில், சுத்தமில்லாமல், பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோயால் மக்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரணியல், திருவிதாங்கோடு, புதுக்கடை போன்ற இடங்களில் யானைக்கால் நோயால் மக்கள் அவஸ்தைப்படுகின்றார்கள். எனவே, பாதுகாக்கப்பட்ட, நல்ல சுகாதார முறையிலான சாக்கடைகளை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, பல ஊர்களில் ரோடுகளை அகலப்படுத்த வேண்டுமென்று நினைத்து மின் கம்பங்களை அகற்றிக் கொடுக்கும்போது பல சட்டச் சிக்கல்கள் வருகின்றன. பஞ்சாயத்து, ஒன்றியம், மின்வாரியம் போன்ற நிறுவனங்கள் சேர்ந்து பணியாற்றக்கூடிய சூழ்நிலையின் காரணமாக பெரிதும் காலதாமதம் ஆகிறது. இந்தக் காலதாமதத்தின் காரணமாக, வேலை எடுத்த காண்டிராக்டர்கள் பொருட்களின் விலை ஏறிவிட்டதால் நாங்கள் பழைய பட்ஜெட்டிலே வேலை செய்ய முடியாது

என்று சொல்லக்கூடிய நிலை ஏற்படுவதால், பல பணிகள் அப்படியே கிடப்பிலே கிடக்கின்றன. கீழக் கருப்புக்கோடு, மேலக் கருப்புக்கோடு போன்ற இடங்களில் மின் கம்பங்களை மாற்ற முடியாததால், மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள்.

அதேபோன்று, பல நெடுஞ்சாலைகள் பஞ்சாயத்தைச் சேர்ந்ததா, ஒன்றியத்தைச் சேர்ந்ததா என்று ஏற்பட்ட கேள்விக்குறியின் காரணமாக பணிகள் முடிக்கப்படாமல் அப்படியே கிடக்கின்றன. திருவிதாங்கோடு கிருஷ்ணன்கோவில் பகுதிக்குச் செல்லக்கூடிய சாலையோரத்தில் தண்ணீர் அதிகமாக உள்ள கிணறு இருக்கிறது. அதில் சாக்கடை நீர் சென்று கசியக்கூடிய நிலை உள்ளது. அங்குள்ள பொதுமக்கள் தங்களுக்கு நோய் வந்து விடுமோ என்று மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிணற்றை ஆழப்படுத்தக்கூடிய நிலையில் பஞ்சாயத்தில் நிதி வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, இதுபோன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு நிதி ஒதுக்கம் செய்யக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மிகச் சிறிய, அகலம் குறைந்த தெருக்கள் ஊர்களின் மத்தியிலே உள்ளன. அவைகளுக்கு மெட்டல் போட்டால் தாங்காது. காரணம் என்னவென்றால், மழைக் காலங்களில் தண்ணீரும் அதன்மீது தான் ஓடவேண்டும். தெருக்களில் ஓரமாக ஓடை அமைக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இடவசதி கிடையாது. சாக்கடை நீரும், மழை நீரும் அதன் மூலமாகத்தான் பாய வேண்டியுள்ளது. எனவே, அவைகளுக்கு கான்கிரீட் போட்டுக் கொடுத்தால் அதிக நாள் உழைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

வீடுகளுக்குத்தரம் போடும்போது பாரபட்சமாகப் போடப்படுகிறது அல்லது சிறிய வீடுகளுக்கு அதிகமாக வரி போடப்படுகிறது என்ற பிரச்சினை எல்லாம் சொல்லப்படுகிறது. அதையும் அரசாங்கம் கவனித்து, தகுந்த ஆட்களை நியமித்து, முறையானபடி வீடுகளுக்குக் தரம் போட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு நூலகம் அமைத்து, பஞ்சாயத்துக்கள் பற்றிய நல்ல செய்திகளையும், வரலாற்றுச் சிறப்புமிக்க விஷயங்களை எல்லாம் பாதுகாத்து வைத்து, அதைப் பொதுமக்கள் படித்துப்



பயன்பெறக்கூடிய வகையில் அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, சத்துணவுப் பணிகளை மேற்பார்வையிடுவது ஒன்றியப் பணியாளர்கள். ஆனால், சத்துணவு பி.ஏ. — மாவட்டக் கலெக்டருடைய பி.ஏ. என்று போடும்போது, அது சமூக நலத் துறைக்குப் போய்விடுகிறது என்று ஊராட்சி ஒன்றியங்களுடைய அதிகாரிகள் தெரிவித்து வேதனைப்படுகிறார்கள். சத்துணவுப் பணிகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றியங்களில்தான் மேற்பார்வையிடுகிறோம். ஆனால், அந்தப் பெரிய பதவி மட்டும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, அதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரே அதற்கு என்ன செய்யலாம் என்ற யோசனையை இந்த அவையிலே வழங்கலாம்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒன்றியத்தினுடைய நிர்வாகிகள்தான் சத்துணவுப் பணியைக் கவனித்து வருகின்றார்கள். ஆகவே, அவர்களுக்குத்தான் சத்துணவுப் பணியில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய சத்துணவு பி.ஏ. பதவியை நிரப்பும்போது, நல்ல முறையில் பணியாற்றும் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கே கொடுத்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்து அமைகிறேன்.

வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்,

வாழிய பாரத மணித் திருநாடு!

வந்தே மாதரம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. கு. ரவி அருணன்.

[1997 மார்ச் 27

முற்பகல் 11-10

* **திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு பொறுப்பேற்றவுடன் மிகக் குறுகிய காலத்தில், பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்த மாநகராட்சிகள் உட்பட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல்களை நடத்தி, உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் இடம் பெறுகிற வகையில் உள்ளாட்சி நிர்வாகத்தை சீர்படுத்திய தமிழக முதல்வர் அவர்களுக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று தமிழகத்தில் அனைத்து இடங்களிலும் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்றும்கூட, எனது தொகுதியில் குற்றாலம் பேரூராட்சிக்கு இன்னும் தேர்தல் நடைபெறவில்லை. அங்கே உடனடியாகத் தேர்தலை நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம், எல்லா உள்ளாட்சி அமைப்புகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பேற்றிருக்கின்றனர். ஊராட்சி ஒன்றிய நடைமுறை நூலும், ஊராட்சிமன்ற நடைமுறை நூலும், 1994-ஆம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின்படி, இன்னும் திருத்தி அமைக்கப்படவில்லை. அவர்கள் நல்ல முறையில் செயலாற்றக்கூடிய அளவில் ஊராட்சி ஒன்றிய நடைமுறை நூல்களையும், ஊராட்சிமன்ற நடைமுறை நூல்களையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, நகராட்சிச் சட்டம் பல ஆண்டுகளாகத் திருத்தப்படாமல் இருக்கிறது. அதையும் திருத்தி அமைத்து, நகராட்சி நிர்வாகத்தை சீரமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கு, மக்களைச் சந்திப்பதற்கு வசதியாக ஊராட்சிமன்றக் கட்டிடங்கள் இருக்கின்றன. அதேபோன்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும், நகராட்சித் தலைவர்களுக்கும், மக்களைச் சந்திப்பதற்கு வசதியாக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் இருக்கின்றன. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ தொகுதியில் எந்த ஒரு அலுவலகமும் கிடையாது. ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, உள்ளாட்சித் துறை பராமரிப்பிலோ, அல்லது



1997 மார்ச் 27] [திரு. கு. ரவி அருணன்]

பொதுப்பணித் துறை பராமரிப்பிலோ சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலுள்ள மக்களை, அதிகாரிகளைச் சந்தித்துப் பேசக்கூடிய வகையில் ஒரு மக்கள் தொடர்பு அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது ஊராட்சி மன்றங்களுக்கு செஸ் மற்றும் சர்சார்ஜ் என்பது நிலவரி அடிப்படையிலே வழங்கப்படுகிறது. இவ்வாறு நிலவரி அடிப்படையில் வழங்கப்படும்போது, நஞ்சை நிலங்களைவிட புஞ்சை நிலங்களுக்கு நிலவரி மிகக் குறைவாக இருப்பதால், புஞ்சை நிலங்கள் நிறைந்த ஊராட்சி மன்ற செஸ் மற்றும் சர்சார்ஜ் மூலம் மிகக் குறைந்த வருவாய் கிடைக்கிறது. இந்த வேறுபாட்டைப் போக்க செஸ் மற்றும் சர்சார்ஜ் நிலவரி அடிப்படையில் பிரித்து வழங்காமல், மக்கள் தொகை அடிப்படையில் பிரித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களிலே மிகவும் பரிதாபமான முறையிலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் சுகாதாரச் சிப்பந்திகளும், விசைப்பம்பு இயக்குநர்களும் தான். ஒவ்வொரு தடவையும், மானியக் கோரிக்கைகள் வரும்போதெல்லாம், இவர்களுடையப் பிரச்சினை பேசப்பட்டு வருகிறது. ஆனால் அவர்கள் கோரிக்கை மட்டும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் அங்கே முழு நேரமாகப் பணியாற்றினாலும் கூட பகுதி நேர ஊழியர் என்ற அடிப்படையில் அவர்களுக்கு ரூ.150 மட்டுமே ஊதியமாக வழங்கப்படுகிறது. இன்றையதினம் கிராமங்களில் முழுமையான மின்சார வெட்டு இருக்கிறது. வறட்சி காரணமாக குடிநீர்க் கிணறுகளிலும் நீர் வற்றியிருப்பதால், இரவு நேரங்களில்கூட கண் விழித்து அவர்கள் பணியாற்றுகிறார்கள். தற்போதுள்ள விலைவாசியைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தை, முழு நேர ஊழியர்களாக அறிவித்து, ஆயிரம் ரூபாயாவது வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று பொங்கல் போனஸ் மற்ற ஊழியர்களுக்கு 650 ரூபாய் வழங்கும்போது, அவர்களுக்கு மட்டும் 200 ரூபாய் தான் வழங்கப்படுகிறது. அதையும் உயர்த்தி, மற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல 650 ரூபாயாக உயர்த்தி அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்த இருப்பதாகவும், அரசின் பரிசீலனையில் இருப்பதாகவும் அறிகின்றேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பெரிய குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றக் கூடிய அளவிற்கு அங்கே தொழில்நுட்பம் மிக்கவர்கள் கிடையாது. ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் குடிநீர்த் திட்டப் பணிகளை நிறைவேற்றினால், அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் காலதாமதம் ஏற்படுமேயொழிய அத்திட்டத்தின் பயன் மக்களுக்கு விரைவாகச் சென்று அடைய முடியாது. உதாரணத்திற்கு, என்னுடைய தொகுதியில் பாவூர்சத்திரம் என்ற பகுதியிலே நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 10 லட்சம் ரூபாய் செலவில் ஒரு குடிநீர்த் திட்டம் கட்டுவதற்கு உத்திரவிடப்பட்டது. அத்திட்டத்தை ஊராட்சி ஒன்றியத்திடம் நிறைவேற்றுவதற்காக ஒப்படைத்தார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியம் எடுத்துக் கொண்ட காலம் 3 ஆண்டுகள் ஆகும். அதேபோன்று செங்கோட்டை ஒன்றியத்திலே தெற்குமேடு என்ற ஊராட்சிக்கு 18 லட்ச ரூபாய் செலவில் ஒரு குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கான கிணறு அமைக்கும் பணியை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைத்தார்கள். 2 ஆண்டுகள் ஆகியும் அங்கே கிணறு அமைக்கும் பணி முடிவுபெறவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் குடிநீர்த் திட்டங்களை ஒன்றியத்தின் மூலம் செயல்படுத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தென்காசியைப் பொறுத்தவரையில் தென்காசி தென் மாவட்டங்களில் உள்ள முக்கியமான சுற்றுலாத்தலம் ஆகும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளி இயல் கையேட்டில்கூட தென்காசி ஒரு Pilgrim centre throughout the year என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தென்காசி பகுதியில் இன்று குடிநீரை விலைக்கு வாங்கக் கூடிய அளவுக்கு அங்கே சூழ்நிலை இருக்கின்றது. 1977 ஆம் ஆண்டு அங்கே குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நகராட்சி, அரசுக்கு 50 ஆயிரம் ரூபாய் செலுத்தி இருக்கின்றது. ஏறத்தாழ 20 ஆண்டுக்காலம் ஆகியும் அங்கே குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, உடனடியாக தாமிரபரணி நதியிலிருந்து குடிநீர் வழங்குவதற்காக ஆய்வு செய்வதற்காக உத்திரவிட்டார்கள். அந்த அடிப்படையில் இப்போது தாமிரபரணி நதிநீர்த் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 20 ஆண்டுக் காலமாக அங்கே குடிநீருக்காக அல்லல்படுகின்ற மக்களின் துயரைப் போக்கும் வகையில் தாமிரபரணி குடிநீர்த் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி அளித்து, நடப்பு ஆண்டிலேயாவது அதை நிறைவேற்றித்



தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று செங்கோட்டை நகராட்சிக்கு தயாரிக்கப்பட்டுள்ள பரமநேரி குடிநீர்த் திட்டத்தையும் விரைவாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றையதினம், பேருந்து நிலையங்களில் இருக்கின்ற கழிப்பிடங்கள் ஒழுங்காகப் பராமரிக்கப்படுவது இல்லை. பெரும்பாலும் ஏழை எளிய மக்களே அந்தக் கழிப்பிடங்களைப் பயன்படுத்துகின்றார்கள். அரசு கூட கட்டணக் கழிப்பிடங்களைப் பராமரிப்பதற்காக, தண்ணீர் வசதி செய்வதற்காக இந்த நிதி ஆண்டில்கூட 50 லட்ச ரூபாய் வழங்கி இருக்கிறார்கள். ஆகவே, ஏழைகள் பயன்படுத்துகின்ற இந்த கழிப்பிடங்களுக்கு கட்டண வசூல் செய்ய வேண்டுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே உள்ளாட்சி மன்றங்கள், பேருந்து நிலையங்களில் வசூலிக்கின்ற கட்டணத்த்தை ரத்து செய்ய உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-20

தற்போது, தென்காசி நகராட்சி, குற்றாலம், மேலகரம், இலஞ்சி ஆகிய பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கின்ற கோடைகால நீர்த்தேக்கத்தில் சகதி மற்றும் மண் நிறைந்துள்ளதால் வருகின்ற பருவமழைக்கு முன்பாக அதை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மராமத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குற்றாலம் பகுதியில் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் ஆகிய இடங்களில் இரவு நேரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் நீராட வருகின்றனர். அங்கே மின் விளக்கு போதுமான அளவில் இல்லை. இரவு நேரங்களில் மக்களுக்குக் குளிப்பதற்கு வசதியாக அங்கே ஒளி வெள்ள விளக்குகள் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பழத்தோட்ட அருவி இன்றைக்கு எந்தத் துறையின் பராமரிப்பில் இருக்கிறது என்று தெரியாமல், அங்கே வேளாண்மைத் துறைக்கும், வனத்துறைக்கும், அதேபோல உள்ளாட்சித் துறைக்கும் இடையே சண்டை நிலவுகிறது. அதைப் போக்கி, அந்த அருவி எந்தத் துறையின் பொறுப்பில் இருக்கிறது என்பதை அறிவித்து, அந்த அருவிக்கு ஏழை எளிய மக்கள் செல்லக்கூடிய அளவுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி பேருந்து நிலையம் அமைக்கும் பணியை விரைவாகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலகரம் பேரூராட்சி பகுதிக்குக் குடிநீர் வசதி செய்து தரவேண்டும். கீழப்பாவூர் ஊராட்சி

ஒன்றியத்தில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுகிறது. அங்கே உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு குடிநீர்க் கிணறுகளையும் குளங்களையும் ஆழப்படுத்தி ஒவ்வொரு ஊராட்சிக்கும் குறைந்தபட்சம் 5 ஆழ் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமருகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தி, அந்தத் தேர்தல்கள் மூலமாக ஒரு மக்கள் ஜனநாயகம் என்று சொல்கின்ற வகையில் ஜனநாயக அமைப்புகள் முறையாகச் செயல்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கு நம்முடைய மாநில அரசை இங்கே பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்டப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் இருக்கின்ற ஒரு சூழ்நிலை என்ன என்று சொன்னால், அந்த மாவட்டப் பஞ்சாயத்துகளுடைய கூட்டம் நடக்கிறபோது எந்த அதிகாரியும் அதில் கலந்து கொள்வதில்லை. இந்த நிலையை முதலில் மாற்றவேண்டும். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு முறை அந்தக் கூட்டம் நடக்கிறபோது, மாவட்டத்தில் இருக்கக்கூடிய துறைத் தலைவர்கள் பூராவும் அதில் கலந்துகொள்கிறபோது, என்னதான் நடக்கிறது என்பதை சரிவர புரிந்துகொள்வதற்கும், தெரிந்து கொள்வதற்கும் சாத்தியமாக இருக்கும். வேலைகளை முழுவதுமாக நடத்துவதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே அந்த அடிப்படையில் மாவட்டப் பஞ்சாயத்துக் கூட்டங்களில் மாவட்டத்தில் இருக்கின்ற எல்ல பெரிய அதிகாரிகளும் கலந்துகொள்ளக் கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய மாநிலத்திலேகூட திட்டக்குழு ஒன்றை அமைத்து இருக்கிறார்கள். அந்தத் திட்டக்குழுவின் விபரங்கள் பூராவையும் ஒரு அளவுக்காகிலும் நம்முடைய சட்டப்பேரவையிலே விவாதிப்பதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டும். இதுபோன்று மாவட்டங்களில் கூட திட்டக்குழுவின் அல்லது நிதிக்குழுவின் ஏற்பாடுகள் என்று அங்கே செய்கின்றபோது, ஒரு மாவட்டத்தின் வருமானம்தான் என்ன என்பதைப் பற்றியும் ஓரளவுக்கு விவாதிப்பதற்காக அந்த மாவட்டத்தின் நிதிக்குழுக் கூட்டத்தைக்கூட அந்தந்த மாவட்ட மையங்களில் கூட்டி இதுபற்றி ஆலோசிக்கப்பட வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்ததாக, மாவட்டம் பூராவும், மாநிலம் பூராவும் இருக்கக்கூடிய பெருவாரியான பேரூராட்சிகளுக்கு எந்த அளவில் வருமானம் வந்திருக்கிறது என்பதை நாம் கண்டறிந்து வருமானம் இல்லாத அல்லது நடத்த முடியாத பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் அவைகளை ஊராட்சிகளாக மாற்றவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அப்போதுதான் கிராம மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். அப்படித் தீர்வு காணவும் நல்ல வாய்ப்பாக அமையும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் 67 பேரூராட்சிகள் இருக்கின்றன. அந்தப் பேரூராட்சிகளை பொறுத்தவரையில் பெருவாரியான பேரூராட்சிகள் வருமானம் இல்லாத பேரூராட்சிகளாக இருக்கின்றன. ஒன்று அதை ஊராட்சிகளாக மாற்ற வேண்டும், இல்லாவிட்டால் ஐ.ஆர்.டி.பி. கடனிலிருந்து மற்றும் சாதாரணமாக ஊராட்சிக்கு வழங்கப்படுகிற அந்த அடிப்படையிலான எல்லா நிதி உதவிகளையும் பேரூராட்சிகளுக்குச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டத்தின் பொதுவான வருமானத்தை வைத்துக்கொண்டு வேலைகள் செய்கிறபோது, அது காலாகாலத்தில் முடிவதில்லை. அதன் எஸ்டிமேட் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே அந்தப் பேரூராட்சிகளுக்கு என்று அல்லது ஊராட்சிகளுக்கு என்று தனியாக இன்ஜீனியர்களை அதிகப்படுத்தி தனியாக ஏற்பாடு செய்தால் அந்த வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு அது வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோன்று, ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மராமத்துப் பணிகளையும் அந்த அடிப்படையிலே பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய குளங்கள், கால்வாய்கள் இவைகளையெல்லாம் பராமரிப்பதற்குரிய அந்த முழுப் பொறுப்பையும் தந்து, அது ஊராட்சியானாலும் சரி, பேரூராட்சியானாலும் சரி, அதற்குத் தேவையான நிதி ஆதாரத்தை நாம் கொடுப்பதன் மூலமாகத்தான் அந்தப் பணிகளைப் பொறுத்தவரையிலே செவ்வனே செய்ய முடியும். அந்த அடிப்படையிலே அதிகப்படியான நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திலேயுள்ளது ஒரு ஜீப். துரதிர்ஷ்டவசமாக நான் ஒரு கருத்தைச் சொல்லக்

கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே ஒரு நகராட்சி, அதிலே ஒரு பெண் தலைவர். ஒரு ஒன்றியம், அதிலும் ஒரு பெண் தலைவர். நான்கு பேரூராட்சிகள் அந்த நான்கிலும் பெண் தலைவர்கள். இப்போது ஒரு மாதகாலமாக, நாம் இல்லாத நேரத்தில், எந்த அதிகாரிகளும் இவர்களோடு ஒத்துப் போவதற்கு தயாராக இல்லாத ஒரு சூழ்நிலை அங்கே உருவாகி இருக்கின்றது. நம்முடைய தாய்க்குலங்களுக்கு அதிகப்படியாக இட ஒதுக்கீடும், அதிகப்படியான உரிமைகளும் நாம் வழங்கவேண்டும் என்று சொல்லுகின்றபோது, இந்த உள்ளாட்சி அமைப்புகளிலே வந்திருக்கின்ற, நம்முடைய தலைவர்களுக்கெல்லாம் வந்திருக்கின்ற மிகக் கடுமையான சாபக்கேடு என்னவென்று சொன்னால் எனக்கு ஒரு கடிதம் நேற்றைய தினம் வந்தது. ஒன்றியத்தினுடைய தலைவி அதுவும் படித்து ஆசிரியர் பணியிலிருந்து ஒரு பெண்பிள்ளையை, ராஜினாமா பண்ண வைத்து தேர்தலில் போட்டியிட்டு இந்தப்பணிக்காக வந்திருக்கிறார்கள். அந்தத் தலைவி ஒரு கடிதம் எழுதியிருந்ததைப் பார்த்தால், கண்ணீர்விடக்கூடிய கடிதம். ஒருமாதகாலமாக எந்த அதிகாரிகளும் ஒத்துழைப்பதில்லை. ஒரு ஜீப் இருக்கின்றது. அந்த ஜீப்பைப் பொறுத்தமட்டிலே, அங்கு நடைபெறுகின்ற வேலைகளைப் பார்ப்பதற்கோ, மாவட்ட ஆட்சித் தலைவருடைய காரியாலயத்திற்குச் செல்வதற்கோ கேட்டால்கூட ஒரு மாதமாக வழங்கப்படாத ஒரு சூழ்நிலை, மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற ஒரு பிரத்தியேகமான சூழ்நிலை. ஆக, அந்த ஜீப்பை அவர்களுடைய தேவைக்கேற்ப, வீட்டினுடைய தேவைக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு நான் சென்றபோது அந்த ஒன்றியப் பெருந்தலைவர் என்னைச் சந்தித்தார்கள். இப்படிப்பட்ட குறையை அவர்கள் சொல்லவில்லை. ஆனால், நேற்றுதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே இந்த விவரத்தைத் தெரிவித்தார்கள். அடுத்து, இந்த கூட்டம் முடிந்து, இவைபற்றியெல்லாம் நாம் ஒரு முடிவுக்கு வந்தபிறகு, அப்படியிருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி.



அடுத்து இன்னொரு சங்கடம் இருக்கிறது. என்னுடைய பகுதியிலே இரண்டு மொழி. ஒரு பகுதியிலே போனால் மலையாள மொழி. அந்த மலையாள மொழி பேசுகின்ற ஒரு மலையாளிப் பெண் ஒரு பேரூராட்சியிலே தலைவி. அந்த அம்மா அவர்கள் என்ன கேட்டார்கள் என்று சொன்னால், அவர்களின் பாஷையிலே சொன்னால், "எந்து சகாவே, நிங்ஙள் ஈ ஊரார் குடுக்கில் எந்தினு ஞங்ஙளெ கொண்டு மாட்டி" என்று சொன்னால், அதனுடைய அர்த்தம், 'தேவையில்லாமல் இதைச் சுமக்க ஏன் வைத்தீர்கள்'. அவ்வாறு ஒரு சங்கடமான நிகழ்ச்சியை அங்கே பார்க்க முடிகின்றது. ஆகவே, இதற்கெல்லாம் ஒரு மாற்றம் வேண்டும்..

அடுத்தபடியாக, மொத்த வரி வருமானத்தில் ஒரு 36 சதவீதத்தை இந்தப் பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்குப் பூராவும் நாம் கொடுப்பதன் மூலமாகத்தான், அதனுடைய வளர்ச்சிகளை சரிவர நாம் செய்துகொள்ள முடியும். இல்லையென்று சொன்னால், நம்முடைய திட்டச் செலவிலே ஒரு 40 சதவீதத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு பாங்கை நாம் உருவாக்கவேண்டும். இதிலே இன்னொரு சமாச்சாரம், நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களில் புதிய அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களெல்லாம் சரியாகத்தான் இருக்கிறார்கள். அதிலெல்லாம் பெரிய தவறுகள் இல்லை. ஆனால் அடிமட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளிடத்திலே எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பது என்னுடைய கருத்து, ஆழமான கருத்து. காசு வாங்குவதிலே 'ஜெகஜாலக் கில்லாடி' என்று சொல்லக்கூடிய அளவிலே இன்று வளர்ந்து வந்திருக்கின்ற ஒரு சூழ்நிலையைப் பார்க்கின்றோம். ஆகவே, ஒரு ஒன்றியத்திலே திருப்பூர் ஒன்றியத்திலே அதனுடைய அதிகாரி என்ன கேட்கிறார் என்று கேட்டால், இந்த ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து அவர்களுக்கு ஒரு வேலை செய்ய வேண்டும் என்று ஒரு டிமான்ட், அதற்கு அவர், சரி ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் ரூபாய்க்கு நீங்கள் ஒரு திட்ட வேலையைக் கொடுங்கள். ஆனால் அந்த வேலை நடப்பது ஒரு இலட்சத்திற்கான வேலைதான் நடக்கும் என்கிறார்கள். அந்த முப்பதினாயிரம் ரூபாய் எங்கே போகின்றது என்பதை நாம் கொஞ்சம் யோசனை பண்ணவேண்டும். இப்படிப்பட்ட அதிகாரிகள் இந்த இலட்சணத்திலே இருக்கின்றார்கள்.

அதேபோன்று, தொகுப்பு வீடுகள் வரைமுறைப்படுத்தப்படுகின்றபோது, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு [illegible] கிடைக்க வேண்டும். நலிந்த பிரிவினர்களுக்குக் [illegible] வேண்டும். இன்னும்

D
Y211,31N97
N97.26.1
216649.
சென்னை-600 008

அதுபோன்று, பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் கிடைக்கின்ற முறையான வழியை நாம் கண்டுபிடிக்கவேண்டும்.

அதேபோல், நலிந்த நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளிலே மின் கட்டணம், நீரேற்று நிலையம், அதனுடைய ஆப்பரேட்டர்ஸ், துப்பரவுப் பணியாளர்கள், இவர்களுக்குச் சம்பளம் கொடுக்கமுடியாத ஒருசூழ்நிலை சில சமயங்களிலே இருக்கின்றது. ஆகவே, அந்த (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. செ. இராமலிங்கம்):** நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகின்றேன். ஆகவே, அந்த நகராட்சி அமைப்புகளைப் பொறுத்தமட்டில், ஒரு மின் கம்பத்திற்கு ரூ.3,500 செலுத்துவதற்கு அந்த நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் வகை இருக்காது. அதில் ஒரு பாதியாகிலும் நம்முடைய உள்ளாட்சி அமைப்பு செய்வதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

முற்பகல் 11-30

அதைப்போல ஊராட்சி மன்ற ஊழியர்களை அரசு ஊழியர்களாக்குவதோடு, ஊராட்சி ஒன்றிய விரிவாக்க அலுவலர்கள் பணியை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்கு உயர்த்தல் வேண்டும். ஊராட்சி ஒன்றிய அளவில் விரிவாக்க அலுவலர் சமூகக் காடுகள் பணியை ஏற்படுத்த வேண்டும். வேலை நிறுத்தத்தில்—ஏற்கனவே ஆசிரியப் பெருமக்களுக்கு அரசு ஒரு சலுகை வழங்கி இருக்கிறது அதேபோல— இதிலே ஈடுபட்டவர்களுக்கும் செய்யவேண்டும்.

அடுத்து என்னுடைய நகராட்சி பற்றி நான் சொல்லியாக வேண்டிய கட்டாயம். குழித்துறை நகராட்சியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் அதிலே ஒரு பெண் தான் தலைவி. ஏற்கனவே அதிலே 5 ஆண்டுக்காலம் தலைவராக இருந்திருக்கிறேன், 18 ஆண்டுக்காலம் நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். இந்த இடைப்பட்ட காலத்தில் இத்தனை ஆண்டுகளில் இவ்வளவு லஞ்சம் வாங்கக்கூடிய நகராட்சி அதிகாரியை நான் சந்தித்தது இல்லை என்னுடைய அனுபவத்தில். 18-ம், 5-ம் 23 வருடங்களில் பார்த்ததில்லை. அவ்வளவு மோசமான அதிகாரி இருந்து கொண்டிருந்தால் என்ன வேலை நடக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே இந்த நகர மன்றங்களைப் பொறுத்தவரையில்



குடிநீருக்கு அந்தப் பகுதியில் ஒரு சாபக்கேடான நிலை. தாமிரபரணி ஆற்றில் திருட்டுத் தனமாக மணல் எடுத்ததன் விளைவாக அதனுடைய இரும்புச் சத்து அதிகமாகி, அந்த தாமிரபரணி [illegible] எடுக்கக்கூடிய 'தண்ணீரில் 'அயர்ன் கன்டென்ட்' அளவு 6 சதவீதம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, அதை பில்ட்டர் பண்ணிக் கொடுக்க வேண்டும். அதைச் செய்ய கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படும் நிலை இருக்கிறது. எனவே அதைப் பாதுகாப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் நம் பக்கத்திலே எடுக்க முடியவில்லை. ஆகவே, அதிலே வரக்கூடிய இன்னொரு சங்கடம் என்னவென்றால் அந்த தாமிரபரணி ஆற்றிலே ஒரு மூழ்கு பாலம் இருந்தது. அது உடைந்தே போய்விட்டது. அதைக் கட்டுவதற்கு பொதுப்பணித் துறையை கேட்டால் அவர்கள் தயாராக இல்லை. சாதாரணமாக அதனுடைய உரிமை பொதுப்பணித் துறைக்குத்தான் இருக்கிறது. கிட்டத்தட்ட 60 லட்சம், 70 லட்சம் ரூபாய் வேண்டியிருக்கும். அங்கே செக் டேம் கட்டவில்லையென்று சொன்னால் தாமிரபரணி ஆற்றில் வரக்கூடிய குடிநீர்த் திட்டங்கள் பூராவும், பத்மநாபபுரம் வரை இருக்கக்கூடிய குடிநீர்த் திட்டங்களுக்கு போதுமான தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும்.

அங்கேயிருக்கிற போக்குவரத்து நெருக்கடியைப் போக்க முன்வருகிற போது வேன் சர்வீசை நடத்துகிறவர்கள் சிக்கலை உருவாக்கி இருக்கிறார்கள். அதை ஒழுங்குபடுத்துவதற்கு நம்முடைய நகராட்சியினுடைய காய்கறி சந்தையில் இருக்கிற பழைய காலத்தில் இருந்த ஒரு கழிப்பறையை மாற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைப் போட்டு சொன்னால் என்ன சொல்கிறார்கள் என்றால், டிஎம்ஏயிலிருந்து அனுமதி கிடைக்கவில்லை என்கிறார்கள். மாதம் 3 ஆகிவிட்டது. எனவே அதை எப்படி நாம் செய்வது என்பதைப் பற்றி ஆலோசிக்கவேண்டும். அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, பணம் வேண்டுமென்று சொன்னால் சாங்ஷனுக்கு ஆர்.டி.எம்.ஏ. ஆபிசுக்கு போக வேண்டும். அது ஒரு சங்கடமான நிலை. எனவே 10 லட்சம் ரூபாய் வரையில் மதிப்பீட்டை தயார் பண்ணி செய்கிற பணியை அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய பொதுப் பணித்துறையோ, ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடிய என்ஜினியர்களோ அவர்களிடம் ஒப்புதலைப் பெற்றாலே அதைச் செய்து விட முடியும் என்ற ஒரு நடைமுறைக்கு நாம் வரவேண்டும்.

நம்முடைய கார்ப்பரேஷன் ஏரியாவில் இன்னொரு பிரச்சினை. அதிலே வெள்ளைக்காரன் காலத்தில் போட்ட ஒரு உத்தரவு இருக்கிறது.

டீ கடை நடத்த வேண்டுமென்றால் நம்முடைய காவல் துறையிலே அனுமதி வாங்க வேண்டுமென்ற கட்டாயம் உள்ளது. ஆகவே, ஜனநாயக மரபில் அது சரியாக இருக்காது. டீ கடைக்கு பெர்மிஷன் கொடுக்க வேண்டியது கார்ப்பரேஷன் அதிகாரிகளே தவிர காவல் துறை அல்ல. எனவே அப்படிப்பட்ட நடைமுறையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் இரண்டாவது முறையாக இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசும் மாநில அரசும் அறிவிக்கக்கூடிய திட்டங்களை எல்லாம் செயல்படுத்தக்கூடிய ஒரு ஜனநாயக அமைப்புதான் உள்ளாட்சி மன்றங்கள். அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு கடந்த 5 ஆண்டுக்கால ஜெயலலிதாவின் ஆட்சியில் தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல் நடத்த வேண்டுமென்று விரும்பவில்லை. இதற்குக் காரணம் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் அ.தி.மு.க. ஆட்சியில் நடத்தியிருப்பார்களானால் அந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழமை கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்று உள்ளாட்சி அமைப்புகளில் தலைவர்களாகப் பொறுப்பேற்று விடுவார்கள்.

முற்பகல் 11-35

உள்ளாட்சி மன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் வந்துவிட்டால்-அன்றையதினம் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அ.தி.மு.க. அமைச்சர்கள் உள்ளாட்சி மன்றங்களுக்குள் நுழைந்து அந்த உள்ளாட்சி மன்ற பணத்தை கொள்ளை அடிக்க முடியாது, கோடீஸ்வரர்களாக ஆகமுடியாது என்கிற காரணத்தினால்தான் ஐந்து ஆண்டுக் காலம் உள்ளாட்சி மன்றங்களுக்கு எல்லாம் தேர்தல் நடத்தாமல் மானோபொலியாக வைத்துக்கொண்டு உள்ளாட்சி மன்றப் பணத்தையெல்லாம் அரசுப் பணத்தையெல்லாம் ஐந்து ஆண்டுக் காலம் கொள்ளை அடித்து உள்ளாட்சி மன்றங்களையெல்லாம் பாழ்படுத்திவிட்டார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் 1989-90-ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றத்தலைவருடைய பதவிக்காலம்



மூன்று ஆண்டுக் காலமென்று இருந்ததையெல்லாம் மாற்றி ஐந்து ஆண்டுகளாக நீடித்தார். அதேபோல இன்று நம்முடைய முதல்வர் அவர்கள்தான் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் தேர்தலை நடத்தி, இன்னும் சொல்லப்போனால் ஏறத்தாழ 20 ஆண்டுக் காலத்திற்கு மேலாக நடத்தாத சென்னையைப் போன்ற மாநகராட்சிகளுக்கெல்லாம் இன்றைய தினம் தேர்தலை நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஊராட்சி மன்றத் தலைவராக, பேரூராட்சி மன்றத் தலைவராக, நகராட்சி மன்றத் தலைவராக, மாநகராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த உள்ளாட்சி மன்றத் தலைவர்களுக்கெல்லாம் அதிக அதிகாரம், தேவையான நிதி வழங்கப்படுமென்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

என்னுடைய பெரியகுளம் சட்டமன்ற தொகுதியைப் பொறுத்தளவில் இரண்டு நகராட்சிகள் இருக்கின்றன. அதிலே ஒன்று பெரியகுளம், அது தரைப்பகுதியிலே இருக்கக்கூடிய ஒரு நகராட்சி. அதேபோல இன்னொரு நகராட்சி கொடைக்கானல். அந்தக் கொடைக்கானல் என்பது மலைப்பகுதியிலே இருக்கக்கூடிய ஒரு நகராட்சியாகும். கொடைக்கானல் நகராட்சியில் தற்போது இருக்கக்கூடிய மாஸ்டர் பிளான் — முழுமைத் திட்டத்தின்படி ஒரு நபரிடம் 6¼ செண்ட நிலம், இடம் இருந்தால்தான், அவர் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் அரசு 3 செண்ட் நிலம்தான் ஒருவருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவாக வழங்குகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிலும் கொடைக்கானலில்—விலை மதிப்புள்ள நிலங்கள் இருக்கக்கூடிய கொடைக்கானலில்—ஒரு செண்ட் ஒரு இலட்சம் ரூபாய் விலை இருக்கக்கூடிய கொடைக்கானலில் சாதாரண ஏழையெளிய மக்கள் 6¼ செண்ட் இடத்தை வாங்கி அவர்கள் வீடுகட்டுவது என்பது எவ்வளவு சிரமம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அங்கே சாதாரண ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள் 6¼ செண்ட் இடம் வாங்கி வீடுகட்ட முடியாத சங்கடத்திலே பல்வேறு சங்கடங்களுக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். அந்த முழுமைத் திட்டத்தைத் தளர்த்தி மூன்று செண்ட் நிலம் இருந்தாலே அங்கே நகராட்சியின் மூலம் வீடுகட்டுவதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்பதை இந்தநேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல கொடைக்கானலின் மையப் பகுதியில் ஏற்கெனவே பலர் வீடு கட்டிக் குடியிருக்கின்றார்கள். அந்த இடத்தைக்கூட அரசு விவசாய நிலமாக அறிவித்து அந்த இடத்தில் வீடுகட்டுவதற்கு நகராட்சி, அரசு அனுமதி வழங்குவதில்லை என்கிற நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட

இடத்தில் சாதாரண ஏழையெளிய நடுத்தர மக்கள் வீடு கட்டுவதற்கு அனுமதி அளிக்கின்ற வகையில் அந்த வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

கொடைக்கானல் என்பது தமிழ்நாட்டிலே ஒரு சுற்றுலா மையம். இயற்கையினுடைய இளவரசி என்று நாம் பெருமையோடு சொல்லிக்கொள்கிறோம். அந்த இயற்கையினுடைய இளவரசியைத் தேடி கோடைக்காலத்தில் உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருக்கக்கூடிய மிகப்பெரிய வசதி படைத்தவர்கள் எல்லாம் கொடைக்கானலுக்கு வருகின்றார்கள். அப்படி வருகின்ற நேரத்தில் கொடைக்கானலில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் எந்த ஊரில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டாலும், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுற்றுலா பயணிகள் வரக்கூடிய கொடைக்கானலில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படவே கூடாது. அங்கே குடிநீர்ப் பஞ்சம் நிரந்தரமாக இல்லாத அளவிற்கு ஒரு திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கொடைக்கானல் நகராட்சிக்கு இரண்டு நீர்த்தேக்கங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு நீர்த்தேக்கம் பழைய நீர்த்தேக்கம். அது 26 அடி உயரம் இருக்கிறது. அந்த 26 அடி உயர நீர்த்தேக்கத்தில் இப்போது சமீபகாலமாக 7 அடி மண் சேர்ந்துள்ளது. அதுபோக மீதி அங்கே தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதற்குப்பிறகு இன்னொரு நீர்த்தேக்கம், புதிய நீர்த்தேக்கம், இது 10 மீட்டர் உயரமாகும். அந்தப் புதிய நீர்த்தேக்கம் சரியான முறையில் கடந்த காலத்தில் கட்டி முடிக்கப்படாத காரணத்தால் அங்கு நீர் சரிவரத் தேங்காமல் அதில் கசிவு ஏற்படுகிற காரணத்தினால் 10 மீட்டர் அளவில் தண்ணீர் தேக்க முடியாத ஒரு நிலை. இப்படிப்பட்ட இரண்டு நீர்த்தேக்கங்களும் கொடைக்கானல் நகர மக்களினுடைய தண்ணீர் பஞ்சத்தை தீர்க்க போதுமானதாக இல்லாத காரணத்தினால் அந்தப் புதிய நீர்த்தேக்கத்தில் ஏற்படுகின்ற கசிவினை அடைப்பதற்கும் அதேபோல் பழைய நீர்த்தேக்கத்தின் உயரத்தை—7 அடி மண் சேர்ந்திருப்பதை அகற்றி — உயர்த்தித்தர வேண்டும். அதற்குத் தனியாக ஒரு நிதியினை ஒதுக்கீடு செய்து கொடைக்கானல் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

இன்னும் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ தொள்ளாயிரம் குடும்பங்கள் சாதாரண, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அங்கே தங்களுடைய பட்டா நிலங்களில், புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். 15 ஆண்டுக் காலமாகக் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகளுக்கு நகராட்சி குழாய் இணைப்பு தந்திருக்கிறது. வீட்டு வரி விதித்து இருக்கிறது; மின்சார வாரியம் மின் இணைப்பு தந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் 15 ஆண்டுக் காலமாகக் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அவர்கள் எல்லாம் அரசினுடைய அனுமதியைப் பெறாமல் வீடு கட்டி விட்டார்கள் என்ற காரணத்தைக் காட்டி அந்த வீடுகளை நகராட்சியின் மூலம் இடிப்பதற்கு ஒரு உத்தரவை வழங்கி அந்த தொள்ளாயிரம் வீடுகளில் உள்ள மக்கள் இன்றைக்கு கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த உத்தரவை தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று நான் உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



கொடைக்கானல் நகராட்சியில் இப்போது எந்தக் கட்டிட வேலையும் செய்ய முடியவில்லை. காரணம் கொடைக்கானலில் அரசின் மூலமாக, நகராட்சிக்கு ஏதாவது கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்றால், நகராட்சியின் மூலம் ஏதாவது சாக்கடை கட்ட வேண்டும் என்றால் 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பெரியகுளம் அருகில் இருந்து தான் மணல், சிமெண்ட் எல்லாம் வரவேண்டும். கல், ஜல்லி ஒன்று தான் அங்கே மலையில் உள்ள பாறையை உடைத்துகொண்டு வந்தார்கள். இன்றையதினம் அந்தப் பாறையில் கல் உடைக்கக்கூடாது; ஜல்லி உடைக்கக்கூடாது என்று தடுத்த காரணத்தால் ஜல்லியும், கல்லும்கூட 60 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் எந்த ஒப்பந்தக்காரரும் எந்த வேலையையும் செய்ய மறுக்கின்ற காரணத்தால் அரசினுடைய எந்தத் திட்டங்களும் இன்றையதினம் நடைபெற முடியாத ஒரு சங்கடம் இருக்கிறது. எனவே, அரசு ஏதாவது ஒரு பாறையை ஒதுக்கிக் கொடுத்து, நகராட்சி மூலமாகக் கட்டுகின்ற பணிகளுக்குத் தேவையான கல் உடைப்பதற்கு, ஜல்லி உடைப்பதற்கு அங்கே வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கொடைக்கானல் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் பூம்பாறை, மண்டலூர், வெள்ளக்கல், அடுக்கம், பூக்கல் ஆகிய ஆறு ஊராட்சிகள் இருக்கின்றன. இந்த 6 ஊராட்சிகளிலும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. தரைப் பகுதியில் வறட்சி ஏற்பட்டால் கிணறு தோண்டி ஆழ் குழாய்

மூலம் உடனடியாக பிரச்சினையைத் தீர்த்து விடலாம். ஆனால் மலைப் பகுதியில் அப்படி இல்லை. ஏதாவது நீரோட்டம் இருக்கின்ற பகுதியில்தான் ஒரு நீர்த் தேக்கம் மலைப்பகுதியில் கட்டி அதன் மூலமாகத்தான் குடிநீர் வினியோகம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நீர்த்தேக்கங்களைக் கட்டி இந்தப் பகுதி மக்களுக்கு எல்லாம் நீங்கள் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் கடந்த ஆட்சியில் பூம்பாறை என்ற கிராமத்தில் குண்டாறிலிருந்து ஒரு பைப் லைன் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த பைப் லைன் திட்டம் கடந்த காலத்தில் கமிஷன் அடிப்படையில் செய்த காரணத்தால் தரம் இல்லாத பைப் போட்ட காரணத்தால் பல லட்சம் ரூபாயில் செய்த அந்தத் திட்டம் இன்றையதினம் பயனற்றுப் போயிருக்கிறது. அப்படிப்பட்ட திட்டத்தை எல்லாம் மீண்டும் பரிசீலனை செய்து அதைச் செம்மைப் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்னும் என் ஊருக்கு வரவில்லை; கொடைக்கானலிலேயே இருக்கிறேன்; கீழே இன்னும் வரவில்லை.

அதேபோல் மலைப் பகுதியில் கீழே இருக்கக்கூடிய அந்த ஊராட்சிகளுக்கு பல இடங்களில் அடிக்குழாய் போட்டாவது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பூண்டியிலிருந்து போளூர் கிராமம் வரை சாலை அமைக்கப்பட்டு விட்டது. அதிலும் தார்ச் சாலை அமைக்கப்பட்டு விட்டது. அதிலே பூண்டிக்கு அருகில் துவரம்பள்ளம் என்ற ஆற்றில் ஒரு பாலம் கட்டாத காரணத்தால் ஏறத்தாழ 2, 3 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்களுக்கு பஸ் வசதி செய்ய முடியாத ஒரு சங்கடம் இருக்கிறது. இதுவெல்லாம் கிராமச் சாலைகள். அந்தச் சாலைகளை எல்லாம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பெரியகுளம் நகராட்சி ஆரம்பிக்கப்பட்டு 120 ஆண்டுகள் ஆகிறது. அந்த நகராட்சியில் போதுமான தண்ணீர் வசதி இருக்கிறது. கொடைக்கானலில் உள்ள பேரிஜம் ஏரியிலிருந்து எங்களுக்கு நல்ல



குடிநீர், பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் கிடைக்கிறது. தேவையான குடிநீர் கிடைக்கிறது. ஆனால் 60 ஆண்டுக்கு முன்பு கட்டப்பட்ட அந்தத் தரை மட்டத் தொட்டி மூலமாகத்தான் வினியோகம் செய்யப்படுகின்ற காரணத்தால் பெரியகுளத்தில் உள்ள மேட்டுப் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்காத காரணத்தால் அங்கே பல்வேறு பகுதிகளில் சரியான முறையில் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியவில்லை. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற ஊர்களுக்கு எல்லாம் தண்ணீர் வசதி இருக்காது. எவ்வளவு வறட்சி ஏற்பட்டாலும் எத்தனை ஆண்டுகளுக்கு மழை இல்லாமல் போனாலும் மற்ற இடங்களில் போதுமான தண்ணீர் வசதி இருக்கிறது. ஆனால் இதை நிறைவேற்றுவதற்கு உரிய முறையில் வழிவகைக் காணாத காரணத்தால் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. அந்தக் குடிநீர்ப் பிரிச்சினையைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் நேரில் தெரிவித்த அந்த விவரங்களை நானும் கேட்டு விரைவாக செய்து முடித்துத் தருகிறேன் என்று உத்தரவாதமும் அளித்த பின்பு இப்போது நேரத்தை வீணடிப்பது நல்லதுதானா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் பேசியது போதும் உட்காருங்கள். அடுத்து திரு. வி. முத்து.

முற்பகல் 11-45

**திரு. வி. முத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி சம்பந்தமான இந்த மானியத்தில் பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பயன்படக்கூடிய மானியம் இந்த ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை மானியங்கள் ஆகும். இந்தத் துறையின் மூலமாகத்தான் ரோடு வசதி, குடிதண்ணீர் வசதி, தொகுப்பு வீடுகள் கட்டுதல்,

தெருவிளக்கு வசதி போன்ற நல்ல திட்டங்கள் ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகிறது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, அடிப்படை மருத்துவ வசதி, வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு வசதி, ஏழைக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு, ஒவ்வொரு கிராமத்திற்கும் நியாயவிலைக் கடை, கட்டாய ஆரம்பக் கல்வி, கிராமங்கள் அனைத்திற்கும் சாலை வசதி என்று இப்படி நல்ல பலகாரியங்களைப் பெற்று இதன் மூலமாகத்தான் கிராம மக்கள் பயன்பெறமுடியும்.

இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழும் கிராமங்கள் முன்னேற ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கிராமமாக ஆக்க ஒரு திட்டத்தைத் தீட்டி, அந்தத் திட்டத்திற்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அறிவித்திருப்பது நாடு போற்றுகிற நல்ல திட்டமாகும்.

அதேபோன்று, தொகுப்பு வீடு கட்ட பழைய அரசு 2 சென்ட் நிலம் ஒதுக்கியது. ஆனால் நமது அரசு 2 சென்ட்டிற்குப் பதிலாக 3 சென்ட் நிலத்தை ஒதுக்கியது. இந்தத் தொகுப்பு வீடு கட்டி வாழும் ஏழை மக்களுக்கு ஆடு வாங்குவதற்குக் கடன் கொடுக்கிறோம்; கறவை மாடுகள் வாங்கக் கடன் கொடுக்கிறோம். எருமை மாடு வாங்கக் கடன் கொடுக்கிறோம். ஆனால், இந்த 3 சென்ட் நிலத்தை வைத்து அவற்றைப் பராமரிக்க முடியாது. ஆகவே, இந்த 3 சென்ட் நிலத்திற்குப் பதிலாக 5 சென்ட் நிலத்தை ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என்று தங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

சங்ககிரி தொகுதியில் 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. சங்ககிரி ஒன்றியத்தில் ஒரு லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இதில் சங்ககிரி பேரூராட்சியின் மக்கள் தொகை 30 ஆயிரம் ஆகும். நகரத்தில் உள்ள மக்கள் போதிய குடிதண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்பாக நகர மக்கள் என்னிடத்திலே சொல்லி அனுப்பி வைத்தார்கள். கட்டாயம் நீங்கள் இதைச் சட்டமன்றத்திலே பேசவேண்டும். அமைச்சரிடத்திலே நேரடியாகச் சொல்லி, இதற்கு ஒரு மாற்று வழி செய்து கொடுக்கவேண்டும் என்று என்னிடத்திலே விவரமாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களிடத்திலே நான் பேசுகின்ற நேரத்திலே அங்குள்ள அதிகாரிகளிடத்திலே கலந்து, அவர்களுடைய கருத்தையும் நான் தெரிந்துகொண்டு வந்திருக்கிறேன். தற்போது சங்ககிரியிலே காவிரி ஆற்றில் பள்ளிபாளையத்தில் தலைமை



நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு, 60 எச்.பி. மின் மோட்டார்கள் இரண்டு பொருத்தப்பட்டு, உப்புபாளையம் மற்றும் பிரிவு ரோடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையம் மூலம் 24 கிலோ மீட்டர் தூரம் வரை குடிநீர் கொண்டுவரப்பட்டு, தலா இரண்டு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு தரைமட்டத் தொட்டி மூலம் பொதுமக்களுக்கு நான்கு நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் கிடைக்கிறது. இதற்கு ஒரு மாற்றுவழி செய்ய வேண்டுமானால், தற்போது வளர்ந்து வரும் சங்ககிரி பேரூராட்சியில் சுமார் 30 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள், மேற்படி மக்கள் அனைவருக்கும் போதிய குடிநீர் வினியோகம் செய்ய வேண்டுமானால் நகரின் மையப் பகுதியான, மேடான பகுதியான பச்சக்காடு என்ற இடத்தில் கூடுதலாக 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அதன்மூலம் இந்த நகர மக்களுக்கு தண்ணீர் வினியோகம் செய்ய, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலுரையில் ஒரு உறுதியைச் சொன்னால்தான், நான் திரும்ப ஊரிலே போய் அந்த மக்களுக்கு நல்லபடியான கருத்தைச் சொல்ல முடியும். ஆகவே, தயவுசெய்து, அமைச்சர் அவர்கள் இதைத் கவனத்தில் கொண்டு, கட்டாயம் இதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சங்ககிரியோ நேஷனல் ஹைவேஸ் ரோடில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். அந்த வழியாகத்தான் பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம், கேரள மாநிலத்தைச் சேர்ந்த வண்டி வாகனங்கள் தமிழ்நாட்டிற்கோ அல்லது ஆந்திராவிற்கோ செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, கட்டாயம் அங்கு ஒரு புறவழிச் சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** 5 நிமிடங்களாகிவிட்டன. இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. வி. முத்து:** அடுத்து, தேவூர் செல்லும் பாதையில் குறுக்கே ஒரு குறுகிய பாலம் இருக்கிறது. அதை அகலப்படுத்தி, தேவூருக்கும் சங்ககிரிக்கும் பஸ் விடவேண்டும் என்று நான் அமைச்சரிடத்திலே, அவர்கள் சேலம் வந்தபோது, கருத்தரங்கிலே சொல்லி, அவர்கள் உடனே அந்த அதிகாரியைக் கூப்பிட்டு, இந்தச் சட்டமன்ற உறுப்பினர் மீண்டும் என்னைக் கேட்காத வகையில், உடனடியாக நடவடிக்கை

[திரு. வி. முத்து] [1997 மார்ச் 27

எடுக்கவேண்டும் என்று சொல்லி, ஒரு உறுதியைக் கொடுத்தார்கள். ஆனால், அதுபற்றி அந்த அதிகாரி, இதுவரையில் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஆகவே, அதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

தேவூருக்கு ஒரு காவல் நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தேவூர் சங்ககிரி தொகுதியிலே இருக்கிறது. அதற்கு தற்போது இருக்கும் காவல் நிலையம் ராஜாஜி மாவட்டத்தைச் சேர்ந்த குமாரபாளையத்தில் இருக்கிறது. ஆகவே குமாரபாளையம் நாமக்கல்லைச் சார்ந்த காரணத்தினால் தேவூரில் ஒரு காவல் நிலையத்தை கட்டாயம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், எங்கள் தொகுதியில் மல்லசமுத்திரம் என்ற ஒரு ஒன்றியம் இருக்கிறது. அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று சென்ற முறை இந்தச் சட்டமன்றத்தில் கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கேள்விக்கு விடையளிக்கும்போது 50,000 மக்கட்தொகை உள்ள இடத்திற்குத்தான் கொடுக்க முடியும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால் அங்கு 25,000 மக்கட்தொகை உள்ளது. ஒரு கிலோ மீட்டர் அருகாமையிலே ஆட்டையாம்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அது ஒரு பேரூராட்சி. அது 25,000 மக்கட் தொகை கொண்டுள்ள ஒரு இடமாகும். ஆக அந்த இரண்டையும் இணைத்து மல்லசமுத்திரத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கிய இரண்டு பஸ் ரூட்டுகளில் ஒன்றை எனது ஒன்றியத் தலைநகரான மல்லசமுத்திரத்திலிருந்து மாவட்டத் தலைநகரமான நாமக்கல்லிற்கு விடவும், அதேபோன்று மோர்பாளையத்திலிருந்து நாமக்கல்லிற்கு இன்னொரு வழித்தடத்தை விடவும் பரிந்துரை செய்துள்ளேன். ஆனால் அந்த ரோடும் ஒரு வழிப்பாதையாக இருக்கிறது. ஆகவே தயவுசெய்து அதை இரு வழிப்பாதையாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி சொல்லி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



1997 மார்ச் 27]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) :** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊராட்சி, பேரூராட்சி மாநகராட்சி குடிநீர் வாரியம் மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தலைவர்கள் இன்றைய தினத்திலே பொறுப்பிலே இருக்கிறார்கள். பொதுவாக சிற்றூராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு இணைப்பு இல்லாத நிலையில் இன்றையதினத்திலே தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. அதுபோன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மாவட்டப் பஞ்சாயத்திற்கும் ஒரு தொடர்பு இல்லாத நிலை இருக்கிறது. அப்படியென்றால் ஒரு துண்டிக்கப்பட்டிருக்கிற ஒரு நிர்வாக அமைப்பாக இன்றையதினத்திலே அது இருக்கிறது. சிற்றூராட்சி ஊராட்சி ஒன்றியத்தினுடைய கன்ட்ரோலில் இல்லை. ஊராட்சி ஒன்றியமும் மாவட்டப் பஞ்சாயத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டதாக இல்லாமல் இன்றையதினத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவதற்குள்கூட ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டுவருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் நாம் கொண்டுவருவதற்குரிய சட்டம் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் வரும் என்ற நம்பிக்கையை வைத்து ஏமாறக்கூடாது. இது நாம் கொண்டுவருகிற சட்டமல்ல. இந்தச் சட்டம் மத்திய அரசால் உருவாக்கப்பட்ட சட்டம். நாம் அதைத் திருத்த இயலாது.

**திரு. ஜி. பழனிசாமி:** விளக்கத்திற்கு நன்றி. மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட சட்டமாக இருந்தாலும் நம்முடைய மாநில அரசு தேவைக்கான சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு மத்திய அரசை நீங்கள் வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதனால் கீழேயுள்ள சிற்றூராட்சி, ஊராட்சிகளில் இருக்கக் கூடியவர்களும் ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்களும் ஓரளவிற்காவது கலந்து பேசி திட்டங்களை உருவாக்குவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அது போன்று மாவட்டப் பஞ்சாயத்தினுடைய அந்த அதிகாரம், அதனுடைய தலைவரும், ஊராட்சி ஒன்றியத்தினுடைய

நிர்வாகமும், தங்களுடைய பணிகளை, திட்டங்களை உருவாக்குவதற்கு இணைந்து செயல்படுவதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டும். அந்த வகையிலே நீங்கள் மத்திய அரசை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றையதினத்திலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு மரியாதைக்குரிய திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் காலையிலே இங்கே குறிப்பிட்டார்கள். இன்றையதினத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறவர்கள் தங்களுடைய பணிகளில் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு அதிக அதிகாரங்களையும், நிதியாதாரங்களையும் அளித்து, அவர்கள் சிறந்த முறையில் செயல்பட வேண்டும். அதற்கான நிதியாதாரங்களை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

குறிப்பாக, 73 சதவீத மக்கள் இன்றைக்கு கிராமப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நேரடித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அமைப்பாக நம்முடைய ஊராட்சியினுடைய அமைப்பு இருக்கிறது. குடிதண்ணீர், சாலைகள், மின் வசதி, சுகாதாரம் இதுபோன்ற வசதிகளைச் செய்து கொடுக்கக் கூடிய அத்தியாவசியமான, வாழ்க்கைக்குத் தேவையான, பிரச்சினைகளில் தீர்வு காணக்கூடிய அமைப்பு நம்முடைய ஊராட்சியினுடைய அமைப்பு. அரசாங்கம் முழுமையாக நற்பெயர் பெற வேண்டும் என்று சொன்னால், அந்த மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்குத் தீர்வு காண்கின்ற அமைப்பாக இருக்கக்கூடிய அந்த அமைப்புகளுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று இன்றைய தினத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, மக்கள் எதிர்பார்க்கக்கூடிய திட்டங்களை, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளாக இருக்கின்ற ஊராட்சி மன்றத்தினுடைய, ஊராட்சி ஒன்றியத்தினுடைய, மாவட்டப் பஞ்சாயத்துகளுடைய தலைவர்கள் செயல்படுத்துகிறார்களா என்று கேட்டால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான, ஊக்கத்தை, ஒரு நம்பிக்கையை அந்த மக்களுக்கு ஊட்டக்கூடியவர்களாக இருக்கின்றார்களா என்று கேட்டால், அதுவும் கிடையாது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதிகாரத்தோடு தலைவர்களாக பவனி வந்து கொண்டிருக்கிறார்கள்.



ஆகையால், அவர்கள் அந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான அதிகாரங்களை, நிதி ஆதாரங்களை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, 23 அதிகாரங்களை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று மத்திய அரசினாலே உருவாக்கப்பட்டிருக்கின்ற சட்டம் நமக்கு வழிகாட்டுகின்றது. அப்படியென்றால் எத்தனை அதிகாரங்களை இன்றைக்கு அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம்; இன்னும் என்னென்ன அதிகாரங்களை அவர்களுக்கு வழங்கப் போகிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையிலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பிரதானமாக இருக்கக்கூடியது குடிநீர்த் தட்டுப்பாடு. இன்றைக்கு ஒருபுறத்திலே வெள்ளம். மறுபுறத்திலே வறட்சி. இவ்விரு பிரச்சினைகளும் அரசாங்கத்தினுடைய நிதிநிலைக்கு நெருக்கடி ஏற்படுத்திக் கொண்டிருப்பதால், இவ்விரு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டியது அவசியமானது. அதிலே ஒன்று, என்னுடைய பகுதியிலே நீண்டகாலமாக இருக்கக் கூடிய குடிநீர்த் தட்டுப்பாடு; வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, கோட்டூர், மன்னார்குடி, தலைஞாயிறு ஆகிய இடங்களில் இருக்கக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாடு; எங்கு தோண்டினாலும், குடிநீர் கடல் நீரைப் போன்று உப்பாக வரக்கூடிய நிலையைத்தான் பார்க்க முடியுமே தவிர, நல்ல தண்ணீரே கிடைக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், நம்முடைய குடிநீர் வாரியம் ஒரு ஆய்வை நடத்தியிருக்கின்றது. தமிழகத்திலே ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் தண்ணீர் வழங்க வேண்டும் என்று இருந்தாலும்கூட, 3 லிட்டர் தண்ணீரைத்தான் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற ஒரு ஆய்வை— நான் சொல்லவில்லை—குடிநீர் வாரியமே ஆய்வை நடத்தி, அது இந்த அறிக்கையிலே வந்திருக்கிறது. நம்முடைய அதிகாரிகள் ஆய்வை செய்வதற்கு மட்டும்தானா? அதற்கான மாற்றுத் திட்டங்களையும் நம்முடைய அதிகாரிகள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, பட்டுக்கோட்டை, வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 6 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அதற்கான ஒரு மாற்றுத் திட்டத்தை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், எப்படியாவது

[திரு. ஜி. பழனிசாமி] [1997 மார்ச் 27

தண்ணீர் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கொள்ளிடத்திலிருந்து, அணைக்கரையிலிருந்து கொண்டு வரும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இன்றையதினம் வகுத்திருக்கின்றது. அதை வரவேற்கின்றோம். அந்தத் திட்டத்தை நீங்கள் விரைவிலே செயல்படுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும் அந்த நல்ல முயற்சியிலே நீங்கள் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது மாநில அரசால் மட்டும் முடியாது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே நேரடியாக கவனத்தைச் செலுத்தி அதற்கு நிதியாதாரத்தை அதிகமாகத் தந்து, அந்தப் பணிகளை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், நவம்பர், டிசம்பர் மாதங்களிலே பார்த்தால் அங்கு கடுமையான வெள்ளம் வந்து, வெள்ளக்காடாக இருக்கும். ஆனால், இந்த நேரத்தில் பார்ப்போம் என்று சொன்னால் கடுமையான வறட்சிதான் அங்கு இருக்கும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு விவரம் சொல்ல வேண்டிய தேவையில்லை. ஏனென்றால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே மாவட்டச் செயலாளராக இருந்து, பட்டித் தொட்டிகளை எல்லாம், கிராமங்களை எல்லாம் தெரிந்தவர்கள். ஆக, அந்த வகையில் நீங்கள் அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, திருப்பூர் கூட்டுக் குடிநீர்திட்டம். நான் திருத்துறைப்பூண்டியைப் பற்றி பேசினாலும், திருப்பூரிலும் அதே நிலைதான். அங்கு எங்கே தோண்டினாலும் சாயப்பட்டறைத் தண்ணீர்தான் வருமே தவிர நல்ல தண்ணீரே கிடைக்காத நிலை; ஆனால், அங்கே கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடைமுறையிலே இருக்கிறது. ஆனால் இங்கே அது துவங்கப்பட இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஐந்தே கால் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மூலமாக அந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்து தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, தென்னாற்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டங்களில் இந்தப் புதிய வீராணம்



1997 மார்ச் 27] [திரு. ஜி. பழனிசாமி]

திட்டம், ஓரளவாவது செயற்படுத்தப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. எதையாவது நாம் செயற்படுத்த எடுத்துக் கொண்டிருக்கிறோமா என்று பார்த்தால் இந்தக் குறிப்பிலே ஒன்றுமே இல்லை. அது சம்பந்தமாக என்ன நிலை எடுத்திருக்கிறோம், ஏதாவது செயற்படுத்தப்பட்டிருக்கிறதா, என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நிலத்தடித் தண்ணீர் ஆதாரத்தைப் பயன்படுத்தக்கூடிய மக்களுக்கு, அது நகரமாக இருந்தாலும், கிராமமாக இருந்தாலும், தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு இன்றைக்கு விழிப்புணர்ச்சி தேவை. எப்படி எயிட்ஸ் நோய்க்கு விழிப்புணர்ச்சியை மக்களிடத்திலே உணர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறதோ அதேபோன்று தண்ணீரைப் பயன்படுத்துவதிலேகூட மக்களிடத்திலே அரசாங்கம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கிராமப்புறங்களில் கூட்டு குடிநீர்த் திட்டம் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி அதன்மூலமாக மக்களுக்குச் சீரான நீரை வழங்கக்கூடிய அந்த பி.வி.சி. பைப்புகள் தரமான பைப்புகளாக இல்லை. ஏற்கெனவே அந்த அரசு பல நிறுவனங்களிலே ஒப்பந்தம் செய்து அதற்காகவென்றே தொழிற்சாலைகளைத் துவங்கி வாங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்றையதினத்தில் பர்கூர், தர்மபுரி, அதுபோன்று ஆரவள்ளி மற்ற கம்பெனிகளிலேயிருந்து கொள்முதல் செய்யப்படுகிற ஆர்.சி.சி பைப்புகள் தரமான பைப்புகளாக இல்லை. நாங்களே நேரடியாக பல இடங்களிலே பார்த்திருக்கிறோம். கிராமப்புறங்களிலே போடக்கூடிய பைப்புகளை, கிராமங்களில் வயல்களிலே வளை தோண்டக்கூடிய எலிகூட அதை அரித்துவிடுகிறது அவ்வளவு, மோசமாக தரமாக இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அதிலே முறைகேடு இல்லாமல் நல்ல தரமான ஒரு நீண்டகால பார்வையோடு, நீண்டகால திட்டத்தை உருவாக்கக்கூடிய நாம் அந்த மாதிரி பைப்புகளை வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 5 ஆண்டுக் கால ஆட்சியில் நடைபெற்றதை நினைவூட்டிக் கொண்டேயிருக்கிறார். நிச்சயமாக அந்தப் பைப்புகள் அத்தனையையும், பதித்தவைகளைத் தவிர, மற்றவைகளைத் தொடக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம். இப்போது வாங்கிக்

கொண்டிருக்கிற பைப்புகள் அத்தனையும் அதற்கு நேர்மாறாக தரம் உள்ளவையாக இருக்கின்றன. அதுபோன்று இல்லாமல் இருந்தால் என்னிடத்தில் தெரிவித்தால் தற்போது நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதுமாதிரி இருந்துவிடக்கூடாது என்பதைத்தான் நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். 1995-96-ஆம் ஆண்டுக்காக குடிநீருக்கு ஒதுக்கியிருக்கிற ரூ.419.17 கோடி. ஆனால் அதிலே சதவிகிதம் என்று எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் 4.24 சதவிகிதம். சென்னைப் பெருநகருக்கு மட்டும் ரூ.304.29 கோடி. மற்ற கிராமப் பகுதிகளுக்கு 114.88 கோடி. இப்பொழுது பார்த்தோம் என்று சொன்னால் 1997-98 ஆம் ஆண்டுக்கு 209 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம். சென்ற ஆண்டைவிட மிகக் குறைந்திருக்கிறது. (குறுக்கீடு) ஆமாம். நீங்கள் சொல்லும்போது சொல்லுங்கள். ரொம்பக் குறைந்திருக்கிறது. இதிலே பார்த்தோம் என்றால் 1.7 சதவிகிதம் தான் விகிதாச்சாரத்திலே வருகிறது. நீங்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலே இருக்கிறது. அதிலே இருக்கிறதைத்தான் நான் சொல்கிறேன். ஆக ஒதுக்கப்படுகின்ற தொகையை நீங்கள் அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டு இடைக்கால பட்ஜெட்டில் நம்முடைய ஆட்சி பொறுப்புக்கு வந்த பின்னால் குடிநீருக்கு ஒதுக்கப்பட்ட தொகை 15 கோடி ரூபாய். ஆனால் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 15 கோடி ரூபாய். சென்ற ஆண்டும் அதே நிலைதான், இந்த ஆண்டும் அதே நிலைதான். ஆக எப்படி மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ற வகையிலே, நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றப் போகிறோம் என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்சினை. சென்ற ஆண்டும் 15 கோடி, இந்த ஆண்டும் 15 கோடி, 30 கோடியாவது கொடுத்தால்தான் இந்தத் திட்டங்களை அரசு நிறைவேற்ற முடியும். இல்லையென்றால் முடியாது. அப்படிப்பட்ட நிலை இருக்கிறது.

அதேபோன்று, இன்னொன்றைப் பார்த்தோம் என்றால் வேடிக்கையாக இருக்கிறது. ஊரக விசைப் பம்பு பராமரிப்பு. அந்தப் பணியாளர்களுக்கு அதற்காக சம்பளம் மற்ற பணிகளுக்கு ஒதுக்கியிருப்பது 5.72 இலட்சம் ரூபாய். கிராமங்களில் உள்ள விசைப் பம்புகள் 28,804, கைப்பம்புகள் 1,45,266. சென்ற தடவை விசைப் பம்புகளுக்கு ரூ. 2.45 கோடியும் கைப்பம்புகளுக்கு ரூ. 3.19 கோடியும் ஒதுக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு



நிலை என்ன என்று சொன்னால் சாதாரணமாக ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். எப்படி பராமரிக்க முடியும்? கிராமப்புறங்களிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்கு நாம் இப்படி சாதாரணமாக ஆயிரம் ரூபாய்—ரூ. 2 கோடி 45 இலட்சம் ஒதுக்கியிருந்த இடத்தில் ரூ. 3 கோடி 19 இலட்சம் ஒதுக்கியிருந்த இடத்தில் வெறும் ஆயிரம் ரூபாய்—ஒதுக்கியிருந்தால் எப்படிப் பராமரிக்க முடியும்? இல்லை ஏதாவது ஊராட்சி ஒன்றியத்தில் இந்த கன்ட்ரோலை கொண்டு போய் இருக்கிறீர்களா அல்லது மாவட்ட பஞ்சாயத்தினுடைய கன்ட்ரோலில் அதை பராமரிப்பதற்கான பணங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்னவென்று நீங்கள் விளக்க வேண்டும். இது எவ்வளவு பெரிய நிறுவனம். எப்படி இந்தப் பணம் போதும். இது என்னவென்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அடுத்து, இந்த 154 குடியிருப்புகளுக்குத்தான் தமிழகத்தில் தண்ணீர் வழங்கப்படவேண்டும் என்று ஒரு கணக்கு இன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது என்ன கணக்கு என்று எனக்குப் புரியவில்லை. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் அந்த அரசிடமும் இதைக் கேட்டேன். இப்போது நம்முடைய அரசிடமும் கேட்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு குடியிருப்பு என்பது மொத்தமாக மக்கள் வசிக்கின்ற ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் 250 மீட்டர் அளவுக்கு தூரம் இருந்தால் அவைகளை ஒரு குடியிருப்பு என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று 1992 ஆம் ஆண்டில் கணக்கிட்டு அதன் அடிப்படையில் இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் எனக்குத் தெரிந்த ஒரு அதிகாரியிடத்திலே .கேட்டேன். குடியிருப்பு என்று போடுகிறீர்களே இது என்ன கணக்கு என்று கேட்டேன். அவர் சொன்னார் 250 மக்கள் தொகை கொண்டது என்று சொன்னார். அப்படிச் சொன்னால் இன்றையதினம் தமிழகத்திலே உள்ள 6 கோடி மக்களில் 1½ லட்சம் பேர் தான் குடிப்பதற்குத் தண்ணீர் தேவையான

நபர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு எல்லாம் தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு கணக்கை அவர் சொன்னார். அது உண்மை தானா? ஆட்சி மாறலாம், அதிகாரிகளிடத்திலே மாற்றம் இல்லை. அந்த நிர்வாகத்திலே மாற்றம் இல்லை. அதற்குச் சரியான ஒரு கணக்கு, கொள்கை அதிகாரிகளிடத்திலே இருக்கிறதா, இல்லையா? அப்படி இல்லாத அளவுக்கு எதையாவது ஒரு கணக்கைச் சொல்கிறார்கள். ஆண்டுதோறும் இதே கணக்கு தானா? இந்த குடிநீர் வாரியத்தில் நீங்கள் பார்த்தால் 6,7, ஆண்டுக் காலமாக 154 குடியிருப்புகள், 154 குடியிருப்புகள் என்றுதான் இருக்கிறது. இது மாறவே இல்லை. மாற்றியாவது இதை எழுதுங்கள். பழைய கணக்கை எடுத்துப் பாருங்கள்; கொள்கைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். இதே கணக்கைக் கொடுத்துக் கொண்டிருந்தால் இது யாரை ஏமாற்றுவது; அமைச்சரை ஏமாற்றுவதா; நாட்டு மக்களை ஏமாற்றுவதா; அதிகாரிகள் அதில் ஒரு திருத்தம் செய்யுங்கள். உண்மையான கணக்கைக் கொடுங்கள். அந்த ஊராட்சிகளில் அதற்கு என்று ஒரு திட்டத்தையாவது தண்ணீர் வழங்குவதற்கு நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன்.

அதேபோல், ஊராட்சிகளில் பணிபுரியக்கூடிய சாதாரணமாக இருக்கக்கூடிய ஊழியர்கள் ஏற்கனவே 200 ரூபாய், 150 ரூபாயில் பணிபுரிந்தார்கள். நம்முடைய தி.மு.க. ஆட்சி பொறுப்புக்கு வந்த உடனே நீங்கள் 650 ரூபாய் வரையிலும் அவர்களுக்கு அளித்திருக்கிறீர்கள். சுமார் 6 ஆயிரம் பேர் இன்றையதினம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை நலம்பெற அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு அமைப்பாளர்களுக்குக் கொடுப்பது போல் இவர்களும் இறந்து போனால்தான் ஒரு லட்சம் ரூபாய் கேட்கிறார்கள், உயிரோடு இருக்கும்போது கேட்கவில்லை. அதற்கு ஒரு சட்டத் திருத்தத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து கொண்டு, அதைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், இன்றைக்கு பெருந்துறை தொகுதியில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. காலையில் தென்னை மரங்கள் எல்லாம் பட்டுப்போன விவரம் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையின் மூலம் சமர்ப்பித்தார்கள். அது கோரமான நிகழ்ச்சி தான். அந்தப் படங்களை எல்லாம் பார்க்கிறபோது நமக்கு வேதனையாகத்தான் இருக்கிறது.



அதேபோல், அங்கே இருக்கக்கூடிய அந்த ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் தனி பூஸ்டர் ஒன்றும் அமைக்க வேண்டுமென்று நம்முடைய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதோ முடிக்கப் போகிறேன். சென்னையில் நம்முடைய தண்டையார்பேட்டையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனை ஒன்று மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலேகூட எய்ட்ஸ் தடுப்பு ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்க வேண்டும் என்பதற்கு 1983-ல் சென்னையில் மாநகராட்சி கவுன்சில் இதற்காக ஒப்புதலை அளித்தது. இதற்குத் தேவையான சில தொகைகளைக் கூட வங்கிகள் அளித்து இருக்கிறது. இதை நடைமுறைப்படுத்துவதிலே இதிலே பணியாற்றக்கூடிய டாக்டர்கள் எல்லாம் இருக்கிறார்கள். மிகச் சிறந்த முறையில் குருநாதன் என்பவர் எய்ட்ஸ் நோய் தடுப்புப் பயிற்சி பெற்று அமெரிக்கா எல்லாம் சென்று வந்திருக்கிறார், அதேபோல் டெல்லியில் நடைபெற்ற அந்த முகாமிலும் கலந்து கொண்டு வந்திருக்கிறார். ஆகவே, மீண்டும் அந்த தண்டையார்பேட்டையில் அந்த தொற்று நோய் மருத்துவமனையில் எய்ட்ஸ் நோய் தடுப்பு ஆராய்ச்சி மையத்தை நீங்கள் உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நேரத்தைக் கருதி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** டாக்டர் அ. மணி.

***டாக்டர் அ. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது எனக்குப் பேசுகின்ற வாய்ப்பினை அளித்ததமைக்கு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்ற அடிப்படையில் உரிய நேரத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரத்தையும், அதேசமயத்தில் அதிக நிதியையும் ஒதுக்கி நல்ல பல திட்டங்களை, ஏழு அம்ச அடிப்படைத் திட்டங்கள் போட்டு, (செவன் பாயின்ட் புரோகிராம்) நல்ல திட்டங்களை அறிவித்திருப்பது

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, ஒரு நல்ல நிதி நிலை அறிக்கையை இன்றைக்குத் தந்திருப்பதன் மூலமாகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைத் தமிழகத்து மக்கள் மட்டுமின்றி இந்த உலகமே போற்றிப் பாராட்டுகின்ற ஒரு · நிலையில் இருப்பதை எண்ணுகின்றபொழுது, இப்படிப்பட்ட ஒரு தலைவரின் தலைமையின்கீழ் பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சற்றுப் பெருமை கொள்ளலாம்.

பிற்பகல் 12-10

அதே சமயத்தில், இந்த உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களை நடத்தியதோடு மட்டுமல்லாமல், உள்ளாட்சி அமைப்புகளிலே பெண்களுக்கு 30 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அந்த 30 சதவீதம் என்பது கூடப் போதாது என்ற நிலையிலே, தற்போது நியமிக்கப்பட இருக்கின்ற மக்கள் நலப் பணியாளர்களில் 50 சதவீத அளவிலே பெண்கள் இருக்க வேண்டுமென்று வரையறை செய்து, 'ஆணும், பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்' என்ற புரட்சிக் கவிஞன் பாரதியின் வார்த்தைக்கேற்ப இன்றைக்கு ஒரு நல்லாட்சியைத் தமிழகத்திலே தந்து கொண்டிருப்பதன் மூலமாகவும், பெண்களுடைய முன்னேற்றத்திற்காகக் கிட்டத்தட்ட 35 ஆயிரம் (கிட்டத்தட்ட 50 சதவீதம்) பெண்களுக்கு வேலைவாய்ப்பு, 1,420 கோடி மதிப்பீட்டிலே 5 ஆண்டுகளில் 10 இலட்சம் பெண்கள் தங்கள் வருவாயைத் தாமே ஈட்டும் திறனை அடையும் வகையிலே அருமையான ஒரு திட்டத்தை அறிமுகம் செய்து, அதுமட்டுமல்லாமல், தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டிற்காக ஒவ்வொருவருக்கும் ரூ.25 இலட்சம் ஒதுக்கியிருப்பதையும், Right to information Act— அதாவது தகவல் அறியும் உரிமைச் சட்டம் போன்ற திட்டங்களையெல்லாம்



அறிமுகப்படுத்தி, இந்த உள்ளாட்சித் துறை ஒரு நல்லாட்சியை நடத்திட வழிகோலியிருக்கின்ற தலைவரவர்களை உள்ளபடியே இன்றைக்குப் பாராட்டாத மக்களே இல்லை என்ற நிலையிலே இதை ஒருசிலர் குறை கூறுகின்றார்கள், அவர்களையெல்லாம் பார்த்து, நான் சொல்லக் கடமைப்பட்டிருப்பது, விளக்கு வெளிச்சத்தையே பார்க்க முடியாத அந்தப் பிறவிக் குருடர்களுக்குச் சூரிய வெளிச்சம் எங்கே தெரியும் என்ற அளவிலே அவர்களை மன்னித்து ஒரு அருமையான இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக, உள்ளாட்சித் துறைகளுக்கு அதிக அதிகாரத்தையும், அதிக நிதியுதவியையும் அளித்து, கிராமப்புறங்களிலே மக்கள் பலனடைகின்ற வகையிலே நல்ல பல திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கின்ற நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை உள்ளபடியே பாராட்டுகிறேன்.

இதிலே முக்கியமாக நான் சொல்ல விரும்புவது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு கிராமத்தை, மாதிரி கிராமமாக எடுத்துக் கொண்டு, அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு கிராமமாக அதை உருவாக்குவது என்று அறிவித்திருப்பது ஒரு போற்றத்தக்கத் திட்டம்.

இந்தத் திட்டத்திலே என்னுடைய வேண்டுகோளாக நான் தமிழக முதல்வர் அவர்களிடத்திலே கேட்பது, ஒரு தொகுதியிலே கிட்டத்தட்ட 250 முதல் 300 கிராமங்கள் உள்ளன. அப்படி அந்தத் தொகுதியிலுள்ள கிராமங்கள் எல்லாம் இதுபோன்ற மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெற வேண்டுமேயானால், கிட்டத்தட்ட 300 ஆண்டுகள் பிடிக்கும். எனவே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கிராமம் என்ற அளவிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவீர்களேயானால் நிச்சயமாக மிக விரைவிலே தமிழகம் மறுமலர்ச்சி அடையும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை என்ற என்னுடைய வேண்டுகோளை இங்கே வைக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, உளுந்தூர்பேட்டை தொகுதியிலே எலவநாசூர் கோட்டையை மத்திய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழாக மாதிரி கிராமமாக அறிவித்து, 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் அந்தக் கிராமத்திற்கு ஒதுக்கப்பட்டது 1995-96-ஆம் ஆண்டிலே. அதிலே ஒரு சிக்கல் என்னவென்றால், அந்த வேலை துவங்கப்பட்டு தற்போது அந்த வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம், அந்தப் பஞ்சாயத்து 30 சதவீதம் நிதியை ஒதுக்க வேண்டுமென்ற ஒரு நிலையின் காரணத்தினாலே அந்த வேலை தொடர்ச்சியாக நடைபெற முடியவில்லை. எனவே, இப்பொழுது எலவநாசூர்கோட்டை கிராமம் 25 இலட்சம் ரூபாயை

அதாவது அந்த 30 சதவீதம் பஞ்சாயத்து கான்ட்ரிபியூஷனைக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. எப்பொழுதுமே அந்தத் தொகையைக் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படாது என்ற காரணத்தினாலே, நான் மாண்புமிகு அமைச்சரவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது, எங்களது அந்தக் கிராமத்திற்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டம் ஒழுங்காகச் செயல்படுவதற்கு ரூ.25 இலட்சத்தை ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாக அரசே ஒதுக்கி அருள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

என்னுடைய தொகுதியிலே (மணியடிக்கப்பெற்றது) பேருந்து நிலையம் பேரூராட்சியிலே உள்ளது. உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் தேசிய நெடுஞ்சாலையிலே ஒரு நெருக்கடியான இடத்திலே சாலை ஓரத்திலே அமைந்திருக்கின்றது. விரைவுப் பேருந்துகள் எல்லாம் அந்தப் பேருந்து நிலையத்திற்குள்ளே நுழைந்து வெளியே வர முடியாத ஒரு சூழ்நிலையில் சாலையின் இருபுறங்களிலும் நிற்கின்ற ஒரு நிலையின் காரணமாக, அந்தப் பேருந்து நிலையத்தைக் கடந்து செல்வதற்கு ½ மணி முதல் 1 மணி நேரம் ஆகின்றது. எனவே, அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டும். பக்கத்தில் அதற்குண்டான இடத்தை நாங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். எனவே, அந்த இடத்திலே அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

எனது நல்லூர் ஒன்றியம் மற்றும் தியாகதுருகம் ஒன்றியம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் அடுத்து நல்லூர்–வேப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் உடனடியாக முடித்து, என்னுடைய தொகுதியின் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை தீருவதற்கு இந்த இரண்டு திட்டத்தையும் உடனடியாக நடைமுறைப்படுத்தித்தர வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, (மணியடிக்கப்பெற்றது) தியாகதுருகம் ஒன்றியத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும். என்னுடைய தொகுதி மிகவும் வறட்சிப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதியில் SIDCO போன்று ஒரு தொழில் நிறுவனமும், அது தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்றபடியாலே அந்த ஊருக்கு



ஒரு அரசினர் கலைக் கல்லூரியும் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையையும் வைக்கின்றேன். கடைசியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூறி விடைபெற ஆசைப்படுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு பொது மக்களுடைய குறைகளைக் கேட்பதற்காக நாங்கள் செல்கின்ற நேரத்திலே தங்குவதற்கும், பொது மக்களைச் சந்திப்பதற்கும் ஏதுவாக ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அந்த அறை வேறு காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அங்கே அறை தர முடியாது என்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, நாங்களும் பொது மக்களின் அடிப்படை பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைக்கின்ற நிலையிலே இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலே மீண்டும், அந்த அறையை ஒதுக்க வேண்டும். பொது மக்களை, அதிகாரிகளைச் சந்தித்து, திட்டங்களைத் தீட்டி, எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.25 இலட்சத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அது ஏதுவாக இருக்கும். எனவே, எங்களுக்கு மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த அறையை ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ஒரே ஒரு பிரச்சினை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் அ. மணி:** என்னுடைய நல்லூர் ஒன்றியத்திலே நீண்டநாட்களாக இருக்கின்ற பிரச்சினை. இது 1989-90-லே மணிமுத்தாறு குறுக்கே, நல்லூர் இலங்கையனூர் தரைப்பாலம் கட்டுவதற்குத் தலைமைப் பொறியாளர் அவர்களால் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 30 லட்சம் ரூபாயில் கட்டப்படுகின்ற அந்தத் தரைப்பாலம் உறுதியாக இராது என்ற காரணத்தினாலே, அந்தத் தொகை மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் இருந்தால்தான் அந்தத் தரைப்பாலத்தைக் கட்ட முடியும் என்ற நிலையிலே அது தற்போது பரிசீலனையில் உள்ளது. அதை நிறைவேற்றுவதன் மூலமாகப் பல தொகுதிகளுக்கும், பல ஊர்களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுவதோடு, அது விவசாயிகளுக்கும், பள்ளி செல்கின்ற மாணவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். நல்லூர், பிஞ்சைனூர், மேமாத்தூர், வண்ணாத்தூர், மங்கலம்பேட்டை போன்ற இடங்களுக்கும், விருத்தாசலம், உளுந்தூர்பேட்டை, சிதம்பரம் போன்ற

தொகுதிகளை இணைக்கின்ற ஒரு வாய்ப்பாக இருக்குமென்ற காரணத்தினாலே அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக வேண்டி விரும்பி கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த என்னுடைய உயிரோடும் உணர்வோடும், உதிரத்தோடும் கலந்துவிட்ட, திராவிட இயக்கத்தின் கொள்கையின் பிரதிபலிப்பாய் விளங்குகின்ற முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பழனி சட்டமன்றப் பேரவை வாக்காள பெருமக்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய முதல்வர் தேர்தல் வாக்குறுதியாக ஆட்சிக்கு வந்தவுடனே உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்துவோம் என்று சொன்னார்கள். அதைப் போல இன்றைக்கு தேர்தலை நடத்தி அதிலே வெற்றிகரமாக 33 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-20

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த யூனியன் சேர்மன்களும் பெண்கள், முனிசிபல் சேர்மன்களும் பெண்கள். அதேபோல், மூன்று பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அந்த மூன்று பேரூராட்சி பெண்கள்தான் தலைவர்கள். இரண்டு நகர்மன்றத் தலைவர்களையும், ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவர்களையும் அழைத்துக் கொண்டு, மழைக்காலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட தமிழக அரசின் ஜீப்பிலே சென்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாதாரண பாமர மக்கள், பெண்கள், இந்த அரசைப் பாராட்டியபோது கலைஞர் என்றுகூடச் சொல்லாமல், 'கருணாநிதி' என்று சொல்லிப் பாராட்டினார்கள். அந்த மாதிரி வார்த்தையை நான் விவரம் தெரிந்த காலத்திலேயிருந்து கேள்விப்பட்டதே கிடையாது. அந்தப் பெண்கள் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒரு வகையிலே சந்தோஷமாகவும் இருந்தது. ஆனால் 'கருணாநிதி' என்று எங்கள் முன்னால் சொன்னால்,



அது பிடிக்காது. கழகத்தைச் சேர்ந்தவர்களே ஒருசில நேரங்களில் 'கருணாநிதி' என்று சொன்னால், அதுகூட எங்களுக்குக் கொஞ்சம் மனவேதனையாக இருக்கும். ஆக, அந்தப் பெண்கள் எல்லாம் அப்படிப் பேசினார்கள். அதாவது, அதிகாரிகளோடு, யூனியன் கமிஷனரோடு, முனிசிபல் கமிஷனரோடு பெண்கள் வந்து இயங்குகிறபோது, இந்த அளவுக்கு தமிழகம் வந்ததற்குக் காரணம் 'கருணாநிதி' முதலமைச்சராக இருப்பதினாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதை இந்தப் பேரவையிலே பேசுவதினாலே யாரும் தவறாக நினைக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். கிட்டத்தட்ட அங்கு 500 பெண்கள் இருந்தார்கள். நான்தான் முதலிலே இறங்கினேன். நான் சிறுபிள்ளை மாதிரியிருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் என்று அவர்களுக்குத் தெரியும். மற்றவர்கள் பின்னால் இறங்கினார்கள். 'பாருடி, இந்த 'கருணாநிதி' இப்படிப் பண்ணதினாலேதான் நம்மை மாதிரியிருக்கிற பெண்கள் எல்லாம் இன்றைக்குத் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். நமக்கு ஆறுதல் சொல்கிறார்கள். நமக்கு உடனடியாக வந்து காரியத்தைச் செய்கிறார்கள்' என்று அவர்கள் பாராட்டிச் சொன்னார்கள். அவர்கள் 'கருணாநிதி' என்ற வார்த்தையைச் சொன்னதிலே எனக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தாலும், அந்தச் சாதாரணப் பெண்கள் இன்றைக்குத் தலைவரைப் பற்றி எந்த அளவிற்கு மனதிலே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி எங்களால் உணர்ந்துகொள்ள முடிகிறது. அதற்காக அந்தப் பெண்கள் சார்பாகவும் இந்தத் தேர்தலை நடத்தியதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, பழனி தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இன்றைக்கு சிறு வருத்தம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு அந்தப் பேரூராட்சிகளுக்கு ஐ.ஆர்.டி.பி., தொகுப்பு வீடுகள், ஜீவன்தாரா கிணறுகள் எல்லாம் இருந்தன. இந்தத் தேர்தல் நடந்ததிலேயிருந்து, அவைகள் இப்போது இல்லை. முதலிலே இருந்தன....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு செ. இராமலிங்கம்):** மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: பேரூராட்சிகளுக்குத் தொகுப்பு வீடுகளோ, ஜே.வி.வி.டி.-யோ எப்போதுமே இருந்தது கிடையாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இல்லாமல் இருந்ததும் உண்மை. நம்முடைய ஆட்சி வந்த பிறகு, சென்ற முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் கலந்து பேசி, இது மிகவும் பரிதாபகரமான நிலையாக இருக்கிறது. நாம் இதை ஆரம்பித்துச் செய்யலாம், அதற்குப் பிறகு ஏதாவது, மத்திய சர்க்காரிடமிருந்து தடை வந்தால் நிறுத்திவிடுவோம் என்று அவர்களிடத்திலே கேட்டுக் கொண்டேன். அவர்களும் அதை ஒத்துக்கொண்டு ஓர் ஆண்டுகாலம் அனுமதித்தார்கள். அனுமதித்ததற்குப் பிறகு அந்த வேலை நடந்தது. மத்திய அரசாங்கத்திடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை, தடுக்கவும் இல்லை. ஆனால் அதற்குப் பிறகு வந்த அரசு அதை கைவிட்டுவிட்டது. இப்போதும் அதே நிலை தொடர்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஓரேயொரு கிளாரிபிகேஷன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பேரூராட்சிகளுக்கு அது போன்ற வசதிகளைச் செய்ய முடியாத நிலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆகவே, நீங்கள் பேரூராட்சிகளை எல்லாம் மீண்டும் ஊராட்சிகளாக மாற்றிவிட்டீர்கள் என்று சொன்னால் ஜே.வி.வி.டி. போன்றவற்றையெல்லாம் கொண்டு வரமுடியும். அதற்காவது நீங்கள் ஆவன செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே எதிர்பாருங்கள். திரு. த. பூவேந்தன் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மூன்று பேரூராட்சிகளிலே இந்த நிலை தொடர்ந்து இருக்கிறது. அந்த மாதிரி தமிழ்நாடு முழுமைக்கும் உள்ள பேரூராட்சிகளிலே இருக்கும். அதை மீண்டும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு இருக்கிற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி இந்த ஐ.ஆர்.டி.பி., தொகுப்பு வீடுகள்,



ஜீவன்தாரா கிணறுகள் ஆகியவற்றைக் கொண்டு வரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது போன்று, இன்னொன்று. எங்களுக்குப் பேசுவதற்கு ஆண்டுக்கு ஒரு முறைதான் வாய்ப்பு கொடுக்கிறீர்கள். கொஞ்சம் ஐந்து நிமிடம் சேர்த்துக் கொடுங்கள். ஏன் என்றால், எங்களுக்குக் கேள்வி கேட்பதற்கும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. பேசுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. இப்போது என் தொகுதிக்கு வந்துவிடுகிறேன். பாலசமுத்திரம் பேரூராட்சி என்று ஒன்று இருக்கிறது. மழைக்காலம் ஆரம்பித்த உடனே அந்தப் பேரூராட்சி துண்டிக்கப்பட்டு விடுகிறது. அங்கே ஒரு வரட்டாறு இருக்கிறது. அது பற்றி மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே அங்கு ஒரு பாலத்தைக் கட்டித் தந்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

அதுபோன்று, தறிக்காரன்புதூர் என்ற ஒரு ஊராட்சி இருக்கிறது. அந்த ஊராட்சியின் வழியாக பச்சையாறு, சண்முகநதியாறு ஆகிய ஆறுகளின் தண்ணீர் வருகின்ற காரணத்தால் அந்த ஊராட்சியும் மழைக் காலங்களில் துண்டிக்கப்பட்டு விடுகின்றது. தொடர்ந்து 20 நாட்கள் அந்த ஆற்று நீரினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். யாராலும் ஊரைவிட்டு வெளியே செல்ல முடியவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சைலேந்திரபாபு என்ற எஸ்.பி. ஒருவர் அந்த மாவட்டத்தில் இருந்தார். அவர் ஒருவரால் மட்டுமே அந்த ஊருக்குள் போக முடிந்தது. அந்த அளவுக்கு அந்த ஊர் துண்டிக்கப்பட்டு விடுவதால் ஊருக்குள் என்ன நடக்கிறது, ஏது நடக்கிறது என்றே கிட்டத்தட்ட 20 நாட்களுக்கு மேல் தெரியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அங்கேயும் ஒரு பாலத்தை கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தாயுள்ளம் கொண்டு இந்த ஆண்டே அந்த இரண்டு பாலங்களையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.(மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் பாலாறு, வரதமாநதி, குதிரையாறு ஆகிய ஆறுகளுக்கு நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டன. அது அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் நன்றாகத் தெரியும்; மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். பழனி தொகுதிக்கு முன்பு

இடைத்தேர்தல் நடை பெற்றபோது திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் ஏறக்குறைய 2500-க்கும் மேற்பட்ட வாக்குகளை அந்தப் பகுதியில் அதிகமாகப் பெற்றார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்தப் பகுதி மக்கள் என்றைக்கும் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதையில் அணிவகுத்து நிற்பார்கள் என்பதற்காகக் கூறிக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதி மக்கள், 'நீங்கள்—சட்டமன்ற உறுப்பினர் பேசினால், நிச்சயம் நமக்கு ஒரு அணையைக் கட்டித் தருவார்கள்' என்று சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நீங்கள் பச்சையாறு அணையைக் கட்டித் தரவேண்டும். ஏனென்றால், மழைக்காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் எவ்வளவு வீணாகப் போகின்றது என்பதைப் புள்ளி விவரங்களோடு நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். எனவே, இதை மனதில் வைத்து, இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ பச்சையாறு அல்லது வரதமாநதி நதிகளில் அணையைக் கட்டித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, பழனி தொகுதிக்கு உட்பட்டு ஜி.வி.சி. நகர், புஷ்பத்தூர், வயலூர், நல்லூர் ஆகிய ஊராட்சிகள் இருக்கின்றன. அங்கு பேப்பர் மில் ஒன்று இருக்கின்றது. அந்த பேப்பர் மில்லிலிருந்து வெளியேறும் கழிவு நீர் நிலத்தடியில் இறங்கிவிடுவதால், அங்கு 15 அடியில் பைப் போட்டாலே தண்ணீர் குடிக்க முடியாத நிலையிருக்கிறது. காரணம் உப்பு நீராக வருகிறது. எனவே, இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மனதில் வைத்து, அருகில் இருக்கும் அமராவதி ஆற்றிலிருந்தாவது அந்த ஊராட்சி மக்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் இந்த ஆண்டே குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிதம்பரனார் மாவட்டம், சாத்தான்குளம் சட்டமன்ற தொகுதியில் கடந்த 5,6 ஆண்டுகளாக மழையே இல்லாத காரணத்தால்



வறண்டு போயிருந்த அந்தப் பகுதியைப் பார்ப்பதற்காக கடந்த 26-6-1996 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் நேரடியாக வந்தபோது, அங்கிருக்கும் மக்களெல்லாம் குடிதண்ணீருக்காக அவதிப்படுவதை அறிந்தவுடனே, ஸ்ரீவைகுண்டம், பொன்னன்குறிச்சி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றிருப்பதை அறிந்து உடனடியாக அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அவ்வாறு அறிமுகப்படுத்திய அந்தத் திட்டம் நிறைவேற ஓராண்டுக்காலம் தாமதமானாலும்கூட, இன்றைய நிலையில் மக்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. மேலும் கடற்கரைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கேயிருக்கிற மக்களுக்கு அடிபம்பு போட்டுக் கொடுத்தாலும், கீழேயிருந்து உப்பு நீர்தான் வருகின்றது. ஒரு குடம் தண்ணீர் வேண்டுமென்று சொன்னால் 5 அல்லது 6 கிலோ மீட்டர் தூரத்திற்குப் போய், சைக்கிளில் எடுத்துவந்து, சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்களை இந்த நிலையிலிருந்து காப்பாற்ற, கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருவதற்கு ஒரு வருட காலமாகுமென்பதால், அதற்கு முன்னால் அவர்களின் தாகத்தினைத் தீர்ப்பதற்கு, தயவுசெய்து லாரிகளின் மூலமாக, நிச்சயமாகத் தண்ணீர் தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். காரணம் குடிநீர் இல்லையென்று, அங்கே பெரிய பிரச்சினை இருக்கிறது.

பிற்பகல் 12-30

இந்தத் தொகுதியைப் பார்பதற்காக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு முறை வந்தார்கள். சடையநேரி கால்வாய், புத்தந்தருவை, வயிரந்தருவை போன்ற இடங்களைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். அங்கேயுள்ள மக்கள் தண்ணீருக்காக எந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறார்கள், எந்த அளவுக்குத் தண்ணீரைக் கொடுக்கமுடியும் என்று பார்த்து, அந்த ஏரிகளிலே தண்ணீரைத் தேக்கி பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, சடையநேரி கால்வாய்த் திட்டத்தை இந்த ஆண்டிலே நிறைவேற்றினார்கள். 12 கோடியே, 33 லட்ச ரூபாய்க்கான திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள். அவர்களுக்கும், தமிழக முதல்வருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தென் மாவட்டங்களின் வறட்சிக்காக, ரூ.42 கோடியை இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் திட்டங்களை நிறைவேற்றும்போது சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளையும் பெற வேண்டுமென்ற ஆணையை இட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றியங்களில் எம்.எல்.ஏ.க்களுக்கு தனி அலுவலகமும், தொலைபேசி வசதியும், ஒரு உதவியாளர் வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதியில் பெரியதாளை என்ற மீனவர்கள் வாழ்கின்ற ஊர் இருக்கிறது. அங்கே 12,000 மக்கள் வாழ்கின்றனர். அந்த ஊர் கடலோரப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால் கடல் அரிப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்ற, 1 கிலோ மீட்டர் தூரம் தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் மீன்களைப் பிடித்துக்கொண்டு வந்து, கரைகளில் போட்டு வியாபாரம் செய்வதற்கு 4 களங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் விசைப் படகுகளில் சென்று மீன் பிடித்து வருகிறார்கள். விசைப் படகுகளை இயக்குவதற்கான மண்ணெண்ணெய் இல்லாமல், பிளாக்கிலே 12 ரூபாய், 13 ரூபாய் கொடுத்து வெளியில் வாங்குகிறார்கள். எனவே, அவர்களுக்கு நியாய விலையில் மண்ணெண்ணெய் கொடுக்குமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்(திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். எஸ். மணி நாடார்:** என்னுடைய தொகுதியிலே மழையில்லாத காரணத்தால் பனை மரங்களெல்லாம் பட்டுப்போய் விட்டன. ஆகவே, பனை மரம் ஏறும் தொழிலாளர்கள் வாழ்க்கையில் மிகவும் பின்தங்கிவிட்டார்கள். அங்கு கருப்பட்டி சொசைட்டி என்று ஒன்றிருந்தது. அதன் மூலமாக 12 வருடங்களுக்கு முன்னர் 45 லட்ச ரூபாயை இவர்கள் கடனாகப் பெற்றார்கள். இன்றைக்கு அந்தத் தொகை வட்டியும், முதலுமாக 1¼ கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அந்தக் கடன் தொகையை திருப்பிக் கொடுப்பதற்கு தற்போது வாய்ப்பு, வசதி இல்லாத காரணத்தால், அவர்கள் தர வேண்டிய அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.



**திரு. எஸ். எஸ். மணி நாடார்:** அந்த மக்கள் வாழ்வதற்கு எந்த வழியும் இன்றி, பட்டுப்போன பனை மரங்களிலிருந்து ஓலைகளை எடுத்து, பதப்படுத்தி, அதன் மூலமாக கூளவு மற்றும் கைவினைப் பொருட்களைச் செய்து, மார்க்கெட்டுக்கு எடுத்து சென்று வியாபாரம் பண்ணுகிறார்கள். ஆகவே சொசைட்டி மூலமாக அந்தப் பொருள்களைப் பெற்று, அவர்களுக்குக் கடன் உதவியும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. வ. வேலுசாமி.

பிற்பகல் 12-35

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்திய நாட்டின் பல மாநிலங்களுக்கு வழிகாட்டியாக, பல்வேறு பத்திரிகைகளும், பலதரப்பட்ட அரசியல்வாதிகளும், முன்னாள் முதல்வர்கள், படித்தவர்கள், பாமரர்கள் என்று அனைவராலும் பாராட்டத்தக்கதொரு நிதிநிலை அறிக்கையினைத் தமிழகத்திற்குச் சமர்ப்பணம் செய்து, மனிதன் தன்னைத்தானே அழித்துக் கொள்ளக்கூடிய ஒருசில பொருட்களைத் தவிர, எதற்கும் வரி கிடையாது என்ற அளவில், சீர்திருத்தமான, வழிகாட்டியான ஒரு நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தலைவர் அவர்கள், மகாத்மா காந்தி அவர்கள் கண்ட கனவை நனவாக்கிட, வளர்ந்து வருகின்ற ஜனநாயகத்தில், மக்களுடைய இயக்கம் அடிமட்ட நிலையிலிருந்து வரவேண்டும்; கிராமங்களிலேயிருந்துதான் அது தொடங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, பல ஆண்டுக் காலமாக நடைபெறாமல் இருந்த உள்ளாட்சித் தேர்தல்களை, நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்ததைப்போல, அதனை நடத்தி முடித்திருக்கிறார்கள். 6 மாநகராட்சிகளுக்கும், 102 நகராட்சிகளுக்கும் 354 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், 12,544 ஊராட்சிகளுக்கும் தேர்தல்களை நடத்தி, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, அதிகாரங்களைப் பரவலாக்கிய ஒரு மாபெரும் ஒப்பற்றச் செயலைச் செய்து முடித்திருக்கிறார்களென்றால், உண்மையிலேயே அது பாராட்டுதற்குரியதாகும்.

[திரு. வ. வேலுசாமி] [1997 மார்ச் 27

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே, அடிப்படைத் தேவைகள்கூட அற்ற நிலையில் கிராம மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதனைக் கருத்தில் கொண்டு, கிராமங்கள் முன்னேற்றப்பட வேண்டும், கிராம மக்களுக்கு நல்வாழ்வளித்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு, 7 அம்சங்களை அறிவித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தலைசிறந்த 7 அம்சங்களை அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒன்று குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவது. குடிநீர்ப் பற்றாக்குறை பல கிராமங்களில் இருந்தாலும், குடிநீர் வசதி இல்லாத கிராமமே இருக்கக்கூடாது; அப்படிப்பட்ட நிலையை உருவாக்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, நம்முடைய ஒப்பற்ற தலைவர் ரூ.250 கோடி அதற்காக ஒதுக்கியிருப்பது பாராட்டுதற்குரியதாகும். பல்வேறு கிராமங்களிலே மக்கள், வேலையின்றி அக்கிராமங்களைக் காலி செய்து விட்டு, வெளியேறுகின்ற நிலையில், பல கிராமங்கள் இன்று பேச்சேயில்லாத கிராமங்கள் என்று ஆகியிருப்பதைத் தவிர்ப்பதற்காக முதற்கட்டமாக அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்பதற்காக இத்திட்டத்தை நம்முடைய தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதேசமயத்தில் வேலையில்லாத நாட்களிலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட நேரங்களிலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித்தர வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்திரா வீடு கட்டும் திட்டம், ஜீவன்தாரா கிணறு வெட்டும் திட்டம், நேரு வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து, அதன் வாயிலாக பல இலட்சம் மனித வேலை நாட்களை உருவாக்கி, அக்கிராம மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறா வண்ணம் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்களென்றால், உண்மையிலேயே அது பாராட்டுதற்குரியதாகும். அப்படிப்பட்ட ஒரு நிலையில், இன்றும் பல இடங்களில் மக்கள் குடிநீருக்காக அலைந்து திரியக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. பல கல் தொலைவு சென்றாலும், ஒரு குடம் தண்ணீர் கொண்டு வருவது என்பது மிக அரிதாக இருக்கிறது. அதுபோன்று இருக்கின்ற பகுதிகள் எல்லாம் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன. பொதுவாக, தென் மாவட்டங்களிலே, முகவை மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, மண்ணை சிறிதளவு ஆழம் தோண்டினாலும், அங்கே உப்பு நீராகவே வரக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே, நிரந்தரமாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆறுகளிலே வரக்கூடிய தண்ணீர் முழுவதையுமே, மக்கள் குடிநீருக்காகப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை, இன்னும் சிறிது ஆண்டுகளிலே வந்துவிடும் போல் இருக்கிறது. 'ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளில், ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்' என்று சொன்ன நிலைகளெல்லாம் மாறி, இப்போது எவ்வளவுத் தோண்டினாலும், தண்ணீர் வராத நிலைமை இருப்பதை ஆராய்ந்து, ஒரு தெள்ளத் தெளிவான ' நிலையை ஏற்படுத்திட வேண்டும்.



1997 மார்ச் 27] [திரு. வ. வேலுசாமி]

பிற்பகல் 12-40

பொதுவாக, கடற்கரையோரமுள்ள கிராமங்களிலே, தண்ணீருக்காக மக்கள் மிகவும் அவதியுறுகிறார்கள். ஆகவே, எப்படியாவது கடல்நீரை, நல்ல நீராக ஆக்கி, அதன் வாயிலாக எல்லோருக்கும் குடிநீர் கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையைப் பொறுத்த அளவிலே, குடிதண்ணீர், இப்போது இரண்டு நாட்களுக்கு ஒருமுறைதான் வந்து கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து நான் நேரடியாகவும் பேசியிருக்கிறேன். அதற்காக சுமார் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றாலும், ஒரே நேரத்திலே அங்கு தண்ணீர் கிடைப்பதில்லை. இரவு முழுவதும், ஒரு வார்டுக்கு ஒரு மணி நேரம் என்று ஒதுக்கி, அதனால் பெண்கள் எல்லாம் விடிய விடிய அலைந்து திரிந்து கொண்டிருக்கிற நிலைமையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த வேலைகளை விரைவுபடுத்தி, சீக்கிரமாக முடித்துக் கொடுத்தால், அங்குள்ள மக்கள் எல்லோரும் ஒரே நேரத்திலே, குறிப்பாக இரவு அல்லாத பகல் நேரத்திலே தண்ணீர் பிடித்துக் கொள்வார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்னும் இரண்டே மாதங்களுக்குத்தான் மதுரைக்குக் குடிநீர் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை கலெக்டர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கும் ஒரு வழிவகை கண்டு, தண்ணீர்ப் பற்றாக்குறை இல்லை என்பதை ஏற்படுத்தி, அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகரைப் பொறுத்தவரையில், இன்னும் எத்தனையோ வேலைகள் செய்யப்படவேண்டும். இப்போது அங்கிருக்கக்கூடிய நெல் மண்டியை, போக்குவரத்து நெரிசல் காரணத்திற்காக மாற்றியிருக்கிறார்கள். அதற்காக சுமார் 9½ கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைக்கும்போது, நான் எனது மனமார்ந்த நன்றியை, மதுரை மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மதுரை மாநகரிலே புகழ் வாய்ந்த, உலகளாவிய மிகப்பெரிய ஆலயமாக விளங்குவது, அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில், ஆனால், அந்தக் கோயிலின் அருகிலே இருக்ககூடிய மத்திய மார்க்கெட்—சென்ட்ரல் மார்க்கெட்—என்று சொல்லக்கூடிய காய்கறி மார்க்கெட்டிற்கு தினசரி நூற்றுக்கணக்கான லாரிகளும், ஆயிரக்கணக்கான வேன்களும், சிறுசிறு 'டிரை-சைக்கிள்' களும் வந்து செல்கின்ற காரணத்தினால், அந்தக் கோயிலுக்கே மக்கள் செல்ல முடியாத ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வேறு இடத்திற்கு, இப்போது நெல் மண்டி இருக்கக்கூடிய இடத்திற்கு மாற்றித் தரும்படி அன்போடு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மதுரை மாநராட்சி வெள்ளிவிழா கொண்டாட இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். வெள்ளி விழா கொண்டாடுகிற நேரத்திலே, அதற்கு ஒருசில அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாநகரத்தைச் சுற்றியுள்ள இடங்களிலே கழிப்பிடங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டிருந்தாலும், அதற்குப் போதுமான தண்ணீர் வசதி இல்லாமல் மூடிக் கிடக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல, அங்குள்ள கிணறுகளிலும் தண்ணீர் இல்லை. ஆகவே, ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தாவது, அவற்றிற்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மதுரை மாநகரிலே, மழைநீர் வடிகால்களே கிடையாது. அதற்கு 2 கோடி ரூபாய் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்னுடைய முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவை செயல்படாமல் இருக்கின்ற காரணத்தினால், சாலைகளை எப்படித்தான் போட்டாலும், அவையெல்லாம் உடனுக்குடன் கெட்டுவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவற்றை செயல்படச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பது, 72 வட்டங்களிலே, சுமார் 30 வட்டங்களில்தான் இருக்கிறது. மீதியுள்ள வட்டங்களிலும் அந்த பாதாளச். சாக்கடைத் திட்டம் இல்லாத காரணத்தினால், எப்படியாவது உலக வங்கியில் கடன்பெற்றாவது, மதுரை மாநகராட்சிக்கு அதை செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



மதுரை மாநகரத்திலே, இரண்டு பெரிய மயானங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு மின்சாரத்தின் வாயிலாக எரியூட்டக்கூடிய கருவிகள் பொருத்தப்பட்டிருந்தும், அவை பழுதுபட்ட நிலையிலே, தற்போது செயல்படாமல் இருந்து வருகின்றன. ஒரு நாளைக்கு அங்கே நூற்றுக்கணக்கான பிணங்கள் வருகின்றன. ஆகவே அந்த மயானத்தில் மின்சாரக் கருவியைப் பொருத்தி இயக்கினால் சுற்றுச்சூழல் பாதிக்காத ஒரு நிலையை ஏற்படுத்திட முடியும். அதைப்போல எனது தொகுதியிலே இருக்கக்கூடிய மூலக்கரை மயானத்திலும் ஒரு மின்சாரமயமாக்கப்பட்ட கருவியைப் பொருத்தினால் நன்றாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

பிற்பகல் 12-45

பொதுவாக, நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அவர்கள் ஓய்வு பெறும்போது அந்த வீடுகளை காலி செய்யச் சொல்கிறார்கள். அரசு அவர்களுக்கு அந்த வீடுகளை நிரந்தரமாக்கிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகரம் என்பது ஒரு தூங்காத நகரம். அந்தத் தூங்காத நகரத்தில் இரவு நேரத்தில்கூட கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளுக்கு 'லைசன்ஸ்' வாங்க வேண்டுமென்றால் காவல் துறையிடம் செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்த நிலைமையை மாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) இன்னும் ஒரே ஒரு கோரிக்கை. மதுரை மாநகரில் ஒரு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. அது 3 கோடி ரூபாய் செலவழித்தும் முடிக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் பணத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாநகருக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவிருக்கிறார்கள். நாங்கள் வெள்ளிவிழா கொண்டாடவிருக்கிறோம். அங்கே சுற்றுச்சாலை அமைப்பது போன்ற வேலைகள் செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே அந்த வேலைகளை எல்லாம் முடிப்பதற்கு தனிப்பட்ட முறையிலே அதிகமாகத் தொகையை ஒதுக்கித் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. பி. வெங்கடசாமி.

• **திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தையொட்டி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கையின் மீது சில விளக்கங்களைச் சொல்ல வேண்டும் என்று கருதுகிறேன். கிராமப் பஞ்சாயத்துக்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட பஞ்சாயத்துக்கள் போன்றவற்றின் தேர்தல்களை நல்லபடியாக முடித்து காந்திஜி நினைத்த கிராம ராஜ்யத்தைக் கொண்டு வந்த இந்த அரசாங்கத்திற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பஞ்சாயத்துத் தலைவராகவும், பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும் இருந்திருக்கிறேன். இந்த ஆட்சி வருவதற்கு முன் இடைப்பட்ட காலத்தில் ஒரு வேலையும் நடக்கவில்லை. ஆனால் பில் மட்டும் போட்டிருக்கிறார்கள். இதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எந்த ஊரிலும் குடிநீர் இல்லை. எல்லாக் குழாய்களும் ரிப்பேர் ஆகியிருக்கின்றன. குழாய்களின் மீது ரிப்பேர் என்று எழுதி இருக்கிறார்கள். அதை சரி செய்யவில்லை. மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் வந்து முதன்முதலாக ஒரு மீட்டிங் போட்டுப் பேசினார்கள். எம்எல்ஏ.-க்களையும், அதிகாரிகளையும் அழைத்துப் பேசினார்கள். போர்வெல் எல்லாம் ரிப்பேர் ஆகியிருக்கிறதே ஏன் என்று கேட்டார்கள். அதிகாரிகளிடம் எவ்வளவு பம்பு செட் இருக்கிறது என்று கேட்டார்கள். அதற்கு அதிகாரிகள் பதில் சொல்லும்போது 400 பம்பு செட்டுகள் இருக்கின்றன, அதில் 100 ரிப்பேர் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடம், மக்கள் தண்ணீர் வேண்டுமென்று கேட்டால் ஒரு நாளைக்குள்ளாகவோ அல்லது 2 நாளைக்குள்ளாகவோ கொடுக்க வேண்டும், அதைவிட்டுவிட்டு 6 மாதமாக ரிப்பேர் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே என்று கேட்டார்கள். அதன்பின் தெருவிளக்குகள், குடிதண்ணீர் போன்ற வசதிகளை போர்க்கால அடிப்படையில் செய்து முடித்தார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களைப் போன்ற எம்எல்ஏ.-க்கள் 3 வருடமாகச் சொன்னால்கூட இவ்வளவு வேலைகள் நடைபெறாது. ஆனால் அமைச்சர் அவர்கள் 15 தினங்களுக்குள்ளாக பல வேலைகளைச் செய்ய வைத்தார்கள். அவர் கூப்பிட்டுச் சொன்னதால்தான் அந்த வேலைகள் நடந்தன. அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். அதே அதிகாரிகள் தான் இருக்கிறார்கள்.



இனிமேலும் அதேமாதிரி அங்கு வேலைகள் நடக்க வேண்டியிருக்கிறது. அதனால் அதிலே அதிக கவனம் செலுத்தி அந்த வேலைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காந்தி நினைத்த மாதிரி இந்த நாட்டில் அனைத்தும் நடக்க வேண்டும். குடிநீர், ட்ரெயினேஜ், வேலைவாய்ப்புத் திட்டங்கள் மற்றும் கிராம இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இதுபோன்ற திட்டங்கள் அனைத்தும் கம்யூனிட்டி டெவலப்மெண்ட்டிலே வருகின்றன. இவைகளைச் சரியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

மேலும், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் இந்திரா அவாஸ் யோஜனா போன்ற திட்டங்களின் கீழ் சுமார் 66 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். ஆனால் தொகுப்பு வீடுகள் கட்டப்படும்போது அவை சரியாகக் கட்டப்படுவது இல்லை. சரியாக சிமெண்ட் போடப்படுவது இல்லை. வீடுகளெல்லாம் விழுந்து விடுகின்றன, இடிந்து போகின்றன. எப்படி நீங்கள் இதைச் செய்கிறீர்கள் என்று தெரியவில்லை. அதிகப்படியான புகார்கள் வருகின்றன. எங்கள் ஊரில் ஒரு 'பிரிட்ஜ்' கட்டுகிறார்கள். நான் நேரில் பார்த்து கேட்டேன். ஏன் சரியாக சிமெண்ட் போடவில்லை என்று கேட்டேன். சரியாகப் போட்டுவிடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். சொன்னால்தான் போடுவோம் என்று சொல்கிறார்கள். எப்படி இதைக் கட்டுப்படுத்துகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதற்காக ஒரு 'மெஷினெரி' இருந்தால்தான் கட்டுப்படுத்த முடியும். இல்லை என்றால் பணம் கொடுக்கிறோம், காண்ட்ராக்ட் எடுக்கிறார்கள், வேலை நடக்கிறது என்பதோடு முடிந்துவிடும். அப்படி கட்டப்படும் வீடுகள் ஒரு மாதத்தில் அல்லது ஒரு வருடத்தில் விழுந்துவிடும், பிரிட்ஜுகள் விழுந்துவிடுகின்றன. 'What is the use'?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டுவதில் தரம் இல்லை, அதற்கான கட்டுப்பாடு ஒன்றும் இல்லை, மேல் முறையீடு செய்வதற்கு அல்லது பார்வையிடுவதற்கு யாரும் இல்லை என்பதுபோல் மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிறார். உள்ளபடியே, மேல் முறையீடு செய்யவும், அதை கண்காணிக்கவும் படிப்படியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது தவறு செய்து கலக்கம் ஏற்பட்டால், அது குறித்து எங்களிடம் தெரிவித்தால் நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதனுடைய முடிவை உங்களுக்குத் தெரிவிக்க எப்போதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

[1997 மார்ச் 27

**திரு. பி. வெங்கடசாமி:** நன்றி. இது மாதிரி வரும்போது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அதிகாரிகள் திருந்துவார்கள் அதையும் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, Local Road Grants-ஐ பொறுத்தவரையில் 5 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் தார் ரோடுகள் போடப்போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதில் 'லிங்க்' ரோடுகளும் சேர்ந்து வருகின்றன.

அடுத்து Local Irrigation Grants. சுமார் 90,415 ஏரிகளை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் பணம் போதவில்லை. நிறைய ஏரிகள் 'சில்ட்' ஆகிவிட்டன. அவற்றை தூர் எடுக்க வேண்டும். மெயின்டெனன்ஸ், ரிப்பேர் என்று மட்டும் செய்தால் பயன் ஒன்றும் இல்லை. எனவே ஏரிகளைத் தூர் எடுப்பதற்கு வழிவகை காணவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீரைப் பொறுத்தவரையில் தர்மபுரி ஜில்லா ஒரு Drought Prone Area. மழை வந்தால் தண்ணீர் இருக்கிறது, இல்லை என்றால் தண்ணீர் கிடைப்பதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் தண்ணீரை தர்மபுரி ஜில்லாவுக்குத் தரக்கூடிய ஒரு திட்டத்தைப் போட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்தத் திட்டத்தில் தர்மபுரி ஜில்லாவின் எல்லா பகுதிகளும், ஓசூர், தேன்கனிக்கோட்டை போன்றவையும் சேர்க்கப்படவில்லை என்று சொன்னார்கள். Hosur is an Industrial town and it is fast developing. அங்கே நிறைய இண்டஸ்ட்ரீஸ் வருகின்றன. அங்கே புளாரிகல்சர் எல்லாம் வருகிறது. அங்கே உள்ள தண்ணீரில் குளோரின் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். போர் வாட்டர் என்பதால் குளோரின் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படி குளோரின் இருப்பதால் அதிகப்படியான வியாதிகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதையும் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கெலவரப்பள்ளி அணைக்கட்டுத் திட்டத்தைப் பார்வையிட்டு, உடனடியாக தண்ணீர் தருவதாகச் சொன்னார்கள், அதை முடித்துவிட்டால் ஓசூருக்கு தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 மார்ச் 27] [திரு. பி. வெங்கடசாமி]

அடுத்து, ஓசூர் முனிசிபாலிட்டியில் இப்போது தண்ணீர் சரியாக இல்லை. சரியாக தண்ணீர் கிடைப்பதில்லை. அங்கே இண்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் இருக்கிறார்கள், தொழிலாளர்கள் இருக்கிறார்கள், பெரிய ஆட்கள் இருக்கிறார்கள். 5, 6 நாட்களாக எங்களுக்குத் தண்ணீர் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். கெலவரப்பள்ளியில் இப்போது கொஞ்சம் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னையிலே செய்வதுபோல், அதாவது ஆங்காங்கே 'சின்டெக்ஸ் டேங்குகள்' அமைத்து தண்ணீர் கொடுப்பதுபோல, ஓசூரிலும் அமைத்துக்கொடுத்தால், தண்ணீர் பிடிப்பதில் தகராறு வராது. தண்ணீரை லாரிகளில் எடுத்துக்கொண்டு போகும்போது, அங்கே பெண்கள் எல்லாம் நின்றுகொண்டு சண்டை போடுகிறார்கள். எனவே பெரிய சின்டெக்ஸ் தொட்டிகளை தெருக்களில் கட்டி தண்ணீர் ஊற்றினால் பிரச்சினை இருக்காது என்பதைத் தெரிவித்து, தயவு செய்து இதுபோன்ற சின்டெக்ஸ் தொட்டிகளை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது). இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

சூளகிரி பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில் அங்கே ரோடுகள் சரியாகப் போடப்படவில்லை. குறிப்பாகச் சொல்லப்போனால் அங்கே ரோடுகளே கிடையாது. பல 'கிராண்டுகள்' வருகின்றன. இருந்தாலும் பணம் போதவில்லை. எனவே அதற்கு ஏதாவது ஸ்பெஷல் கிராண்ட் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 'குவாலிட்டி ஆப் ஒர்க்' குறித்து அமைச்சர் சொன்னார்கள். இது மிகவும் முக்கியமானதாகும். ரோடுகளைப் போடும்போது மெல்லியதாக போடுகிறார்கள். மெல்லியதாக தார் போட்டுவிட்டு பணத்தை எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லுகிறார்கள். கடந்த கால ஆட்சியிலே எடுத்துவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். 8 எம்.எம். போடுவதற்கு பதிலாக 4 எம்.எம். என்று போட்டு ரிக்கார்டில் 8 எம்.எம். என்று போடுவதாகக் கூடச் சொன்னார்கள். இப்படியெல்லாம் முன்பு நடந்ததாகச் சொன்னார்கள். அதனால்தான் ஒரு ரோட்டும் சரியாக இல்லை. ஒரு ரோட்டிலேயும் போக முடியவில்லை. எல்லாம் குண்டும் குழியுமாகப் போய்விட்டன. எனவே, அவைகளையெல்லாம் கண்டிப்பாகச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலே எம்.எல்.ஏ.-க்களுக்கு ரூம் இல்லை. அதற்கு எம்.எல்.ஏ.-க்களிடம் கையெழுத்தெல்லாம் வாங்கி கடிதம் கொடுத்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒரு அலுவலகத்திற்குப் போய் உட்கார முடியவில்லையென்றால் வேலை என்னவாகும்? பிறகு என்ன மரியாதை இருக்கின்றது? அங்கு போய் உட்கார்ந்து என்ன வேலை நடக்கின்றது என்பதைப் பார்ப்பதற்கு ஒரு வசதி செய்து கொடுக்க வேண்டும். எனவே, தயவுசெய்து அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு இருந்தது, ஆனால் அது இப்போது இல்லையென்று சொல்வது சரியாக இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பஞ்சாயத்து யூனியனுக்கு போகக்கூடாது, போய்ப் பார்க்கக்கூடாது என்ற அளவிற்கு இருந்தால் அது சரியாக வராது. We will be deprived of our rights என்கிற மாதிரிதான் நினைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனவே, இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு, இந்த மானிய கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து, புதுக்கோட்டை உறுப்பினர் திரு. மாரி அய்யா.

**திரு. மாரி அய்யா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எங்கள் முதல்வர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, வணக்கம்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கு இணங்க, தங்களை நம்பிய தமிழக மக்களுக்கு, இந்தப் பொன்னான நிதிநிலை அறிக்கையை அளித்ததன் மூலம் தாழ்ந்த தமிழகத்தைத் தூக்கி நிறுத்தி இருக்கின்றீர்கள். அதற்காக நான் புதுக்கோட்டை மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நடந்து முடிந்த புதுக்கோட்டை சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில் கிடைத்த வெற்றியை மாண்புமிகு தலைவர், முதல்வர் அவர்களுக்குக் காணிக்கையாக்கி வணங்குகிறேன்.



புதுக்கோட்டை இடைத் தேர்தலில் வெற்றி, மாண்புமிகு முதல்வர் அவர்களின் நேர்மையான ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி. அதற்காகத் தொகுதி மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர், பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகரத் தந்தை, இளைஞர்களின் எழு-ஞாயிறு, போர்ப்படைத் தளபதி அவர்களுக்கும், தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தோழமைக் கட்சிகளின் அனைத்துத் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மலை குலைந்தாலும், நிலை குலையாத மாமன்னன், எங்கள் மாவட்டத் தளபதியும், இந்த மாமன்றத்தின் முன்னாள் அரசு ஏவுனருமான அஞ்சா நெஞ்சன் எங்கள் ஆருயிர் அண்ணன், அமரர் பெரியண்ணன் அவர்கள் நினைவிடம் நோக்கி வணங்கி, இந்த ஊராட்சி மானியக் கோரிக்கை மீது என் கன்னிப் பேச்சைத் தொடருகிறேன்.

"சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற வாக்கிற்கிணங்க, ஊராட்சித் தேர்தலை நடத்திய என் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து ராஜ் சட்டத்தில், ஊராட்சித் தேர்தல் முறையை, மாநில அரசாங்கம் விரும்பினால், மாற்றி அமைத்துத் தேர்தல் நடத்த விதியில் இடம் உள்ளது என்று சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளார்கள். நடந்து முடிந்த ஊராட்சித் தேர்தல் மூன்று அடுக்குத் தேர்தலாக நடந்து முடிந்துள்ளது. ஒன்று ஊராட்சி, இரண்டு ஊராட்சி ஒன்றியம், மூன்று மாவட்ட ஊராட்சிக் குழு. இந்த மூன்று அடுக்குத் தேர்தலை மாற்றி இரண்டு அடுக்கு முறையில் தேர்தல் நடைபெற உதவிட

வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில், பேரறிஞர் பெருந்தகை நம் இதய தெய்வம், அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்குக் கீழ் நான் அமர்ந்து இருப்பது எனக்கு பெருமகிழ்ச்சி தருகிறது. தமிழகத்தில் சில காலம் நம் அண்ணா பெயரைச் சொல்லி கட்சி நடத்தி, ஆட்சி நடத்தி, அரசியலைக் கொச்சைப்படுத்திய காலம் போய், இந்த நிதிநிலை அறிக்கையில் இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழும் கிராமங்களின் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் ஒரு கிராமத்தைத் தேர்வு செய்து அனைத்து நவீன வசதிகளும் கொண்ட ஒரு நவீன கிராமமாக அமைக்கிற திட்டத்திற்கு 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்கிற பெயரைத் தந்துள்ளார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்க சென்னைக்கு வந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் சென்றிருக்கிறார்கள் என்று கோட்டையில் உள்ள அதிகாரிகள் சொல்கிறார்கள். அமைச்சர் எங்கு இருக்கிறார்கள் என்று பார்த்தால், புதுக்கோட்டை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து, குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

கூட்டுக் குடியிருப்பு வேலைகள் மற்றும் சமூகக் கூடம், பள்ளிக்கூடம் ஆகிய பல வேலைகள் முந்தைய ஆட்சிக் காலத்தில், அந்த ஆட்சியாளர்கள் முன் பணம் பெற்றும் வேலைகள் நடைபெறவில்லை. அவற்றுக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல தடவை அதிகாரிகளை அழைத்துப்பேசி, அந்த வேலைகளை எல்லாம் என் தொகுதியில் முடித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைத் தந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மாமன்னரின் அரண்மனையை வாங்கித் தந்துள்ளீர்கள். மகளிர் கல்லூரி மறுவாழ்வு இல்லம் தந்துள்ளீர்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



பெரும்பாலான மாவட்டத் தலைநகரங்களில் பொறியியல் கல்லூரிகள் உள்ளன. அதுபோன்று புதுக்கோட்டைக்கு ஒரு பொறியியல் கல்லூரி தாருங்கள்.

அதோடு, தமிழகத்தில் பெரும் இசைப்புலமை பெற்ற இசைக் கலைஞர்களில் பெரும்பாலானோர் புதுக்கோட்டையில் வாழ்ந்துள்ளார்கள்.

1. தட்சிணாமூர்த்தி பிள்ளை, மிருதங்கம்; 2. மாமுண்டி பிள்ளை, கஞ்சிரா; 3. கலைமாமணி ரெங்கநாயகி அம்மான், மிருதங்கம்; 4. இராசகோபால் பிள்ளை, மிருதங்கம்; 5. கருப்பையா பிள்ளை, வயலின்; 6. ரெத்தினம் பிள்ளை, நாதஸ்வரம்; 7. திருமயம் இராமையா, தவில்; 8. ஆலங்குடி சுப்பிரமணி; 9. திருக்கோகர்ணம் கிருஷ்ணமூர்த்தி, கிளாரினெட்; 10. பி.யு. சின்னப்பா, இன்னும் ஐம்பதிற்கும் மேற்பட்ட இசைப் புலமை பெற்ற பெரும் இசைக் கலைஞர்கள் வாழ்ந்த புதுக்கோட்டைச் சீமைக்கு ஒரு இசைக் கல்லூரி வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையைத் தவிர வேறு எந்த ஊரிலும் கல்லூரி இல்லை. கந்தர்வக்கோட்டையில் ஒரு கலைக் கல்லூரி தந்து உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதே கோரிக்கையை இந்த அவையில் எடுத்துச் சொல்லிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு. என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கந்தர்வக்கோட்டை பெண்கள் உயர்நிலைப் பள்ளி தங்களின் பொற்காலமாம் 1989-இல் வழங்கப்பட்டது. அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கித் தாருங்கள்.

கந்தர்வக்கோட்டை மேல்நிலைப் பள்ளிக்கு பிற்பட்டோர் மாணவர் விடுதியும், மாணவியர் விடுதியும் தந்திடுங்கள்.

கூமாபுரம் உயர்நிலைப் பள்ளிக்கு மிகவும் பிற்பட்டோர் மாணவர் விடுதி ஒன்று தாருங்கள்.

வட்டத் தலைநகரமாய் இருக்கிற கந்தர்வக்கோட்டைக்கு ஒரு தொழிற் பயிற்சி நிலையம் — பாலிடெக்னிக்— தாருங்க்ள். தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறந்து தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வகை செய்திடுங்கள்.

[திரு. மாரி அய்யா] [1997 மார்ச் 27

தமிழகத்தின் பஞ்சாலைகளில் நம்பர் ஒன்றாக, நூல் தரத்தில் நம்பர் ஒன்றாக இருப்பது தஞ்சைப் பஞ்சாலை. அதற்குக் காரணம், நிலத்தடி நீரும் மண்ணின் தரமும் என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். தஞ்சையை ஒட்டிய கந்தர்வக்கோட்டைப் பகுதியில் நிலத்தடி நீரும், நல்ல மண் வளமும் உள்ளது. ஆகவே, கந்தர்வகோட்டை பகுதிக்கு ஒரு பஞ்சாலை தந்து உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான, பொது மக்களுக்குச் சொந்தமான முந்திரித் தோட்டங்கள் நிறைய உள்ளன. கோவாவில் முந்திரி பழச்சாறு தொழிற்சாலை உள்ளது போல புதுக்கோட்டையில் ஒரு முந்திரி பானம் (பழச்சாறு) தயாரிக்கின்ற தொழிற்சாலை அமைத்திட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிப் பகுதிக்கு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் வழங்குகிற எச்.ஐ.ஜி. — உயர் வருமானத் திட்டம் போன்று வட்ட வீட்டு வசதிச் சங்கங்களுக்கும், அந்த உயர் வருமானத் திட்டத்தை வழங்கிட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சென்ற நிதியாண்டில் சர்க்கரை ஆலை ஒன்று அறிவித்தீர்கள். மகிழ்ச்சி, நன்றி. அதேபோன்று நிலத்தடி நீரும், நல்ல தரமான நிலப்பாங்கும் உள்ள புதுக்கோட்டைத் தொகுதிக்கு மற்றுமொரு சர்க்கரை ஆலை தந்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையில் அனைத்துக் கிராமங்களுக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடம் அமைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டைத் தொகுதியில் பல கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் இல்லை. அதற்கான பட்டியலைத் தர இருக்கிறேன். அனைத்துக் கிராமங்களுக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடம் தந்திட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டைத் தொகுதியில், கூமாபுரத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், குளத்தூர் நாய்க்கர்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், தொண்டைமான் ஊரணியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் வழங்கிட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டைத் தொகுதி, தெத்துவாசல்பட்டியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், கூமாபுரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும் வழங்கிட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



1997 மார்ச் 27] [திரு. மாரி அய்யா]

மிகவும் பின்தங்கிய மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம். நிறைய குளங்கள், பாசன ஏரிகள் உள்ள மாவட்டம். வானத்தை நம்பியே விவசாயம் செய்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் அங்கே வாழ்கிறார்கள். வானம் பொய்க்கின்ற பொழுது விவசாயி பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிறான். ஏரி மேம்பாடு என்று சொல்கிறோம், சீரமைப்பு என்று சொல்கிறோம். என் தாழ்மையான வேண்டுகோள். நிலத்தடி நீர் உள்ள பகுதியில் உள்ள ஏரிகளில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து விவசாயிகளைக் காப்பாற்றிட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மறுவாழ்வு இல்லத்தில், அந்த இல்லம் அமைக்கப்பட்ட பொழுது ஊன்றிய இரும்பு மின் கம்பங்கள், இற்றுப்போகிற நிலையில் உள்ளன. அந்தக் கம்பங்களை மாற்றி, மறுவாழ்வு இல்லங்களில் வாழ்கிற மக்கள் பயமின்றி வாழ ஒளி கிடைத்திடச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

இராமச்சாலை திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை தொகுதியில் ஆதனக் கோட்டை—கீரனூர் சாலையில், கருப்புடையான்பட்டி விலக்கிலிருந்து பெரம்பூர் வரை சாலை அமைத்திடவும், கந்தர்வக்கோட்டை —செங்கிப்பட்டி சாலையில், வாண்டான்பட்டி விலக்குச் சாலை வழியாக மங்கனூர் கொப்பம்பட்டி வரை சாலை அமைத்திடவும், விராலிப்பட்டிச் சாலையிலிருந்து ஒத்தவீடு வழியாக தம்புராம்பட்டி வரை . சாலை அமைத்திடவும், கந்தர்வக்கோட்டை அம்புகோவில் சாலை கொல்லம்பட்டி விலக்கிலிருந்து கருப்பட்டிப்பட்டி, இடையப்பட்டி வழியாக துவார் வரை சாலை அமைத்திடவும் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இரண்டு பேருந்து வழித் தடங்கள் வழங்கிட அனுமதி தந்திருக்கிறீர்கள். அந்த வகையிலே கந்தர்வக்கோட்டை, கூமாபுரம், தச்சன்குறிச்சி, சமுத்திரப்பட்டி, புனல்குளம், முதுகுளம், நாயக்கர்பட்டி, ஆத்தங்கரைப்பட்டி வழியாக செல்லம்பட்டி வரை புதிய பேருந்து விடவும், அதேபோன்று கந்தர்வக்கோட்டை காட்டுநாவல் பெருஞ்சவன்னியம்பட்டி, களபிரம் தொண்டைமான் ஊரணி வரை புதிய பேருந்து விடவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, என்னுடைய வாழ்நாளில் நாங்கள் முதல்வராக இருக்கிற இந்த அவையில் நான் சட்டமன்ற உறுப்பினராக

[திரு. மாரி அய்யா] [1997 மார்ச் 27

இருப்பதை பெரும் பேறாகக் கருதுகிறேன். அதற்கெல்லாம் மேலாகத் தங்களோடு வாழ்வதையே பெருமையாகக் கருதுகிறேன். என் உயிர் உள்ள வரை என் சந்ததி உள்ள வரை உங்கள் வழியொற்றி நடப்பேன் என்று சொல்லி, எனக்கு இந்த ஊராட்சி மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பு அளித்த பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி வணங்கி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் கீழ், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நன்றி கூறி, எனது கருத்துக்களை இங்கே முன்வைக்க விரும்புகின்றேன். தமிழக அரசு கடந்த மே மாதம் பொறுப்பேற்றது. 9 மாதங்களுக்கு முன்னால், பதவியேற்ற பிறகு நான் ஆற்றிய கன்னிப் பேச்சிலே, என்னுடைய தொகுதியில் காவிரிக் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமும், கோரிக்கையாக எடுத்து வைத்தேன். அதற்குப் பின்னால் நடைபெற்ற உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது உரையாற்றும்போதும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் என்னுடைய கோரிக்கையை வலியுறுத்திப் பேசியிருக்கின்றேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது என்னுடைய கரூர் தீரன் சின்னமலை மாவட்டத்திற்கும் வருகை தந்தார்கள். வருகை தந்து சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துப் பேசினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் எம்டியும் வருகை தந்த நேரத்தில், அந்தத் திட்டத்திற்காக நிதியும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். கரூர் மாவட்டத்தில் பரமத்தி அருகாமையில் மரவபாளையம் என்ற ஊரில் காவிரிக் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு, கிணறு வெட்டுவதற்காக 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே,



1997 மார்ச் 27] [திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்]

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதனுடைய முதல் கட்டப் பணியைத் தொடங்குவதற்கு — ஏறத்தாழ என்னுடைய தொகுதியிலே கிராமப் பகுதிக்குட்பட்ட 564 கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தினுடைய முதற்கட்டப் பணிகளை தொடங்குவதற்கு — நீரேற்றுக் குழாய், மற்றும் நீரேற்று மையம் அமைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதனுடையத் தொடக்கப் பணிகள் இன்றையதினம் நிதானமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்காக இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திட்டமிட்டபடி 1981 ஆம் ஆண்டு, 5 மீட்டர் சுற்றளவுள்ள கிணறுகள் வெட்டுவதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கியிருந்தார்கள். ஆனால் இப்போது ரீ-எஸ்டிமேட் என்ற அளவில் 6 மீட்டர் சுற்றளவிற்கு மாற்றியமைப்பதற்கு, தற்போதைய விலை விவரப் பட்டியலை மாற்றியமைப்பதற்கு, குடிநீர் வடிகால் வாரியம் விவரம் கேட்டு அனுப்பியிருக்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இந்த விவரங்களை கேட்டிருக்கிறது என்ற செய்தியினை அறிகின்றேன். ஆகவே 1981 ஆம் ஆண்டினுடைய மக்கள் தொகை கணக்குப்படியுள்ள புள்ளி விவரங்களை, 1996 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கிற்கு ஒப்ப மாற்றியமைத்து, இதனை திருத்தி அமைத்து உடனடியாகப் பணிகளைத் தொடங்க வேண்டுமென்பதற்காக, மதிப்பீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாகவும் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய நிர்வாக இயக்குநர் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறியாளர்களிடத்திலும் அதனுடைய கணக்குகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள் தயாரிக்கப்படுகின்ற நிலையை தாமதப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1-10

என்னுடைய பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கு குடிநீர் வசதி மிகவும் சிரமமாக இருக்கின்றது. என்னுடைய பகுதியிலே எந்தப் பணிகள் செய்யப்படாவிட்டாலும், குடிநீர் தேவை அத்தியாவசியமாக இருக்கின்றது. 500 நிலத்தடி நீர் பின்தங்கிய நிலையிலே சென்று கொண்டிருக்கின்றது. 500 அடி அல்லது 600 அடி போர் வெல் போடப்பட்டும் அந்த இடங்களிலே

[திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்] [1997 மார்ச் 27

பொய்த்து இருக்கின்றது. சில இடங்களிலே போர் வெல் போட்டுக்கூட தண்ணீர் கிடைக்காமல் அல்லல்பட்டு அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, 500 அடி, 600 அடிக்கு போர் வெல்கள் போட்டு, அவை போடப்பட்ட இடங்களிலே தண்ணீர் இல்லாமல் இருந்தும், இன்றையதினம் அதற்குக்கூட பணம் செலுத்தி இருக்கின்றார்கள். இத்தகைய நிலை இருக்கின்ற காரணத்தினால் தயவுசெய்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்த நிதி ஆண்டிலே ஏறத்தாழ 250 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கின்ற நேரத்திலே என்னுடைய பகுதியான அரவக்குறிச்சி தொகுதிக்கு தயவுசெய்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக குறைந்த அளவு 30 கோடி ரூபாயாவது ஒதுக்கித் தர வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருத்திய மதிப்பீடு பெறுவதற்கு இன்னும் ஒரு மாத கால அவகாசம் ஆகலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பொறியாளர்களும் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். நேற்றையதினம் கூட அவர்களைச் சந்தித்து மானியக் கோரிக்கைமீது நான் அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துப் பேச இருக்கின்ற இந்தப் புள்ளிவிவரங்களைப் பெற்று வந்து இருக்கின்றேன். ஆகவே, அருள்கூர்ந்து நீங்கள் அதைத் திருத்தி அமைத்து—ஏறத்தாழ 32 கோடி ரூபாய் திட்டத்திலே தயாரிக்கப்பட்டு இருந்த மதிப்பீடு, இப்போது ஏறத்தாழ 60 கோடி ரூபாயை எட்டுகின்ற அளவிலே வந்து இருக்கின்றது என்ற கணக்கினை என்னிடத்திலே கொடுத்து இருக்கிறார்கள்—அந்த அடிப்படையிலே அந்த திட்டத்தைத் துரிதப்படுத்தி நடத்துவதற்காக தனி வட்டம் அமைக்கப்பட வேண்டும். இரண்டு நகரக் கோட்டங்கள் - பரமத்தி ஒன்றியம், அரவக்குறிச்சி ஒன்றியம் ஆகியவற்றை 2 கோட்டங்களாகப் பிரித்து செயல்பட்டால்தான் இந்த வேலையைத் துரிதமாக அதனுடைய பொறியாளர்கள் கவனிப்பதற்கு வசதியாகவும் வாய்ப்பாகவும் இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். துரிதப்படுத்தி போர்க்கால அடிப்படையிலே செயல்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே இப்போது புளோரைட் ஸ்கீம் என்ற திட்டத்திலே 142 கிராமங்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதற்காக ஏறத்தாழ 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கின்றார்கள். அந்தப் பணியைத் துவங்கிட செயல் வடிவம் கொடுத்து செயலாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்குரிய



1997 மார்ச் 27] [திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்]

தொகையினையும் இந்த நிதி ஆண்டிலே ஒதுக்கித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

என்னுடைய பகுதி, கரூர் மாவட்டத்தினுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளர் அண்ணன் பரமத்தி சண்முகம் அவர்களுடைய தொகுதி ஆகும். அவர்களுடைய தொகுதியில் இருக்கின்ற மக்கள், அவர் தொகுதிக்கு செல்கின்ற நேரத்தில் அவரைச் சூழ்ந்து கொள்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, அருள்கூர்ந்து, இந்த காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக இந்த நிதி ஆண்டிலே குறைந்தது 30 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தரவேண்டுமாய் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பள்ளப்பட்டி பேரூராட்சியில் சென்ற தேர்தல் நேரத்திலே தண்ணீர் இல்லாததால் கரூரிலிருந்து லாரி மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த நிலைதான் இந்தக் கோடை காலத்திலேயும் தொடங்கி இருக்கின்றது. பள்ளப்பட்டியிலே 15 போர் வெல்களும், அரவக்குறிச்சி பஞ்சாயத்தில் 15 போர் வெல்களும் போடப்பட்டு இருக்கின்றன. அவற்றிற்கு இன்னும் ஃபிட்டிங்ஸ் மாட்டப்படவில்லை. 5 ஃபிட்டிங்ஸ் மட்டும் மாட்டப்பட்டு இருக்கின்றன. இன்னும் அவ்விடங்களில் 10, 10 ஃபிட்டிங்ஸ் மாட்டப்பட வேண்டிய நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று, பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டத்திற்காக 1972 ஆம் ஆண்டு அரசாங்கக் கடனாக 6 கோடியே 6 லட்சத்து 87 ஆயிரத்து 600 ரூபாய் பெற்று இருக்கின்றார்கள். எல்.ஐ.சி. மூலமாக 1 கோடியே 89 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் கடன் பெற்று இருக்கின்றார்கள். கடன் பெறப்பட்ட தொகை 2 கோடியே 5 லட்சத்து 83 ஆயிரத்து 600 ரூபாய் ஆகும். அதற்கு அசலாக 1,75,260 ரூபாயும், வட்டியாக 1,11,03,048 ரூபாயும், இதுவரை 1,27,87,311 ரூபாய் செலுத்தி இருக்கின்றார்கள். ஆகவே, இன்னும் செலுத்த வேண்டிய தொகை 1,97,853 ரூபாய் அசலாகவும், வட்டியாக 1,08,87,256 ரூபாயும் ஆக 3,80,04,309 ரூபாய் செலுத்த வேண்டிய நிலையிலே இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, அரசிடம் இருந்து பெறப்பட்ட அந்தக் கடன் தொகையை ரத்து செய்து, எல்.ஐ.சி. மூலமாக பெறப்பட்ட தொகையை

மட்டும் கட்டுவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். வரி வசூலிக்கின்ற தொகை முழுவதும் ஏறத்தாழ இந்த கடனுக்காக, தண்ணீர் திட்டத்திற்காக செலுத்துகின்ற காரணத்தால், பள்ளப்பட்டியினுடைய முன்னேற்றத்திற்கு, சாலை வசதி, சாக்கடை வசதி, தெரு விளக்கு வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுபபதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று அரவக்குறிச்சி பேரூராட்சியைப் பொறுத்தவரை, அதை நாம் எடுத்துக் கொள்வோமேயானால், அங்கேயும் இதுபோன்ற குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்றது. அங்கேயிருக்கின்ற பைப் லைன்களை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீட்டில் இருந்து 5 லட்ச ரூபாய் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், மூன்று லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்வதாக மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே உங்களுடைய நிதியிலிருந்து மேலும் 3 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்தால் அரவக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பகுதி மக்களுக்கு தண்ணீர் வழங்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே போடப்பட்டிருக்கிற வாட்டர் பம்புகளின் தரைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, அந்த கிராம மக்களுக்கும் தண்ணீர் வழங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று ஊராட்சிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்ற இடங்களில், அந்தப் பகுதியில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வீடுகளைக் கட்டுவதில் கான்ட்ராக்டர்கள் காலதாமதம் செய்கிறார்கள். அவர்களுக்கு உரிய முறையில் அந்த வீடுகளை விரைவாகக் கட்டித்தர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

நகராட்சிகளில், ஊராட்சிகளில் பணிபுரிபவர்கள் இறந்துவிட்டால் உரிய உதவித் தொகை வழங்குவதில் அந்த அலுவலகத்தில் உள்ளவர்களே காலதாமதம் செய்கிறார்கள். அதைத் துரிதப்படுத்தி, இறந்தவர்களுக்கான குடும்ப உதவி நிதியை உடனே வழங்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதோடு அவர்கள் குடும்பத்துக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியத் தொகையையும் தொடர்ந்து விரைவில் வழங்கிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இறந்துவிட்டவர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பை



அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இந்த உள்ளாட்சி நிதியில் இருந்து அவர்களுக்கு அந்த உதவியை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துப்புரவுப் பணியாளர்கள் ஒவ்வொரு பேரூராட்சியிலும் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களை எம்ப்ளாய்மெண்ட் அலுவலகம் மூலம் எடுக்க வேண்டுமென்று விதி இருந்தாலும் தற்காலிக அடிப்படையில் இறந்தவர்களின் வாரிசுகளை வேலைக்கு எடுத்தால் துப்புரவுப் பணிகள் தொய்வில்லாமல் நடைபெறும். இதன் காரணமாக இப்போது எல்லா ஊராட்சிப் பகுதிகளிலும் நகராட்சிப் பகுதிகளிலும் தெருக் குப்பைகள் எடுப்பதற்கு போதிய ஆட்கள் இல்லாமல் இருக்கிறது. தெருக் குப்பைகளைச் சுத்தம் செய்ய போதிய ஆட்கள் இல்லாத காரணத்தால் இதைச் செய்ய முடியாமல் தாமதம் ஏற்படுகிறது. பள்ளப்பட்டி. அரவக்குறிச்சி போன்ற பகுதிகளில் குப்பைகளை வார மினி டிராக்டர்கள் வாங்குவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
(மணியடிக்கப்பெற்றது)

சின்னதாராபுரத்தை பேரூராட்சியாகவும், பள்ளப்பட்டி, அரவக்குறிச்சியை நகராட்சிகளாகவும் ஆக்கிட பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். க. பரமத்தி நகராட்சிக்குச் சொந்தமான சமுதாயக் கூடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு மதிப்பீடு அதிகமானதாகக் கூறி அந்தக் காண்ட்ராக்டர் இப்போது ரூப் மட்டத்தில் அப்படியே நிறுத்திவிட்டார். முதலில் மதிப்பீடு 2½ லட்சம் ரூபாய் ஆனது. ஆனால் அதற்குப் பிறகு 3 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்கிறார்கள். ரூப் மட்டத்தில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.
(மணியடிக்கப்பெற்றது) ஒன்றிய ஆணையாளரிடத்திலே...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சமுதாயக் கூடம் கட்டுவதில் என்னென்ன முறைகேடுகள் இருந்தன, எப்படியெல்லாம் துவங்கப்பட்டது என்பது உறுப்பினருக்குத் தெரியுமா? எதனால் நிற்கிறது என்ற விவரமாவது யாராவது சொன்னார்களா?

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** அமைச்சர் அவர்கள் கேட்டதற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த விவரமாக இருந்தாலும் விரைவில் சொல்லி முடிக்க வேண்டும்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** நான் நேரில் பார்த்துத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதை நேரிலும் அவர்களிடம் சொல்லலாம்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** நல்லது ஐயா. நேரிலேயே கொடுக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று நானும் சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். 5 லட்சம் வாக்காளர்களை உள்ளடக்கிய தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அங்குள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் செல்கின்ற நேரத்தில், அங்கே கோரிக்கைகளைக் கேட்கச் செல்கின்ற நேரத்தில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒன்றியத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள் போன்றவர்கள் உட்கார்ந்து கொண்டு அந்த இடங்களை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே உட்காருவதற்கு இட வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதை ஒதுக்கீடு செய்து தரவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றிய அளவில் உதவியாளர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். அந்த அலுவலகத்தில் தொலைபேசி வசதி செய்து தரவேண்டும். மேலும் ஐ.ஆர்.டி.பி. கடனுதவி மூலம் கட்டப்படும் கூட்டுக் குடியிருப்புகளை ஒதுக்குவதிலும் சட்டமன்ற உறுப்பினர்களை கலந்தாலோசிக்காமல் மன்றத்தின் உறுப்பினர்களும் தலைவருமே சேர்ந்து முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினரையும் கலந்து முடிவெடுப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம். (குறுக்கீடு) நான் இரண்டு தடவைதான் சொல்வேன். மூன்றாவது தடவையும் உட்காராவிட்டால் வேறு உறுப்பினரைக் கூப்பிட்டுவிடுவேன்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** நன்றி கூறிக்கொள்கிறேன் என்று சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொன்னதாக எழுதிவிடுவார்கள். உட்காருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம்.



பிற்பகல் 1-20

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கல், நகராட்சி மற்றும் ஊரக வளர்ச்சி குறித்த மானியக் கோரிக்கையில் பேச அனுமதியளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில், குடிநீர் வழங்கல். முதலில் என்னுடைய தொகுதியான ராசிபுரம் தொகுதியில் நடைபெற்று வரும் பூலாம்பட்டி - ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவாக நடத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மோகனூர், பட்டணம், சிராப்பள்ளி, ஆர். புதுப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை ஆகிய சேலம் மாவட்டத்திலுள்ள 9 ஒன்றியங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், ராசிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வழியோர கிராமங்களை இணைப்பது குறித்து கடந்த மூன்று ஆண்டுகளாக ஆய்வுப் பணியிலே இருக்கின்ற, அந்த மோகனூர்-பட்டணம் - சிராப்பள்ளி குடிநீர்த் திட்டங்களின் ஆய்வை விரைவிலே முடித்து, அந்தப் பணியை விரைவிலே தொடங்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ராசிபுரம் நகராட்சியில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் லாரிகளின் மூலமாக குடிநீர் விநியோகம் பண்ணுவதற்கு நிதியுதவி அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த முறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்னும் 5 ஆண்டு காலத்திலே குடிநீர் இல்லாத கிராமங்களே இல்லாமல் ஆக்குவோம் என்று கூறியிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மத்திய அரசினுடைய திட்டக்குழு உறுப்பினர் அவர்கள் சமீபத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கின்றார்கள். அதாவது, தமிழகத்தில் 8 மாவட்டங்களில், குறிப்பாக தென் மாவட்டங்களில் நிலத்தடி நீரினுடைய ஆழம் மிகவும் கீழே சென்றுவிட்டது. ஒரு கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைத் தமிழகம் எதிர்நோக்க இருக்கின்றது. குறிப்பாகத் தென் மாவட்டங்களில், 8 மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று திட்டக்

குழுவினுடைய உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி அந்த 8 மாவட்டங்களினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்

அடுத்து. ஊரகக் குடிநீர் வழங்கல் (ஆர்.டபிள்யூ.எஸ்.) கொள்கைக் குறிப்பின் பக்கம் 16. 17-ல் இந்தத் திட்டத்தின்கீழ் பணிகளை எடுத்துக் கொள்வதற்காக 1989-90 ஆம் ஆண்டுகளிலிருந்து ஒவ்வோராண்டும் அரசு இணை மானியம் அல்லாத மானியமாக (நான்-மேச்சிங் கிராண்ட்) ரூபாய் ஒரு கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது என்றும் 1996-97. மற்றும் 1997-98 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களிலும் ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளதென்றும் நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். 1989-90 ஆம் ஆண்டுக்கும் ஒரு கோடி ரூபாய், 1996-97 ஆம் ஆண்டிற்கும் ஒரு கோடி ரூபாயா? இதை நீங்கள் சிந்தித்துப் பார்த்து அதற்கு அதிக தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கைக் குறிப்பில் பக்கம் 18-ல் புதிய ஆழ்துளைக் கருவிகளை இந்த நிதியாண்டில் ரூபாய் 7.85 கோடிக்கு; 12 கடினப்பாறை ஆழ்துளைக் கருவிகளை வாங்குவதற்காகவும், 10 படிமப் பாறை ஆழ்துளைக் கருவிகளை வாங்குவதற்காகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வருகின்றேன். அதாவது 'ரிக்ஸ்' என்று கூறுவார்கள். இந்த ரிக்ஸைப் பொறுத்தவரையில், நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்திலே இருக்கின்ற ஆழ்துளை இயந்திரங்கள் எல்லாம் பழுதாகிவிட்டன என்று கூறியிருக்கின்றீர்கள். அதேநேரத்தில் புதிதாக வாங்கக்கூடிய ஆழ்துளை இயந்திரங்கள் நவீனமயமானதாக வாங்கவேண்டும். ஏனென்றால், நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்ட காரணத்தினால், தற்போதெல்லாம் 'ஆட்டோமேட்டிக் சிஸ்டம்' என்றுகூட வந்திருக்கிறது. அதிலே எனக்கு அனுபவம் உண்டு என்ற காரணத்தினால் உங்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது நவீனக் கருவிகள் என்னும்பொழுது, நீங்கள் கிட்டத்தட்ட 600 அடி அல்லது 700 அடி ஆழம் செல்வதற்குண்டான அந்தக் கருவிகளை வாங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கைப்பம்புகளைப் பொறுத்தவரையில், தற்போது போர்வெல் போட்டு எவ்வளவுதான் தண்ணீர் வந்தாலும், அந்தக் கைப்பம்புகளை ரிப்பேர்



செய்வதிலே இருக்கின்ற சில பிரச்சினைகளை உங்களிடம் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது. ஒன்றியத்திலே இருக்கின்ற 'ஹேண்ட் பம்ப்' ரிப்பேர் செய்யும் 'பிட்டர்ஸ்' சரியாக வேலை செய்யாத காரணத்தினால் அந்த வேலைகள் தடைபட்டிருக்கின்றன. மேலும் நாங்களெல்லாம் மஹாராஷ்டிரா மாநிலம் சென்று அங்கு இந்த குடிநீர்ப் பிரச்சினை பற்றி ஆய்வு செய்தபோதுகூட மஹாராஷ்டிரா மாநிலத்திலே. அந்த 'ஹேண்ட் பம்ப் பிட்டர்ஸ்' ஆகிய அவர்களுக்கென்று தனியாக ஒரு ஜீப்பைக் கொடுத்து எந்த நேரத்திலும் அவர்கள் செல்லலாம் என்ற வசதி இருக்கின்றது. தற்போதைய நிதிநிலையைக் கருத்தில்கொண்டு நீங்கள் ஒரு ஜீப்பை வழங்க முடியவில்லை என்றாலும், ஒரு மோட்டார் சைக்கிளையாவது அவர்களுக்கு வழங்கினீர்களேயானால் அந்தப் பணிகள் விரைவாக முடியும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-25

பேரூராட்சிகளில் இன்று ஹேண்ட் பம்ப் ரிப்பேர் அதிகமாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் இருப்பவர்கள் பேரூராட்சிகளுக்குச் செல்ல காலதாமதம் ஆகிற காரணத்தால் இந்த வேலையெல்லாம் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு பேரூராட்சிக்கு ஒரு ஹேண்ட் பம்ப் ரிப்பேர் செய்பவர் என்று செய்யக்கூடிய நிலைமை இல்லாமலிருந்தால்கூட ஒரு சட்டமன்றத் தொகுதியில் இருக்கிற 3, 4 அல்லது 5, 6 பேரூராட்சிகளுக்கு நீங்கள் ஒரு ஹேண்ட் பம்ப் ரிப்பேர் செய்பவரை அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சியைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியில் இருக்கிற பிரச்சினையைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இராசிபுரம் நகரமானது நெரிசல் மிகுந்த பகுதி. அந்த இராசிபுரம் நகரத்தில் போக்குவரத்து எல்லாம் மிக இடைஞ்சலாகச் சென்று கொண்டிருக்கிற காரணத்தால் அங்கே ஒரு புதிய பை-பாஸ் ரோடு அமைப்பதற்கு 2, 3 வருடங்களுக்கு முன்பு ஆய்வு செய்யப்பட்டு அது நகராட்சியின் மேற்பார்வையில் இருந்தது. அவைகளுக்கு நிதிவசதி இல்லையென்ற காரணத்தால் அந்த பை-பாஸ் ரோடு திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராசிபுரம் பகுதியில் ஆண்டகளூர்கேட் என்ற இடத்தில் புதிய பஸ் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் என்.எச்.7-ல் அந்த ஆண்டகளூர்கேட் இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு

நாளைக்கு தென் மாவட்டங்களிலிருந்தும், வட மாவட்டங்களிலிருந்தும் 200 பஸ்கள், 300 பஸ்கள் அந்த வழியே சென்றாலும் ஒரு பஸ் கூட இராசிபுரம் நகரத்திற்குள்ளாக வந்து செல்லாத காரணத்தால், அந்த மெயின் பாதையில் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த இடத்தில் 7 ஏக்கர் நிலம், அதாவது கால்நடை மருந்தகத்திற்கு ஒரு இடமும், கோழி வளர்ச்சி ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒரு இடமும், அரசினர் கலைக் கல்லூரிக்கு என்று ஒதுக்கப்பட்ட இடம் 3 ஏக்கர், எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 7 ஏக்கர் நிலம் அங்கே இருக்கிறது. அந்த ஆய்வு நிலையங்களை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அந்த இடத்தில் பஸ் நிலையம் அமைத்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் இந்த ஆண்டுகூட 10 நகராட்சிகளுக்கு கிட்டத்தட்ட ரூ. 6.72 கோடி ஒதுக்கியிருப்பதை தங்கள் .கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அடுத்த ஆண்டு இராசிபுரம் நகராட்சிக்கு புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கு நீங்கள் நிதி வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்ற அமைப்பைப் பொறுத்தவரையில் அவைகளுக்கு தேவையானது அதிகாரமும் நிதிவசதியும் தான். காந்தி கண்ட கனவை நிறைவேற்ற வேண்டுமென்றால் அவைகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும். சென்ற கூட்டத் தொடரின்போது அந்த சட்ட மசோதாவை மாற்றியமைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள், பலரும் பேசினோம். அப்போது பேசியபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட கூறினார்கள். அதாவது தற்போது இந்தப் பிரச்சினையை பேச வேண்டாம், அதிலே சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அந்த மசோதாவை மாற்றினால் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று விடுவார்கள். ஆகவே, தேர்தல் நடப்பதற்கு காலதாமதம் ஆகும். தேர்தல் நடந்ததற்குப் பிறகு அதை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அந்தச் சட்ட மசோதா பற்றி இதிலே ஏதாவது சேர்த்து இருக்கிறீர்களா, செய்ய இருக்கிறீர்களா என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதிலே முக்கியமானவைகள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அடுத்தது ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி வேண்டும். ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாவட்ட பஞ்சாயத்து கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி வேண்டும். ஊராட்சி ஒன்றிய கவுன்சில் வார்டு உறுப்பினர் — அதாவது 5,000-க்கு ஒரு நபர் என்று



தேர்ந்தெடுக்கிறோமே அந்த அமைப்பே தேவையில்லாத ஒன்று. இதை குறிப்பாக 4, 5 ஆக நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் கூட்டப்பட வேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றங்களை எல்லாம் நாம் தற்போது நீக்கி இருக்கிறோம். மாவட்ட வளர்ச்சி மன்றங்களைக் கூட்டுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பஞ்சாயத்திலே தலைவருக்கு என்ன அதிகாரம், 5,000 பேர்களுக்குள்ள கவுன்சிலர்களுக்கு என்ன அதிகாரம் என்று அந்த இருவருக்கும் இடையே சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து உதவியாளர்களுக்கு வேலை பளு அதிகம். சென்ற ஆண்டு 250 ரூபாய் அதிகப்படுத்திக் கொடுத்தீர்கள். 650 ரூபாய் என்பதை பேசிக்காக வைக்க வேண்டும் அல்லது 1,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளில் பணிபுரிகிற தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும். பேரூராட்சிகளில் அதிகப்படியாக துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல ஊராட்சி. மன்றத்திலே இருக்கின்ற துப்புரவுப் பணியாளர்களுக்கு. சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக, இன்னும் ஒன்றே ஒன்று. ஊரக வளர்ச்சித் துறையிலே பெரிய பிரச்சினையே குரூப் ஹவுஸிங்தான். குரூப் ஹவுஸிங்கைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு ஒரு வீட்டுக்கு 27 ஆயிரம் ரூபாயென்று நீங்கள் உயர்த்தி கொடுத்திருக்கிறீர்கள். 27 ஆயிரம் ரூபாயும் தற்போது போதவில்லையென்பதால் குரூப் ஹவுஸ் கட்டும் வேலைகள் எல்லாம் தேங்கியிருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் 27 ஆயிரம் ரூபாயென்று சென்ற முறை உயர்த்தியதை சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பல வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய வெள்ளந்துறை ஒன்றியத்தில் வேலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டும், ஆரம்பிக்க முடியாத சூழ்நிலைதான் இருக்கிறதென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-30

கடந்த 9-8-1996 அன்று இந்த மாமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போது இந்த வேலைகளெல்லாம் தங்கு தடையின்றி நடக்க வேண்டுமென்பதற்காக 'அடிஷனல் இன்ஜினியர்' பதவிகள் உருவாக்கப்படுமென்று கூறினார்கள். ஆனால் பிப்ரவரி மாதம் தான் அவர்களெல்லாம் பணிக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) இரண்டு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடமா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கிட்டத்தட்ட 384 ஒன்றியங்களில் 200 ஒன்றியங்களுக்குத்தான் அவர்கள் பணியிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பல இன்ஜினியர்கள் வேலைக்கு வரவில்லையென்றும், பலர் விடுப்புப் போட்டு சென்றுவிட்டார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். ஆகவே உடனடியாக அவர்கள் வராவிட்டாலும் நாங்கள் தயாராக வேலைக்கு வருகிறோம் என்று வேளாண் பொறியியல் பட்டதாரிகள் சங்கம் (அக்ரிகல்சுரல் இன்ஜினியர்ஸ்) கூறியிருக்கிறது. ஆகவே நீங்கள் அவர்களை வேலையில் அமர்த்தி இந்தப் பணிகள் விரைவாக நடக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடித்து விடுகிறேன். 1995 ஆம் ஆண்டு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எத்தனை பக்கம் புரட்டப் போகிறீர்கள்? முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 1995 ஆம் ஆண்டு எங்களுடைய ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சித் துறையில் பணிபுரிகின்ற பல்வேறு மட்டங்களில் இருக்கின்ற துறையினுடைய ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று கோட்ட வருவாய் அலுவலகத்தில் துணை வட்டாட்சியர் பதவிகள் வட்டாட்சியர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளதென்றும், அதேபோல் ஊரக வளர்ச்சித் துறையில் தற்போது பணிபுரியும் அனைத்து விரிவாக்க அலுவலர்களையும், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்கு உயர்த்த வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்தார்கள். அது இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. ஆகவே நீங்கள் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு இறுதியாக ஒன்றே ஒன்று. நம்முடைய பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் கட்டிடம் கட்டும்போது பொதுப்பணித் துறைக்கு கொடுக்கின்ற எஸ்டிமேட் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபாய் என்றும் அதே தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு



கொடுக்கும்போது ஒரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் ரூபாய் என்றும் இருக்கின்ற காரணத்தினால் அந்த டிசைனை - ஒரு சில டிசைன்கள்தான் - மாற்றியிருக்கின்ற காரணத்தினால் அந்தப் பள்ளிக்கூடங்கள் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. ஆகவே அதையும் உயர்த்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு இடைவேளை. மீண்டும் 2 மணி 30 நிமிடத்திற்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 1.33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 2-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் பிற்பகல் 2.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம் தொடர்கின்றது. திரு. வி. ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்து கொண்டு, பேசுகிற வாய்ப்பை எனக்குக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தங்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய்க் கணக்கில் மானியமாக ரூ. 646 கோடியிலிருந்து 1997-98-ஆம் வருடத்திற்கு 1,174 கோடியாக அதிக நிதி ஒதுக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழக மக்கள் எல்லோரும் பாராட்டைத் தெரிவிக்கிறார்கள். மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல், பொது வினியோகம், சாலைகள், தகவல் தொடர்பு, கதர்த் தொழில்கள், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி, நூலகங்கள், ஊரக மின் வசதி, நவீன எரிசக்தி போன்ற துறைகளின் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் உரிய பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கியதை மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

மேலும் உள்ளாட்சிகளுக்கு கேளிக்கை வரியிலிருந்து 60 சதவீதம் வழங்கியதை நமது முதல்வர் அவர்கள் 90 சதவீதமாக உயர்த்திக்

கொடுத்திருப்பதை அனைவரும் பாராட்டுகிறார்கள். அதேபோல் அரசு நிர்வாகத்தில் எடுக்கும் முடிவுகள், தகவல்களை பொதுமக்கள் எளிமையாக உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில், தகவல் பெறும் உரிமைச் சட்டம் கொண்டு வருவதை சிறந்த திட்டம் என்று பாராட்டு தெரிவிக்கிறார்கள்.

அதேபோல் இந்த ஆண்டு ஒரு இலட்சம் தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுக்க இருப்பதற்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் வருடந்தோறும் ஒவ்வொரு தொகுதியில் உள்ள வசதியற்ற, எந்த மேம்பாடும் இல்லாத ஒரு கிராமத்தைத் தத்து எடுத்து, அத்தகைய கிராமத்தை மேம்படுத்துகின்ற அந்தத் திட்டமும் அனைவராலும் பாராட்டப்படக்கூடிய திட்டமாக உள்ளது.

1989-ஆம் ஆண்டு கழக அரசால் நியமனம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்கள் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியால் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால் தாய் உள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் 35 ஆயிரம் பேர்களை, மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்க ஆணையிட்டு அவர்கள் வீட்டில் விளக்கேற்றி வைத்தார்கள்.

குடியாத்தம் நகராட்சி சுமார் 110 வருடங்கள் அனுபவம் மிக்க முதல்தர நகராட்சியாக உள்ளது. இருந்தாலும் இன்னும் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாத நகராட்சியாக அது உள்ளது. இப்போது நகராட்சி மூலம், போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்பு இடங்களை அகற்றி - நகரத்தின் மைய இடமான குளக்கரைப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புப் பகுதிகளையும் அகற்றி - சுமார் 10 ஏக்கர் நிலத்தை அந்த நகராட்சி கைப்பற்றி உள்ளது. அந்த இடத்தில் வணிக வளாகம் ஒன்றைக் கட்டினால் நகராட்சிக்கு அதிக வருமானம் வர வாய்ப்புள்ளது. எனவே, குடியாத்தம் நகராட்சிக்கு அதிக நிதி உதவி அளித்து - அதை மானியமாகவோ அல்லது கடனாகவோ அளித்து - குடியாத்தம் நகராட்சிக்கு என்று வணிக வளாகம் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் பெருமுயற்சியினால், மோர்தானா அணைக்கட்டுத் திட்டம் முடியும் தருவாயில் உள்ளதால், மோர்தானா அணையிலிருந்து குடியாத்தம் தொகுதிக்கு குடிநீர் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல், குடியாத்தம் தர்ணாம்பேட்டை பகுதி பெரும்பாலும் இஸ்லாமியக் குடும்பங்கள் வாழும் பகுதியாகும். அப்பகுதி மக்கள் சுமார் 30 வருடகாலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 4.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் செயல் வடிவத் திட்டத்தில் உள்ளதை விரைவில் முடித்துக் கொடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரசு முடிவு எடுத்துள்ள குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டத்தில் குடியாத்தம் தொகுதியில் உள்ள வள்ளலார் நகர், காளியம்மன்பட்டி, எத்தாங்கல்புதூர், கல்லூர் புதுமனை, முனாப் டிப்போ, பார்வதியாபுரம், அனுப்பகிராமம் ஆகிய கிராமங்களையும் இந்த ஆண்டிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் வேலைகளைத் துரிதப்படுத்த, ஒன்றியத்திற்கு புதியதாக கூடுதலாக ஒன்றியப் பொறியாளர் நியமனம் செய்வதை வரவேற்கிறேன். ஆனால் அந்தப் பணி செம்மையாக நடைபெற உதவி கோட்டப் பொறியாளர்கள் தற்சமயம் 8 அல்லது 10 ஒன்றியங்களுக்கு ஒருவரே உள்ளதால் கூடுதலாக உதவி கோட்டப் பொறியாளர்களை நியமனம் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-35

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு குடியாத்தம் மக்கள் சார்பாக ஒரு அன்பான வேண்டுகோளை வைக்கின்றேன். குடியாத்தம் நகராட்சி 110 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட முதல் தர நகராட்சியாக இருந்தும், மின் துறை இலாக்கா, குடியாத்தம் நகரை கிராமப்புறப் பகுதியாக அறிவித்திருப்பதால் குறைந்த அழுத்தம் காரணமாக அடிக்கடி முன்னறிவிப்பு இல்லாமல் மின்சாரம் நின்று விடுகிறது. இப்போது படிக்கின்ற மாணவர்கள் தேர்வு எழுதுகின்ற காலமாக இருப்பதாலும், பொதுமக்களுக்கும் சிரமம் இருப்பதாலும் அதை அர்பன் பகுதியாக அறிவித்து, பள்ளி மாணவர்களும் பொதுமக்களும் பயன்பெறும் வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று குடியாத்தம் மக்கள் பயன்பெறும் வகையில் [illegible] நிலை நீதிமன்றம் ஒன்றும் இந்த ஆண்டிலேயே [illegible]

முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம்
பகுதியில் எங்களுடைய தொகுதியைச் சார்ந்த பேரணாம்பட்டு சிறப்பு
நிலை பேரூராட்சியில் மொத்தம் 50,000 மக்கள் வசிக்கின்றார்கள்.
இந்தக் கோரிக்கை, அப்பகுதியின் நீண்டநாள் கோரிக்கையாகும்.

அதேபோல் பஞ்சாயத்துக்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக
தினக்கூலிகளாகப் பணியாற்றும் பணியாளர்களை நிரந்தரம்
செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளாட்சி
மன்றத்தில் முழு உரிமையும் கொடுக்கப்பட்டு, கூட்டத்தில்
கலந்துகொண்டு கருத்துக்களைக் கூறுவதற்கு உரிமை வழங்கப்பட்டது
போன்று உரிமை வழங்க வேண்டுமென்றும், தொகுதியைச் சுற்றிப்
பார்ப்பதற்கும், குறைகளை அறிந்துகொள்வதற்கும், எங்களுக்கு ஊராட்சி
ஜீப்புக்களைப் பயன்படுத்துவதற்கு உரிமை வழங்க வேண்டுமென்றும்
அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சத்துணவு, சிறுசேமிப்பு, தாட்கோ, சமூகக்காடுகள்
போன்ற மாவட்ட அளவிலான பொறுப்புகளுக்கு உள்ளாட்சி
அலுவலர்களை. பதவி உயர்வு கொடுத்து, பணியில் அமர்த்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஓய்வு பெறுவதற்கு 6 மாதத்திற்கு
முன்பே தணிக்கைத் தடைகள் நீக்கப்பட்டு, ஓய்வுபெற அனுமதி
வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சி
உதவியாளர்கள் பதவிக்குப் பின் துணை வட்டார வளர்ச்சி அதிகாரி
எனப் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
வருவாய்த் துறையில் உதவியாளர்களுக்குப் பின் துணை தாசில்தார்
என்ற பதவி உயர்வு பெற வகை செய்யப்பட்டுள்ளதுபோல இவர்களுக்கும்
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாட்டில் மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்களை
இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் குடியாத்தம் பகுதியிலே குடிதண்ணீர்ப் பிரச்சினை
மிகவும் கடுமையாக உள்ளதால் அந்தப் பகுதிக்கு ஒரு கூட்டுக் குடிநீர்த்
திட்டத்தை, மோர்தானா திட்டம் மூலம் அமைத்துக் கொடுக்க
அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.



குடியாத்தம் நகராட்சியில் ஆக்கிரமிப்புகளை அகற்றிய பகுதிகளை
அமைச்சரவர்கள் ஒருமுறை நேரில் வந்து அந்தப் பகுதிகளைப்
பார்வையிட்டு, அந்தப் பகுதியிலே வணிக வளாகம் கட்ட
அமைச்சரவர்கள் ஆணையிட்டு, அதற்கு அதிக நிதியை ஒதுக்கிக் கொடுக்க
வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அரசு நிர்வாகத்தில் எடுக்கும் முடிவுகளையும்,
தகவல்களையும் பொதுமக்கள் எளிமையாக உடனுக்குடன் தெரிந்து
கொள்ளும் வகையில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைக்
கொண்டுவந்ததையும், எங்களது மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.
இந்த ஆண்டு ஒரு லட்சம் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க
கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே
இருப்பதையும் மக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே
குடியாத்தம் தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த்
திட்டத்தையும் மற்றும் நகராட்சி அபிவிருத்தித் திட்டத்தையும்
செயல்படுத்தவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொண்டு,
முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
உள்ளாட்சி மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த
தங்களுக்கு எங்களது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பாகவும்,
எனது தாரமங்கலம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும்
உங்களுக்கு நன்றிகூற கடமைப்பட்டிருக்கிறேன்.

மலடியாக இருந்த பெண் பல ஆண்டுகளுக்குப் பிறகு அழகான
ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றெடுத்தால் எப்படி அகமகிழ்வாளோ,
அதைப்போலவே இன்றைக்கு பல்லாண்டுகளாக நடைபெறாமல் இருந்த
உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ளதற்கு நாட்டு மக்கள்
நம்முடைய ஜனநாயகக் காவலர், மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்களைப் பாராட்டி, போற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த
உள்ளாட்சிக் குழந்தையைப் பாராட்டி, சீராட்டி வளர்ப்பது போல்,
உரிய நிதியையும் வழங்கி, அதிகாரத்தையும் அந்த உள்ளாட்சிக்கு
வழங்கினால் மக்கள் மேலும் தமிழக முதல்வரைப் பாராட்டுவார்கள்
என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ப. கோவிந்தன்] [1997 மார்ச் 27

எனது தாரமங்கலம் தொகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக பருவ மழை பெய்யவில்லை. எனவே, கடும் வறட்சி நிலவுகிறது. ஆகவே, எனது தொகுதிக்குட்பட்ட தாரமங்கலம், மேச்சேரி மற்றும் ஓமலூர் ஊராட்சி ஒன்றியங்களை வறட்சி ஒன்றியங்களாக அறிவித்து, அந்தப் பகுதிகளிலுள்ள ஏழை, எளிய, விவசாய மக்களுடைய வறுமை நிலையைப் போக்கிட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த 5 ஆண்டுகாலமாக தாரமங்கலம் தொகுதியில் பருவ மழை சரியாகப் பெய்யாததன் காரணமாக, கடும் வறட்சி நிலவுகிறது. வறட்சியின் காரணமாக, ஆழ்துளைக் கிணறுகள் வறண்டுவிட்டபடியால், 150 கைப் பம்புக்கு மேற்பட்டவை சரிவர இயங்கவில்லை. நிலத்தடி நீர் ஆய்வின்படி, நீர் 300 அடிக்குக் கீழே சென்றுவிட்டதாகத் தெரிகிறது. ஆதலால், என்னுடைய தொகுதியில் கடும் வறட்சி நிலவுகிறது. அந்த வறட்சியைப் போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, அந்த குடிநீர்ப் பஞ்சத்தை போக்கிக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-40

அரசின் ஆய்வின்படி, குடிக்கத் தகுதியில்லாத புளோரைடு கலந்த குடிநீர் எனது தாரமங்கலம் தொகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களிலே இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றுகின்ற வகையில், ஒரு குடிநீர்த் திட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் கட்டப்படும் பள்ளிக் கட்டிடங்களின் மதிப்பீட்டுத் தொகைக்கும் பொதுப் பணித் துறையினுடைய மதிப்பீட்டுத் தொகைக்கும் வேறுபாடு இருக்கின்றது. பொதுப் பணித் துறையின் மூலம் கட்டப்படும் பள்ளிக் கட்டிடங்கள் தரமாகவும், ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் கட்டப்படும் பள்ளிக் கட்டிடங்கள் சற்று தரக் குறைவாகவும் இருக்கும் நிலைமை இருக்கின்றது. ஆகையால், இந்த மதிப்பீட்டுத் தொகையில் இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை மாற்றி, பொதுப் பணித் துறைக்கு வழங்கப்படுகின்ற அந்தத் தொகையை ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் உள்ள விசைப் பம்புகள் பழுதடைந்துவிட்டால், மாவட்ட ஆட்சித் தலைவர்



1997 மார்ச் 27] [திரு. ப. கோவிந்தன்]

மூலமாக நியமிக்கப்பட்டிருக்கின்ற 'மெக்கானிக்'-ன் மூலமாகத்தான் அந்தப் பழுது சரிசெய்யப்பட வேண்டும். 4, 5, 6 ஒன்றியங்களுக்கு ஒருவர் என மாவட்ட ஆட்சித் தலைவர் மெக்கானிக்கை நியமிக்கின்றார். அவர்கள் அந்த மோட்டாரைப் பழுது பார்க்க ஒரு மாத காலத்திற்குமேல் ஆகிவிடும் நிலைமை ஏற்படுகின்றது. அந்த நிலையைப் போக்கி ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மெக்கானிக் என்ற அடிப்படையிலே நியமனம் செய்து அந்தப் பணியைத் துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தாரமங்கலம் தொகுதியில் இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. இரண்டு பேரூராட்சிகளிலும் வாழ்கின்ற மக்கள் தொகை 20,000. ஆனால், இந்த இரண்டு பேரூராட்சிகளுக்கும் ஒரு நவீன கழிப்பிடம் கூட இல்லை. ஆகையால், தாரமங்கலம் பேரூராட்சிக்கு ஒரு நவீன கழிப்பிடமும், மேச்சேரி பேரூராட்சிக்கு ஒரு நவீன கழிப்பிடமும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாரமங்கலம் பேரூராட்சியிலே மேட்டூர் குடிநீர்த் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், பேரூராட்சியினுடைய ஒரு பகுதி மக்கள்தான் அந்தத் திட்டத்தின் மூலமாகப் பயன் அடைகின்றார்கள். அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி பேரூராட்சியில் இருக்கின்ற அத்தனை மக்களும் பயன்பெறும் வகையிலே அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே மேச்சேரி பேரூராட்சியிலும் ஒரு பகுதி மக்கள்தான் அந்தத் திட்டத்தால் பயனடைகின்றனர். அவர்கள் முழுமையாகப் பயன் அடைய அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, செயற்படுத்த வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே, மாநகராட்சி 1919-ஆம் ஆண்டு சட்ட விதிப்படி டெண்டர் ரூ.10,000-த்திற்கு மேற்பட்டால் பத்திரிகையில் விளம்பரம் செய்து டெண்டர் கோர வேண்டும். அதற்குப் பிறகு தகுதியுள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மாநகராட்சியினுடைய 82-வது விதிப்படி டெண்டர் கோராமல் 'காண்டிராக்டர்கள்' முடிவு செய்வது முறையற்றது. அப்படி விதிமுறைப்படி டெண்டர் கோராமல் நியமன முறையில் 'காண்டிராக்டர்கள்' தெரிவு செய்யப்பட்டால், சென்னை மாநகராட்சி ஆணையாளர் அதற்கான காரணத்தைத் தீர்மானத்திலே பதிவு செய்ய வேண்டும். ஆனால் மேற்படி சட்ட விதிகளின்படி சென்னை மாநகராட்சியிலே நடைபெறவில்லை என்பதை தமிழ் மாநிலக் காங்கிரஸ்

[திரு. ப. கோவிந்தன்] [1997 மார்ச் 27

எதிர்க்கட்சித் தலைவர் வெற்றிவேல் 20-12-1996-ல் நடந்த மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தெரிவித்து, விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

பிற்பகல் 2-45

கவுன்சில் சிறப்பு அதிகாரிக்கு ரூ.7.5 லட்சம் வரையில்தான் அதிகாரம். அதற்கு மேற்பட்டால் அரசு ஒப்புதல் தேவை. இந்த சட்ட விதிகளை மீறி ரூ.50 இலட்சத்துக்கு கான்ட்ராக்டுகள் டெண்டர் கோராமல் நியமன முறையில் அரசு ஒப்புதல் இல்லாமல் செய்தது ஊழலை உறுதிப்படுத்துவதாகும். இது அ.இ.அ.தி.மு.க. காலத்தில் நடைபெற்றது. அப்படிப்பட்ட நியமன முறை கான்ட்ராக்டுகளை நியாயப்படுத்தி காரணத்தை ஆணையாளர் தீர்மானத்தில் சட்ட விதிப்படி கூறவில்லை. இவரும் ஊழலுக்கு உறுதுணையாகப் போனவர் என்பது உறுதிப்படுகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் சென்னை மாநகராட்சியில் பொறுப்பேற்ற சிறப்பு அதிகாரியும், ஆணையாளரும் த.மா.கா. எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றனர் என்பதை அறிய விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தாரமங்கலம் தொகுதியிலே 4 முறைகளாக சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையிலேயே வந்த காரணத்தினால் அந்தத் தொகுதி மக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த தாரமங்கலம் தொகுதியிலே சாலை வசதிகள் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. அந்தச் சாலைகளுக்கு தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதிக நிதி அதற்கு ஒதுக்கிக் கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனது தாரமங்கலம் தொகுதியிலே ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திலே சிக்கம்பட்டி கிராமத்திலே இதுநாள்வரைக்கும் ஒரு மேல்நிலைத் தொட்டிகூட அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அந்த ஊராட்சியிலே போன ஆண்டிலே 6 போர் வெல்கள் போடப்பட்டு அந்த 6 போர்வெல்களிலும் நீர் இல்லாமல் ட்ரையாக உள்ளன. நிலத்தடி ஆய்வின்படி அந்த கிராமத்தில் நிலத்தடி நீர் இல்லையென்று ஆய்வு கூறுகின்றது. அந்த கிராம மக்கள் குடிநீருக்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் அதற்கு தனிக் கவனம் செலுத்தி அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1997 மார்ச் 27] [திரு. ப. கோவிந்தன்]

சிறுபாலங்கள் என்னுடைய தொகுதியிலே கட்டப்பட வேண்டிய நிலையில் நிறைய இருக்கின்றன. அவற்றையும் தாங்கள் பரிசிலனை செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காவிரி குடிநீர்த் திட்டத்திலே ஆத்தூர் மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே என்னுடைய தொகுதியிலே குட்டப்பட்டி ஊராட்சியிலும், பெரிய ஏரிப்பட்டி ஊராட்சியிலும், சிக்கம்பட்டி ஊராட்சியிலும் மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிலையை சரி செய்து அந்த மக்களுக்கு தண்ணீர் கொடுக்கக்கூடிய வகையிலே வழிவகை செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறுகின்ற பணிகள் அத்தனைக்கும் டெண்டர் முறையில் கோரப்பட்டால் அங்கு ஊழல்கள் நடைபெறாவண்ணம் இருக்கும். ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், பரவலாக்கப்பட்ட திட்ட வேலைகள் எல்லாம் மத்திய சர்க்காரால் வழங்கப்படுகின்ற நிதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த வேலைகளுக்கும்கூட டெண்டர் முறை வைத்துவிட்டால் அந்த வேலைகள் நல்ல முறையில் நடக்கும் என்று தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் பேரவைத் தலைவரைப் பார்த்து பேச வேண்டும். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி நான் ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 2-50

குடிநீர் வழங்கல் கொள்கை விளக்கக் குறிப்பில் 2-வது பக்கத்தில் முழுமையான குடிநீர் வசதி பெற்றவை 34,459 குடியிருப்புகள் என்றும், பகுதியாகக் குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் 32,018 என்றும், இதுவரை குடிநீர் வசதி பெறாத 154 குடியிருப்புகள் என்று மட்டும் ஒரு தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் இருக்கக்கூடிய யதார்த்த நிலை என்ன என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஏன் என்றால் என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியிலேயே குடிநீர் வசதி இல்லாத கிராமங்கள் ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கும்போது இப்படி ஒரு தகவலை இதிலே கொடுத்து இருப்பது வியப்பாக இருக்கிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : This is for the attention of all Hon. Members. You are supposed to face the Chair when you are speaking but you are facing the wall.

**திரு. பி.ஆர். சுந்தரம்** : உங்களைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. ஆர். சொக்கர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில சமயங்களில் நீங்கள் மிகவும் கோபப்படுகிறீர்கள். உங்களைப் பார்த்தாலே, பேச்சு வரமாட்டேன் என்கிறது. தொண்டை அடைத்துக்கொள்கிறது. அதனால்தான் அங்கே பார்த்து, இங்கே பார்த்து பேசுகிறார்கள். (சிரிப்பு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நோக்கம் அனைத்துக் கிராமங்களுக்கும் கூடிய விரைவில் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று இருக்க வேண்டுமே தவிர, இதுபோன்று அதிகாரிகள் கொடுக்கக்கூடிய தகவலினுடைய அடிப்படையில் செயல்பட ஆரம்பித்தால் அது கடந்த காலத்தைப் போல ஒரு தவறான நிலைக்குக் கொண்டு சென்று விடும் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஏன் என்றால் ஏற்கனவே கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் என்ற அடிப்படையில் பல கிராமங்களுக்குச் செய்யப்பட்டிருந்தாலும்கூட அவைகள் எல்லாம் பல இடங்களில் தோல்வியுற்றுவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் கொடுக்கின்ற புள்ளிவிவரங்கள் தவறுதான். அப்படியே நாம் வைத்துக் கொள்வோம். ஆனால் தாங்கள் இப்போது எந்தெந்த கிராமங்களில் முழுமையாகவே தண்ணீர் இல்லை என்ற தகவலைத் தந்தால் அது எனக்கு உதவிகரமாக இருக்கும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே பட்டியலைத் தரலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் எல்லா பெயர்களையும் படித்து உங்களுடைய நேரத்தை வீணாக்க வேண்டாம். மொத்தம்



இவ்வளவு கிராமங்கள் என்று சொல்லி அந்தப்பெயர்களை எழுதி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுங்கள். அதை அவர் சரி பார்த்து செய்வார்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒட்டப்பிடாரம் தொகுதியில் குறுமலை என்ற ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. அதில் ஏறக்குறைய 9 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 9 கிராமங்களில் 2 கிராமங்களில் மட்டும்தான் தண்ணீர் வசதி இருக்கிறது. மீதி 7 கிராமங்களுக்கு சுத்தமாக தண்ணீர் வசதி இல்லை. எனவே, அதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எந்த எந்த கிராமங்களில் எனக்குத் தெரிந்த அளவுக்கு முழுமையாக குடிநீர் வசதி இல்லை என்ற தகவலை நான் தர கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் ஒட்டப்பிடாரம் தொகுதி மற்றும் விளாத்திகுளம் மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை சிவலப்பேரி குடிநீர்த் திட்டம். அந்தத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கடந்த மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது நான் வலியுறுத்தியிருந்தேன். அதைப் பற்றி இதிலே சொல்லாதது மிகவும் வருத்தமாக இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க அந்த சிவலப்பேரி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் கடந்த 1995-ஆம் ஆண்டு கொடியங்குளம் மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய 12 கிராமங்களுக்கு குடிநீர் வசதி கொடுக்க விசேஷமாக ஒரு திட்டம் 67 லட்ச ரூபாயில் கொண்டு வரப்பட்டது. அது தொடர்ந்து தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அதை விரைவுபடுத்த தக்க ஆணை பிறப்பிக்குமாறு நான் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒரு குறை இருக்கிறது. குறிப்பாக தண்ணீர் தொட்டி கட்டுகின்றபோது அல்லது அந்த பைப் லைன் போடுகின்றபோது, அதை தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிற பகுதியில் போடாத காரணத்தால் தாழ்த்தப்பட்ட மக்களுடைய குடியிருப்புகளுக்கு முறையாகத் தண்ணீர் போய்ச் சேரவில்லை என்ற புகார்களை பல இடங்களில் நானே கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே, அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு விசேஷ கவனம் செலுத்தி,

தாழ்த்தப்பட்ட மக்களுடைய எல்லா குடியிருப்புகளுக்கும் முறையாகத்
தண்ணீர் போய்ச் சேருவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

பிற்பகல் 2-55

தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு இப்பொழுது 27 ஆயிரம் ரூபாய்
ஒரு வீட்டுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்த 27 ஆயிரம் ரூபாய் என்பது
இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் போதாது. எனவே, குறைந்தபட்சம்
அதை 40 ஆயிரம் ரூபாயாகவாவது ஒதுக்கித் தரவேண்டும். தொகுப்பு
வீடுகளுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய கூம்பு வடிவ ரூஃபை மாற்றி,
ப்ளாட் ரூஃப், தட்டை வடிவமான அந்த ரூஃபாக மாற்றப்பட
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த கூட்டத் தொடரிலேயே
கேட்டிருந்தேன். எனவே, அதையும் மாற்றித் தர வேண்டுமாய்க்
கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுதெல்லாம் தொகுப்பு வீடுகள் என்று 20 அல்லது 15
வீடுகள், 30 வீடுகள் என்ற அடிப்படையிலே கட்டித் தரப்படுகின்றன.
அவைகளெல்லாம்கூட மீண்டும் பழைய சேரிகளையே
ஞாபகப்படுத்தக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. 20 அல்லது 30
வீடுகளுக்குப் பட்டா வழங்குவதும் கஷ்டமாக இருக்கிறது. எனவே,
தனியாகப் பட்டா வைத்திருந்தாலும், அவர்களேகூட அந்தப்
பட்டாமனையிலே கூட ஒரு 5 பேரோ, 6 பேரோகூட பழைய
குடிசைகள் இருக்கக்கூடிய இடத்திலேயே வீட்டைக் கட்டிக்கொள்ளலாம்
என்ற ஆணையைப் பிறப்பித்தால் அது, ஆயிரக்கணக்கான, இலட்சக்
கணக்கான ஏழை எளியவர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்பதை
நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்குவதில் 11 ஆயிரம் ரூபாய் வருமான
வரம்பு என்று வைத்திருக்கிறீர்கள். சாதாரணமாக, இப்பொழுது
உச்சவரம்பு என்பது, ஒவ்வொன்றுக்கும் ஒரு விதமாக இருக்கிறது; பால்
பண்ணையிலே லோன் வாங்குவதற்கு ஒரு கணக்கு; ரேஷன் கார்டிலே
வறுமையைத் தீர்மானிப்பதற்கு ஒரு கணக்கு என்று இருக்கிறது. எனவே,
ஏழ்மையைத் தீர்மானிப்பதற்கு நாம் ஒரு நிரந்தரமான வருமான
வரம்பைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு இடத்திலே ரூபாய் 11
ஆயிரம், இன்னொரு இடத்தில் ரூ. 7 ஆயிரம், இன்னொரு இடத்திலே
ரூ.14 ஆயிரம், இன்னொரு இடத்திலே ரூ.15 ஆயிரம் என்றால் ஒருவரே



பொய்யான தகவல் தர வேண்டியிருக்கும். இப்பொழுது நாம் ரெட்
ரேஷன் கார்டு கொடுக்கிறோம் என்றால் அது 15 ஆயிரம் ரூபாய்க்குக்
கீழே இருப்பவர்களுக்குக் கொடுக்கிறோம். அதேபோல, 15 ஆயிரம்
ரூபாயாவது அல்லது ரூ.20 ஆயிரமாவது பிக்ஸ் செய்து விட வேண்டும்.
ரூ. 11 ஆயிரம், ரூ. 7 ஆயிரம் என்று ஒவ்வொரு கடனுக்கும் ஒவ்வொரு
விதமான வருமான வரம்பை வைப்பது முறையானது அல்ல; அது
நடைமுறையிலே பல சிக்கல்களை உருவாக்கும் என்பதை நான்
சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

நகர்ப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய பகுதிகளில்
கழிப்பிடங்களே இல்லாமல் மிகுந்த சிரமத்திற்கு
உள்ளாகிக்கொண்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபைகள்கூட
இன்னும் அதை முறையாகக் கவனிக்கவில்லை என்பதை நான்
சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனவே, ஸ்பெஷல் காம்பொனன்ட்
பிளான் - சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தைச் சரியாக வைத்து, எல்லா
நகராட்சிப் பகுதிகள், எல்லாக் கிராமப்புறங்களிலும் தாழ்த்தப்பட்ட
மக்களுக்குக் கழிப்பறை கட்டுவதற்கு ஒரு விசேஷ கவனம் செலுத்த
வேண்டும். இந்த ஸ்பெஷல் காம்பொனன்ட் பிளான் - சிறப்பு
உள்ளடக்கத் திட்டத்தைப்பற்றி நான் சில கருத்துக்களைச் சொல்ல
ஆசைப்படுகின்றேன். ஏனென்றால், இந்த ஸ்பெஷல் காம்பொனன்ட்
பிளானிலே தொடர்ச்சியாக ஒரு தவறான தகவல்
கொடுக்கப்பட்டிருக்கிறது.

நான் பல ஆண்டுகளைப்பற்றி சொல்ல வரவில்லை. 1996-97-லே
மட்டும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன். அதிலே இந்த
பட்ஜெட் மெமோரண்டம் என்கிற புத்தகத்திலே பகுதி-1 லே, பக்கம்
43. இதிலே ஊரக வளர்ச்சிக்கு மொத்தம் ரூ.331.56 கோடி
செலவழித்ததாகச் சொல்லியிருக்கிறது. அதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு,
அதாவது ஸ்பெஷல் காம்பொனன்ட் பிளான் கீழ் ரூ.204.48 கோடி
செலவழித்ததாக, அதாவது 62.65 சதம் செலவழித்ததாக இதிலே
சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்படி எப்படி என்பதை வேறு எந்த
இடத்திலேயும், பட்ஜெட்டினுடைய லிங்க் புக்கிலே எந்த இடத்திலேயும்,
ஒரு இடத்திலேயும் கூட வரவில்லை. அது இல்லாமல் என்ன
திட்டத்திற்காக, எப்படிச் செலவழிக்கப்பட்டது என்பதை, எப்படி நாம்
தெரிந்து கொள்ள முடியும்?

அதேபோல, இந்த வருஷத்திலே மொத்த பட்ஜெட் பிளான் ரூ.4052.60
கோடி. ரூரல் டெவலப்மெண்டிற்கு ரூ.438.80 கோடி. அதிலே ஸ்பெஷல்

காம்பொனன்ட் பிளான் தாழ்த்தப்பட்டோருக்காக சிறப்பு உள்ளடக்கத்
திட்டத்திற்கு 19 சதவீதம் என்றால் 83.3 கோடி வர வேண்டும். அதிலே,
பட்ஜெட் லிங்க் புக்கிலே 158, 159-ஆம் பக்கத்திலே, கணக்கு எவ்வளவு
காட்டப்பட்டிருக்கிறது என்றால் 62 கோடிதான் காட்டப்பட்டிருக்கிறது.
அப்பொழுது, இந்த ஆண்டும்கூட ஏறக்குறைய 21 கோடி ரூபாய் அதிலே
துண்டு விழுகிறது. 19 சதவீதம் என்கிறபொழுது 83 கோடி வர
வேண்டும். 62 கோடி மட்டும்தான் காட்டப்பட்டிருக்கிறது. அப்பொழுது
21 கோடி ரூபாய் இந்த வருஷம் என்னவாயிற்று என்பதைப்பற்றி
தெரியவில்லை. எனவே, அதையும் நான் சுட்டிக்காட்ட
ஆசைப்படுகின்றேன். ஏனென்றால் கடந்த காலத்திலே
தாழ்த்தப்பட்டவர்களுக்கு முறையாகச் செலவிடப்படவில்லை என்பது
ஒரு பெரிய குறை. எதிர்காலத்திலே அதே போன்ற ஒரு நிலை
நடந்துவிடக்கூடாது என்ற ஆதங்கத்திலேயும், செலவழிக்கக்கூடிய தொகை
முறையாகப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவும்,
அதுமட்டுமல்லாமல், அந்தத் தொகைகளும் முறையானவர்களுக்குப்
போய்ச் சேர வேண்டுமென்பதிலும் அக்கறை கொண்டவன் என்ற
காரணத்தினாலே இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 3-()()

மேலும் இந்த ஐ.ஆர்.டி.பி. லோனுக்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட்
மாதத்தில் பயனாளிகள் செலக்‌ஷன் ஆரம்பித்தார்கள். லோன்
கொடுக்கிறபோது, சப்சிடி, அதாவது மானியம் கொடுக்கிறபோது, ஜனவரி,
பிப்ரவரி மாதம் வரையிலும் மானியம் கொடுக்கவில்லை. அப்பொழுது
எப்படி அவர்களால் ஒரு அசெட் கிரியேட்டாகி அல்லது ஒரு பொருளை
வாங்கி அவர்கள் டெவலெப் ஆக முடியும். ஒரு வருடத்திற்கு
முன்னால் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : I will give you only two minutes.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி** : தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக்
கொடுக்கப்பட்ட அல்லது பிற்பட்ட மக்களுக்காக கொடுக்கப்பட்ட
ஐ.ஆர்.டி.பி.-கடனுக்கு, ஒரு வருடம் கழித்தும்கூட மானியம்
கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு லோனும் கொடுக்கப்படுவதில்லை.
எனவே, இப்படிக் காலம் தாழ்த்திக் கொடுப்பதில் என்ன பிரயோஜனம்
இருக்கிறது. ஒரு டெட் லைன் வைத்து பட்ஜெட் செஷன் என்றால்
ஜூன், ஜூலைக்குள் எல்லோருக்கும் கொடுத்துவிட வேண்டும், சப்சிடி
வழங்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியொரு வரையறை, இருந்தால்
எதிர்காலத்திலே உபயோகமாக இருக்க முடியும். நாம் போடுகின்ற



திட்டங்கள், எந்த மக்களை நோக்கிப் போடுகிறோமோ, அந்தத் திட்டம்
அந்த மக்களுக்குச் சென்றடையும் என்ற கருத்தை நான் வலியுறுத்தி
இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி
கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இறுதியாக, திரு. எம்.எம்.எஸ்.
அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, உள்ளாட்சி, நகராட்சி, குடிநீர் வழங்கல் மானியங்களிலே
எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கும்,
முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் முக்கியமான முதுகெலும்பு என்று
சொன்னால், அது உள்ளாட்சி, நகராட்சி, குடிநீர்தான். இது மூன்றும்
அதிலே அடங்கிவிட்டது. கிராமத்திலே சென்று நாம்
விசாரித்தோமேயானால், இந்த மூன்றையும்தான் முக்கியமாக கிராம
மக்கள் எங்களிடம் சொல்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.
அந்த நிலைமையை எடுத்துப் பார்ப்போமேயானால், நகராட்சியிலே
பல திட்டங்கள் இருக்கின்றன. அதிலே குடிநீர்த் திட்டம் ரொம்ப
முக்கியமான திட்டமாக இருக்கிறது. பல நகராட்சிகளிலே இந்தத்
திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி, இந்த மானியக்
கோரிக்கையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல
நிதிநிலையை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களைச்
சரியான முறையிலே செயல்படுத்த வேண்டும் என்பதுதான் நம்முடைய
எண்ணம். அதில் எந்தவிதமான பிரச்சினைக்கும் இடம் இருக்கக்
கூடாது. இதை ஏன் நான் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு
தவறுதல் நகராட்சியிலோ அல்லது ஒன்றியத்திலோ நடந்துவிடுமேயானால்
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நாம் சொல்லும்போது அவர்கள்
அதை காதிலே வாங்கிக் கொண்டு சும்மா இருந்துவிடாமல், நான்
பார்க்கிறேன் என்று சொல்லிவிடாமல், நேரிடையாக எந்த இடம்,
எந்தப் பகுதி, எந்தக் கிராமம் என்று நேரிலே வந்து பார்க்கக்கூடிய,
பார்த்து அதற்கான முடிவு ஏற்படுத்தக்கூடிய சக்தி நம்முடைய
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு உண்டு. அவர் மட்டும்
வருவதில்லை. அவரோடு பொதுப்பணித் துறை அமைச்சரையும்
அழைத்துக்கொண்டு, எந்தெந்தத் திட்டங்களை எப்படிச் செய்யலாமென்ற
சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கின்ற ஒரு நிலைமையை அவர்கள்
செய்து கொடுக்கிறார்கள் என்பதை நான் எங்கள் பகுதியிலே கண்கூடாக
அறிந்தவன். அவர் கூட இருந்து எல்லாவற்றையும் நேரிலே சொல்லி,

எந்தெந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொண்டோமேயானால், பல பகுதிகளிலே இப்போதே வறட்சி வந்துவிட்டது. அந்த வறட்சியை நாம் எடுத்துக்கொண்டோமேயானால், கடற்கரைப் பகுதியிலே அதிகமான வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. அந்த வறட்சியை நீக்க வேண்டும். அந்த வறட்சியைப் போக்க வேண்டும். கடற்கரைப் பகுதியிலே இப்போதே தண்ணீர் இல்லாததன் காரணமாக—இன்னும் கோடையே வரவில்லை—காட்டாற்றிலே அவர்கள் பள்ளம் தோண்டி அதிலே இருக்கின்ற தண்ணீரை குடத்திலே பிடித்துத்தான் சாப்பிட வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது.

பிற்பகல் 3-05

கடற்கரைப் பிரதேசங்களிலே போர் வெல் போட்டு தண்ணீர் தொட்டி கட்டியிருந்தாலும் அது போதவில்லை. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு போர்வெல்களை இறக்குவதற்கு உண்டான ஒரு சூழ்நிலையை கடற்கரைப் பிரதேசங்களிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதைச் செய்து, அதற்கான ஆர்டரைப் போட்டிருந்தாலும்கூட, இருக்கின்ற அதிகாரிகள் உடனடியாகக் கையெழுத்து போட்டு அதை நிறைவேற்றிக் கொடுக்காமல் அந்தப் பணிகள் தேங்கியிருக்கின்றன. அதை உடனடியாகக் கவனித்து அவர்களுக்குக் குடிக்கும் நீர் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் ஜில்லாவும் அதுதான், என் ஜில்லாவும் அதுதான். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜில்லாவும் அதுதான். அந்த தஞ்சை ஜில்லா, நாகை-காயிதே மில்லத் ஜில்லா, திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம் ஜில்லா ஆகிய இவற்றிலெல்லாம் கடற்கரைப் பிரதேசங்கள் அதிகம் இருக்கின்றன. அதுவும் நம்முடைய அமைச்சர் அவர்களுடைய தொகுதி, தஞ்சை ஜில்லாதான். அது இப்போது நாகப்பட்டினம் ஜில்லாவிற்கு வந்துவிட்டால்கூட, அங்கேயும் கடற்கரைப் பிரதேசம் அதிகம் இருக்கிறது. பெரியவர் மூப்பனார் அவர்களுடைய ஜில்லாவும் அதுதான். ஆனால், நிலைமை அப்படியிருக்கின்ற போது, தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொள்வோமேயானால், புதுப்பட்டினம், மல்லிப்பட்டினம், அதிராமப்பட்டினம் ஆகிய அந்தப் பகுதிகளில் போர் வெல்கள் இருந்தால்கூட, அவை மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் இருந்த காலத்திலே போடப்பட்டது, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள்



காலத்திலே கட்டிக் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு அது போதவில்லை. சில பகுதிகளுக்குத்தான் தண்ணீர் செல்கின்றதே தவிர, சில பகுதிகளுக்குத் தண்ணீர் செல்லமுடியாமல் இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையை எல்லாம் மாற்றி போர்வெல்களை மறுபடியும் அங்கு மேற்கொண்டு அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். உடனடியாக அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பள்ளிகள். படிக்கின்ற பள்ளிக்கூடங்களிலே கழிப்பறைகள் கிடையாது. குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீர் கிடையாது. எல்லா பள்ளிகளுக்கும் கழிப்பறை வசதியும், குடிதண்ணீர் வசதியும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான். கேட்டுக்கொள்கின்றேன். அந்தச் சூழ்நிலையை அவர்கள் உருவாக்கிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

உள்ளாட்சி நிர்வாகத்தை எடுத்துக்கொள்வோமேயானால், கிராமங்களிலே ரோடு வசதி மிகவும் மோசமாக உள்ளது. அங்கு ரோடு வசதி மிகவும் குறைவாக உள்ளது. அங்கு ரோடு வசதிகள் இருந்தாலும், அந்த ரோடுகளைச் செப்பனிட்டு கப்பிச் சாலையாக மாற்றுவதற்கு, கருங்கல் சாலையாக மாற்றுவதற்கு அந்தப் பஞ்சாயத்துக்களிலே பணம் இல்லை. அந்தப் பஞ்சாயத்துக்களிலே பணம் இல்லாததன் காரணமாக, நிதிவசதிக் குறைவின் காரணமாக, அந்த ரோடுகளில் மழைக்காலங்களில் நடந்து போவதற்கான சூழ்நிலை இல்லை. அந்தச் சூழ்நிலையை நாம் மாற்ற வேண்டும் என்று சொன்னால், எந்தத் திட்டத்திலேயாவது அதை சேர்த்து, அல்லது வேறு எந்த நிதியிலிருந்தாவது நிதியை ஒதுக்கி அந்தப். பஞ்சாயத்து ரோடுகளை நிச்சயமாக இந்த ஆட்சியிலே போட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதுவும் இந்த ஆண்டிலேயே செய்து கொடுத்தால் கிராமத்திலே இருக்கும் மக்கள் நம்முடைய சர்க்காருக்கு நன்றி செலுத்துவார்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. ஏனென்று கேட்டால், அவர்களுடைய எண்ணங்கள் எல்லாம், ரோடு வசதி வேண்டும், குடிதண்ணீர் வசதி வேண்டும், வேலைவாய்ப்புத் திட்டங்கள் வேண்டும் — இதைத்தான் சொல்கின்றார்கள்.

மேலும், நம்முடைய ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திலே பஞ்சாயத்து யூனியன் மூலம் தொகுப்பு வீடுகள் கட்டப்படுகின்றபோது, அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டு, அந்தத் தொகுப்பு வீடுகளைக்

கட்டிக் கொடுத்தாலும்கூட, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துபேசி, எப்படி அந்த வீடுகளை ஒதுக்கிக் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கின்ற வகையில் ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்களையும் கலந்து கொண்டு செய்ய வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். என்னைப் பொறுத்தவரையில்—மற்றவர்களைப் பொறுத்தவரையில் எப்படியோ தெரியவில்லை—எந்தப் பஞ்சாயத்து யூனியனிலே சொன்னாலும், சரி என்றுதான் சொல்கிறார்களே தவிர, அதற்குப் பின்னால் நான் சொன்ன பெயரும் வரவில்லை, நான் சொன்ன ஊரும் வரவில்லை. யாரோ சொன்ன பெயர்களும் ஊர்களும் அங்கு வந்து கொண்டிருக்கின்றன. இவர் எம்.எல்.ஏ. தானா, இல்லையா என மக்கள் பேசுகின்ற அளவிற்கு ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்தச் சூழ்நிலை ஏற்படாமல் இருக்க, எங்களையும் கலந்துகொண்டு—எல்லாம் எங்கள் கிராமங்களுக்குத்தான் செய்கிறார்கள், அதிலே எந்தவிதமான பாகுபாடும் கிடையாது—செய்தால், எங்களை நேரிலே வந்து விசாரித்து இவற்றை எப்படிச் செய்யலாம் என்று கேட்டு, நாங்கள் சொல்கின்ற ஒருசிலவற்றையும் சேர்த்துக் கொண்டால், எங்களுக்கும் அது ஒரு பெருமையாக இருக்கும். இந்தச் சட்டமன்றத்திற்கு நாங்கள் வந்ததற்கும் பெருமையாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், மக்களுடைய திட்டம் அதுதான். அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

பிற்பகல் 3-10

நான் நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திலேயே மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டுமென்று இருந்தேன். ஆனால், எனக்கு அப்போது வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கு இருக்கும்போதே ஒருசில வார்த்தைகளைச் சொல்லிவிடுகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி இங்கு எல்லோரும் பாராட்டிப் பேசிவிட்டார்கள். எனவே, அதற்கு மேல் சொல்வதற்கு எதுவுமே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உலக வரலாற்றிலேயே இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கக் கூடியவர்கள், நம்முடைய முதல்வர் அவர்களை மிஞ்சியவர்களாக யாரும் இருக்க முடியாது என்று இங்கே



சொன்னவுடன், அதற்கு மேல் சொல்வதற்கு எனக்கு வார்த்தைகளே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்தப் பாராட்டுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது, 'நான் சாமானியமானவன்தான்' என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். நீங்கள் சாமானியமானவர் அல்ல. அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். பாம்பு புற்றைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். பாம்பு புற்றை கறையான் எப்படிக் கட்டுகிறது என்றால், களிமண்ணை வைத்துகட்டும். அதைப் பார்ககும்போது மின்னிக் கொண்டிருக்கும். அதையே கொத்தனாரை வைத்துக் கட்டச் சொன்னால், சிமிண்ட்டை வைத்து கட்டிவிடுவார்கள். கறையான் களிமண்ணை வைத்துக் கட்டுவதைப் போல கட்ட முடியாது. அதேபோல, சுட்டுக்குருவி கூடு கட்டுவதைப் பார்த்திருக்கலாம். (சிரிப்பு) எங்கள் ஊரில் சிட்டுக்குருவியை சுட்டுக்குருவி என்றுதான் அழைப்பார்கள். அதனால்தான் அப்படிச் சொன்னேன். இந்தச் சிட்டுக்குருவி கூடு கட்டும்போது, சில குச்சிகளை வைத்து அதன்மேல் வைக்கோலை வைத்து மிக அழகாகக் கட்டும். கொத்தனாரால் கூட அந்த அளவுக்குக் கட்ட முடியாது, கட்டவும் தெரியாது. அதுபோல, பாம்பு புற்றை கறையானால்தான் கட்ட முடியும் என்பதைப் போலவும், சிட்டுக்குருவியின் கூட்டை சிட்டுக்குருவியால்தான் கட்ட முடியும் என்பதைப் போலவும், இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையை அளிக்கின்ற சக்தி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒருவருக்குத்தான் உண்டு, அவரைத் தவிர வேறு யாருக்கும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மேல் என்னால் எதுவும் சொல்ல முடியாது.

நான் இன்னொன்றையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு முதல்வராக இருந்தபோது, ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு ஒரு கூட்டத்தில் நானும் அவரோடு கலந்துகொண்டேன். அது அவருக்கும் தெரியும். கூட்டம் என்றால், கட்சிக் கூட்டம் அல்ல. பிறகு எங்கள் கட்சிக்காரர்கள் வேறுவிதமாக நினைத்துவிடப் போகிறார்கள். (சிரிப்பு) அந்தக் கூட்டத்தில் நான் பேசும்போது சொன்னேன், 'தமிழ்ப் பண்பாட்டை தமிழ்நாட்டில் வளர்ப்பதில் நம்முடைய முதல்வர் அவர்களைவிடச் சிறந்தவர் யாரும் இருக்க முடியாது, அந்த சக்தி, அந்தப் பெருமை அவர்களுக்குத்தான் உண்டு' என்று சொன்னேன். அதன் பிறகு நான் பேசியதுபற்றி முரசொலி பத்திரிகையில் நான்கு பக்கங்களில் வெளி வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து. மானியக் கோரிக்கை பற்றி கருத்து சொல்ல வேண்டுமானால், இப்போது தண்ணீர்ப் பிரச்சினை மிக அதிகமாக உள்ளது. ஒருபக்கம் வறட்சி, மற்றொரு பக்கம் வெள்ளம். ஆகையால், வறட்சியும் இருக்கக் கூடாது, வெள்ளமும் வரக் கூடாது. இதற்கு மழையின் அளவு சரி சமமாக இருக்கவேண்டும். இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் ஊரில் அண்ணாவியர் குடும்பம் என்று அதிராமபட்டினத்தில் இருந்தது. அந்தக் காலத்தில் மதுரை தமிழ்ச் சங்கத்தில் புலவர்களாக இருந்து வந்தவர்கள் அந்தக் குடும்பத்தில் இருந்தனர். அந்தக் குடும்பம் இப்போதும் இருக்கின்றது. எனக்குகூட அவர்கள் ஒரு வகையில் தூரத்து உறவு என்று எண்ணுகிறேன். அப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏழு வருடமாக மழை இல்லாமல் வறட்சி ஏற்பட்டிருந்தது. அந்த வறட்சியின்போது. இராமநாதபுரம் ஜில்லா, தொண்டியில் ஒரு பெரியவர் இருந்தார், அவர் ஒரு கனவு கண்டார்.

பிற்பகல் 3-15

அந்தக் கனவிலே என்ன கண்டிருக்கிறார் என்றால் அதிராமபட்டினத்தில் நைனா முஹமது என்ற தமிழ்ப் பண்டிதர் இருக்கிறார், அவரிடம் போய்க் கேட்டால் மழை பெய்வதற்கு நிச்சயமாக ஒரு பாடலைப் பாடுவார் என்று சொன்னார். அவர் வந்து இவரிடம் சொன்னார். சொன்னவுடன் இவர் என்ன செய்தார் என்று கேட்டால் ஒரு விரதம் இருந்து, அந்தப் பாடலைப் பாடினார். பாடிய அந்தப் பாட்டு சாதாரணப் பாட்டு அல்ல. அந்தப் பாட்டினுடைய அர்த்தம் சாதாரணமானதல்ல. யாராலும் அந்த அளவுக்குப் பாட முடியாது. அந்தப் பாடல் 12 அடி. என் வயதுக்கும், குரலுக்கும், என்னால் அந்தப் பாடலைப் பாட முடியாது. (சிரிப்பு) உரையிலேயே சொல்லி விடுகிறேன். அந்தப் பாடலை இன்றைக்கும் மழை இல்லை என்று சொன்னால் பாடுவார்கள். அந்தப் புத்தகத்தின் விலை 1 ரூபாய்தான். அந்தக் காலத்திலேயே போடப்பட்டது. வெளியிலிருந்து அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு போக ஆட்கள் வருகிறார்கள். மழை இல்லாத காரணத்தால், "வேத ஓதியர் வேதியரையர்" — வேதத்தை ஓதுகிறவர்கள் வேதத்தை ஓதாமல் வேறு ஏதாவது ஓதிவிட்டார்களா? சமூகத்தைச் சொல்லவில்லை. வேதத்தை ஓதியவர்கள் வேதத்தை ஓதாமல் இருந்து விட்டார்களோ? "விற்ற கற்பினை கன்னியரையர்" — கன்னியர் இருக்கிறார்களே, அவர்கள் தங்களுடைய கற்பினை விற்றுவிட்டார்களோ? "நீதி தவறிய நெறிமுறை அரையர்" — நீதிமான்கள் நீதியைத் தவற விட்டார்களோ? என்று பாடுகிறார். நான் அதிகமாகப் பேச மாட்டேன்;



ஏனென்று கேட்டால் தலைவர் என்னை உட்கார் என்று சொல்லிவிட்டால், மற்றவர்கள் மாதிரி நான் நின்று கொண்டு பேச மாட்டேன்; உட்கார்ந்து விடுவேன்; கட்டுப்பாடு உள்ளவன்; அதற்குமேல் பேச மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மாண்புமிகு முதலமைச்சரைப் பற்றி இப்படிப் பேசிய பிறகு நான் உட்கார் என்று உங்களைச் சொல்ல முடியாது என்பது உங்களுக்குத் தெரியுமில்லையா? (சிரிப்பு)

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** இப்படி 12 அடிகள் கொண்ட பாடல் அது. மேலும் அந்தப் பாடலிலே என்ன சொல்கிறார் என்றால், எங்களுடைய எங்களுடைய முஹமது நபி இருக்கிறார் அல்லவா? எங்களுடைய முஹமதுக்காகவே கொடுத்துக் கொண்டு, கொடகொட என கொட்ட அருள் செய்வதற்காக, "கோரில்லா வடிவே எங்கள் நாயகமே" என்று அவர் பாடியவுடன் ஒரு வாரம் மழை பெய்தது என்று சொல்வார்கள். இன்றைக்கும் அந்தப் பாடலைப் பாடுவார்கள். 12 அடி கொண்ட பாடல். பாடுவதற்கு நேரமாகும்.

மேலும், கார்த்திகை மாதத்தில் பிறை தெரியாது. ஆனால் "கார்த்திகை பிறை காணத் தோன்றியதோ" என்றதும் கார்த்திகை மாதத்தில் அந்தப் பிறை தெளிவாகத் தெரிகிறது. "கானலோழியர் நீர் சுற்று ஆகியதோ" — கார்த்திகை மாதத்தில் கீழே கால் வைத்தால் சேறும், சகதியுமாக இருக்கும். ஆனால் இந்த மணலில் கால் வைத்தால் சுடுகிறது. இப்படி 12 அடிகள் கொண்ட பாடல் அது. அந்த அர்த்தத்தில் வந்தவர்கள், அந்தப் பண்பாட்டில் பிறந்தவர்கள், அந்தப் பண்பாட்டில் வளர்ந்தவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). சும்மா அவரை நான் புகழவில்லை. நடந்தவற்றை, அனுபவத்தில் சொல்கிறேன். நிச்சயமாக இந்த ஆண்டு அப்படி மழை வருவதற்கு நான் பாடலைப் பாடி, அந்தப் புத்தகத்தைக் கொடுத்து, அந்தப் முதல்வர் அவர்களுக்கும் அந்தப் புத்தகத்தைக் கொடுத்து, அந்தப் பாடலை பாட வைத்து, இந்த நாடும், நாட்டு மக்களும் நல்ல முறையில், சீரோடும், சிறப்போடும் வளர்ந்தோங்கிட ஆண்டவனை வேண்டிக் கேட்டுக் கொண்டு அடுத்ததற்குச் செல்கிறேன். பல திட்டங்கள் இன்னும் இருக்கின்றன.

அமைச்சர் அவர்களை நான் கேட்பதெல்லாம் எங்களுடைய பகுதிக்கு — என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாதல்லவா? — ரோடு வசதிகள், குடிநீர் வசதிகள், லைட்

வசதிகள், வீட்டு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சில ஊராட்சி மன்றங்களுக்குக் கட்டிட வசதிகள் கிடையாது. வெள்ளாளர் நகரம், திருச்சிற்றம்பலம், கொருக்கை, கடலங்குடி, ஓடங்குடி ஆகிய ஊர்களில் உள்ள ஊராட்சி மன்றங்களுக்குக் கட்டிட வசதி செய்து தர வேண்டும். ஆறுகளின் மேலே நடப்பதற்கு 'மேல் பாலங்கள்' இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்கெல்லாம் வண்டிப் பாதைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 3-20

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே உள்ள சில கிராமங்களுக்கு சாலைகளை அவசியமாகப் போட்டுத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். முடிகண்டநல்லூர், இளந்தோப்பு, வளவஞ்சான், திருச்சிற்றம்பலம், சீப்புலியூர், கடலங்குடி, மணக்குடி, தர்மபுரம், மொளையூர், மண்டாங்கிவயல் ஆகிய கிராமங்களிலுள்ள சாலைகளை அவசியம் போட்டுத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 20 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் என்னுடைய தொகுதியிலே செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரில் சென்று சொல்லும்போது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துதரக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஒன்றியங்களில்தான் ஜாதிச் சான்று வழங்கப்படுமென்று வைத்திருக்கிறார்கள், ஆனால், கிராமப் பகுதியிலேயிருந்து மக்கள் ஒன்றிய அலுவலகத்திற்கு வந்து, சான்றிதழ் பெற இயலவில்லை. அதனால், ஊராட்சி மன்றங்களிலேயே அந்தச் ஜாதிச் சான்றுகள் வழங்கப்பட்டால், அந்தக் கிராமப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, நகராட்சிகளுக்குச் சொந்தமான கட்டிடங்களை, கடைகளை ஏலத்தில் விடுகிறார்கள். நான் ஒரு இடத்தைப் பற்றி



மட்டும் சொல்லவில்லை. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து இடங்களைப் பற்றியும் பொதுவாகச் சொல்கிறேன். அதற்கு கடைக்காரர்கள் ஒரு சங்கத்தை, ஒரு அசோசியேஷனை வைத்திருக்கிறார்கள். அப்படி ஏலம் விடும்போது, வருடத்திற்கு வருடம் இத்தனை சதவிகிதம் கூட்டலாம் என்று ஒரு நிலைமை இருக்கிறது. ஏனென்றால், அந்தக் காலம் மாதிரி, ஒரு வருடம் ஒருவர் வியாபாரத்தை வைத்து நடத்திவிட்டு, அடுத்த வருடம் வேறு ஒருவர் ஏலம் எடுத்துக்கொண்டு போய்விட்டால், அவருடைய வியாபாரமே கெட்டுப்போய்விடும். ஆனால், அந்தக் குறிப்பிட்ட சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையினை நகராட்சிக்குச் சென்று சேரவிடாமல், அந்தச் சங்கத்தில் உள்ளவர்களே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கோடிக்கணக்கான பணத்தை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகை கண்டிப்பாக நகராட்சிக்குச் சென்று சேரவேண்டும். அப்படிச் சேர்ந்தால்தான், நகராட்சியினுடைய பணிகளுக்கு அது உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கி, அவர்களிடமுள்ள அந்தப் பணத்தை வாங்கி நகராட்சியில் சேர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கோரிக்கைகளைப் பற்றி நீங்கள் அமைச்சர் அவர்களிடம் நேரில் சென்று பேசிக் கொள்ளுங்கள்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விரைவில் பேசி முடித்துக் கொள்கிறேன். முதியோர் உதவித் தொகை போன்ற விஷயங்களைப் பற்றியெல்லாம் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரில் சென்று பேசிக் கொள்கிறேன். இருப்பினும், சென்னை மாநகராட்சி சலவையாளர் ஓய்வறைக்கு ரூ. 10 தான் வாடகை இருந்தது. 1993-லே, கடந்த ஆட்சிக் காலத்திலே இது ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டது. அதனை ரூ. 25 ஆகக் குறைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதாவது, நகராட்சியிலே வேலை செய்பவர்களைச் சர்க்கார் ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பேச வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால், அவைகளைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு நேரம் இல்லை. ஆனாலும், எனக்குக்

கொஞ்சம் பயமிருந்தது. அது என்னவென்றால், நான் பேசுவதற்கு
வாய்ப்புக் கிடைக்க வேண்டும், அப்பொழுது முதலமைச்சரைப் பற்றிப்
புகழ்ந்து பேச வேண்டும் என்று. ஆனால், இன்றைக்குப் பேசுவதற்கு
20 பேர்கள் வாய்ப்பு கேட்டிருக்கிறார்கள். எனவே, நான் தலைவர்
அவர்களிடம் சென்று கேட்டேன். எனக்கு 17, 18 பேர் கழித்துத்தான்
பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னார்கள். அதுவும் போய்,
20-வது நபராகத்தான் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.
அதுவரை முதலமைச்சர் அவர்கள் அவைக்கு வரவில்லை. ஆனால், 20-
வது நபராக நான் பேசும்போது, என்னுடைய நல்ல நேரம், என்னுடைய
நல்ல எண்ணம், முதலமைச்சர் அவர்கள் அவைக்கு வந்துவிட்டார்கள்.
இது பற்றி எனக்குப் பெரிய சந்தோஷம். இதைவிட எனக்கு ஒரு
பெருமை இருக்கமுடியாது. நான் இப்படியெல்லாம் பேசுவதால்,
முதலமைச்சரிடம் போய் ஏதாவது கேட்டு, பயன்படுத்திக் கொள்ளப்
போகிறேன் என்று எண்ணிவிடாதீர்கள். நான் எதுவும் அவர்களிடம்
கேட்பதில்லை. அது அவர்களுக்கும் தெரியும்; எனக்கும் தெரியும்.
என்னுடைய நிலையெல்லாம் அவர்களுக்குத் தெரியும். நான் எந்தப்
பிரச்சினையிலும் ஈடுபடுபவன் அல்ல. நான் நகராட்சியினுடைய
சேர்மனாக இருந்த நேரத்தில், 110 நகராட்சித் தலைவர்கள் இருந்தும்,
அவர்கள் எனக்காகச் செய்து கொடுத்த திட்டங்களையெல்லாம் நான்
மறக்க முடியாது. இன்றைக்கும் அதை நான் சொல்லிக் கொண்டே
இருக்கின்றேன். அந்த நன்றியை மறக்காதவன் நான். நான் மட்டுமல்ல;
எங்கள் குடும்பமே அப்படித்தான். அந்த நன்றியை மறக்க முடியாது.
நகராட்சிக்கு ரூ. 5 இலட்சம் லோன் பெற்று ஒரு கட்டிடத்தைக் கட்ட
முடியவில்லை. ஊழியர்களுக்குச் சம்பளம் போடக்கூட பணம் இல்லை.
அப்பொழுது அவர்கள் முதல் மந்திரி, நான் நகராட்சித் தலைவர். நான்
சொன்ன உடனேயே — இப்பொழுது இருக்கின்ற தலைமைச் செயலாளர்
திரு. நம்பியார் அவர்கள் அப்பொழுது எங்கள் மாவட்ட கலெக்டர்
— கலெக்டரைக் கூப்பிட்டு, நான் என்ன கேட்கின்றேனோ அதை
உடனடியாகச் செய்து கொடுக்கச் சொன்னார். நான், 5 இலட்சம்
ரூபாய் லோன்தான் கேட்டேன். இன்றைக்கு அந்த கட்டிடம் உள்ள
இடம், மயிலாடுதுறை நகரத்திலேயே ஒரு பொன்னான இடம். இன்றைக்கு
10 கோடி ரூபாய் பெறக்கூடிய சக்தியை, அப்படிப்பட்ட வருமானத்தை
உருவாக்கிக் கொடுத்த பெருமை, நம்முடைய முதலமைச்சர்
அவர்களையே சாரும். இதையெல்லாம் நான் அதிகம் சொல்லத்
தேவையில்லை.



பிற்பகல் 3-25

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், எல்லா ஆறுகளையும்
சொல்லி வந்து — அந்த ஆறுகளிலே மயிலாடுதுறையில் ஓடும் ஆறும்
வரும்; காவிரி வந்தால், மயிலாடுதுறையும் வரும் — அப்படிச் சொல்லிக்
கொண்டே வரும்போது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.
அவர்கள் அப்படிச் சொல்லிக் கொண்டே வந்தார்கள். அப்படிச்
சொல்லும்போது, ஆற்றைப் பற்றி காதல் கதையாகவும், நம்முடைய
தோழமைக் கட்சியினுடைய நிலைமையைப் பற்றியெல்லாம் சொல்லி
வந்தார்கள். அதைக் கேட்கும்போது எனக்கு மிகவும் சந்தோஷமாகத்தான்
இருந்தது. ஆனால், சொல்லிவந்தும் பிரயோசனம் இல்லை. அவற்றிலே
தண்ணீர்வர வேண்டும். அப்படி தண்ணீர் வரக்கூடிய நிலைக்குதான்
நான் இந்தப் பாடலையும் சொல்லியிருக்கிறேன். ஆகையினால்,
எல்லாவற்றையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களையும், உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

கடற்கரை பிரதேசத்திற்கு, நிச்சயமாக, கண்டிப்பாக உடனடியாக
குடிநீர் கிடைப்பதற்கு, குடிநீர் வாரியத்திலே இருக்கிற அதிகாரிகளை
முடுக்கிவிட்டு, அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

மயிலாடுதுறையிலே ஒரு மேம்பாலம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
அமைச்சர் அவர்களிடமும் நான் அதைப்பற்றி அதிகம்
சொல்லியிருக்கிறேன். அதன் வேலை முடிந்துவிட்டது. அதன் வேலை
முடிந்தாலும், ஒரு பிரச்சினை பற்றி நான் ஒரு கவன ஈர்ப்பு
கொடுத்திருக்கிறேன். நாளை மறுநாள் அது வரும்; அதிலே நான் பேசிக்
கொள்கிறேன் என்று சொல்லிக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பு
அளித்தமைக்கு, தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத்
தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையையொட்டி, என் துறையைச்
சேர்ந்த 3 மானியக் கோரிக்கைகளை, இந்த அவையில், காலையில்
வைத்து, உரையாற்றுகின்ற ஒரு சீரிய நல்ல வாய்ப்பை இன்றைக்கு
அளித்திருப்பதை எண்ணுகிறேன். நான் சென்ற ஆண்டு, இதை இந்த
அவையில் அளித்தபோது, இந்த அவைக்கு எப்படி நான் வந்தேன்;

இந்தத் துறையின் அமைச்சர் பொறுப்பு எனக்கு எப்படிக் கிடைத்தது; எந்த அடிப்படையில் நான் இந்த அவையில் பங்கேற்றேன் என்பதைச் சொன்னேன். அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. ஆனால், இப்போது அவர் இங்கே வந்துவிட்டார். அதையே நான் உங்களுக்கு நினைவுறுத்தி, அதே அடிப்படையில் என்னுடைய உரையை இந்த முறையும் துவக்குகிறேன் என்பதை மட்டும் உங்களிடத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, மானியக் கோரிக்கைகள் வைக்கிற நேரத்திலே, அதைப்பற்றி உறுப்பினர்கள் உரையாடி, சிரிய கருத்துக்களைத் தெரிவிப்பது வாடிக்கை என்றாலும்கூட, ஊரக வளர்ச்சித் துறையும், நகராட்சித் துறையும், குடிநீர் வடிகால் துறையும் மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து, காலையிலேயும், மாலையிலேயும் இரு வேளைகளிலும் வைத்துக் கொள்வதற்கு, முதலமைச்சர் அவர்கள் அனுமதித்து, அதை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் ஏற்றுக்கொண்டு, ஒரு வாய்ப்பை நல்கியதற்கு, மீண்டும் நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், காலையிலிருந்து விவாதம் நடந்து கொண்டிருக்கும் போதிலும், அதிகமான உறுப்பினர்கள் தங்களுக்கு வாய்ப்புத் தரவில்லை என்று குறையாகக்கூட என்னிடத்தில் சொன்னார்கள். இருந்தாலும், 21 பேர், இன்றையதினம் இந்த அவையில், இந்த மூன்று துறைகளைப் பற்றிய விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றினார்கள். கட்சி ரீதியாக எடுத்துக் கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 9 சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸைச் சார்ந்த 4 பேரும், பா.ம.க. 1-ம், இந்திய தேசிய லீக் 1-ம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1-ம், பா.ஜ.க. 1-ம், ஜனதா தள் 1-ம், தேவேந்திர குல வேளாளர் கட்சி 1-ம், அகில இந்திய அண்ணா தி.மு.க. 1-ம், உள்பட 21 உறுப்பினர்கள் இன்றையதினம் விவாதத்தில் கலந்துகொண்டு, உரையாடி, நல்ல கருத்துக்களையும், எதிர்காலத்தில் எப்படி எப்படி திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளையும், ஒரு ஆண்டில் நடைபெற்றிருக்கிற வேலைகள், அதிலுள்ள குறைபாடுகள், அதிலுள்ள மந்தத் தன்மை இவைகளையும் தெளிவாக்கியிருப்பதால், அவர்களுடைய உரை எனக்கு ஓர் உரமாக இருக்குமென்று கருதுகிறேன். அதோடுகூட, அரிய யோசனைகள் சொன்ன நேரத்தில், இன்னொன்றையும் தவறாமல் குறிப்பிட்டார்கள்.



பிற்பகல் 3-30

நான் ஆரம்பத்திலேயே இதைச் சொல்வதற்குக் காரணம், இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் அவர்களால்தான் நாங்கள் எல்லாம் இங்கே உட்கார்ந்து இருக்கிறோம். அமைச்சர்கள் அத்தனை பேரும் சாமான்யமானவர்கள் என்று எடுத்துக் கொண்டாலும், அந்தச் சாமான்யமானவர்களில் நான் மிகச் சாமான்யமானவன் என்பதை நானே உணர்ந்தவன். ஆனால், இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் இந்த முதலமைச்சர் வெட்ட வெளியிலே என்ன பேசினார் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்று சொல்லித்தான் வாக்கு கேட்டார். அதை நம்பித்தான் மக்களும் வாக்களித்தார்கள். அவர் சொன்னதைச் செய்யப் பிறந்தவர். இந்த 9 மாத கால ஆட்சியில் அவர் சொன்னதையெல்லாம் செய்வார் என்ற நம்பிக்கையை திரும்பவும் நாட்டு மக்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு ஊராட்சி மன்றத் தேர்தல் ஒன்றே தக்க சான்றாக அமையக்கூடும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 9 மாத கால ஆட்சியில் இதே துறையில் நான் பொறுப்பேற்றிருந்தாலும்கூட பணிகளைப் பற்றிக்கூட கவலைப்படாமல் தான் சொன்ன வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு 2 மாத காலம் என்னையும், இந்த உள்ளாட்சி நிறுவனத் துறையைச் சார்ந்த 2 செயலாளர்கள், மற்ற அலுவலர்கள், அவர்களுடைய அதிகாரிகள் அத்தனை பேரையும் வைத்துக்கொண்டு காலையிலும், மாலையிலும் கசக்கிப் பிழிந்தார் என்றுதான் சொல்லமுடியும். என்னை நம்பாமல்கூட ஒருநாள் என்னை அழைத்து காரிலே உட்கார வைத்து இந்தத் தேர்தலை எப்படியும் நடத்திவிட வேண்டும்; அது நாகரீகமாகவும் இருக்க வேண்டும்; நாணயமாகவும் இருக்க வேண்டும்; கொஞ்சம் கூட அலட்சியம் காட்டக்கூடாது. மக்கள் அளித்த வாக்கை திருப்திகரமாக திரும்பவும் நம்மை ஏற்கிறார்கள் என்பதற்கு அடையாளம் காட்ட வேண்டும். ஒரு துளிகூட அரசியல் இல்லாமல் நடந்த வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பொறுப்பு உனக்கு இருக்காது என்று கண்டித்து என்னை அனுப்பினார். அதனடிப்படையிலேதான் நான்கூட செயல்பட்டேன். இருந்தாலும் இந்த அமைச்சர் பொறுப்பை ஏற்ற காரணத்தால் என்னால் முழுமையாகப் பணியை ஊராட்சி மன்றத் தேர்தலில் செய்ய முடியாமல் போய்விட்டது. இருந்தாலும், பெருவாரியான வெற்றியை நாம் அனைவரும் பெற்று அந்த உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி, சொன்னதைச் செய்தவர் என்பதற்காக திரும்பவும்

நல்ல புகழை அவருக்குச் சமர்ப்பித்திருக்கிறோம். ஒரே நேரத்திலே இந்தத் தேர்தலை நடத்தியதென்பது பெரிய விஷயம். பொதுத் தேர்தலைக்கூட நடத்திவிடலாம். அது எத்தனை இடங்கள், இது எத்தனை இடங்கள் என்று எண்ணிப் பார்க்கிறபோது பன்மடங்கு இடங்கள் அதிகமாகவும், பல உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும், லட்சக்கணக்கான உறுப்பினர்கள் இன்றைக்கு பொறுப்பேற்கிற சூழ்நிலையும், ஆயிரக்கணக்கான தலைவர்கள் இன்றைக்கு பொறுப்பு ஏற்பதும், 12,5(X) தலைவர்கள் ஊராட்சி மன்றத்திலேயும், 384 பேர்கள் ஊராட்சி ஒன்றியத்திலேயும், சுமார் 6(X) பேர்கள் பேரூராட்சி மன்றத் தலைவர்களாகவும் வந்திருக்கிறார்கள். 104 நகராட்சி மன்றங்களில் 102 நகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு, 102 நகராட்சி மன்றத் தலைவர்களைப் பெற்று இருக்கிறோம். 6 மாநகராட்சிகளில் 4 மாநகராட்சிகளுக்கு ஆண்களும், 2 மாநகராட்சிகளுக்குப் பெண்களும் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஒரே நேரத்தில் இரண்டையுமே நடத்தியிருக்கிறோம். இப்போது எண்ணிப் பார்த்தாலும் நமக்கே அச்சம் ஏற்படுகிற அளவுக்கு இந்தத் தேர்தல் நடந்திருக்கிறது. எந்தவிதமான ஒரு சங்கடமும் இல்லாமல், எந்தவிதமான தப்பும் இல்லாமல் உயர்நீதிமன்றம் ஒத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஏறத்தாழ 14 சட்டங்களைத் திருத்தி—ஒரு சட்டம் அல்ல, 2 சட்டம் அல்ல, 14 சட்டங்கள்—திருத்துவதற்கு என்ன காரணம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் அதற்கு முன்பிருந்த ஆட்சி அமைத்திருந்த சட்டங்கள் அத்தனையும் தேர்தல் நடைபெறாமல் போவதற்கு, நீதிமன்றங்களிலிருந்து தடையாணையைப் பெறுவதற்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்க வேண்டுமோ அத்தனையையும் வைத்திருந்தார்கள். அதை மாற்றி அவைகளைத் திருத்தித் தேர்தலை எப்படியும் நடத்தியாக வேண்டும் என்பதற்காகவே சட்டம் திருத்தப்பட்டு அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே இந்தத் தேர்தலைத் தொடங்கி, 2 நாட்களிலே இந்தத் தேர்தலை 'முடித்து, தமிழ்நாடு பூராவிலும், மற்ற மாநிலத்தில் உள்ளவர்களும் ஆச்சரியப்படுகிற அளவுக்கு தேர்தலை நடத்திய பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். இதில் வேறு யாருக்கும் பங்கில்லை. ஏதோ ஒரு அடிப்படையில் இன்றையதினம் பல பேர் பலவற்றைப் பேசலாம். ஆனாலும், இது ஒரு பெரும் சாதனை என்பதில் எதிரிகள்கூட மறைக்காமல் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்பம் வந்துவிட்டது. அதே அடிப்படையில்தான் இன்றைக்கு இந்த நிர்வாகத்தை நாங்கள் தொடர்ந்து நடத்துகிறோம் என்பதற்கு நான் உங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக என்னுடைய உரையைத் துவங்க வேண்டுமென்றுதான்



ஆசைப்படுகிறேன். நம்முடைய தலைவர் அவர்கள் கூட ஒரு மணி நேரத்திற்கு மேல் நீங்கள் பேசக்கூடாது என்று ஆணையிட்டார். உடல் நலம் கருதித்தான் ஆணையிட்டதாக அவர்கள் சொன்னார்கள். எனக்கு அப்படி ஒன்றும் உடல் நலம் குன்றவில்லை.

பிற்பகல் 3-35

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், நான் கொஞ்சம் பணிசெய்து பழக்கப்பட்டவன். நீண்டகாலமாக அவரிடத்திலே தொண்டனாக இருந்து கொண்டிருக்கிறேன், இப்போதும் இருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் நான் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். அமைச்சர் என்பது அவர் எனக்கு வழங்கியிருக்கின்ற வேஷம். நான் வேஷம் போட்டு நாடகம் ஆட விரும்பவில்லை, நடிக்கவும் நான் விரும்பவில்லை. ஆனால், உண்மையாக நடக்க விரும்புகிறேன். அவர் என்ன பாணியில் இந்தப் பணியை நடத்தச் சொல்லியிருக்கிறாரோ அவைகளை நடத்த வேண்டுமென்று திட்டமிட்டுத்தான் நான் இவைகளை எல்லாம் சொல்லியிருக்கிறேன். இந்தப் பணிகள் தொடங்கி நடந்து கொண்டிருப்பதில் எல்லோரும் குறை சொன்னீர்கள். அமைச்சர்கள் எல்லாம் பரவாயில்லை, முதலமைச்சர் பரவாயில்லை என்று சொன்னீர்கள். அதிகாரிகள் யாராவது நீங்கள் சொல்லுவதைக் கேட்கவில்லை என்று சொன்னால், நாங்கள் சரியாக இருந்து என்ன பயன், நாங்கள் நல்லவர்களாக இருந்து என்ன பயன்? நாட்டுக்குத் தந்த வாக்குறுதியை நாங்கள் மட்டும் எப்படி நிறைவேற்ற முடியும்? அதிகாரிகளால்தான் நிறைவேற்ற முடியும். ஆனால் அதிகாரிகள் அத்தனை பேரும் நல்லவர்கள் என்று அவர்கள் சார்பாக வாதாடுகின்ற வழக்கம் எனக்கில்லை. அதை நேரடியாகவே நீங்கள் பார்த்திருப்பீர்கள். இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரிகின்ற அளவுக்குத்தான் நான் நிர்வாகத்தை நடத்தி வந்திருக்கிறேன். ஒளிவு மறைவு அற்று இருக்கிறேன். ஆனால், எனக்கு ஒரு பெருந்த உதவியை நீங்கள் செய்திருக்கிறீர்கள். இடையிலே ஜனநாயகப்படி உள்ளாட்சித் தேர்தல் நடக்காதபோது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே உறுப்பினர் நீங்கள்தான். நீங்கள் எனக்குத் தந்த ஆலோசனைகள், எனக்கு வழங்கிய உத்தரவாதங்களின் அடிப்படையில்தான் பல நாணயமற்ற முறையில் நடைபெற்ற திட்டங்கள் மற்றும் வீணடிக்கப் பட்டவைகளை எல்லாம் கண்டுபிடித்து, கணக்கப்பட்ட வேலைகளைத் துருவிக் கண்டுபிடித்து செய்யப்பட்டன. இவை அத்தனைக்கும் நீங்கள் எனக்குக் கொடுத்த ஒத்துழைப்புதான் காரணம் என்பதை நான் மறக்கவில்லை. ஆனால் நீங்கள் கொஞ்சம் மறந்துவிட்டீர்கள். இதை

நான் சொல்லித்தான் ஆகவேண்டும். அதற்கு என்ன காரணம். இந்த ஆட்சி வந்து எத்தனை நாட்கள் ஆயிற்று? எங்கே வேலை சுறுசுறுப்பாக நடக்கவில்லை? ஆமை வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு என்ன அடையாளம்?

ஒரே ஒரு புள்ளிவிவரத்தை நான் உங்களுக்கு இன்றைக்குச் சொல்ல வேண்டும் என்கின்ற ஆசையோடுதான் எடுத்து வந்தேன். நம்முடைய ஆட்சி அமைந்த நேரத்தில், இந்த நாட்டில் இந்தத் துறைக்குச் சம்பந்தப்பட்ட பணிகள் எத்தனை பாக்கி இருந்தன என்று கடந்த ஐந்து ஆண்டுகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் இந்த ஆண்டு நாம் எடுத்திருக்கின்ற வேலைகளைப் போல 1¾ பங்குக்கும் அதிகமான பணிகள் நிலுவையாக இருந்தன. அந்த நிலுவைப் பணிகள் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 1,14,143 பணிகள் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அன்று நிலுவையில் இருந்தன. அதாவது 1991-லிருந்து 1996 வரையில் 1,14,143 பணிகள் பாக்கி இருந்தன. அவற்றில் குறிப்பாக, முக்கியமான பணிகள் என்று எடுத்துக்கொண்டால், தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டிடங்கள், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடங்கள், ஜீவன்தாரா கிணறுகள், சாதா சாலைகள், கற்சாலைகள், தார்ச் சாலைகள் என்று கணக்குப் போட்டால், இதுதான் முக்கியப் பணிகள் என்று நாம் எடுத்தால்கூட, தொகுப்பு வீடுகளில் மட்டும் ஏறத்தாழ 80 ஆயிரத்து சொச்சம் வீடுகள் பாக்கி இருந்தன. நாம் இந்த முறை கட்ட வேண்டுமென்று துவக்கியிருப்பது 71 ஆயிரம் வீடுகள். ஏற்கனவே இருந்த பாக்கி 81 ஆயிரம் வீடுகள். நாம் பொறுப்பு ஏற்றது மே மாதம். சட்டமன்றம் கூடியது ஆகஸ்டு மாதம். சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கைமீது விவாதம் முடிந்ததும், அதற்குப் பிறகு செப்டம்பரிலே உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று இதே அவையிலே அறிவித்தார்கள், அறிவுரை வழங்கினார்கள், உத்தரவாதம் அளித்தார்கள். இந்தத் தேர்தல் துவங்கியதிலே இரண்டு மாத காலம் இந்தத் துறையினருக்கு வேலை இருந்தது. அதிகாரிகளைத் தேர்தலிலே பயன்படுத்தினோம். சுற்றி வளைத்துப் பார்த்தாலும் 9 மாதங்களில், இரண்டு மாதங்கள் தேர்தல் பணி, இரண்டு மாதங்கள் சட்டமன்றப் பணி, இதற்குப் பிறகு நிதிநிலை அறிக்கை எல்லாம் முடிந்து, நிதி ஒதுக்கீடு 2½ மாதங்கள் கழித்துத்தான் வந்திருக்கிறது. நான் முதலமைச்சருக்கும் சேர்த்துதான் சொல்லுகிறேன். காரணம் என்னவென்றால், நீங்கள் சாதாரணமாகக் கேட்கிறீர்கள். அவர் துல்லியமாகப் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு, உன்னால் எப்படிச் செய்ய முடியும், உன்னால் முடியாது என்றே என்னிடத்திலே சொன்னார்.



இதை நான் இந்த நான் முடியும் என்று சொல்லியிருக்கிறேன். இதை நான் இந்த அவையிலே சொல்வதற்குக் காரணம், திரும்பவும் அவர்கள் சொன்ன பணியை நான் மேற்கொண்டு முடிப்பேன் என்கின்ற உறுதியை நிலைநாட்டத்தான் சொல்லுகிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இதற்காகத்தான் இதை திரும்பத் திரும்ப குறிப்பிடுகிறேன். 80 ஆயிரத்து சொச்சம் வீடுகள் அப்போது பாக்கி இருந்தன. எப்படி இருந்தன? சாதாரணமாகக் கட்டவில்லை, அப்படியே இருந்தன. அவன் கட்டவில்லை. இவனைக் கட்டச் சொல்லலாம் என்ற நிலையிலா இருந்தன, இல்லை. எப்படி இருந்தன? அதை வேறு ஒருவருக்குக் கொடுத்தார்கள். அதை அதிகாரிகளே எடுத்தார்கள். அதைப் பயனாளிகள் என்ற பெயராலே அப்போது இருந்த ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்தார்கள். அப்போது இருந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் எடுத்தார்கள். முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் எடுத்தார்கள். இப்படி எடுத்துக் கொண்டு ஏறத்தாழ 32 கோடி ரூபாய்க்கு மேல் அவர்கள் முன்பணமே பெற்றுவிட்டார்கள். இதிலே வரவு-செலவு எப்படிச் செய்வது? ஏற்கெனவே, 1995-ம் வருடத்தில் இருந்த மதிப்பீட்டுத் தொகை என்ன? 1996-ம் வருடத்தில் இருக்கிற மதிப்பீட்டுத் தொகை என்ன? அதற்கும் இதற்கும் உள்ள இடைவெளித் தொகையை யார் கொடுப்பது? அவர்கள் வாங்கிச் சென்று போன பணத்தைத் திருப்பி எப்படி வசூலிப்பது? எப்போது வசூலிப்பது? எப்போது பணியைத் தொடங்குவது? எப்படிக் கட்டி முடிப்பது என்று இந்தச் சங்கடத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தபோது, ஒரு முடிவுக்கு வந்து, இது போனது போகட்டும், அவர்களிடமிருந்து வசூலிப்பதை முறைப்படி வசூலிப்போம், ஆனால் பணியைத் துவங்குவோம் என்ற நோக்கத்தோடு, முதலமைச்சர் அவர்கள் அளித்த உறுதியின் அடிப்படையில் வேலையைத் துவங்கினோம்.

பிற்பகல் 3-40

80,000 வீடுகளில், ஏறத்தாழ 45,000 பழைய தொகுப்பு வீடுகளைக் கட்டி முடித்தோம். மீதி வீடுகளையும் கட்டி முடித்தோம், அதற்கு பிறகு, இந்த ஆண்டு நாம் எடுத்துக் கொண்ட பணி, இதிலே 60,000 ஆதிதிராவிட மக்களுக்கும், 10,000 சொச்சம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் கட்டப்பட வேண்டிய 70,000 வீடுகளில் அத்தனை வீடுகளையும் எடுக்க வேண்டும் என்று ஆரம்பித்து அவைகளை எடுத்து, அவைகளிலே பலவற்றை முடித்து, முடியும் தருவாயில் சிலவற்றை வைத்து, அதற்குப் பிறகு அரைகுறையாக வேலை ஆரம்பித்தும், ஆரம்பிக்காமலும் இருக்கின்றன.

ஏற்கெனவே கடந்த 5 ஆண்டு காலத்தில் நடந்த குறைபாடுகளைச் சொல்லி இந்த ஆட்சியில் நான் தப்பித்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனாலும், 1990-91-ஆம் வருடத்தில் இதே துறையை நான் வைத்திருந்தபோது, அன்றைக்கு முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு புதிதாக ஒரு திட்டத்தை அறிவித்தேன். இதுவரையில் ஊராட்சி ஒன்றியத்தில் தார்ச் சாலையே போடவில்லை. எல்லாவற்றையும் துருவித் துருவி கணக்குப் பார்த்தாலும் 4,000 சொச்சம் கி.மீ. தான் தார்ச்சாலை இருக்கின்றது. அதிலும், நீங்கள் தான் இந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் பேரில், ஊரக சாலைகள் பிரிவில் கொஞ்சம் வேலை செய்து, ரோட்டைப் புதுப்பித்தீர்கள். அப்போது யூனியனுக்கு இது கிடைக்கவில்லை. அதனால், நாங்கள் இந்த ஆண்டு ஒரு 5,000 கி.மீ. தார்ச்சாலை போடுகிறோம் என்று கேட்டு, தனியாக அதற்கு ஒரு ஜி.ஓ. போட்டு, அந்த வேலையை துவங்குகிற போது, ஆட்சி கலைக்கப்பட்டது. அன்றைக்கு 2,800 சொச்சம் கி.மீ.க்கு தார்ச் சாலை போடப்பட்டது. அதற்கு பிறகு திரும்பவும் அவர் முதலமைச்சராக வருகிற வரையில், இந்தத் தி.மு.க. ஆட்சி அமைகிற வரையில், ஒரே ஒரு கி.மீ. தார்ச்சாலை இந்த ஊராட்சி ஒன்றியத்திற்குப் போட்டு இருக்கிறார்களா, அந்தக் கணக்கு இருக்கின்றதா, என்றால் இல்லை. ஆனாலும், திரும்பவும் நாங்கள் தான் இப்போது, இந்த இரண்டு ஆண்டிற்குள் 10,000 கி.மீ.க்கு தார்ச் சாலை போட வேண்டுமென்று, சென்ற முறை, இந்த மன்றத்திலே அறிவித்துவிட்டு, இவ்வளவு நெருக்கடியில், இவ்வளவு குறைந்த நேரத்தில், நீங்கள் சொல்கிற அதிகாரிகளை வைத்துக்கொண்டு, ஏறத்தாழ 5,000 கி.மீ.க்கு சாலை போடுவோம் என்று சொன்னோம், 5,420 கி.மீ.க்கு சாலையைப் போடுவதற்கு எடுத்துக்கொண்டு வேலை நடந்து கொண்டிருக்கின்றது. அதற்கு கூட, கம்பெனியிலிருந்து தாராளமாக தார் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால்தான் தார்ச் சாலை போடும் வேலை கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது. அவர்கள் குறிப்பிட்ட மூன்று மாத காலத்திற்குள் இந்தப் பணிகள் நிச்சயமாக முடியும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் யாருக்கும் வரத் தேவையில்லை. அன்றைக்கு முதல்வர் அவர்கள் அறிவித்த எண்ணிக்கையைவிட, இப்போதுகூட அந்த ஒன்றரை மாத காலத்திற்குள் இப்போதும் முடிந்த வீடுகள் அதிகம் என்ற எண்ணிக்கை வந்து கொண்டிருக்கின்றது. தினசரி கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதைவிட உங்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, வேலைகளைப் பொறுத்தவரையில் இந்த நிலைமை ; ஆனால், தொகுப்பு வீடுகளினுடைய நிலைமை என்னவென்றால், 49,000 வீடுகளை அங்கே கட்டி



முடித்திருக்கின்றோம் என்று சொல்லும்போது, உள்ளபடியே, இந்த ஒரு வருடம், இந்தப் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளே என்று சொன்னால், நிச்சயமாக 5 மாத காலத்தில்தான் கட்டி முடித்திருக்கின்றோம் என்று சொன்னால், அது மிகையாகாது. எவ்வளவு இடையூறுகள், அதிலே 10 மாவட்டங்களில் பெரு மழை பெய்து ஒன்றரை மாத காலம் காலையே வைத்து வேலை செய்ய முடியாமல் இருந்ததையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறேன். அதனுடைய அடிப்படையில் கணக்குப்பார்த்தால், நான் மகிழ்ச்சியடைகிறேன். அதிகமாக நான் பணி செய்ததாகத்தான், என்னைப் பொறுத்தவரையில் நான் கருதுகிறேன். நீங்கள் எப்படி இருந்தாலும், என்ன சொன்னாலும் (குறுக்கீடு) ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி. ஆனால், ஒன்றே ஒன்று. நீங்களும் இப்படியெல்லாம் தார்க்குச்சி போடுவீர்கள், பேசுவீர்கள் என்பதுதான் இந்தப் பணி இவ்வளவு விறுவிறுப்பாக நடைபெற்றதற்கு காரணமாகும். இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டே நாம் காரியங்களைச் செய்கிறோம். இனியும் அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்ய ஆரம்பிக்காவிட்டால் அது இந்த இலாக்காவுக்கு போதாத வேளைதான் என்பதை நான் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வேலை செய்கிறவர்களும் இருக்கிறார்கள்: வேலை செய்ய முடியாதவர்களும் இருக்கிறார்கள். வேலை செய்யக் கூடாது என்று இருப்பவர்களும் இருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அங்கொன்றும், இங்கொன்றும் தவறுகள் நடப்பதை நான் மறைக்க விரும்பவில்லை. இந்தத் துறையைப் பொறுத்தவரையில் தவறுகள் இருந்தேதான் தீரும் என்று நான் கருதுகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன், ஊழலை ஒழிக்கப் புறப்பட்டு, அநேகமாக ஒழித்திருக்கிறார்கள். ஆனால், என்னுடைய துறையிலே நிச்சயமாக, சுத்தமாக ஒழித்துவிட முடியுமா என்றால், நான் திடமாக அதைச் சொல்ல முடியவில்லை. அதற்கு யார் காரணம்? நானா? இந்த முதலமைச்சரா? இல்லை, இங்கே இருக்கிற நாமா? அல்லது நாம் புதிதாகத் திருத்தம் செய்தோமே அந்தச் சட்டமா? நிச்சயமாக இல்லை. எல்லோரும் கூட்டாளிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமே, அந்த மத்திய சர்க்கார் அங்கிருந்து போடுகிற திட்டத்தால், அவர்கள் தருகிற தொகையால், ஆரம்பிக்கப்படுகிற பணியால், ஏற்படுகிற ஊழலை எப்படித் தடுப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரே ஒரு உதாரணம்.

பிற்பகல் 3-45 [1997 மார்ச் 27

இங்கே இருக்கிற மற்ற அமைச்சர்கள் எல்லாம், நிதிநிலை அறிக்கையைப் படித்து முடித்து, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி, தொகையைப் பெற அனுமதி பெற்றுவிட்டால், ஓடுகிற ஓட்டத்தில் அவர்களுடைய வேலையைப் பார்க்கலாம். ஆனால், என்னுடைய இலாக்காவிலே அப்படி முடியுமா? முடியவே முடியாது. இதில் எத்தனை திட்டங்களைத் துவங்கி வேலை செய்ய வேண்டியிருக்கிறது. எவ்வளவு விதிமுறைகள், எவ்வளவு நார்ம்ஸ். ஒரு சாதாரண விஷயத்திற்குத் தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ஒரு பெரிய வேலைக்காக அல்ல, ஒரு உண்மையைத் தெளிவுபடுத்தி எழுதினார். இரண்டு முறை கடிதம் எழுதினார். வெட்கமாக இருக்கிறது. இரண்டு முறை நேரிலே அந்தத் துறை அமைச்சரிடத்திலே பேசினார். திட்டக் கமிஷனிடத்திலே பேசினார். திட்டக் கமிஷனைச் சார்ந்தவர்கள் அதை ஒப்புக்கொண்டார்கள். நியாயம்தான், ஆனால் உங்களைத் தவிர, வேறு எந்த மாநிலத்திலும் அதைக் கேட்கவில்லையே என்று அவர்கள் கேட்டதாக எனக்குத் தெரியவந்தது. ஆனால், அதை அவர் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் இங்கே வந்தார். அவரிடத்திலே எங்கள் துறையைச் சார்ந்த அதிகாரிகளை வைத்துக்கொண்டு பேசினோம். அவரும், இது நியாயம்தான் என்றார். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். அவசரப்படாதீர்கள். எல்லோரும் சேர்ந்திருக்கிற சர்க்கார் என்று மற்ற எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வார்கள். அதுவும் ஒரு சங்கடம்தான்.

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டம் — இப்படிப் போடப்பட்ட நான்கு திட்டங்களுக்கு அவர்கள் கொடுத்திருக்கிற பணத்தைக் கொண்டு திட்டமிட்டு வேலை செய்கிறோம். ஆனால், அவர்கள் என்ன சொல்கிறார்கள். இந்தத் திட்டங்கள் அத்தனையும் நிறைவேற்றப்படும்போது பயனாளிகள் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நானும் ஒப்புக்கொள்கிறேன். இப்போது தொகுப்பு · வீட்டினைப் பற்றிப் பேசினோம். தொகுப்பு வீட்டை ஒருவருக்குக் கட்டிக் கொடுக்கிறோம். அந்தத் தொகுப்பு வீட்டிற்கு ஒருவர் பயனாளி. நான் ஒத்துக் கொள்கிறேன். அவரிடத்திலே கொடுத்துக்கூடக் கட்டிக் கொள்ளச் சொல்லலாம்



[1997 மார்ச் 27]

அல்லது அவர் சொல்கிற ஒருவரை விட்டுக் கட்டிக் கொடுக்கச் சொல்லலாம். பயனாளிகள் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பது சரி.

அடுத்து, ஜீவன்தாரா கிணறு. அதை ஒருவருக்குக் கொடுக்கிறோம். அவர் கிணற்றை வெட்டிக் கொள்கிறார். அதிலே பயன் உண்டு. அவர் பெற்றுக் கொள்ளட்டும். ஆனால், இந்த இரண்டு திட்டங்களைத் தவிர, இதிலேயே பள்ளிக்கூடம் கட்டுகிறோம். அந்தப் பள்ளிக்கூடத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பிள்ளைகள் மட்டும்தான் படிக்கிறார்களா? அல்லது ஒரே ஒரு குடும்பத்தினுடைய பிள்ளைகள்தான் படிக்கிறார்களா? எத்தனை ஆயிரக்கணக்கான பிள்ளைகள் படிக்கின்றனர்? அந்தப் பிள்ளைகளின் குடும்பங்கள் எல்லாம் பயனாளிகள்தானே. அப்படியிருக்கும்போது, யாரிடத்திலே கொடுத்து கட்டிடம் கட்டச் சொல்வது? வேலையை யாரிடத்திலே ஒப்படைப்பது?

அதுபோல், தார்ச் சாலை. தார்ச் சாலை போடுகிறோம். அதிலே யார் யார் நடக்கிறார்கள்? வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள்தான் நடக்கிறார்களா? அல்லது ஒரே ஒரு குடும்பம்தான் நடக்கிறதா? எவ்வளவு பேர் நடக்கிறார்கள்; எவ்வளவு கார்கள் போகின்றன; எத்தனை பேர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதிலே பயனாளியைத் தேர்வு செய்ய வேண்டுமென்று சொன்னால், யாரைத் தேர்வு செய்வது? சரி, அதையெல்லாம் பார்த்துக் கொண்டு காலம் ஓட்டினால், அந்தச் சாலையை எப்படிப் போடுவது? அந்தப் பள்ளிக்கூடத்தை எப்படிக் கட்டுவது? அந்தத் தொகுப்பு வீட்டினை எப்படிக் கட்டுவது? முடியவே முடியாது. எனவேதான், எது எப்படி இருந்தாலும், இந்தப் பணிகள் தடைப்பட்டு விடக்கூடாது; மத்தியில் உள்ள அவர்களிடமிருந்து வருகிற பணம் திரும்பி விடக்கூடாது, இரண்டாவது முறை வருகிற பணம் தடைப்பட்டு விடக்கூடாது என்பதற்காக, தெரிந்தே இந்தத் தவறுகளைச் செய்கிறோம் என்று சொன்னால், நான் யாரை எவ்வளவு எளிதில் கண்டித்துவிட முடியும் என்று கருதுகிறீர்கள்? அதற்காகத்தான் சொன்னேன் — நம்முடைய முதலமைச்சர் எந்த இலாக்காவிலே ஊழலை ஒழித்தாலும் ஒழிந்து விடும். அப்படி ஒழித்திருக்கிறார்; ஆனால், — உங்களிடத்திலே உறுதியாக ஊழலை ஒழித்துவிடப் போகிறேன் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள நான் தயாராக இல்லை. இதற்கு ஒரு மாற்றம் கண்டிப்பாகத் தேவை.

ஒரு நாளைக்கு இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானம் போட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைக்கலாமே தவிர, இதை ஏற்றுக்கொண்டே இருப்பது நியாயமில்லை. அதற்காகத்தான் அதை நான் உங்கள் மத்தியிலே சொல்ல வந்தேன். காலையிலிருந்து 21 பேர் சுருக்கமாகப் பேசி முடித்திருக்கிறீர்கள். இருந்தாலும் என்னை நீங்கள் எதையாவது சொல்லி நாழியாகிறது, போர் அடிக்கிறது என்று யாரும் சொல்லக் கூடாது. முதலிலேயே நான் ஒரு முறை இதைச் சொல்லியிருக்கிறேன். காரணம் என்னவென்றால் எனக்கு இன்னும் அதிக வேலை இருக்கிறது. அதற்காகத்தான் நான் உங்களிடத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 3-50

எல்லாவற்றையும்விட, மிக முக்கியமானது ஊராட்சி மன்றங்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள். நாங்கள் முன்பு ஆட்சிக்கு வந்தபோதே திட்டமிட்டோம். மொத்தம் 12,500 சொச்சம் அலுவலகக் கட்டிடங்கள் தேவை. அவைகள் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து ஏறத்தாழ 6,000 அலுவலகக் கட்டிடங்கள்தான் 1989-ல் இருந்தன. கிட்டத்தட்ட 6,000 சொச்சம் அலுவலகக் கட்டிடங்கள்தான் இருந்தன. அதற்குப் பிறகு நாங்கள் பொறுப்பேற்ற இரண்டே ஆண்டுகளில் ஆறாயிரத்திச் சொச்சம் அலுவலகக் கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டு 1990-91 இல் ஏறத்தாழ 3,800 அலுவலகக் கட்டிடங்களைக் கட்டி முடித்துவிட்டோம். இன்றைக்கு ஏறத்தாழ மூவாயிரத்து நானூற்றுச் சொச்சம் கட்டிடங்கள் கட்டவேண்டியது பாக்கியிருக்கிறது.

இந்த முறை மூன்றில் ஒரு பங்கு மகளிர் வந்திருக்கிறார்கள்; ஊராட்சி மன்றத் தலைவர்களாக இருக்கிறார்கள்; ஊராட்சி உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஏற்கெனவே கட்டப்பட்ட மன்றங்களில் கட்டிடங்களுக்கெல்லாம் இதுவரை கழிப்பறை வசதி இல்லை. கழிப்பறை வசதி செய்து தர இந்த அரசு இப்போது முடிவெடுத்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள். அத்தனை ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கும் கழிப்பறை வசதி உடனடியாக இந்த ஆண்டே செய்து கொடுக்கப்படும் என்று முடிவெடுத்திருக்கிறோம். அதோடுகூட, முன்னூற்றிச் சொச்சம் ஊராட்சி அலுவலகங்களுக்குக் கழிப்பறை வசதி உட்பட புதிய அலுவலகக் கட்டிடங்கள், புதிய மதிப்பீட்டில் இந்த ஆண்டே செய்து முடிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

அதைப்போல, சென்ற முறை நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது, இருக்கிற பள்ளிகள் அத்தனையையும் கணக்கிட்டு, எங்கெங்கே எத்தெந்தப்



பள்ளிகள் எந்த அளவுக்குப் பழுது பார்க்கப்பட வேண்டியிருக்கிறது; அதற்கு எவ்வளவு ரூபாயானாலும் பரவாயில்லை என்று, அதிகாரிகளை அனுப்பி கணக்குப் பார்த்து, அத்தனைப் பள்ளிகளும் ஒரே ஆண்டில் பழுது பார்த்துக் கொடுக்கப்பட்டது. நாமும் பழுதுபார்க்கும் வேலையை முடித்தோம். நம்மையும் கதை முடித்து அனுப்பிவிட்டார்கள். அதற்குப் பிறகு 6 ஆண்டுகளாக அந்தப் பள்ளிகளைப் பற்றி கவலைப்பட்டவர்கள் யாராவது உண்டா? யாராவது கேட்டவர்கள் உண்டா? இரண்டும் இல்லை; கவலைப்பட்டவர்களும் இல்லை; பள்ளிக்கூடத்திற்கு கதவு இல்லாமல் இருக்கிறதே, ஜன்னல் இல்லாமல் இருக்கிறதே, கீழே தளம் இல்லாமல் இருக்கிறதே என்று யாரும் கேட்டவர்கள் இல்லை, யாராவது கவலைப்பட்டார்களா என்றால் இல்லை.

நாம் பொறுப்பேற்ற பிறகு, ஒருமுடிவு எடுத்திருக்கிறோம். ஊராட்சி ஒன்றியத்திற்குச் சம்பந்தப்பட்ட அனைத்துப் பள்ளிகளில் பழுதுபார்ப்பு வேலையிருந்தால், அத்தனையையும் பழுது பார்த்து இந்த ஆண்டிலேயே முடித்துவிடுவது என்று முடிவெடுத்து அறிவித்திருக்கிறோம். இதுதான் உண்மை. எல்லாவற்றையும் விட, நீங்கள் எல்லோரும் பேசும்போது ஒன்றைச் சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். பணிகள் நடக்கவில்லை என்றெல்லாம் சொன்னீர்களே தவிர, எனக்குள்ள சங்கடங்கள் எவ்வளவு இருக்கிறது என்று சொல்லியிருந்தால், எனக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருந்திருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இன்னும் கொஞ்சம் எடுத்துச் சொல்லும் வாய்ப்பைப் பெற்றிருக்க முடியும். ஒன்றைக் குறிப்பிட்டீர்கள், எங்களுக்கு ஜீப் தரவில்லை என்று. ஜீப் இருக்கிறதா? 384 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஜீப் என்று கணக்கு இருக்கிறது. ஆனால் 206 ஜீப்புகள் கண்டம் செய்யப்பட்டு மூன்று மாத காலம் ஆகிவிட்டது. 206 ஜீப்புகள் உபயோகத்தில் இல்லை. இருந்தாலும் அந்த வேலைகளை நாம் நடத்த வேண்டுமென்று முயற்சித்து, நடத்திக் கொண்டிருக்கிறோம். அதை மாண்புமிகு முதல்வரிடத்தில் தெரிவித்ததால், அவர்கள் பெரிய மனது வைத்து - எனக்கு சில சங்கடங்கள் இருக்கின்றன. சங்கடங்களைத் தீர்த்துக் கொடுங்கள், நான் நீங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றுகிறேன் என்று சொன்னேன்— 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 384 ஜீப்புகள் வழங்க வேண்டுமென்று கேட்டேன், அவர்கள் ஒத்துக்கொண்டு, தட்டில்லாமல் அனுமதித்து இருக்கிறார்கள். ஆனால் முழுத் தொகையைத் தரவில்லை. 5 கோடி ரூபாய்தான் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். 5 கோடி ரூபாயில் 384 ஜீப்புகள் வாங்குவதற்கு அனுமதித்து இருக்கிறார்கள். இந்த 384

ஜீப்புகளும் 5 கோடி ரூபாயைத் தாண்டிதான் விலைபெறும். அவர்களுக்குரிய அன்றாடச் செலவினங்களுக்காக, நிர்வாகச் செலவிற்காக கொடுக்கப்படுகிற தொகையில் ஈடு செய்ய முடியும். அதிலே ஒன்றும் சங்கடம் இல்லை. அந்த தைரியத்தோடுதான் அதைப் பெற்றிருக்கிறேன். இந்த 384 ஜீப்புகளில், 206 ஜீப்புகளை ஏற்கெனவே கன்டம் ஆகிவிட்டவைகளுக்கு ஒதுக்கிவிட்டு, அதற்குப் பிறகு மிகுதி இருக்கிற ஜீப்பை மக்கள் தொகை எண்ணிக்கையிலேயும், வேலைப் பளு அடிப்படையிலேயும் விஸ்திரணத்தைக் கணக்கிட்டும், எந்தெந்தத் தொகுதிகளுக்கு 2 ஜீப் வழங்கப்படலாம் என்று கணக்கிட்டு, அவற்றுக்கு 2 ஜீப்புகள் வழங்கலாம் என்றும் நான் உத்தேசித்து இருக்கிறேன்; அதைத் திட்டவட்டமாக அறிவித்தும் இருக்கிறேன். ஏற்கெனவே சொன்னேன், இந்த இரண்டு பணிகளையும் சேர்த்துச் செய்ய வேண்டிய சூழ்நிலை வந்து இருக்கிறது.

பிற்பகல் 3-55

இப்போது இரண்டு கட்டம், நீங்களே சொன்னீர்கள். ஊராட்சி மன்றப் பணியை ஊராட்சி மன்றத் தலைவரே நடத்துகிறார். ஆனால் அவருக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். யூனியன் என்ஜினியர் அவருக்கும் உதவி செய்யவேண்டும். அதேபோல் ஊராட்சி ஒன்றியத்திலும் வேலை செய்ய வேண்டும். அதேபோல அந்தப் பணிகள் அங்கேயும் இருக்கின்றன; அந்தப் பணிகள் இங்கேயும் இருக்கின்றன. இதிலே இருக்கிற பணிகள் வரவர அதிகமாகிவிட்டன. கணக்கிட்டுப் பார்த்தால், சென்ற ஆண்டுக்கும்—முதல் ஆண்டுக்கும்—இப்போது இந்த ஆண்டுக்கும் வழங்கி இருக்கிற நிதியைப் பார்த்தால் 3 பங்கிற்கு மேல் சில திட்டங்களில் நிதியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், அதே யூனியன் பொறியாளர்களை வைத்துக்கொண்டு, 384 பேரை வைத்துக்கொண்டு—சுந்தரம் அவர்கள் கூடச் சொன்னார்; எதிர்க்கட்சியாக இருந்தாலும்கூட பரவாயில்லை; அவர் எனக்கு ஆதரவு தருவது போலச் சொன்னார்; உங்களுக்கு என்ஜினியர்கள் பத்தாது; நீங்கள் கூடத்தான் வாங்க வேண்டும் என்று இந்த ஆண்டுகூட சொன்னார். சென்ற ஆண்டு நீங்கள் எல்லாம் சொன்னீர்கள். ஆனால் 384 பேரோடு இன்னொரு 384 பொறியாளர்கள் தேவை என்று குறிப்பிட்டு, அவர்களுக்கு அனுமதி அளிக்கக் கேட்டோம். இங்கே இருக்கிற துறைகளில் கேட்கும்போது, அவரவர்களுக்கும் என்னைவிட கஷ்டம் வந்துவிட்டது. பொதுப் பணித் துறையா, அதைப்போல 3 பங்கு வேலை செய்ய ஆரம்பித்து விட்டார்கள்; அதேபோல நெடுஞ்சாலைத் துறையா, அவர்களுக்கும் 3 பங்கு வேலை



வந்துவிட்டது. நானே வைத்து இருக்கிற குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து இருநூற்று சொச்சம் பேர் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். வறட்சிக்கு என்னை அனுப்பினார்கள். நானும் திரு. துரைமுருகனும் போனோம். அங்கு பார்த்த பிறகு, திரும்பி வந்து, குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள 200 பேரில் 100 பேருக்கு மேல் எடுத்துக்கொள்ளாதீர்கள் என்று இந்த ஊரக வளர்ச்சித் துறைக்கு நானே சொல்லிவிட்டேன். 100 பேருக்கு மேல் கொடுக்க முடியாது என்று நானே சொன்னேன். அதற்கு என்ன காரணம் ? அவர்களுக்கும் பணி அதிகரித்து விட்டது. அவர்களை எடுத்தால் தென் மாவட்டங்களிலே இருக்கிற வறட்சியைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகையினால் அந்தத் துறையிலே அவர்களும் குறைந்து விட்டார்கள். பொதுப் பணித் துறையிலும் இதற்கு மேல் கொடுக்க முடியாது என்ற நிலைக்கு வந்து விட்டார்கள்.. நெடுஞ்சாலைத் துறையிலும் அப்படி வந்துவிட்டார்கள். இவர்களைத் தவிர பொறியாளர்களை வேறு எங்கு போய் கேட்பது? ஏறக்குறைய இவர்கள் அளித்து இருக்கிறது போக, மிகுதி இருக்கிற பொறியாளர்கள் எப்படியும் இந்தத் துறைக்குத் தேவை என்பதையொட்டி, எங்கள் துறைக்கே மற்ற மற்ற துறைகளிலிருந்து கொடுத்து இருக்கிற பொறியாளர்களைத் தவிர மிகுதிப்படுகின்ற பொறியாளர்களை நாங்களே தேர்வாணையத்தின் மூலமாகத் தெரிவு செய்துகொள்ளலாம் என்ற பெருமையான உத்தரவை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் முறையாக, இந்தத் துறை தோன்றிய காலத்தில் இருந்து, ஊரக வளர்ச்சித் துறை தோன்றிய காலத்தில் இருந்து, இன்றுதான் இந்தத் துறைக்கென தனியாக பொறியாளர்கள் நியமனம் செய்கிற உத்தரவை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அநேகமாக, நாளை மறுநாள் தேர்வாணையத்திற்கு எழுதப்பட்டு, அவர்கள் முறைப்படி எங்களுக்கு பட்டியல் அனுப்பி, அதை நிறைவு செய்வதாக இருக்கிறோம். அதற்குப் பிறகு பணிகள் துரிதமாக நடைபெறுகிற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே அங்கொன்றும் இங்கொன்றும் தவறுகள் சுட்டிக்காட்டப் பட்டதையொட்டி, எனக்குக் கிடைத்த தகவலை வைத்துக்கொண்டு, முடிந்தவரை ஒரு விழிப்புணர்வுக் குழு ஆரம்பித்தோம், எங்கள் துறையிலே நல்ல உயர்ந்த அதிகாரிகள், சிறப்பாகப் பணியாற்றுகிறவர்களைச் சேர்த்து

ஒரு குழு அமைத்து 5 பேர்களை நியமித்தோம். உங்களைப் போன்றவர்களிடம் இருந்து புகார்கள் வந்தால், அல்லது பொதுமக்களிடத்தில் இருந்து புகார்கள் வந்தால், அந்தப் புகாரை அந்தக் குழுவிற்கு அனுப்பி, உரிய விசாரணை நடத்தி, அந்த விசாரணையின் பேரில் என்ன தண்டனை வழங்கலாம்—அவர்களைக் கண்டிக்கலாமா அல்லது தண்டிக்கலாமா அல்லது மன்னிக்கலாமா என்றெல்லாம் பார்த்து பல பேரை இன்றையதினம் தற்காலிக வேலை நீக்கம் கூட. செய்து இருக்கிறோம்; பல பேர் மீது கிரிமினல் வழக்குகூட தொடுத்து இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகளை நான் உங்களுக்குச் சொல்வதற்குக் காரணம், நாங்கள் விட்டுவிடவில்லை; அதேநேரத்தில் கடுமையாக இருக்கிறோமே தவிர, கொடுமையாக இருக்கக்கூடாது என்ற உணர்வோடு பணியாற்றத் துவங்கி இருக்கிறோம். அதனால் சில பேர் எங்களை சாமானியர்கள் என்றுகூடக் கருதலாம். நான் சாமானியனாக இருக்கலாம். எங்கள் முதலமைச்சர்கூட தன்னையே சாமானியன் என்றுதான் சொல்லுவார். இருந்தாலும்கூட, நாங்கள் ஒருவர் மீது எடுக்கிற நடவடிக்கைகளை பாரபட்சம் காட்டாமல் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். யாரையும் அருகில் நெருங்க விடுவது இல்லை. அதேபோல் பல பேர் இன்னமும் தவறு செய்ததாகச் சொல்லி அந்தத் தவறுகளை நீங்கள் என்னிடம் சொல்லி இருக்கிறீர்கள். இங்கேயே சொன்னேன். அதைநான் மறுக்கவும் இல்லை, மறைக்கவும் இல்லை. உண்மையாக இருந்தால் நிச்சயமாகச் சொல்கிறேன், விழிப்புணர்ச்சி குழு மூலமாகக் கூட அல்ல, இன்னும் தனிப்பட்ட முறையிலே கூட அதிகாரிகளை அனுப்பி, நடவடிக்கை எடுக்கக்கூட நான் காத்திருக்கிறேன். அதைப்பற்றி ஒளிவு, மறைவு இல்லாமல் என்னிடத்திலே தகவலை நீங்கள் தெரிவிக்கலாம்.

பிற்பகல் 4-00

இதையும் விட, இதையும் தாண்டி, சில சங்கடங்கள். பொதுவான பணிகளுக்குத் தொகை ஒதுக்கீடு செய்கிறபோது, கொஞ்சம் உயர்ந்த தொகைக்கு, கொஞ்சம் கூடுதலான தொகைக்கு கொடுப்பதாக இருந்தால் கூட சில சில விதிகள் நம்மை சங்கடப்படுத்துகிறது. உங்களுக்கு நான் சொல்லவேண்டுமானால், குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் நீரத்தநல்லூர் என்ற சந்தை - கால்நடைச் சந்தை இருக்கிறது. சினிமாவில் கூட பாட்டு வரும், தலைவர் அவர்களுக்குக்கூட தெரியும். 'மணப்பாறை மாடு கட்டி, மாயவரம் ஏரு பூட்டி' என்று பாட்டு வரும். அந்த மாடுகள் மணப்பாறையில்கூட கிடைக்காது. அங்கே விற்கமாட்டார்கள். அங்கே மாடு வந்தால் கூடுதலாக விற்பார்கள் என்று சொல்லி,



நீரத்தநல்லூர் வந்துதான் வாங்குவார்கள். அந்த நீரத்தநல்லூர் கால்நடைச் சந்தை அதாவது மந்தை, கடந்த நான்காண்டு நடந்த ஆட்சியிலே அந்த மந்தையே இல்லை. அந்த மந்தையை நான் போய்ப் பார்த்தேன். என்னால் தாங்கமுடியவில்லை. காரணம், நமது தலைவர் அவர்கள் முதன்முறையாக முதலமைச்சராக இருந்த நேரத்தில், அந்த மந்தைக்காக அப்போதே 20 லட்சம் ரூபாய்க்கு அனுமதி வாங்கி முள் வேலியெல்லாம் போட்டு, மரக்கன்றுகள் நட்டு, அந்தப் பஞ்சாயத்து யூனியன் மூலமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்தோம். இப்போது அங்கே முள் வேலியையும் காணோம், மரக்கன்றுகளையும் காணோம். மின்சார கம்பங்கள் நட்டோம், விளக்குகள் போட்டோம். அந்த விளக்குகளையும் காணோம், வெட்டியதுபோக ஆயிரத்து சொச்சம் புளிய மரங்கள் இப்போது இருக்கின்றன. தண்ணீர் வசதி செய்து கொடுத்தோம். அதையும் காணோம். அப்படிப்பட்ட இடங்களுக்கு என்ன செய்வது என்று கருதித்தான், அந்தக் கால்நடைச் சந்தையின் பாரம்பரியத்தைக் காக்கவேண்டுமென்று இந்த அரசு ஒரு முடிவெடுத்து, அதற்குப் பிறகு 30 லட்சம் ரூபாயை, அதைச் சீரமைப்பதற்காக இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது பாபநாசம் தொகுதியில் தான் இருக்கிறது. அந்த எம்.எல்.ஏ. திரு. கருப்பண்ண உடையார் இப்போது இங்கு இல்லை. இருந்தால் நன்றி தெரிவிப்பார். ஆக அந்த மந்தை இருக்கிறது, அந்த மந்தைக்கு ஒதுக்கிய இந்தப் பணம் போதாது. அடுத்த ஆண்டிலும் செய்யலாம், இப்போது நிதி நெருக்கடியாக இருக்கிறது என்பதற்காக இப்போது இதை மட்டும் ஒதுக்கியிருக்கிறோம். இது ஒரு சாதாரண அறிவிப்புதான்.

அதைப்போல, மொத்தம் உள்ள 12,584 ஊராட்சி மன்றங்களில் இருக்கிற அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டிடம் போக, நான் ஆரம்பத்திலேயே சொன்னதைப் போல, 341 கட்டிடங்கள் ஊராட்சி மன்றங்களுக்காகக் கட்டவேண்டியிருக்கிறது. அநேகமாக இந்த ஆண்டே அது கட்டி முடிக்கப்படலாம். அதோடுகூட கழிப்பறை வசதி இல்லாத ஊராட்சி மன்றங்களுக்கும் கழிப்பறை வசதிகள் செய்து கொடுத்துவிடலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். இது எல்லாம் சாதாரண வேலைகள், ஆனால் ரொம்ப அத்தியாவசியமான வேலைகள். அதோடுகூட, பொறியாளர்கள் எல்லாம் என்னதான் இருந்தாலும், இன்னும் இரண்டு மாமாங்கம் ஆகிவிடுமோ என்று அச்சப்படுத்துகிறார்கள். அவர்களும் இருக்கிற வேலையை ஒட்டி செய்வார்கள். அங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களின் பெருந்தலைவர்களையும், ஊராட்சி மன்றத் தலைவர்களையும்,

மற்றவர்களையும் நான் உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்வது. அவரவர்களும் பொறுப்புணர்ச்சியோடு இதிலே இருப்பார்களேயானால், நிச்சயமாக இதைவிட இன்னும் அதிகமாக வேலைகளைச் செய்யமுடியும். நாம் இப்போது செய்து முடித்தது எல்லாம், உங்களுடைய ஆலோசனைகளின்படிதான். உங்களை அழைத்துப் பேசி, உங்களோடு கலந்து எடுத்த முடிவுப்படிதான். அந்த முடிவுகளால் உருவான திட்டங்கள்தான் இவை. இவைகள் அத்தனையும் நிறைவேற அவர்களும் நடவடிக்கை எடுத்தால் ரொம்ப சாதாரணமாக இந்த வேலைகளை முடிக்கலாம்.

அடுத்ததாக அதிகாரங்கள் கேட்கிறார்கள். அவ்வளவுதான். பொறுப்பைக் கேட்கவில்லை. என்ன அதிகாரம் என்றால் எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்றுதான் கேட்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் இருக்கிறார். இவ்வளவு திட்டங்களைத் தீட்டுகிறார். இவ்வளவு அறிவிக்கிறார். அவருக்கு என்ன அதிகாரம்? இவ்வளவு உத்தரவுகள் வெளிவருவதற்கு அவரா கையெழுத்து போடுகிறார்? என் துறைக்கு வெளியே வருகிற உத்தரவுகளுக்குகெல்லாம் நானா கையெழுத்து போடுகிறேன்? சம்பந்தப்பட்ட செயலாளர்தானே கையெழுத்து இடுகிறார். முதலமைச்சருக்கு ஒரு பைசாவுக்கு செக் கொடுக்க அதிகாரம் இருக்கிறதா? இந்தத் துறையைக் கண்காணிக்கிற எனக்கு செக்கில் கையெழுத்துப் போடுகிற அதிகாரம் இருக்கிறதா? எல்லோரும் அதிகாரம் வேண்டுமென்று சொன்னதையே சொல்கிறார்களே தவிர, இன்ன அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்களா? என்னிடத்திலே ஒருவர் சொல்கிறார். அந்த அதிகாரி என்னை மதிப்பதில்லை. இந்த அதிகாரி என்னை அழைப்பது இல்லை, என்னை ஆதிதிராவிடர் என்று கேவலமாக நினைக்கிறார்கள். என்னைப் பெண் என்று அலட்சியம் செய்கிறார்கள் என்று இப்படிப்பட்ட குறைபாடுகள்தான் வருகிறதே தவிர, எழுத்து மூலமாக இன்ன அதிகாரி இன்ன குற்றத்தைச் செய்தார் என்று என்னிடத்தில் இன்று கொடுத்தால், நாளைக் காலையில் நடவடிக்கை எடுப்பதற்கு நான் காத்திருக்கிறேன்.

பிற்பகல் 4-05

ஒரு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுகிற இடுக்கண்களைச் சரி என்று ஏற்றுக்கொண்டிருப்பேனேயானால், நான் ஒரு ஜனநாயக வாதியும் அல்ல, இதற்குத் தகுதி படைத்த அமைச்சர் பொறுப்பில் இருக்கவும் லாயக்கானவனும் அல்ல. அதற்காகத்தான் இந்த அவையிலேயே வேண்டுகோள் விடுக்கிறேன். அவர்கள் என்னுடைய வேண்டுகோளைப் பணிவன்போடு ஏற்றுக்கொள்ள



வேண்டும். என்ன அதிகாரங்கள் குறைந்திருந்தாலும் அவைகளை நிவர்த்தி செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயங்கமாட்டார்கள். நான் உங்களுக்கு இந்த இடத்திலே குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். அவர்கள் ஒரு மாநாட்டை நடத்தி அந்த மாநாட்டிலே பல தீர்மானங்களைப் போட்டார்கள். அதிலே பலவற்றை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேடையிலேயே அறிவித்தார்கள். இன்னின்னவைகளைச் செய்யலாம் என்று அவர்கள் அறிவித்தார்கள். அதிலேகூட இன்று தங்களுக்கெல்லாம் படி கொடுக்கவில்லை. தங்களுக்கெல்லாம் அந்தச் சலுகைகள் எல்லாம் இல்லை என்று சொன்னார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கெல்லாம் படி கொடுக்கிற அளவிற்கு நாங்கள் இப்போது உத்தரவிட்டிருக்கிறோம். அந்த உத்தரவு போனபிறகு அவர்கள் நடைமுறைப்படுத்திக் கொள்வார்கள். எல்லா ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் அத்தனைபேரும் முதல் வகுப்பில் பிரயாணம் செய்கிற அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் புகை வண்டியிலே பிரயாணம் செய்வதனால், ஊராட்சி மன்றத் தலைவர் முதல் வகுப்பிலே போகலாம். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் முதல் வகுப்பிலே போகலாம். மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் முதல் வகுப்பிலே போகலாம். அதேபோல மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களும் முதல் வகுப்பில் போகலாம், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் இரண்டாவது வகுப்பில் செல்லலாம். அவர்களுக்கு 100 ரூபாய் தினப்படி. இவர்களுக்கு 75 ரூபாய் தினப்படி. ஊராட்சி மன்றத் தலைவருக்கு 50 ரூபாய் சிட்டிங் பீஸ். அதேபோல ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு 25 ரூபாய். இப்படி ஒவ்வொருவருக்குமாக அவர்களுக்குரிய பயணப்படிகள், அவர்களுக்குரிய தினப்படிகள், அவர்களுக்கு உரிய சிட்டிங் பீஸ் இவைகளையும் இன்றையதினம் நாங்கள் அனுமதித்திருக்கிறோம். அநேகமாக இது முடிந்தவுடன் இவைகளெல்லாம் அவர்களுக்கு உத்தரவாக அனுப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அமர்வுக்கட்டணம் 75 ரூபாய். அதுபோல, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களுக்கு 50 ரூபாய், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு 50 ரூபாய். உறுப்பினர்களுக்கு 25 ரூபாய். ஊராட்சி மன்றத் தலைவருக்கும் முதல் வகுப்பு. மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவருக்கும் முதல் வகுப்பு. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் முதல் வகுப்பு. நாங்கள் அவர்களை மதிக்காமலா இருக்கிறோம்.?

[1997 மார்ச் 27

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எங்கே போனாலும் உண்டா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** எங்கு போனாலும் உண்டு. அரசு அலுவல் காரணமாக எங்கே போனாலும் உண்டு, அவர்கள் இருக்கிற இடத்திலிருந்து அலுவலகத்திற்கு போனாலும் உண்டு. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், அவருக்கு ஜீப் கொடுத்தால் அவருக்கில்லை. மாவட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர், அவருக்குக் கார் இருக்கிறது. எனவே அவருக்குக் கிடையாது. ஊராட்சி மன்றத் தலைவர் வேறு வேலையாக அந்த அலுவலக அலுவலாகப் போகவேண்டிய நிலை ஏற்பட்டால் அல்லது ஒரு மாநாட்டிற்கு இங்கே வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அவர்களுக்கும் உண்டு. அதற்காகத்தான் இதைச் செய்திருக்கிறோம். வேண்டாமென்றால் நிறுத்தி விடுகிறோம் (சிரிப்பு). அதையும் கேட்கிறாரே, எங்கே போவதற்கு என்று. சினிமா பார்க்கப் போவதற்காகவா கொடுக்கப்போகிறோம்? (சிரிப்பு). எனவேதான், அதிகாரத்தைக் கேட்கக்கூடியவர்கள், எந்த அதிகாரம் வேண்டுமென்று கேட்டு, கொடுக்கிற அதிகாரம் எங்களுக்கிருந்தால் கொடுப்போம். இப்போதுகூட போசனை சொன்னீர்களே, ஊராட்சிமன்றத்தில் இருக்கிற தலைவர், ஊராட்சி ஒன்றியத்திற்குப் போக முடியவில்லை. அவர் போக வேண்டும். அதைப்போல, ஊராட்சி ஒன்றியத் தலைவர் மாவட்ட ஆட்சிக்குப் போக முடியவில்லை. அதிலே போவதற்குச் சட்டம் கொண்டு வரவேண்டும். எங்கள் கட்சியைச் சேர்ந்தவரே சொன்னார். அதை நாங்களா நிறுத்தியிருக்கிறோம்? மத்திய சர்க்காரிலே இருக்கிற சட்டத்திலே, இவர்கள் வேறு, அவர்கள் வேறு என்று பிரித்து வைத்துவிட்டார்கள். நம்முடைய சட்டத்தின் மூலமாக அது இல்லை. ஆகையினாலேதான் நாங்கள் அதைச் செய்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. இன்றும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்.

பிற்பகல் 4-10

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய சட்டத்திலேகூட ஏற்கனவே மத்திய அரசு இயற்றி இருக்கிற 73-வது திருத்தச் சட்டம், அதிலே கூட 243-வது பிரிவு (சி) அதிலே சப்-செக்ஷன் 3, அதைப்போல 4-ன்படி

"The Chairperson of a Panchayat and other Members of the Panchayat whether or not chosen by direct election from the territorial constituencies in the Panchayat shall have the right to vote in the meeting of the Panchyats" என்று இருக்கிறது. அதைப்போல 1994-ல் இதே மாமன்றத்தில் இயற்றிய சட்டத்திலேகூட டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்திலே கூட இவர்கள் எல்லாம் பங்கேற்கலாம் என்ற நிலைமை





இருக்கிறது. அப்படியிருக்க நீங்கள் மத்திய அரசுக்கு போய் அங்கே தான் செய்யவேண்டும் என்பதல்ல. இங்கேயிருக்கிற சட்டத்திலேகூட நீங்கள் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு அந்தப் பஞ்சாயத்து யூனியன் சேர்மென் போய் அட்டெண்ட் செய்யலாம். அதைப்போல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும் போகலாம் என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றியே அல்ல. ஊராட்சி ஒன்றியத்தில் இருப்பவர்கள் மாவட்ட ஒன்றியத்திற்கும், அவர்கள் இங்கேயும், இவர்கள் அங்கேயும் போக முடியுமா? அதுதான் பிரச்சினை. அது இல்லை. எம்.எல்.ஏக்கள் போவதற்கு தனிச் சட்டம் நாமே இந்த அவையில் தேவையில்லை என்று இயற்றினோம். சிலபேர் சொன்னீர்கள், பரவாயில்லை என்று விட்டுவிட்டோம். நாளைக்குக் கூட மாற்றலாம்: அதிலே ஒன்றுமில்லை. ஆனால் ஒன்றியத்தில் உள்ளவர்கள் மாவட்டத்திற்கும், மாவட்டத்தில் உள்ளவர்கள் ஒன்றியத்திற்கும் வரக் கூடாது என்று பிரிவினை வைத்திருப்பவர்கள் அவர்கள்தான். (குறுக்கீடு) இங்கே மாண்புமிகு உறுப்பினர் வீரப்பன் சொன்னதும் எம்.எல்.ஏ. பற்றி தான் சொன்னார். அதற்கு நாம் சட்டம் இயற்றி இருக்கிறோம். அதிகாரம் இருக்கிறது (குறுக்கீடு) வீரப்பன் அவர்களுக்கு முதலிலேயே சொல்லி விட்டேன். எம்.எல்.ஏ. பற்றிதான் நீங்கள் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீரப்பன்.

***திரு. கே.கே. வீரப்பன்:** தலைவர் அவர்களே, அதற்கு புரவிஷன் சென்ட்ரல் ஆக்ட்டிலும் இருக்கிறது, 1994-ல் கொண்டு வந்த ஸ்டேட் ஆக்ட்டிலும் இருக்கிறது. இரண்டிலும் தெளிவாக இருக்கிறது. கலந்துகொண்டு வோட் அளிக்கலாம் என்று தெளிவாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு வோட் அளிக்கலாம் என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களை நான் ஒப்புக் கொண்டேன். அதற்கு நம்முடைய மாநில சட்டத்திலும் திருத்தி இருக்கிறோம். அதனால் வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் உறுப்பினர்கள் போவதற்கு உரிமை இருக்கிறதா?

**திரு. கே.கே. வீரப்பன்:** இல்லை. சேர்மென், பிரசிடெண்ட் ஆகியவர்களும் போகலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, 1994-ஆம் ஆண்டு நாம் [1997 மார்ச் 27
இயற்றிய இந்த தமிழ்நாடு பஞ்சாயத்து ஆக்ட்டிலேகூட 17-வது செக்ஷன்
- அதைப் படிக்கிறேன்.

The Panchayat at Union Council constituted for any Panchayat Union shall consist of (a) elected Members as notified under Section 19; (b) the Members of the House of the People and Members of the State Legislative Assembly representing the Constituencies which comprise wholly or partly of a Panchayat Union; (c) the Members of the Council of States who are registered as electorate within the Panchayat Union; (d) such Members or the Presidents of the Village Panchayats chosen in the manner specified under the Sub-section (ii) the number of Presidents to be elected to the Panchayat Union council shall be one-fifth of the total number of the elected Members as notified under Section 19 elected by such Presidents in accordance with such procedure as may be prescribed. the Members of the House of the People and Legislative Assembly என்று 17-வதிலே இருக்கிறது. யாரெல்லாம் இதிலே..

**MR. SPEAKER:** You must read only the relevant section; there is no need for you to read the entire section. You read only that section which relates to the point you want to tell the Hon'ble Minister.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** திரு. ஞானசேகரன் அப்புறம் பேசிக்
கொள்ளலாம், உட்காருங்கள். இந்தக் கூட்டத் தொடர் இன்னும் ஒரு
மாதம் நடக்க இருக்கிறது. சட்டத் துறையை கலந்து பேசிக் கொள்வோம்.
நாம் இரண்டுபேரும் பேசி எந்த புண்ணியமும் இல்லை.

பிற்பகல் 4-15

நடவடிக்கை எதிலே எடுப்பது என்று புரியாத சூழ்நிலை. சில பேர்
என்னிடம் சிபாரிசுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக இதை
அறிவித்து விடலாம் என்று பார்க்கிறேன். ஏற்கனவே வீடுகள் கட்ட
மற்றவைகளுக்கு கம்பி, சிமெண்ட், ரொக்கமாக அட்வான்ஸ்
கொடுத்ததிலே ரூ.39 கோடியே 27 லட்சம் பாக்கி இருந்தது. இதை
ஏன் திரும்ப தேடி பிடித்து அறிவிக்கிறேன் என்றால், என்னிடம்
சிலபேர் சிபாரிசுக்கு வருகிறார்கள். எதுவும் விவரம் புரியாமல்
வருகிறார்கள். அப்படி வரக்கூடாது என்பதற்காக சொல்கிறேன்.
யாரெல்லாம் வாங்கி இருக்கிறார்கள் என்றால், ரூ.39 கோடியே 27
லட்சத்தில் 13-5-1996 வரையில், அதற்கு பிறகு கொஞ்சம், 7,807 பேரில்
- அதாவது 7,807 பேர் என்பது அரசு அலுவலர்களே. அலுவல்



[திரு. கோ. சி. மணி]

1997 மார்ச் 27] முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்
சார்பற்றவர்கள் 4,488 பேர் - பிரமுகர்கள் ஆக மொத்தம்
அப்போதிருந்த ஆளுங்கட்சியைச் சார்ந்த பாக்கியிருக்கிறது. இப்போது
12,295 நபர்களிலே 13-5-1996 வரையிலும் 19,094 கோடி ரூபாய்
நடவடிக்கை எடுத்து கடுமையான வசூல் செய்து இப்போது
நாம் ஈடுசெய்திருக்கிறோம். பாக்கி ரூபாய் இருக்கிறது. எல்லா
எதைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் கட்சிக்காரர்களையும்
ஆளும் கட்சிக்காரர்களையும் எல்லா தோழமைக் விடுவியுங்கள்,
போய்ப் பார்த்து எப்படியாவது எங்களை அதிலிருந்து எடுக்கமுடிவதில்லை
நாங்கள் வேலை செய்துவிட்டோம் கணக்கு பிரச்சாரத்தை உண்டாக்கி
—இப்படியெல்லாம் சொல்லி ஒரு தவறான நாங்கள் என்ன
உங்கள் உதவியை நாடி வருகிறார்கள். ஆனால், பணத்திற்கு அக்கவுண்ட்
செய்திருக்கிறோம் என்றால் அவர்கள் வாங்கிய மெஷர்மென்ட்
வைத்திருக்கிறோம், அவர்கள் செய்த வேலையை செய்தவர்கள்
எடுத்திருக்கிறோம். ஏ.டி.இ. கையொப்பம், வேலை கையொப்பம், எம்-
கையொப்பம், அதோடுகூட அங்கிருக்கிற பி.டி.ஓ. எஸ்டிமேட்டைத்
புத்தகத்திலே போட்டதற்குப் பிறகு அந்தப் புதிய மதிப்பீட்டு
தயாரித்து புதிதாக செய்கின்ற வேலைக்கு இப்போதிருக்கிற செய்ய
அளவை உயர்த்திக் கொடுத்து அந்த வேலையைச் 19 கோடி
விட்டிருக்கிறோம். இவ்வளவு சிரமப்பட்டு வசூல் செய்து சட்டமன்ற
ரூபாய் போக மீதியிருக்கிறது. தயவுசெய்து இப்படிப்பட்டதை
உறுப்பினர்களிடத்தில் யார் வந்தாலும் அவர்கள் உங்களிடத்தில்
அனுமதிக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் பணிகளுக்கும்
குறிப்பிட்டிருக்கிறேன். இதைப்போல இன்னும் பல ஒருமுறை,
திட்டங்களுக்கும் நாம் நிறைவு செய்யவிருக்கிறோம். இது சொல்லலாம்
நகராட்சி நிர்வாகத்தைப்பற்றி சிலவற்றை உங்கள் மத்தியிலே பொறுத்தவரையிலும்
என்று கருதுகிறேன். ஊராட்சி மன்றத்தைப் கடந்து விட்டது.
இன்னும் நிறைய இருந்தாலும்கூட காலம்

இந்த மாநிலத்திலுள்ள ஆறு மாநகராட்சிகளில் சென்னையைத் தவிர
பிற மாநகராட்சிகளில் நிர்வாகத்தை பரவலாக்குவதும் வார்டு முறைகளை
புதிதாக அமலாக்குவதும் எல்லோருடைய வேண்டுகோளாக நினைத்து
அதன்படி சென்னையில் 10 வார்டு அலுவலகங்களும், பிற
மாநகராட்சிகளில் 4 வார்டு அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.
மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நவம்பர் 30 மற்றும்
டிசம்பர் 1 ஆகிய தேதிகளில் கூட்டிய உள்ளாட்சி அமைப்புகளின்
தலைவர்கள் கூட்டத்தில் மேயர்கள் அரசுக்கு அளித்த பரிந்துரையின்
அடிப்படையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஒவ்வொரு மாநகராட்சிக்கும் ஆறு நிலைக்குழுக்கள் அமைத்தல், மேயர், ஆணையர் மற்றும் மன்றத்திற்கான நிதி ஆதாரங்களை உயர்த்துதல், சென்னை மாநகரத்திற்குத் தனியாக நியமனக் குழு அமைத்தல், சென்னை மாநகரத்தோடு சென்னைப் பெருநகர குடிநீர் வடிகால் வாரியத்தை இணைத்து ஒரு இணைக்குழு அமைத்தல் ஆகியவை இதில் முக்கியமாகும். அதோடுகூட நகர உள்ளாட்சி அமைப்புக்குக் கூடுதல் அதிகாரவரம்பு, அதிகாரங்களைப் பரவலாக்குவதில் இந்த அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் சமீபத்தில் நகராட்சிகளின் திட்டங்களுக்காக அளிக்கப்படும் நிர்வாக ஒப்புதல் பெருமளவுக்கு அரசால் கொடுக்கப்பட்டு வந்தன. இதனை மாற்றி அமைத்து சமீபத்தில் அரசு ஆணையின் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி ஆணையர் ஆகியோர்களுக்கான நிர்வாக ஒப்புதலை அளிப்பதற்கான அதிகார வரம்பு. அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஆணையின்படி ஒரு கோடி ரூபாய்க்கு மேலுள்ள திட்டங்கள் மட்டுமே அரசு ஒப்புதலுக்கு வரவேண்டும். எப்போது நீங்கள் கேட்டாலும் 'கவர்ன்மெண்ட்டில் பெண்டிங்' 'கவர்ன்மெண்ட்டில் பெண்டிங்' என்று அங்கிருக்கிற கமிஷனர்கள், இன்ஜினியர்கள் சொல்வார்கள், அதை நீங்கள் நம்பக்கூடாது. ஒரு கோடி ரூபாய்க்கு மேலே இருந்தால்தான் அரசினுடைய அனுமதிக்கே வரும். அதுவரையில் அவர்களே அனுமதியளித்துக் கொள்ளலாம். மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மாநகராட்சி ஆணையர், மன்றம் மற்றும் மேயர் ஆகியோருக்காக நிதி அதிகாரங்கள் கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கான அதிகார வரம்பு ரூ.50 இலட்சமாகவும், ஏனைய மாநகராட்சிகளின் அதிகார வரம்பை ரூ.25 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப்போலவே நகர நிர்வாக அமைப்புகளின் நிதிமேம்பாடு. 104 நகராட்சிகளின் மொத்த வருமானம் 1995-96-ல் ரூ. 295 கோடியாக இருந்தது. இதில் ரூ. 119 கோடியே 12 இலட்சம் பணியாளர்களுக்கான ஊதியத்திற்காக செலவிடப்பட்டது. இது மொத்த வருமானத்தில் 41% ஆகும். எவ்வளவு வருமானம் வந்ததோ அதில் 41% அதற்காகவே செலவிடப்பட்டது. பாக்கி 59%-க்கு பல வேலைகள். இதைத்தவிர அதிக அளவிலான நிர்வாகச் செலவின் காரணமாக இந்த அமைப்புகளின் அடிப்படை வசதிகளுக்கு புதிய பணி இடங்களை மேற்கொள்ள முடியவில்லை. எல்லோரும் இப்போது கேட்கிறீர்கள். அங்கு இருக்கின்ற ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள், ஹெட் கிளார்க் போதவில்லை என்கின்ற மாதிரியான கோரிக்கைகள் வருகின்றன. ஆனால் இடங்கள் தோற்றுவிக்கலாம் அதுபற்றி ஒன்றுமில்லை. ஆனால்



தோற்றுவிக்கப்பட்டவர்களுக்கு, நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் வழங்கவேண்டும். சம்பளம் வழங்குவதற்கான நிதிநிலை தற்போது அவர்களிடத்தில் சொந்தமாக இல்லை.

இதற்காகத்தான் நாம் சில பரிந்துரைகளை அவர்களுக்கு அனுப்பி, மேற்கொள்ள முடியவில்லையே என்பதற்காகத்தான் நாம் நிதி ஒதுக்கீட்டையும் ஓரளவிற்கு செய்து வருகிறோம்.

பிற்பகல் 4-20

மாநில நிதிக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டு உள்ளதால், நகராட்சிகளுக்கு மட்டும் கூடுதலாக சுமார் 75 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய்க் கணக்கில் நாம் வரவு செலவைச் செய்வதற்கு வாய்ப்பு அளித்திருக்கிறோம்.

1997-98-ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்படும் இந்தத் தொகை பெருமளவுக்கு இந்த அமைப்புகளின் நிதிநிலைமையைச் சீராக்கும். அதற்குப் பிறகு ஒன்றிரண்டு இடங்கள் ஏதாவது சேர்க்க முடியுமா, நியமனங்கள் செய்ய முடியுமா என்பதை ஆலோசித்துச் செய்யலாம் என்பதற்காகத்தான் இதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இது தவிர, மூலதனப் பணிகளுக்காக அரசு சுமார் 20 கோடி ரூபாயை நகராட்சிகளுக்கு 1997-98-ஆம் ஆண்டில் அளிக்க இருக்கிறது. மத்திய அரசு நிதி உதவியுடன் செயலாக்கப்படவிருக்கும், குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 1996-97-ல் சுமார் 19 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளிலே அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். அது இதுவரையில் இல்லாமல் இருந்தது. இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சருடைய பெருமுயற்சியால் அது செய்யப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்கு பிறகு, முதன் முறையாக அரசு நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்தது. இதன்படி இந்த அமைப்புகளுக்கு 1996-97-ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கினோம். எப்படி? பேரூராட்சிகளுக்கு 36 கோடி ரூபாய் கொடுத்தோம். அதைப்போலவே நகராட்சிகளுக்கு சுமார் 20 கோடி ரூபாய் கொடுத்தோம். மாநகராட்சிகளுக்கு 35 கோடி ரூபாய். அதேபோல் சென்னை மாகராட்சியைப் பொறுத்தவரையில், மாம்பலம் வாய்க்காலை தூர் எடுத்து சீரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று

மாநகராட்சியிலேயிருந்து கேட்டுக் கொண்டார்கள். அதை முழுமையாகத் தங்களால் செய்ய முடியாது, எனவே, மாநில அரசு இதில் தலையிடவேண்டும் என்று, உதவி செய்யவேண்டும் என்று கேட்டார்கள். சென்னை மாநகராட்சிப் பகுதியில் மாம்பலம் வாய்க்காலை தூர் எடுத்து சீரமைக்க, அதற்காகும் மொத்தச் செலவு ரூ. 10 கோடியே 59 லட்சம், என்று மாநகராட்சி முடிவு செய்தது. மதிப்பீட்டுச் செலவு அதற்கான 50 சதவீத செலவை அரசு மானியமாக ஏற்க முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோன்று, வட சென்னைப் பகுதியில் மிகவும் முக்கியமாகச் செய்யவேண்டிய பெரம்பூர், பட்டாளம் மற்றும் புளியந்தோப்பு பகுதியில் உள்ள-மலேரியாவைத் தடுக்க கால்வாயில் தூர் எடுக்கும் பணி எடுத்துச் செய்யப்படும். இதற்காகும் மொத்தச் செலவான ரூ. 3.53 கோடியில் அரசு சரிபாதியை சென்னை மாநகராட்சிக்கு மானியமாக அளிக்குமென நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் மதுரை மாநகராட்சி. மதுரை என்றாலே ஒரு பயம். எப்படி என்றால் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கீழ் நாம் பணியாற்றுகிறோம் இங்கே. அவர்கள் உட்கார்ந்தால்தான் உட்காரவேண்டும், எழுந்து நின்றால் எழுந்து நிற்கவேண்டும். அவர்கள் ஒன்றை முதலமைச்சர் இடத்திலே சொல்கிறார்கள்; என்னிடத்திலே சொல்கிறார்கள். என்ன சொல்கிறார்கள்? எனக்குப் பேச்சுரிமை இல்லை. உங்களிடத்திலே பேசி ஒன்றும் செய்ய முடியவில்லை. இதைச் செய்கிறீர்களா இல்லையா என்று கேட்கிறார்கள். இதிலே அவர்கள் சொன்னது 2, 3 திட்டங்கள். அவர்கள் குறிப்பிட்டது நியாயமான திட்டங்கள்தான். 484 கிலோ மீட்டர் நீளம் உள்ளது அந்தச் சாலை. அது இருப்பது, மதுரையிலே. மதுரையைப் பார்த்தால் நமக்கு அப்படித் தெரியவே இல்லை. 484 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், இருந்தபோதிலும் நிதி ஆதாரம் இல்லாததால், அவைகள் முறையாக பராமரிக்கப்படாமல் நேற்று வரை இருந்து வருகிறது. இக்குறையைப் போக்க 4 கோடி ரூபாய்ச் செலவில், சாலையை மேம்படுத்தும் பணிகள் தற்போது முடுக்கிவிடப்பட்டு முழு வேகத்தில் பணி தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

இது தவிர, உலக வங்கிக் கடன் உதவியுடன் பேருந்துத் தடச் சாலைகளை மற்றும் பிரதான சாலைகளை ரூ. 11.31 கோடி செலவில் புதுப்பிக்கும் பணி நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணி, அடுத்த ஆண்டுக்குள் முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



மதுரை மாநகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ், வை
அணையிலிருந்து தண்ணீர் வழங்கப்படுகிறது. அதை அடிப்படையாக
கொண்டே இயங்குகிறது. தற்போது தினசரி 90 மில்லியன் லிட்ட
குடிநீர் மதுரை மாநகர மக்களுக்கு வழங்கப்படுகிறது. குழாய்கள் மூல
குடிநீர் வழங்கப்படாத பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கி, ரூ. 9
லட்சம் செலவில் பிரதான குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்கு
பணியை மேற்கொண்டு உள்ளது என்பதைப் பெருமையோடு சொல்லி
கொள்கிறேன். மேலும் வைகை குடிநீர்த் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட
அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் தண்ணீர் போய்ச் சேரவில்லை
இதுவரையில், பல தொட்டிகளுக்கு தண்ணீரே எடுக்க முடியவில்லை
காரணம் பள்ளமான பகுதியிலிருந்து மேட்டுப் பகுதிக்கு பைப்
ஏற்கனவே போட்டுவிட்டார்கள். அதைச் சீர் செய்வதற்காக ரூ.
கோடியே 70 லட்சம் செலவில் திட்டமிட்டு, குடிநீர் வடிகால் வாரியப்
அந்தப் பணியை எடுத்து முடிக்கிற தருவாயில், அந்த அழுத்தத்தோ
இருக்கிற தண்ணீர் ஏறமுடியாமல் இருக்கிற தொட்டிகளுக்கும், தண்ணீ
ஏற்றி முழுமையாக குடிநீர் வழங்க முடிவு எடுப்பது என்
திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மாநகர மக்களின் நீண்டகால கோரிக்கையை படிப்படியா
நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தா
தயாரிக்கப்பட்டுள்ள பிளாக் 8-ஏ என்னும் திட்டத்தின்கீழ் விஸ்வாசபுரி
ஹார்வி நகர், ஆரப்பாளையம், கண்மாய்கரை ஆகிய பகுதிகளி
சாக்கடைத் திட்டத்தை சுமார் ரூ. 1 கோடியே 81 லட்சம் செலவி
அரசு நிதி உதவியுடன் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 4-2

அடுத்து, பாலங்கள். மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை
குறைக்கும் நோக்குடன் வைகையாற்றின் குறுக்கே ஒகுளாபடி
துறையையும், வைகையின் வடகரையையும் இணைக்கும் வகையில் ஒ
கீழ்ப்பாலம், நிலைப்பாலம் கட்ட ரூ.1 கோடி அனுமதிக்கப்பட்டிருக்கிற

அதேபோல் கீழ்நிலைப் பாலம், வைகைக்கு தென்கரையிலுள்
ஆரப்பாளையம் படித்துறையையும், வட கரையிலுள்ள அருள்தாஸ்புற
படித்துறையையும் இணைக்கும் வகையில் சுமார் 1½ கோடி ரூபா
செலவில் திட்டமிட்டு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நா
கட்டுமானக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்தப் பணியு
விரைவில் துவங்கப்பட இருக்கிறது. உலக வங்கியின் உதவியோ

செயல்படுத்தப்பட்டு வந்த தமிழ்நாடு நகர்ப்புற வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயல்படுத்த முடியாமல் போன திட்டங்கள் மதுரை நகரைப் பொறுத்தவரையில் 3 ஆகும். இவை அனைத்தும் அரசின் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் செய்யப்பட வேண்டிய திட்டங்களாகும். அந்தத் திட்டங்கள்-மதுரை புறவழிச் சாலையின் முதல் கட்டம் ரூ.27 கோடி. கல்பாலத்தின் தரைப்பாலம் மேல் ஒரு புதிய பாலம் அமைக்க ரூ.9 கோடி. மதுரா கோட்ஸ் ஆலைப் பகுதியில் ஒரு புதிய பாலம் அமைக்க ரூ.9 கோடி. இவை மூன்றுமே மிக முக்கியமான திட்டங்கள். சட்டப் பேரவைத் தலைவரவர்கள் சொன்னது மூன்றையுமே முதலமைச்சர் அவர்கள் அனுமதித்து, திட்டமிடச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணியைத் துவங்க வேண்டும். நீங்கள் இனிமேல் அதைப்பற்றி கேட்க வேண்டாம். அந்தப் பணிகளைச் செய்கின்ற, பொறுப்பு என்னைச் சார்ந்தது. செய்து முடிக்கலாம் என அரசு தற்போது திட்டமிட்டு, மதுரை புறநகர்ச் சாலையினை உபயோகிக்கும் வாகனங்களிடமிருந்து ஒரு தொகை வசூலிக்கப்பட்டு, கடன் தொகை பிரித்துக் கொடுக்கப்படும். அந்த முறையில் இந்தப் பணிகளைத் துவக்குகிறோம். மூன்றாவது திட்டத்தை அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாகவே நெடுஞ்சாலைத் துறை செய்யவேண்டுமென்ற எங்களது கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

மதுரை மாநகராட்சி தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. இப்போது வெள்ளி விழா நடக்க இருக்கிறது. இந்த அடிப்படை வசதியையாவது செய்து கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தில் இந்தத் திட்டத்தை நாங்கள் அறிவித்திருக்கிறோம்.

அடுத்து, கோயம்புத்தூர் மாநகராட்சி. புதிய மனைப் பிரிவில் ரூ.2½ கோடி செலவில் 36 கிலோ மீட்டர் சாலைகள் அமைக்கவும், சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்புப் பணிக்கு என ரூ.80 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 100 கிலோ மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்கள்—இப்போதுள்ள குழாய்கள் அந்தக் காலத்தில் போட்டது. அது முழுவதுமாகப் போய்விட்டது—அதையெல்லாம் மாற்றியமைக்க ரூ.18.38 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1997-98-ஆம் ஆண்டிற்கு இந்த வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. புதிய மனைப் பிரிவுகளில் வடிகால் அமைக்க ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைகளும் 1997-98-ல் துவங்கப்படும்.



நகரின் உக்கடம் மற்றும் சொக்கம்புதூர் மயானங்களில் இரு மின்சார தகன நிலையங்கள் ரூ. 1½ கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதுபோன்று, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் புதை வடிகால் — அதாவது சாதாரண தரைக்கும் கீழே ரொம்ப தூரத்தில் போகிற வடிகால். அத்திட்டத்தை மாநகராட்சியே தனது சொந்த பராமரிப்பில் எடுத்து நடத்த இருக்கிறது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதை வடிகால் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கழிவுநீர் குளங்களிலிருந்து வரும் கழிவுகளை அகற்றி, 400 ஏக்கர் நிலத்தில் உபயோகப்படுத்தி மாட்டுத் தீவனப் புல் வளர்க்கவும், மரம் மற்றும் பலன் தரும் இனங்கள் வைத்து வளர்ப்பதற்கும் உள்ள திட்டத்தை சொத்துக்கள் மேலாண்மை நிறுவனத்திடம் கடன் பெற்று செயல்படுத்தப்படும். இதனால் கோரையாற்றில் மழைக்காலங்களில் உபரி கழிவுநீர் கலப்பது தவிர்க்கப்படும். இது ஒரு முக்கியமான பிரச்சினை. ஒன்று வருவாய், இன்னொன்று செலவு செய்வது இரண்டிலும் தக்க பலன் கிடைக்கும்.

அடுத்து, திருநெல்வேலி மாநகராட்சி. மாநகராட்சி உருவான புதிதில் சம்பளம் வழங்குவதற்கு திணறிக் கொண்டிருந்தோம். மாநகராட்சி என்று அறிவித்து விட்டார்களே தவிர, சம்பளம் கொடுக்கின்ற சூழ்நிலையே இல்லை. நம்முடைய ஆட்சி வந்த பிறகுதான் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கி சம்பளமே கொடுக்கச் சொன்னோம். மாநகராட்சி உருவான புதிதில் சம்பளம் வழங்குவதற்கே திணறிக் கொண்டிருந்த மாநகராட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தின் காரணமாக - நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அந்த நேரத்தில் அந்தத் தொகையை அவர்கள் தந்து, நாங்கள் அங்கு அனுப்பாவிட்டால் அதை இழுத்து சாத்த வேண்டிய நிலைக்கு வந்திருக்கும். ஆனால், அடுத்தக் கட்டம் நம்முடைய தலையிலே வந்து விழுந்தது. அதற்காக 1996-97-ஆம் ஆண்டிலே ரூ. 6 கோடியை மானியமாக வழங்கி, அவர்களுக்குக் குடிநீர் வழங்கல், புதிய தெரு விளக்குகளும், சோடியம் விளக்குகளும் அமைத்தல், இவைகளையெல்லாம் ரூ.70 லட்சம் செலவிலேயும், விரிவாக்கப்பட்ட சாலைப் பணிகளை ரூ.1 கோடியே 70 லட்சம் செலவிலேயும், இந்த ரூ. 6 கோடியை உள்ளடக்கி, அவர்கள் செய்து கொள்ள அனுமதித்தோம்.

இந்தத் திட்டத்தில் மேம்பட்ட நீர் வழங்குதல், கழிவுநீர் மற்றும் தொழிலக நீரியல் கழிவுகளைச் சுத்திகரிப்புச் செய்தல் போன்ற பணிகளுக்காக ரூ.569 கோடியே 20 லட்சம் செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கின்றோம். முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடுதான் இதை நான் அறிவிக்கிறேன். நகராட்சிகளின் செயல்பாடு பற்றி அவ்வப்போது என்னிடத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 4-35

நகராட்சி, பேரூராட்சிகளுக்கு விழிப்புணர்வுக் குழு அங்கேயும் போட்டிருக்கிறோம். அங்கேயும் 5 பேர் போட்டிருக்கிறோம். அங்கேயும் பல பேர் அதிலே சிக்கியிருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அதுபோலவே கூத்தாநல்லூரிலே இப்பொழுதுதான் நகராட்சி ஆரம்பித்தோம். அங்கேயும் ஒரு ரிப்போர்ட் வந்தது. அது உண்மை. அதிலேயும் நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களையும் சஸ்பெண்ட் பண்ணியிருக்கிறோம். அதுபோலவே திருப்பூர் நகராட்சியிலே எவ்வளவோ வேலைகள் அதிலே சொல்லப்போனால் அந்தக் காலத்திலே 15 அம்சத் திட்டம் என்று விளம்பரம் பண்ணினார்கள். அந்த விளம்பரப் பலகையிலேயே ரூ. 3 இலட்சத்து 50 ஆயிரம் ஊழல். விளம்பரப் பலகையிலேயே. அது கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் அந்த வழக்குகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதேபோல தொடர்ந்து இத்துறையில் பெறப்படும் மனுக்களின் அடிப்படையில் நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதற்கு அடை யாளமாகத்தான் இதை உங்கள் மத்தியிலே நான் குறிப்பிட்டேன்.

துப்புரவுப் பணியாளர்களுக்கு ஒரு சிறிய விஷயம். சீருடை. அதாவது ஆண்களுக்கு எல்லாம் ஆடை கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு வெய்யிலிலே தூசு படாமல் இருப்பதற்காக ஒரு துண்டு கொடுக்கிறார்கள். ஆனால் அது பெண்களுக்கு இல்லை. அந்த ஒரு குறைபாடு இருந்தது. அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். இந்த பணி புரியும் ஆண்களுக்கு வழங்கும் சீருடை சுகாதாரத்திற்காக தலையிலே கட்ட கொடுக்கிற துணியைப் போல் பெண் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்றார்கள். அது அத்தனை பேருக்கும் கொடுப்பதெனத் தீர்மானித்து உத்தரவிடுவதற்கு இருக்கிறோம்.



அதுபோலவே நகராட்சி மற்றும் பேரூராட்சி கூடுதல் துப்புரவுப் பணியாளர். அதிலே ஒரு பெரிய சங்கடம். அவர்கள் 500 பேர் வைத்திருக்கிறவர்கள் இன்னும் ஆயிரம் பேர் வேண்டுமென்று கேட்கிறார்கள். திருப்பூரிலேயே இப்போது 200 பேருக்கு அனுமதி கொடுத்தோம். இன்னும் 200 பேர் வேண்டும் என்று கேட்கிறார்கள். பெரும்பாலான பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் துப்புரவுப் பணியாளர்கள் போதுமான அளவு இல்லாததைச் சுட்டிக்காட்டி கூடுதல் பணியிடம் கோரி கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் நிதிநிலையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிதியாதாரத்திற்குத் தகுந்தவாறு அந்த நிதி அவர்களுடைய சம்பளத்தைத் தாங்குமா என்பதைப் பரிசீலித்து கூடுமானவரையில் கேட்பவர்கள் அத்தனை பேருக்கும் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் இன்னும் சில நாட்களில் அந்த இடங்களைத் தோற்றுவிக்கின்ற உத்தரவை இடத் நாங்கள் தயாராக இருக்கிறோம். அதை நான் அறிவிக்கிறேன்.

அடுத்து, பேரூராட்சிகள் மேம்பாடு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ரொம்ப அனுதாபத்தோடு அதை அணுகுகிறார்கள். அதற்கு ஒரு அடையாளம். பேரூராட்சிகளின் மிகவும் மோசமான நிதிநிலைமையைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றில் பெரும்பாலானவற்றை ஊராட்சியாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். இன்றைக்கும் சொன்னார்கள். தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்திய மாநாட்டில் பல தீர்மானங்களில் இதை ஒரு முக்கிய தீர்மானமாகக்கூடப் போட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோப்பில் கையொப்பம் இட்டிருக்கிறார்கள். சட்டத் துறையுடன் அதைக் கலந்து ஆலோசித்திருக்கிறோம். ஒரே ஒரு பிரச்சினை. இன்றைக்கு இருக்கிற அறுநூற்றுச் சொச்சம் பேரூராட்சிகளுக்குமே நோட்டீஸ் அனுப்ப இருக்கிறோம். நீங்கள் ஊராட்சியாக மாற விரும்பினால் தீர்மானம் போட்டு அனுப்புங்கள். நாங்கள் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கிறோம் என்று முதலில் அறுநூற்றுச் சொச்சம் பேரூராட்சிகளுக்கும் கேட்க இருக்கிறோம். யார் யார் அனுப்புகிறார்களோ அந்தத் தீர்மானத்தை ஏற்று அவைகளை எல்லாம் ஊராட்சிகளாக மாற்றவிருக்கிறோம். இன்னும்கூட நேற்றையதினம் அதிகாரிகளைக் கலந்து பேசியதில் பேரூராட்சி என்று இருப்பதை மாற்றத் தேவையில்லை என்கிறார்கள். அது பெரிய ஊராட்சி என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனால் நகரப் பஞ்சாயத்து என்று சொல்லக்கூடாது. டவுன் பஞ்சாயத்து

என்று சொல்லக் கூடாது. பேரூராட்சி என்றே இருக்கலாம். இப்போது போர்டு இருக்கிறது. அழிக்கக்கூட வேண்டாம். பேரூராட்சி என்று இருக்கலாம். நகரப் பேரூராட்சி என்று இருக்கக் கூடாது. அப்படி சம்மதித்து அவர்கள் தீர்மானம் நிறைவேற்றுவார்களேயானால் அவர்களே தலைவர்களாக இருக்கலாம், அவர்களே உறுப்பினர்களாக இருக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்டதை கலைப்பதில்லை. ஆனால் பேரூராட்சி என்ற அந்தஸ்த்தைக் குறைத்து ஊராட்சி என்ற அந்தஸ்த்தைக் கொடுக்கலாம். அவர்களும் மத்திய ஆட்சியில் இருந்தும் மாநில ஆட்சியிலிருந்தும் பெறப்படுகிற நிதி உதவிகளை தாராளமாகப் பெறலாம். அங்கு இருக்கிற பேரூராட்சிகளுக்குரிய தலைவர்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சந்தித்து இந்த விளக்கத்தை அவர்களிடத்தில் சொல்லி எப்படியும் தீர்மானத்தை விரைவில் அனுப்பி வைக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று இந்த அவையில் உங்களை நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். சில பேர் சோடியம் விளக்கு என்றால் என்னவென்று தெரியாமல் அந்த விளக்கு எங்கள் ஊருக்கு 10 போடச் சொல்லுங்கள் என்கிறார்கள். சோடியம் வேப்பர் லேம்ப் விலை பிட்டிங் எல்லாம் சேர்த்து 5 ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஆகவே வாங்க சக்தி இல்லை. இருந்தாலும் பெரும் மனதோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேரூராட்சிகளுக்கு மட்டும் 50 லட்சம் ரூபாய் இந்த சோடியம் வேப்பர் லேம்ப் மட்டும் வாங்கிக் கொள்வதற்கு அவர்கள் நிதி உதவி தந்து இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் ஏற்கெனவே அந்தப் பேரூராட்சி நிர்வாகத்தில் எத்தனை வாங்க முடியும் என்று சிலதை நிறைவேற்றி இருந்தார்கள். அதையும் சேர்த்து குறைந்தபட்சம் ஒரு பேரூராட்சிக்கு 4 சோடியம் வேப்பர் லேம்ப் போடலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறோம்.

பிற்பகல் 4-40

அதேபோல், ஊராட்சிகளுக்கு, சிற்றூராட்சிகளுக்கு நாங்கள் ஏற்கெனவே ஒரு திட்டம் வைத்து இருந்தோம். அதையும் சேர்த்து நாங்கள் விளக்குப் போடுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் சிறப்பு நிதியாக வெறும் விளக்குகளுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள்.

அதுபோலவே, நான் ஏற்கெனவே ஊராட்சிகளைப் பற்றி சொல்லும்போது சொல்ல விட்டு விட்டேன். இந்த ஒற்றை விளக்குகள் குறிப்பாக புதிதாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள், அந்த வீடுகளுக்கு எதிர்த்தாற்போல் இருக்கக்கூடிய குடிசைகள், இதிலே சிலயிடங்களில்



நான் நேராகப் போய் பார்த்தேன். அவர்களுடைய கோரிக்கை ரொம்ப நியாயமாக இருக்கிறது. என்னவென்றால் 100 ஆதி திராவிடர்கள் வீடுகள் இருக்கிறது என்றால் அந்த 100 குடிசைகளுக்கு ஏற்கெனவே 20,30 தொகுப்பு வீடுகள் கட்டியிருப்போம், பாக்கியிருக்கிற 70 பேருக்கு நாம் உடனடியாக செய்ய முடியவில்லை. ஆண்டுக்கு ஆண்டு தான் 20, 30, 10 என்று செய்து கொண்டு போகிறோம். ஆகவே அவர்கள் கேட்பது எங்களுக்கு வீடு தான் கட்டிக் கொடுக்கவில்லை, ஒற்றை விளக்காவது போட்டுக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அது ரொம்ப நியாயமாகத் தான் இருக்கிறது. அந்தக் கணக்கை எடுத்துப் பார்த்தால் இப்போது கட்டிக்கொண்டிருக்கிற இந்த ஆண்டுக்குரிய தொகுப்பு வீடுகளும், சென்ற ஆண்டு முடித்து இருக்கிற தொகுப்பு வீடுகளும் கணக்குப் பார்த்தால் ஏறத்தாழ 2 லட்சம் தொகுப்பு வீடுகள் வருகிறது. ஏன் என்றால் தொடர்ந்து 5 வருடமாக விளக்கு போடாமல் விட்டு விட்டார்கள். ஆகவே, குறைந்தபட்சம் இந்த ஆண்டு 2 லட்சம் ஒற்றை விளக்குகள் போட்டுக் கொடுக்கவேண்டுமென்று அந்தத் துறையிடத்தில் நாங்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். 2 லட்சம் வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். அதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள் முடிந்த வரை சிரமப்பட்டு இந்த வருடம் எப்படியாவது 2 லட்சம் ஒற்றை விளக்குகள் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற ஆதி திராவிடர்கள் வீடுகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய குடிசைகளுக்கும், தொகுப்பு வீடுகளுக்கும் சேர்த்துப் போட்டு விடுவது, அடுத்து 2 ஆண்டு காலத்தில் முழுவதையும் முடித்து விடுவது என்ற முடிவை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது அந்த விளக்குகளைப் பொறுத்தவரையில்.

அதுபோலவே, மாநகராட்சி உறுப்பினர்களுக்கு படி 100 ரூபாய், நகராட்சி உறுப்பினர்களுக்கு 75 ரூபாய்; பேரூராட்சி உறுப்பினர்களுக்கு 50 ரூபாய்: அவர்களுக்கு முதல் வகுப்பு ரயில் கட்டணம். வரவே மாட்டார்கள் அல்லவா; ஒரு மாநாடு போடுவோம் அப்போது வருவார்கள். அதன்பிறகு பல்ப் வாங்கப் போவார்கள். இந்த மாதிரி பலது இருக்கிறது. அதற்காக நாம் அவர்களுக்குத் தருகிறோம். (குறுக்கீடு) ஆமாம் ஒரு மாதம், 2 மாதத்திற்கு உண்டானதை வாங்குவார்கள் அல்லவா?

அப்புறம் ஒரு சின்ன திட்டம் தான், இருந்தாலும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏற்கெனவே இந்த திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி நகராட்சி அலுவலகத்திற்கு இன்ஸ்பெக்ஷன் செய்யலாம் என்று போனேன். அங்கே

அந்த நகராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு கூட்டம் போடும் அந்த கூட்ட அறை அஸ்பெஸ்ட்டாஸ் சீட் போட்டு ஒரு தட்டி வைத்து அடைத்து அதிலே நகராட்சி மன்றக் கூட்டம் நடைபெறுகிறது. இவர்கள் போன உடனே வேகம் வரலாம் கவுன்சிலர்களுக்குள் ஒருவருக்கொருவர் காரசாரமாக பேசி வருவது வழக்கம். ஆனால் அங்கே போன உடனே காரசாரம் வந்துவிடும், கூட்டமே ஒன்றும் போட முடியாத அளவு, அவ்வளவு ஒரு மோசமான நிலையில் இருக்கிறது. அதை மனதில் வைத்து இப்போது அந்த நகராட்சிக்கு 5 லட்சம் ரூபாய் அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு மட்டும் அனுமதித்திருக்கிறோம். கூடுதல் செலவு ஆனால் நகராட்சி அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதுபோலவே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த உறுப்பினர்கள் பல்பு வாங்கப் போவதற்கு முதல் வகுப்பில் போகலாம் என்று சொன்னார்கள். இதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விட்டால் நல்லது என்று தோன்றுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள், மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் அலுவலக வேலையாக அதன் காரணமாக வருகிற போது இந்த படி கொடுப்பது என்பது தவறு அல்ல. அதைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்கள் கூட்டத்திற்கு வரும்போது படி கொடுப்பது பற்றி ஏதாவது இருந்து அறிவித்தால் கூட அது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே சொல்லியது - நீங்களே கேட்டீர்கள் என்ன வேலை இருக்கிறது, எங்கே போகப் போகிறார்கள் என்று கேட்டீர்கள் - கூட்டத்திற்குப் போவதற்கு உண்டு. மெயினே கூட்டத்திற்குப் போவதற்காகத்தான். இந்த மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் வந்து ஒரு ஊரிலேயிருந்து 50 மைல் 100 மைல் தாண்டிப் போகிறார்கள். இரயிலே போகிறது. இரயிலிலேயும் போகலாம்; பஸ்ஸிலேயும் போகலாம். பஸ் கட்டணம் உண்டு; டிரெயினிலே போனால் பர்ஸ்ட் கிளாஸ் உண்டு. அதுபோல, தினப்படி உண்டு. அதுபோல சிட்டிங் பீஸ் உண்டு. எல்லோருக்குமே. அதிலே ஒன்றுமில்லை.



பிற்பகல் 4-45

என்னுடைய தொகுதி, கும்பகோணம். ஒரு பெரிய பாதாள சாக்கடைத் திட்டத்தை மாற்றி, சாதாரண சாக்கடைத் திட்டத்திலே அந்த ஊரிலே மழை நீரையும், சாக்கடையையும் நீக்கி விடலாம்; சுத்தம் செய்து விடலாம் என்று ஒரு முடிவு எடுத்தோம். அதிலே ஏறத்தாழ பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள வீடுகளைக் கட்டி விட்டார்கள். பொதுப் பணித் துறை சம்பந்தமான 4 வாய்க்கால்கள். 47 வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் இருந்தது.

நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம்., ஒற்றை வரியிலே சொல்லி விடுகிறார்கள். ஆக்கிரமணங்களைக் காலி செய்யவில்லை. ஆக்கிரமணங்களைக் காலி செய்யவில்லை என்கிறார்கள். நான் சொல்கிற ஆக்கிரமணத்தில் பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட வாய்க்கால்களில் 1,360 பேர் குடிசை கட்டியிருந்தார்கள். அந்தக் குடிசைகள் அத்தனைக்கும் மாற்று இடம் கொடுத்து, அவர்களிடம் சொல்லி வைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். ஏறத்தாழ 800 பேருக்கு - அந்த இடத்திலேயிருந்து போய் விட்டார்கள். இன்னும் 800 பேர் பாக்கியிருக்கிறார்கள். இதை முறையாகக் காலி செய்திருக்கிறோம்.

ஆனால், பல இலட்சாதிபதிகள், பல ரௌடிகள் தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றிக் கொள்ள, தாறுமாறாகச் சிந்தித்தவர்கள், தங்கள் சொந்த சொத்துப்போல, பொதுப் பணித் துறை வாய்க்கால்களை அனுபவித்து வந்தார்கள். 47 வழக்குகளில் உயர்நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றிருந்தார்கள். ஏறத்தாழ 43 வழக்குகள் இரண்டு மாத காலத்திற்குள் தள்ளுபடி செய்யப்பட்டு, அதற்கு அரசு வழக்கறிஞர்கள் ஒத்துழைப்பு தந்து, அவைகள், தள்ளுபடி செய்யப்பட்டு, 43 இடங்களிலேயிருந்த ஆக்கிரமணங்களைப் புல்டோசர் கொண்டு அழித்திருக்கிறோம். இதற்கு ஒரு உதாரணம்.

எல்லா அரசியல் கட்சிகளையும் கூட்டி வைத்துப் பேசி இருக்கிறோம். அவர்கள் ஒருவர்கூட இன்றையதினம் அதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை; மக்களிடத்தில் எதிர்ப்பே காட்டவில்லை. யாருமே, தவறு என்று சொல்லவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் 500 பேர் இருப்பார்கள். அவர்கள் எனக்குக் கடிதமெல்லாம் எழுதியிருக்கிறார்கள். "துப்பாக்கி தயாராகிவிட்டது", "கத்தி கையிலே இருக்கிறது", "நீ எந்த நேரத்தில் எங்கு வருவாய் என்று எதிர்பார்க்கிறோம்" என்றெல்லாம் எழுதினார்கள். இது எனக்கு வழக்கமான கடிதம் என்று வாங்கி வைத்து விட்டேன்.

நீங்களும், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி, ஊராட்சி அல்லது பொதுப் பணித் துறை, இப்படிப்பட்ட இடங்களில் ஆக்கிரமணங்கள் செய்திருப்பது சிறு சாதாரண குடிசைகளாய் இல்லாமல் இருந்தால், பெரிய பெரிய ஆக்கிரமணக்காரர்களைக் காலி செய்வதற்கு நீங்களும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்பதற்கு இதை உதாரணமாக நான் காட்டுகிறேன்.

யாரும் கிட்டே வரவில்லை என்னிடத்தில். யாருமே என்னிடத்தில் வந்து, இந்த வீட்டை இடித்திருக்கிறாயே, நியாயமா என்று கேட்கவே இல்லை. யாருக்கும் நான் பதில் சொல்லவில்லை. பதில் சொல்லக்கூடாத அளவிற்கு 43 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு, இன்னும் 4 வழக்குகள் மட்டுமே நிலுவையில் இருக்கிறது. அத்தனையையும் காலி செய்து விட்டார்கள். அந்த வாய்க்கால்களைக் கணக்குப் பார்த்தால், பாபனாசம் தொகுதியில் துவங்கி, திருவிடைமருதூர் தொகுதியில் வருகிறது. பாதி வாய்க்கால் ஆகவும், பாதி வடிகால் ஆகவும் வருகிறது. நடுவிலே என்னுடைய தொகுதி, நகரம் இருக்கிறது. இந்தச் சாக்கடை பூராவும் அதில் படுகிறது. எனவேதான், அதற்குச் சுவர் கட்டி, அவைகளை, இவர்கள் ஆக்கிரமணம் பண்ணாமலும், அது அழிந்துவிடாமல் போவதற்குப் பாதுகாப்பு தருவதற்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு அந்தக் கருத்தை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிக்க வருத்தத்தோடு ஒரு கருத்தை நான் சொல்ல இங்கே முற்படுகின்றேன். அமைச்சருடைய தொகுதி, அமைச்சருடைய ஊர் என்பதால் உங்களால் அவ்வளவு தைரியமாக அதைச் செய்ய முடிந்து விட்டது. என்னுடைய தொகுதியான சிவகாசி நகரிலே குடிநீர் வரக்கூடிய அத்தனை பகுதிகளிலேயும்கூட ஆக்கிரமணம் செய்து அடைத்து வைத்திருக்கிறார்கள். திரும்பத் திரும்ப மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லியாகிவிட்டது. சம்பந்தப்பட்ட அத்தனை அதிகாரிகளிடமும் சொல்லியாகிவிட்டது. முனிசிபல் கமிஷனரிடத்திலேயும் சொல்லியாயிற்று. சாலைப் பகுதிகளிலே பல ஆக்கிரமிப்புகள் வந்து நாங்களெல்லாம் முயற்சி பண்ணி, நீங்கள் சொல்வது மாதிரி எடுத்தோம். அந்த அதிகாரிகள் மறுபடியும் அவர்களிடம் காசு வாங்கிக் கொண்டு மறுபடியும் குடிசையைப் போட்டுக்கொள், கடையைப் போட்டுக்கொள், வீட்டைக் கட்டிக்கொள் அப்படி என்று சொல்கிறார்கள். இதை நான் சொல்வதற்குக்



காரணம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இருக்கிறார்கள்; சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள்; அமைச்சர்கள் - நீங்கள் இரண்டு கோரிக்கை வைத்திருக்கிறீர்கள் - சிவகாசி நகரிலே அத்தனை ஒத்துழைப்பும் தருகின்றோம். குடிதண்ணீர் வரக்கூடிய பகுதிகளில் இருக்கக்கூடிய ஆக்கிரமிப்பையும் இந்த அரசு எடுத்துத் தர வேண்டும். அப்படியில்லாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை, மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தாலும்கூட, பணி நீக்கம் செய்ய வேண்டும் என்ற ஒரு உத்தரவாகின்ற அளவிற்குக் கடுமையான ஒரு சட்டத்தைப் பிறப்பித்தீர்களேயானால் இந்த ஆக்கிரமிப்புக்கள் அத்தனை இடங்களிலும் அகற்றப்படும். அமைச்சர் தொகுதியில் நீக்கியதைப்போல் எங்கள் தொகுதியிலும் நீங்கள் நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-50

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** நான் ஒன்றைக் குறிப்பிடுகிறேன். அதிகாரிகளை நாம் வேலை வாங்குகிறோமே தவிர, நம்மை அதிகாரிகள் வேலை வாங்குவதில்லை. இப்போது எனக்கும் இந்த வேலை உண்டு. என்னிடம் இதையெல்லாம் காட்டியதுண்டு, ஆனாலும் நான் அதை மேக்கப் பண்ணி, பண்ணியிருக்கிறேன். மந்திரி அந்தஸ்த்தில் அல்ல, என்னுடைய தனி நிலையிலே இதைச் செய்திருக்கின்றேன். நான் யாரிடமும் போய், எந்த அதிகாரியிடத்திலும் எதையும் கேட்கவில்லை. பஸ் ஸ்டாண்டில் ஒரு கார், பஸ் கூட போக முடியாத அளவுக்கு பழக்கடைக் கட்டியிருந்தார்கள். தலைவர் அவர்களே, ஒரு நாள் அந்தமாதிரி இடங்களுக்கெல்லாம் செல்லவேண்டுமென்றால் ஜாக்கிரதையாகச் செல்லவேண்டுமென்று பலபேர் சொன்னார்கள். எனக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது. சில நாட்களுக்கு முன்பு நான் போலீஸ்காரர்களை அழைத்துக்கொண்டு போனால் மந்திரி பதவி போய்விட்டால் நாளைக்கு நம்மை பரிகாசம் பண்ணிவிடுவான் என்பதற்காக, அந்த பஸ் ஸ்டாண்டில் நீங்கள் யாரை வேண்டுமானாலும் விசாரிக்கலாம், அந்த பஸ் ஸ்டாண்டில் ஒற்றையாகப் போய் இறங்கி, எங்கள் கட்சிக்காரர்கள் 4 பேரை வைத்துக்கொண்டு, அந்தப் பழக்கடை எல்லாவற்றையும் பத்தே நிமிடத்தில் காலி பண்ணினேன். இன்னமும் அங்கே வைக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். எஸ்கார்ட்டுக்கு வந்த போலீஸ்காரர்களைக் கூட போகச் சொல்லிவிட்டேன். காரணம் என்னவென்று சொன்னால், நாளைக்கு இந்த மந்திரி பதவி போய்விட்டால் என்ன பண்ணுவாய் என்று ஒருவன் மிரட்டுவான்.

அதுபோல் உங்களையும் எம்.எல்.ஏ. பதவி போய்விட்டால் என்ன
பண்ணுவீர்கள் என்று மிரட்டுவான். தனித்து நின்று செய்ய
வேண்டியதுதான்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்படுகிறார்.
நான் சட்டத்தை மதிக்கின்றவன். இந்த அரசை நம்புகின்றேன்.
அதிகாரிகளை நம்புகின்றேன். ஆக்கிரமிப்பு என்பது சட்டப்படி தவறு.
நான் கட்சிக்காரர்களைக் கூப்பிட்டுக்கொண்டு போயோ, நான்கு **
கூப்பிட்டுக்கொண்டு போயோ கண்டிப்பாகப் பண்ணமாட்டேன்.
(குறுக்கீடுகள்) அந்த வார்த்தையை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.
'ஒரு மேசுமான கட்சிக்காரர்களை வைத்து நான் பண்ணுகிறேன்' அது
மந்திரி சொன்ன வார்த்தை. மந்திரி சொன்ன வார்த்தை என்னை
மிரட்டுவார்கள், எனக்கு ஆபத்து வரும் நான் ஃபேஸ்
பண்ணிக்கொள்கிறேன், அப்படியென்று எல்லாம் சொல்லலாம். ஆனால்,
அதுபோன்ற ஒரு எண்ணம் நம் நாட்டில் எந்தப் பிரஜைக்கும்
வரக்கூடாது. சட்டம் இருக்கிறது. சட்டத்தை அமல்படுத்துவதற்கு
அதிகாரிகள் இருக்கிறார்கள். சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்
என்ற அளவிலே அந்தச் சட்டங்கள் அமல்படுத்தப்பட வேண்டும்.

இன்னொன்று, சென்னை மாநகரில் நீங்கள் ஆக்கிரமிப்பை மிக
நன்றாக எடுத்திருக்கிறீர்கள். அதை மக்கள் அனைவரும்
வரவேற்கின்றார்கள். நாங்களும் வரவேற்கின்றோம். பல பகுதிகளில்
எடுத்திருக்கிறீர்கள். இன்னும் மற்ற பகுதிகளிலும் எடுக்க வேண்டும்.
அமைச்சருடைய பகுதியில் எடுத்திருக்கிறீர்கள். நீங்கள் சிவகாசியிலே
எடுங்கள். அதற்கு நான் கூட்டத்தைக் கூப்பிட்டுக்கொண்டு போய்
எடுக்க வேண்டுமென்று தயவுசெய்து எதிர்பார்க்காதீர்கள். காவல் துறை
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இருக்கிறது. மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்கள் இருக்கின்றார்கள். இல்லையென்றால், முதலமைச்சர்
ஓப்பனாகச் சொல்லட்டும், எங்கள் கலெக்டராலும், போலீசாராலும்
முடியாது, சொக்கர் ஆளை கூப்பிட்டுக் கொண்டு போய் எடுங்கள்
என்று சொல்லட்டும். நான் பேசாமல் உட்கார்ந்து கொள்கிறேன். இது
தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இவ்வளவு
நேரம் நடைபெறுகின்ற வாக்குவாதத்திலே இன்னமும் நண்பர் சொக்கர்

** உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் அகற்றப்பெற்றது.



அவர்கள் அந்த அதிகாரிகளுடைய பெயரை வெளியிடாமல்
இருக்கின்றார்கள். அந்த அதிகாரிகளுடைய பெயரைக் குறித்துக்
கொடுப்பாரானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பெயரைச்
சொல்லக்கூட அச்சப்படக் கூடாது என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** நான் ஏற்கெனவே சொன்னேன். மாவட்ட
ஆட்சித் தலைவரிடத்திலே பலமுறை சொல்லிவிட்டேன். முனிசிபல்
கமிஷனரிடம் பலமுறை சொல்லிவிட்டேன். வந்து அங்கே எடுக்கப்பட்டது.
நீங்கள் அதிகாரிகளை அனுப்பி விசாரியுங்கள். எடுத்து மறுபடியும்
போடுகின்றார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போது
நான் கேட்டு, அதற்கு சொக்கர் அவர்கள் சொல்லியிருக்கின்ற பதில்
ஒன்றே போதும். அதிகாரிகள் இனிமேல் ஒழுங்காக நடப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** நடக்கவில்லையென்றாலும்
முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். அதில் ஒன்றும்
சந்தேகம் இல்லை. (குறுக்கீடுகள்) தமிழ்நாடு பூராவும் எடுக்கப்படும்.
நான் உதாரணத்திற்குத்தான் சொன்னேன். தமிழ்நாடு பூராவும்
எடுக்கப்படும் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகத்தான் சொன்னேன்.

இதெல்லாம் சொன்ன பயனில் இப்போது 2 கோடியே 35 இலட்சம்
ரூபாயில் அந்த 4 வாய்க்கால்களை மாடர்னைசேஷன் பண்ணுகிறார்கள்.
அப்படிப் பண்ணுவதற்கு உதவியாக அந்த நீரை வெளியேற்றுவதற்கு
ஒரு 30 லட்சம் ரூபாய் குடந்தை நகராட்சி மன்றத்திற்கு உதவியாக
அரசு வழங்க வேண்டுமென்று நான் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன்.
அதற்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். இதை நான்
குறிப்பிடுவதற்குக் காரணம், பாதாள சாக்கடைத் திட்டம், பாதாள
சாக்கடைத் திட்டம் என்று பலபேர் வலியுறுத்துகிறார்கள். பாதாள
சாக்கடைத் திட்டம் என்பது ஒரு பாதாள காரியம். அது நடைமுறைக்கு
வருவதற்கு 3 வருடம், பிறகு பொறியாளர்கள் சொல்வது ஒரு 5
வருடம், உலக வங்கியிலிருந்து கடன் கேட்டால் போதும், அதைத்
தீர்க்கவே முடியாது. அது வந்து சேர அவர்கள் போடுகின்ற
கண்டிஷன்கள், அவர்களுடைய கட்டளைகளை நிறைவேற்ற நம்மால்
முடியாது. ஆகையால் சிறிய நகராட்சிகளில், நான் மாநகராட்சியைச்
சொல்லவில்லை. சாதாரண நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம்
என்ற சொல்லைக் குறைத்துக் கொண்டு, அதிகாரிகளிடத்திலே அதைத்

தெரிவித்து, ஒரு சாக்கடைத் திட்டத்தை நகரமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் எப்படி அமைப்பது என்ற அடிப்படையில் நீங்கள் எல்லாம் ஒத்துழைப்பு தந்து, அதைக் கூடுமானவரையில் சாக்கடைத் திட்டமாக உருவாக்க வேண்டும். அதை நான் பரீட்சார்த்தமாக செய்திருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) சாக்கடைச் சீரமைப்புத் திட்டமாக அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ரூபாய் 30 இலட்சத்தை நாங்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

பிற்பகல் 4-55

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நான் சிறிது நேரத்தில் முடித்துவிடுகிறேன், எல்லோருமே அதிகமான வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தது குடிநீர்ப் பிரச்சினையிலேதான். பொதுவாக, எல்லோரும் இப்போதே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு அறிவித்தால்தான் என்று பல பேர் சொல்லியிருக்கிறார்கள். அதெல்லாம் இல்லை. நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தது, பத்திரிகைகளிலே வந்திருக்கிறது, பார்த்து இருப்பீர்கள். மூன்று கட்டங்களாக அறிவித்திருக்கிறார்கள். உடனடியாக எடுத்துக்கொள்கிற கிராமப்புறத் திட்டம். அதிலே பழுதுபட்டவைகளுக்கான சீரமைப்புத் திட்டம் - புனரமைப்புத் திட்டம் - என்ற அடிப்படையிலே ஒரு திட்டம். இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்படுகிற திட்டம். ஐந்து ஆண்டுகளில் நிறைவு செய்யப்போகிற திட்டம். அதிலே, புள்ளிவிவரத்திலே சில தவறுகள் சொல்லப்பட்டன. 154 குடியிருப்புகளுக்குச் சென்ற ஆண்டு தண்ணீர் கொடுக்க முடியாதவையாக இருந்தன. திரு. பழனிசாமி, டாக்டர் கிருஷ்ணசாமி இப்படி எல்லோரும் சொன்னார்கள். அது உண்மையான கணக்குதானா என்று சொன்னார்கள். நான் அதையும் மறுக்கவிலலை; நான் சொல்வதையும் நீங்கள் மறுக்கக்கூடாது என்ற வேண்டுகோளையும் வைக்கிறேன். ஏனென்றால் கொடுக்கிறோம், கொடுக்கிறபோது கணக்கு எடுக்கிறோம், கொடுப்பது போல் கடைசி வரையில் இல்லை. அது உங்களுக்கு தெரிகிறது. அது அதிகாரிகளுக்குத் தெரியவில்லை.

அதனால்தான், நேற்றையதினம் நான் அதிகாரிகளைக் கூப்பிட்டு வைத்துப் பேசுகிறபோது சொன்னேன், எந்தத் திட்டமாக இருந்தாலும் அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும், அவர்கள் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். கீழே ஒரு அதிகாரி, அதே போல் மேலே ஒரு அதிகாரி. அவர்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ள



வேண்டும். இந்தத் திட்டம் சரியில்லை என்றால் அவர்கள் தான் பொறுப்பு என்று வலியுறுத்தியிருக்கிறேன். அதிலே இனிமேல் கோளாறு வந்தாலும் அவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும் என்று சொல்கிறேன். அதற்கு என்ன காரணம் என்றால், அதிகாரிகள் அதைப் பார்வையிடாமல், அந்தத் திட்டம் பழுதடைந்துவிட்டது தெரியாமல் இருக்கிற காரணத்தால், நீங்கள் அந்தத் திட்டமே இல்லையென்று நினைப்பிற்கு வருகிறீர்கள். இதுதான் நிலை. இப்போது கணக்கு எடுத்துப் பார்த்தால் 154 கிராமங்கள் தானா? இது நியாயமா? என்று கேட்டார்கள். திரு. பழனிசாமி அவர்கள், என்ன எப்போதுமே 154 கிராமங்கள்தானா என்று சொன்னார்கள். அதற்கு ஒரு விவரத்தை எழுத்து மூலமாக கொடுத்திருக்கிறேன். 1992-ல் 1,486 கிராமங்களாக இருந்து, அதற்குப் பிறகு 154 கிராமங்களாக இருந்து, இந்த மாதத்திற்குள் அந்த 154-யையும் நிறைவு செய்யவிருக்கிறோம். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் நம்பாதது போல் சொல்கிறார். நான் சொல்வது, திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிற இடங்கள். ஆனால் பழுதான இடங்கள் உங்களுக்குத் தெரியும். எங்கள் அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். அதையும் குறிப்பிட்டுச் சொன்னால், ஏற்றுக்கொண்டு, நிவர்த்திச் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். இவ்வளவுதான் குடிநீரைப் பொறுத்தவரையில் நிலை. அதற்காக ஒதுக்கியிருக்கிற தொகையை ரொம்பக் கடுமையாக உயர்த்தியிருக்கிறார்கள். ரொம்ப அதிகம். இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிற தொகை - நான் அங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லவில்லை. இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும் - ஏறத்தாழ இரண்டு பங்கு கூடுதலாக நிதியொதுக்கீடு இந்த ஆண்டு நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்தத் தொகையை வைத்துக்கொண்டு ஓரளவிற்கு நாம் குறிப்பிட்ட அளவை நிறைவேற்றிவிடலாம் என்ற நம்பிக்கையில் நான் ஒன்றைக் குறிப்பிடுகிறேன்.

இதிலே சில இடர்பாடுகள் இருந்தன. பி.வி.சி. பைப் என்று சொல்கிறோம், எனக்குக் கேவலத்தை உண்டாக்குவதே இந்த பி.வி.சி பைப்தான். எப்படி ஒரு சலவைத் துணியில் சிகப்பு மை பட்டால் அது எப்படி பளிச் என்று தெரியுமோ, அதுபோல் அந்தக் குழாயால் ஏற்பட்டுள்ள இழுக்கால், தப்பால் அந்தத் திட்டமே சரியில்லாமல் போகிறது. மோட்டார் சரியாக இருந்தாலும், டேங்க் சரியாக இருந்தாலும், நிச்சயமாக அந்தக் குழாய்களைப் பதிப்பதினாலே தண்ணீர்வரத்துக் கெட்டுவிடுகிறது. அதனால்தான், அப்போது வாங்கின பைப் வியாபாரி என்னிடத்திலே சொன்னார். எங்களைக் குறை சொல்கிறீர்களே? என்ன நியாயம்? எங்களிடத்தில் 1.9 கேஜ் என்று ரசீதுதான் கேட்டார்களே

தவிர, குழாய் கேட்கவில்லை. நான் அப்படியே உண்மையாகச் சொல்கிறேன். அந்தப் பைப்பினுடைய தரம், அளவு - விட்டம் 1.9 இருக்க வேண்டும். ஆனால், 1.2 இருந்தது. இப்படிச் சொல்கிறீர்களே, இப்படி கொடுத்திருக்கிறீர்களே என்று கேட்டபோது, என்னிடத்திலே அவர் சொன்னார். 'என்னிடத்திலே ரசீது கேட்டது 1.9 இருக்க வேண்டும் என்று கேட்டார்களே தவிர, குழாயை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் கொடுங்கள் என்று கேட்டார்கள்' எங்களுக்கு அவர்கள் கொடுத்த கமிஷன் போக மீதியை உங்களுக்கு எவ்வளவு கொடுக்கமுடியுமோ, அந்த அளவிற்கு நாங்கள் பைப்களைக் கொடுத்தோம் என்று சொனனார்கள். அந்தப் பைப்களை எல்லாம் இன்னும் அடையாளச் சின்னமாக, அவமானச் சின்னமாக அடுக்கி வைத்திருக்கிறோம். பல வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கின்றன. இந்த மாதிரி ஊராட்சி ஒன்றியத்திலும் தேவையில்லாமல் வாங்கி, அடுக்கி வைத்தது, அடுக்கி வைத்தது போலவே இருக்கின்றன. அவைகள் எல்லாம் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் பெறுமானம் உள்ள குழாய்கள் இன்னும் தேக்க நிலையிலேயே வைத்திருக்கிறோம். தவறான பைப்களைப் போடக்கூடாது என்பதற்காக இன்னும் அப்படியே வைத்திருக்கிறோம்.

பிற்பகல் 5-00

அதோடுகூட, கான்ட்ராக்ட்டில் சில பேதங்கள் இருந்தன. மலைப் பகுதிக்கு ஒரு மதிப்பீடு, கிராமப்புறப் பகுதிக்கு ஒரு மதிப்பீடு, பாறைப் பகுதிக்கு ஒரு மதிப்பீடு என்று இருந்தது. கடந்த காலத்தில், மலையில் மட்டும்தான் குழாயைத் பதித்திருக்கிறார்கள். கிராமத்திற்கு, சாலைக்கு வரவேயில்லை. மலை, பாறை இரண்டோடு விட்டுவிட்டார்கள். எஸ்டிமேட் அத்தனையும் மலையாகவே இருந்தது. ஆனால் வேலை அத்தனையும் தரையாகவே இருந்தது. இப்படி பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. அதை நாங்கள் இப்போது தடுத்து நிறுத்தியிருக்கிறோம். மலைப்பகுதிக்கென்று மதிப்பீடு நிர்ணயம் செய்யவேண்டுமானால், கண்காணிப்புப் பொறியாளர் அந்தஸ்த்தில் அதைச் சரிபார்க்கவேண்டும். அவரிடம் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்ற பிறகுதான் எஸ்டிமேட்டே போடவேண்டும். எஸ்டிமேட் பரிசீலிக்கப்பட வேண்டும். பணியைத் தொடங்குகின்ற வரையில் அவர்களுடைய சர்டிபிகேட் இருந்தால்தான் அந்த வேலையைத் தொடங்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். எனவே, கடந்த காலத்தில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஏற்பட்ட பல கோடி ரூபாய் நஷ்டமானது இப்பொழுது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால்



நமக்கு 30 விழுக்காடு வரையில் இலாபம் கிடைக்கும் என்றும் நான் கருதுகிறேன். அத்துடன், எடுத்துக்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் நிறைவேறுகின்ற தருவாயில் இருக்கின்றன என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்த் தொட்டிகள். குடிநீர்த் தொட்டிகளில் நீர் கசிகின்றது, பாதிக்கும் மேற்பட்ட தண்ணீர் கசிந்து போய்விடுகின்றது, பாதி தொட்டிதான் தண்ணீர் வருகின்றது என்று புகார்கள் வந்தன. எனவே, இந்த ஆண்டு ஏறத்தாழ 500 தொட்டிகளை பழுதுபார்ப்பதற்காக எடுத்துக்கொள்கிறோம். மேலும், 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு இருக்கக்கூடிய தொட்டிகள்தான் இருக்கின்றன. இது போதாது, 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு இருக்கக்கூடிய தொட்டிகள் இருந்தால்தான் கிராமப்புறங்களில் தண்ணீர் கொடுக்க முடியும் என்பதற்காக, தனியாக 20 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கூடிய தொட்டிகளை கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, 20 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளைத் தனியாகவோ, அல்லது 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளைப் புதிதாகவோ கட்டுவது என்றும், பழுதான தொட்டிகளை இடித்துவிட்டு, புதிய தொட்டிகள் கட்டுவது எனவும் முடிவு செய்யப்பட்டு, அதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 500 தொட்டிகளை இந்த ஆண்டே எடுத்துக்கொண்டு முடிப்பதற்கு திட்டமிட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 10 கோடி ரூபாய் என்பது குறைவான தொகையாக இருந்தாலும், மனநிறைவோடு நாம் இதைச் செய்து முடிக்கலாம் என்ற நம்பிக்கையில் இருக்கலாம். அப்படிக் கட்டப்படும் தொட்டிகளில் தண்ணீர் நிச்சயமாக கசியாது என்ற நம்பிக்கையில் இருக்கலாம். அடுத்த ஆண்டுக்கான புனரமைப்புத் திட்டங்களை தயாரித்துக் கொண்டிக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு, நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் உள்ள குடிநீர் வடிகால் வாரியத்தில் ஒரு முறையைப் பின்பற்றி வந்தார்கள். அது என்னவென்றால், பேரூராட்சி எங்களுக்குக் குடிநீர் வேண்டுமென்று அவர்களைக் கேட்டால், வாரியத்தில் உள்ளவர்கள், 'ஆய்வுப் பணிக்காக எங்களுக்கு டெபாசிட் தொகையைக் கட்டவேண்டும்' என்று கேட்பார்கள். எந்த அடிப்படையில் அவர்கள் கேட்கிறார்கள் என்று சொன்னால், மக்கள் தொகை, அவர்களுக்கு எவ்வளவு தண்ணீர் தேவை, அளவு என்ன, எவ்வளவு தூரத்திலிருந்து

தண்ணீர் வரும், அதனுடைய நீர் ஆதாரம் எங்கு கிடைக்கும் என்று இப்படியெல்லாம் ஒரு கணக்குப் போட்டு, குறைந்தபட்சம் முதல் கட்டணத் தொகையாக 5 இலட்சம் ரூபாய், பிறகு 5 இலட்சத்திலிருந்து 15 இலட்சம் ரூபாய் முன்பணமாகச் செலுத்தினால்தான் ஆய்வுப் பணிக்கே வருவார்கள். அப்போதுதான் லாரியே அங்கு வரும். இல்லையென்றால் வராது. அதனால் நிறைய இடங்களில் அந்த முன்பணத்தைக் கட்டவும் இல்லை, கட்ட முடியவில்லை என்று சொல்லவும் இல்லை. இதன் காரணமாக பல இடங்களில் திட்டங்கள் போய்ச் சேராமல் இருந்தன. அது இப்போது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களிடத்தில் பேசி நாம் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். எப்படியென்றால், பேரூராட்சிகள், நகராட்சிகள் - கிராமப் பஞ்சாயத்துக்கு இப்போதும் இல்லை, அப்போதும் இல்லை - குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்துவதற்கு, குடிநீர் வாரியம் முன்பணம்,எதுவும் கேட்காமலேயே பணியைத் துவக்கவேண்டும், யாரும் பணம் கேட்கக் கூடாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டோம். அதற்கான உத்தரவும் போட்டுவிட்டோம் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பணியைத் துவங்கி, தண்ணீர் கிடைக்கவில்லையென்றால், அடுத்த ஊரில் எங்கே தண்ணீர் கிடைக்கிறதோ அங்கிருந்து கொண்டு வந்து அந்தத் தண்ணீர் கிடைப்பதற்கான செலவை அவர்களே செய்து, திட்டம் முடிவுற்ற பிறகு, ஒப்படைத்த பிறகுதான், அந்தச் செலவை எஸ்டிமேட்டில் சேர்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதுவரையில் இவர்களைக் கேட்கக் கூடாது, ஏனென்றால், தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் அந்தப் பணம் போனது போனதுதான். ஆக, இப்படி நாங்கள் இந்தத் துறையின் மூலம் குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொல்லி மாற்றியிருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், இப்பொழுது எழுந்து கேட்டால், அது கிளாரிபிகேஷனாகிவிடும். பிறகு அமைச்சர் பதில் சொல்லி முடித்தவுடன் யாரையும் கேட்க விடமாட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்புறம் நேரம் ஆகிவிட்டது என்று சொல்வீர்கள், ஒன்றும் பதில் கிடைக்காமல் போய்விடும். மிக அருமையான திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே நாங்கள் வரவேற்கின்றோம். அதே நேரத்தில், பாதாள சாக்கடைத் திட்டம் பற்றி ஆய்வு செய்வதற்கும், பணத்தைக் கட்டினால்தான் வருவோம் என்று



சொல்கிறார்கள். எனவே, அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதிவிலக்கு அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 5-05

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களிடத்திலேயே விவகாரம் இருக்கிறது. அதனால்தான் சொல்கிறார். அவர் முனிசிபாலிட்டியிலேயே அந்தப் பிரச்சினை இருக்கிறது. அது முடியாது. அவர் சொல்வது வேறு. இது வேறு. அதையெல்லாம் பேசாமல் இங்கு வந்திருப்பேனா? நீங்கள் இருப்பது எனக்கும் தெரியுமில்லையா? உங்கள் முனிசிபாலிட்டியில் அந்தப் பிரச்சினை இருக்கிறது. அந்தப் பணிகள் என்பது சாதாரணமான பணிகள் அல்ல. ஆனால் உறுப்பினர் குறிப்பிடுகிற பணி வெளிப்படையாக தெரிந்த பணி. ஆய்வு என்பது அந்தப் பணியோடு மேற்கொள்ளப்படுகிறது. தனியாக மேற்கொள்ளப்படுவதில்லை. ஆகவே அதை நீக்க வேண்டாம். உங்களுடையதை ஆரம்ப எஸ்டிமேட்டிலேயே சேர்த்துவிடுகிறார்கள், முடியாது என்று போகமாட்டார்கள். ஆனால் இதில் முடியாது என்று சொல்வார்கள். தண்ணீர் கொடுக்க முடியாது என்று சொல்வார்கள். ஆகவே அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை. மீண்டும் இது அவசியமென்றால் பரிசீலனை செய்து ஆவன செய்யலாம். அதில் ஒன்றும் தவறில்லை. வேண்டுமானால் செய்யலாம்.

**திரு. பி. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆய்வுப் பணியைப் பற்றிக் கூறினார்கள். ஆய்வுப் பணியை ஆரம்பித்து ஆய்வு பண்ணவே 3 ஆண்டு காலம் 4 ஆண்டு காலம் ஆகிறது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர் கட்சி ஆட்சியே இப்போதும் நடந்து கொண்டிருப்பதாக நினைக்கிறார். அது தப்பு. (சிரிப்பு) இப்போது நடப்பது தி.மு.க. ஆட்சி, தலைவர் கலைஞருடைய ஆட்சி. ஆகையால் மாதக்கணக்கிற்குள் முடியும். அதில் எந்தவிதமான சந்தேகமும் திரு. சுந்தரத்திற்கு வேண்டியதில்லை.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர்-ராசிபுரம்-பட்டணம்-சிராபுளி குடிநீர்த் திட்டம் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்குள் உங்களுடைய ஆட்சியில் (குறுக்கீடு) 178 கிராமங்களுக்கு குடிநீர்த் தருகின்ற . . .

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** இத்தனை கிராமங்களுக்கு என்னும்போது இரண்டு மாத காலத்திற்குள் எப்படி முடியும்? அவர் இதைச் சொன்னதால் எனக்கு ஒரு ஞாபகம் வந்தது. ஏற்கெனவே இருந்த கூட்டுக் குடிநீர்த் திட்ட கொள்கை என்பது வேறு. இப்போது இருக்கற கூட்டுக் குடிநீர்த் திட்ட கொள்கை என்பது வேறு. ஏற்கெனவே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஒரு 10 ஊர்களுக்கு தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்றால், திட்டத்தை நிறைவேற்ற ஒரு கணக்கெடுத்து, ஊரிலே நீராதாரம் கண்டுபிடித்து, வழியோரக் கிராமங்கள் 2 கிலோமீட்டர் வரையில் இருந்தால்தான் தண்ணீர் கொடுப்பார்கள். அதற்கு மேல் ஒரு பாயிண்ட் இருந்தால் கூட தண்ணீர் கொடுக்கமாட்டார்கள். அதற்கான விதியே இருக்கிறது. 2 கிலோ மீட்டருக்கு மேலே 3 கிலோமீட்டர் இருந்தால் அந்த வழியோரக் கிராமங்கள் கணக்கில் வராது. இப்போது எந்த இடத்தில் நீர் ஆதாரம் கிடைக்கிறதோ, அந்த ஊருக்கு தண்ணீர் கொண்டு போகின்ற வழியிலே எத்தனைக் கிராமங்கள் இருக்கிறதோ, அத்தனைக் கிராமங்களுக்கும், எத்தனை கிலோமீட்டர் இருந்தாலும் அதை இணைத்து (மேசையைத் தட்டும் ஒலி)—ஒரே கிராமத் திட்டம் என்று சொல்லக்கூடாது. இப்போது போட்டிருக்கிற திட்டத்திலே ஒரு கிராமத்திலே காலை வைத்துவிட்டால், அங்கு ஒரு குழாயைப் போட்டுவிட்டால் அந்தக் கிராமம் நிவர்த்தி அடைந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 'ஐந்தாண்டு காலத்திற்குள் அனைத்து கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுப்பேன், இது உத்தரவாதம்' என்று சொல்லி ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். 2 வருடம் கழித்து அவருக்கு ஒரு புகார் வந்தது. என்னவென்றால், சதுப்பு நிலங்கள், வயல்வெளிகள், ஆதிதிராவிடர் மக்கள் வாழும் இடங்கள்—தஞ்சாவூர் போன்ற இடங்களில்—அதிகாரிகள் கிராமத்தைக் கணக்கெடுத்து மேல்குடி மக்கள் வாழ்கின்ற இடங்களிலெல்லாம் விளக்கு போடுகிறார்களே தவிர எங்களுக்கு போடுவதில்லை; எங்களுக்கு அந்த வசதி கிடைக்கவில்லை என்று அவர்கள் புகார் கொடுத்தார்கள். 'கிராமங்களில் அந்த வசதி இருக்கிறது, எங்களுக்கு அந்த வசதி தருவதில்லை' என்றெல்லாம் சொன்னார்கள். திரும்ப இதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன உத்தரவு போட்டார்கள் என்றால், இனிமேல் ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்வசதி கொடுக்கிற நிலைமை வருகிறபோது, முதலில் ஆதிதிராவிடர் தெருக்களுக்கு விளக்கு வசதி செய்து கொடுத்துவிட்டுத்தான் அடுத்த தெருவுக்குப் போக வேண்டும் என்றார்கள். நான் முதலிலேயே சொன்னேன், நான் அவருடைய தொண்டன் என்று. நான் ஒரு உத்தரவு போட்டேன்.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போன்று, கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே தண்ணீர் எடுத்து வருகிறபோது ஆதிதிராவிடர் காலனிகள் அல்லது கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.(குறுக்கீடு) அதைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** அதைத்தான் சொல்ல வருகிறேன். ஆதி திராவிட தெருக்களுக்கு மின் இணைப்பு முதலில் கொடுத்துவிட்டு, பிறகுதான் அடுத்த தெருவுக்குப் போக வேண்டும் என்று ஏற்கெனவே அன்றைக்கு அவர்கள் உத்தரவு போட்டார்கள். அது எனக்குத் தெரியும். நான் அவருடைய தொண்டன். நான் என்ன உத்தரவு போட்டேன் என்றால், தற்போது 2,3 நாட்களுக்கு முன்னர் நடந்த கூட்டத்திலேயே அதைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறேன். வழியோரக் கிராமங்களைக் கணக்கெடுத்துக்கொண்டு வரும்போது, எத்தனை கிலோமீட்டர் தூரம் என்று கணக்கெடுக்கக்கூடாது. அது எவ்வளவு தூரமாக இருந்தாலும், அந்த ஊரிலே உள்ளூரில் நீர் ஆதாரம் கிடைக்கவில்லையென்றால், இந்தத் திட்டத்தினுடனேயே எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கிராமத்தினை தண்ணீர் சென்றடைய வேண்டுமென்பதற்காக அந்தக் கிராமத்தில் ஒரு ஓரத்தில் ஒரு பைப்பை வைத்து விட்டு கணக்கு எழுதிவிடக் கூடாது; அந்தக் கிராமப் பகுதியில் எத்தனை தெருக்கள் இருக்கிறதோ, அத்தனை தெருக்களிலும், குறைந்தது ஒரே ஒரு டேப்பாவாவது போட வேண்டும். அது ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற தெருக்களுக்கும் பொருந்தும் என்று மாற்றியிருக்கிறோம். இதனாலேயே சுந்தரம் அவர்கள் கேட்டிருந்த குடிநீர்த் திட்டம் காலதாமதமாகி வருகின்றது. அதிலே மூன்று கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன.

பிற்பகல் 5-10

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பட்டணம்-சிராப்புளி-புதுப்பட்டி குடிநீர்த் திட்டத்தை, இரண்டு ஆண்டுகள் அல்ல, மூன்று ஆண்டுகள் எடுத்துக் கொண்டாலும், முடித்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 மார்ச் 27

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். தொய்வில்லாமல் பணி நடக்கும். அது முடிகின்றபொழுது முடியும். என்னைப் பொறுத்தவரையில், திட்டமிட்டு எதையும் குறிப்பிட முடியாது. பணிகள் தொய்வில்லாமல் தொடங்கி நடக்கும். அந்தத் திட்டங்கள் முடிகின்ற நேரத்தில் முடியும். அவ்வளவுதான் சொல்லமுடியும். அதோடுகூட, இனிவரும் ஆண்டுகளில் நீங்கள் சொல்கின்ற பாதாள சாக்கடைத் திட்டம் அல்லது சாதாரண சாக்கடைத் திட்டம் இவைகளெல்லாம்கூட கவனத்தில் கொள்ளப்படும்.

எல்லாவற்றையும்விட, இன்னொரு உத்தரவு இருந்தது. 150-இல் இருந்து 750 பேர் வரை வாழ்கின்ற பகுதிகளில் கைப்பம்புகள்தான் போட வேண்டுமென்று ஒரு உத்தரவு இருந்தது. அதிலே பல சிக்கல் இருந்தது. இப்பொழுது மக்கள் கைப்பம்புகளை அதிகம் விரும்புவதில்லை. திறந்த உடன் தண்ணீர் வரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு விருப்பம் இப்பொழுது மக்கள் மத்தியிலே வந்துவிட்டது. அதோடுகூட இன்னொன்று. அந்த 150 பேரும் மூன்று இடங்களிலே வாழலாம். சிலர் ஆதிதிராவிடர் தெருவிலேயும், சிலர் வேறு ஜாதியினர் வாழ்கின்ற இடங்களிலும், வேறு சில இடங்களிலும் என்று மூன்று இடங்களிலே கூட வாழலாம். அப்பொழுது மூன்று பைப்புகள் போட வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒரு பைப்பினை 40 ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்து போடமுடியாது. ஒரு பைப் போட ரூ.40 ஆயிரத்திலேயிருந்து ரூ.60 ஆயிரம்வரை ஆகும். ஆகமொத்தம், 3 பைப்புகளுக்கு ரூ.1,80,000 தேவைப்படும். அதுபற்றிக்கூடப் பரவாயில்லை. ஆனால், எவ்வளவு ஆழம் வேண்டுமானாலும் போகலாம் என்று இல்லை. சில குறிப்பிட்ட ஆழத்திற்கு மேல் போக முடிவதில்லை. அதோடுகூட, பைப் எந்த ஆழம் வரை செல்கின்றதோ அந்த ஆழம் வரை தண்ணீர் இருக்கும் போதுதான் உபயோகமாக இருக்கும், அதற்கும் கீழே தண்ணீர் மட்டம் போய்விட்டால். வேறு பைப் போடமுடியாது. அப்பொழுது ஏற்கெனவே போடப்பட்ட பைப் வீணாகிப் போய்விடுகிறது. ஆகையினால், இந்த அரசாங்கத்தினுடைய புதிய கொள்கை, கைப்பம்பைக் குறைப்பது, விசைப்பம்பை அதிகரிப்பது என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். எனவே, கைப்பம்பைக் குறைத்து, விசைப்பம்பை அதிகரித்து, 150 பேர் இருந்தாலும்கூட, 10,000 லிட்டர் அளவிற்கு நீர் ஆதாரம் இருந்தாலும்கூட, விசைப்பம்பு மூலம் தண்ணீர் கொடுக்கப்படும். இது பெரிய சங்கடம்தான். இதற்கு அதிகாரிகள் மத்தியிலே கூட ஒத்துழைப்பு



1997 மார்ச் 27] [திரு. கோ. சி. மணி]

இல்லை, என்னென்னவோ கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தோம், அப்படிப் பார்த்ததற்குப் பிறகு, இதுதான் இலாபகரமாக எனக்குத் தெரிந்தது. எனவே, அதை நாங்கள் இப்பொழுது எடுத்திருக்கிறோம்.

அதைப்போலவே, மாநகராட்சிக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டம் ரூ. 6.25 கோடி செலவில், கூடுதலாகக் கேட்கப்பட்டு, பகுதிகளாகப் பயனடைகின்ற வகையில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டம். அது இப்பொழுது ஒப்புதலுக்கு வந்திருக்கிறது. இன்னும் அதை அறிவிக்கவில்லை என்கிறார்கள். அத்திட்டம் நிச்சயமாகச் செய்து கொடுக்கப்படும். இதை நான் இப்பொழுது அறிவிக்கின்றேன். (குறுக்கீடு) திரு. கணேசனுக்கு என்ன இப்பொழுது ? வேறு ஒருவருக்கும் கொடுக்க வேண்டாமா? நான் முதலிலேயே சொன்னேன். திரு. கணேசன் அவர்கள் கேட்டு, அவர் பேப்பரெல்லாம் என்னிடம் கொடுத்து, அவையெல்லாம் என்னிடம் இருக்கின்றன. அதைத்தான் நான் இங்கே முதலிலேயே சொல்லியிருக்கின்றேன். இங்கே அறிவிக்கின்ற திட்டங்களை மட்டும்தான் நாங்கள் எடுத்துக் கொள்ளப்போகின்றோம் என்பது அல்ல. தலைவர் அவர்கள் எனக்கு முன்னுரிமை கொடுத்திருக்கின்றார்கள். இன்னென்ன திட்டங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பண ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

அதோடுகூட இன்னும் பல திட்டங்களுக்கு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செலவு செய்ய வேண்டியிருக்கின்றது. இந்த 500 தொட்டிகளைக் கட்டுவதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு திரு. கணேசன் அவர்கள் நன்றி தெரிவிக்கவில்லை. அதிலே இரண்டு இடங்கள் பாக்கியிருக்கின்றது என்று சொல்கிறார்கள். அதையும் நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். அதைவிட்டுவிட்டு, நடுவிலே கொடுங்கள் என்று அவர் கேட்டால் என்ன அர்த்தம்? ஆகையினால், குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில், அதனை ஒரு அத்தியாவசியமான முறையில் எடுத்து நாங்கள் செய்கின்றோம்.

இன்னும் ஒன்றைக்கூட நான் உங்களிடத்திலே சொல்கின்றேன். ஒரு திட்டம் தீட்டிச் செயல்படுகின்றபோது, இடையிலே தண்ணீர் இல்லாத நிலை இருக்குமானால், அதனை ஒரு மாற்றுத் திட்டத்தின் மூலமாகக் கொடுக்கலாமா என்றுகூட நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். அதனைச் செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அதேபோன்று, இன்னொரு திட்டம். இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள், உவர்ப்பு நீரை நன்னீராக மாற்றும்

திட்டம். தண்ணீர் கெட்டுவிட்டது என்று சொன்னார்கள். அவர்கள் புகைப்படங்களை யெல்லாம்கூட கொண்டு வந்திருக்கிறார்கள். அதனை நான் காட்ட விரும்பவில்லை. காரணம், தலைவர் அவர்களது அனுமதியோடு, இந்த மன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே, இன்னும் ஒரு வார காலத்திற்குள், அந்தத் திட்டத்தை நேரில் பார்த்து இந்த அவையில் ஒரு அறிக்கையினைக் கொடுக்கலாம் என்று இருக்கிறேன். என்ன காரணம் என்றால், அந்தத் திட்டத்திற்கு அதிகம் செலவாகிறது; அது சரிவராது என்பதற்காக நிதியுதவி செய்கிற நிறுவனங்கள் கொஞ்சம் தயக்கம் காட்டி வந்தார்கள். ஆனால், அத்திட்டத்திற்கான பாதிப் பணத்திற்கு மேல், முந்தைய அரசாங்கம் தவறுதலாகக் கொடுத்துவிட்டார்கள். காண்டிராக்ட் எடுத்து விட்டார்கள். நல்ல இயந்திரங்கள் எல்லாம் வந்து இறங்கி விட்டன. முக்கால்வாசி பணம் கொடுத்துவிட்ட பிறகு, கால்வாசி பணத்தை நிறுத்த வேண்டாம் என்று அந்தத் திட்டத்தைத் துவங்கி, இப்போது 3 இடங்களில் அந்தத் திட்டம் நடைமுறையிலே இருக்கிறது.

பிற்பகல் 5-15

ஆனால், நீங்கள் இப்போது அங்கு அந்தத் திட்டம் இல்லை என்று சொன்னீர்கள். நான் அது இருக்கிறது என்று சொல்கிறேன். அது உண்மையா, பொய்யா என்பதைப் பார்த்தால்தான் உங்களுக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். நீங்கள் பார்த்து ஒரு மாதம் இருக்கலாம். நான்கூட மறுபடியும் தகவலை இப்போதும் கேட்டேன். அந்த 3 இடங்களிலும் சரியாக செயல்படுகிறது என்றுதான் தகவல் கிடைத்திருக்கிறது. 108 கிராமங்கள், கடலோரப் பகுதிகளுக்கு மட்டும்தான் இன்னும் துவங்கப்படவில்லை. "நீங்கள் வந்து பார்த்து, அப்பணிகள் குறித்து தூண்டிவிட்டால், அவை வேகமாக நடக்கும்" என்று என்னிடம் அதிகாரிகளே சொன்னார்கள். நான் என்னுடைய மானியம் முடிந்தபிறகு, ஒரு நாள் தலைவரிடத்திலே சொல்லிவிட்டு, அங்கு சென்று பார்த்து வருகிறேன், இன்னும் ஒரு வாரத்திற்குள். அப்போது நாம் இருவரும் அந்தத் திட்டத்தைப் போய்ப் பார்ப்போம். ஏறத்தாழ அந்தத் திட்டம் செயல்படுகிற நிலையிலேதான் இருக்கிறது. நல்லமுறையிலே அது பயன்படும் என்று சொல்கிறார்கள். அடுத்த திட்டத்திற்கும் மதிப்பீடு தயார் செய்திருக்கிறோம். கடல்நீரை நன்னீராக்குவது என்பது, பல இடங்களிலே, குறிப்பாக இராமநாதபுரம் பகுதியிலே, எப்படியும் அதன்மூலம் குடிநீர் வசதி தருவதில், முன்னுரிமை



அளிக்க வேண்டும் என்பதிலே, முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அதற்கு முன்னுரிமை உண்டு.

இன்னொன்று; நம்முடைய உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்னது. நானும் அவரும் போய்ப் பார்த்தோம் என்பதை ஒப்புக் கொள்கிறேன். நாகை-காயிதேமில்லத் மாவட்டம், ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம்—நானும் அங்கே பிறந்தவன் என்ற காரணத்தினால், அதிலே எனக்கும் உரிமையுண்டு; நானும் ஒரு குடிமகன்தான் அதிலே—அந்த மாவட்டங்களுக்கு நானும் அவரும் ஒரு வாரத்திற்கு முன்பு அங்கு போனோம். அங்கு போன பிறகு 'ரோட்டரி கிளப்' மூலமாக அங்கு குழாய் போட்டு தண்ணீர் கொடுப்பதாக அறிந்து அங்கு சென்றோம். எனக்குப் போகும்போதே, அதுகுறித்து பத்திரிகை செய்தியைப் பார்த்தபோதே எனக்கு சந்தேகம் வந்தது. நாம் இவ்வளவு பெரிய டிபார்ட்மென்ட்டை வைத்திருக்கிறோம்; நம்மால் தண்ணீர் கொடுக்கமுடியவில்லையே என்று நினைத்து அங்கே போனோம். அப்போது அவரிடம் கேட்டேன்; 22 அடியில் தண்ணீர் வந்திருக்கிறது என்று சொன்னார். மிகவும் மகழ்ச்சியாக இருந்தது எனக்கு. பிறகு திரு. பழனிசாமியைப் பார்த்து, 'என்ன ஐயா, 22 அடியிலே தண்ணீர் இருக்கிறது?' என்று கேட்டேன். 'நாம் எங்கேயோ பஸ் ஸ்டாண்டுக்கெல்லாம் தேடிப் போகிறோமே!' என்றும் சொன்னேன். "22 அடியிலே இப்போது இருக்கிறது இன்னும் 2 மாதங்கள் கழித்து, தண்ணீர் இருக்குமோ, இருக்காதோ தெரியவில்லை" என்று அவர் சொன்னார். 'ரோட்டரி கிளப்' சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டால், அவர்களும் அதேமாதிரி சொன்னார்கள். ஏனென்றால், அது மேலே இருக்கிற தண்ணீர்; ஏதோ ஓடுகிற வரையிலே தான் அப்படி அதேமாதிரி திருத்துறைப்பூண்டி வரையிலும் வேதாரண்யம் வரையிலும் ஒரு ஊற்று; ஒரே ஒரு ஊற்றுதான் அது; அது வேறொன்றுமல்ல. அதுபோலவே, கடலோர பகுதிகள் பூராவிலும், கடற்கரைப் பகுதி கிராமங்கள் அத்தனையும் நன்னீராக இருப்பவை, உவர்ப்பு நீராகும். பல இடங்களில் உவர்ப்பு நீராகவேயும் இருக்கிறது. ஆகவேதான், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கும், அதேபோலவே ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டத்திற்கும் ஒரு திட்டத்தைத் தயாரித்து,. மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அது பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி விரிவாக அல்ல; சுருக்கமாக நான் சொல்கிறேன். உவர் நீரால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க வேண்டுமென்று, இந்த அரசு

முடிவெடுத்திருக்கிறது. கடற்கரை ஓரங்களிலுள்ள ஊரகக் குடியிருப்புகளில் உவர் நீரால் ஏற்படும் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்த்திட ஒரு முறையைக் கையாள்கிறோம். மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களில், நிரந்தரமாக நீராதாரங்களில் இருந்து, நீர் எடுத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக குடிநீர் வழங்கலாம். இது கொள்கை. ஆனால், இந்நிலைமை, நாகை-காயிதேமில்லத் மாவட்டத்திலும், ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டத்திலும் தண்ணீர் இல்லை என்பதால் முடிவாகிவிட்டது. ஏற்கெனவே, பட்டுக்கோட்டையிலே போடப்பட்ட திட்டம்—காலையிலேகூட இங்கே குறிப்பிட்டார்கள்—6.7 கோடி ரூபாய் செலவழித்து, அந்தத் திட்டம் 'பெய்ல்யூர்'-ஆகிப் போய்விட்டது; யார் யாரோ அப்படி அதை வீணாக்கிவிட்டார்கள். ஆனால், நாம் அப்படி இல்லை. நாகை-காயிதேமில்லத், திருவாரூர் ஏ.டி. பன்னீர் செல்வம் ஆகிய இரு மாவட்டங்களில், ஏற்கெனவே திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த, கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகளை விரைவுபடுத்தி, நாகை காயிதேமில்லத், வ.உ. சிதம்பரனார் மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களிலுள்ள கடலோரக் குடியிருப்புகளுக்கும், ஒன்றாக, இப்போது குறிப்பிட்டபடி எல்லாக் குடியிருப்புகளுக்கும், கடலோரக் குடியிருப்புகளுக்கு, முறையே தொலைவிலுள்ள நீராதாரங்களைக் கொண்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தயாரித்து, ராஜீவ்காந்தி தேசிய குடிநீர் வழங்கல் குழும நிதியிலிருந்து நிதியைப் பெற்று செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இதில் முதற்கட்டமாக, நாகை-காயிதேமில்லத் மாவட்டத்தில், வேதாரண்யம் ஒன்றியத்திலுள்ள 222 கடலோரக் குடியிருப்புகள்; முத்துப்பேட்டை ஒன்றியத்திலுள்ள 57 கடலோரக் குடியிருப்புகள்; திருத்துறைப்பூண்டி நகராட்சி; தலைஞாயிறு ஊரகப் பேரூராட்சி; வேதாரண்யம் நகரப் பேரூராட்சி; மற்றும் 203 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு 98 கோடியே 75 இலட்சம் ரூபாய். கொள்ளிடம் ஆற்றிலிருந்து இதற்குத் தண்ணீர் எடுத்து வரவேண்டும். கொள்ளிடம் ஒன்றியத்திலே, 108 கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டமும் இதில் அடங்கும். இதிலும் வழியோர கிராமங்களும் அடங்கும். அதற்கு 9 கோடியே 71 இலட்சம் ரூபாய்; மொத்தம் இரண்டும் சேர்ந்து 108 கோடியே 46 இலட்சம் ரூபாய். இது குறித்தும் அதிகாரிகள் பேச்சுவார்த்தையிலே



இருக்கிறார்கள். அது கூடியவிரைவிலே முடிவுபெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அது முடிந்தால் இரண்டு மாவட்டங்களிலும் 30 ஆண்டுகளுக்குக் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படாது. அந்த அளவுக்கு அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினத்திற்கு தண்ணீர் வந்துவிட்டது.

பிற்பகல் 5-20

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கீழையூர் ஒன்றியத்தையும், நாகை ஒன்றியத்தையும் இணைப்பது பற்றி அமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த ஊரில் இந்தக் கட்சியின் மாவட்டச் செயலாளராக இருந்தவன். அந்த விவரங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். இந்த இரண்டு ஜில்லாவும் அதிலே உள்ளடங்கியிருக்கிறது என்று சொல்கிறேன். அதற்குப் பிறகும் கீழையூர் வேறு, மேலையூர் வேறு என்று சொல்கிறீர்களே. நாகப்பட்டினத்தைக் கேட்பீர்கள் என்று நான் நினைத்தேன். நாகப்பட்டினத்திற்கு தண்ணீர் வந்துவிட்டது. மொத்தம் 108 கோடியே 41 இலட்ச ரூபாய். வ.உ. சிதம்பரனார் மாவட்டம் 308 ஊரகக் குடியிருப்புகள், 45 கடலோரக் குடியிருப்புகள், சாத்தான்குளம் மற்றும் உடன்குடி நகரப் பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 28 கோடியே 50 இலட்ச ரூபாய். மத்திய அரசின் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் வழங்கல் குழுமம் ஆலோசகர் திரு. விஸ்வாஸ் என்பவர் 1997 பிப்ரவரி 8, 9 தேதிகளில் இதைப் பார்வையிட்டிருக்கிறார். பார்வையிட்டு ஓரளவிற்கு திருப்திகரமான பதில் தெரிவித்திருக்கிறார். இன்னொரு முறை அவரை அழைப்பதற்கு எங்கள் அதிகாரிகள் செல்லவிருக்கிறார்கள். அதைப்போலவே அவர்கள் கொள்ளிடம், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி பகுதிகளில் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்கள். பார்வையிட்டு அதனுடைய தன்மை, தரம், அந்த மக்களுக்கு இருக்கிற கஷ்டங்கள் இவைகளை உணர்ந்து அதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்றார்கள். நாங்கள் அதை இரண்டு வகையாகப் பிரிக்காமல் மொத்தமாகவே அதைக் கொடுக்க வேண்டுமென்று அவரிடத்திலே தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். எனவே விரைவில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். 115 ஊரகக் குடியிருப்புகள், 61 கடலோரக் குடியிருப்புகள், சாயர்புரம் நகரப் பேரூராட்சி, பெருங்குளம் ஊரகப்

பேரூராட்சி, விமானத்தளம், மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் ஆகியவற்றிற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய். இவை எல்லாம் சேர்ந்து 41 கோடியே 40 இலட்சம் ரூபாய். இரண்டாவது திட்டம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம். 342 ஊரகக் குடியிருப்புகள் 43 கடலோரக் குடியிருப்புகள், நாங்குனேரி நகரப் பேரூராட்சி மற்றும் திசையன்விளை நகரப் பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 43 கோடி ரூபாய். இவை அனைத்தும் சேர்த்து மொத்த திட்டத்திற்கு 199 கோடியே 16 இலட்ச ரூபாய். இவைகள் ஆய்வில் இருக்கின்றன. இந்தத் திட்டங்கள் அநேகமாக நிறைவேறும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. எனவே இந்தத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கின்ற பொறுப்பில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தவிர மற்ற மாவட்டங்களிலுள்ள கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் ஆய்வுப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இவைகளுக்கு ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் வழங்கல் குழுமம் நிதியிலிருந்து நிதி பெற்று செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதோடுகூட இந்தக் குடிநீர்ப் பிரச்சினையிலே இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* **திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். வத்தலகுண்டு மலைச்சரிவிலே இருக்கிற காரணத்தினாலேயும், மலையிலிருந்து மண் சரிவு ஏற்படுகிற காரணத்தினாலேயும் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருகிவருகிற காரணத்தினாலேயும் அங்கே குடியிருப்பவர்கள் தாண்டிக்குடி, பண்ணைக்காடு, பூலத்தூர் போன்ற இடங்களில் குடியிருப்பவர்கள் வந்து குடியேறுகிறார்கள். அதனால் அங்கே தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க 3 கோடியே 35 இலட்ச ரூபாயில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயார் செய்யப்பட்டது. சென்ற வாரம்கூட நான் அதுசம்பந்தமாக அதிகாரிகளைப் பார்த்தபோது சொன்னார்கள். அந்தத் திட்டம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது என்று. அதை உடனடியாக எடுத்துக்கொள்வோம் என்றும் சொன்னார்கள்.



எனவே அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இப்போது நிறைவேற்றப்படுமா, அதற்கு பணம் ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல பள்ளப்பட்டி, குள்ளலகுண்டு ஆகிய இரண்டு பஞ்சாயத்துகளிலும் ஆதிதிராவிட மக்கள் நிறைந்திருக்கிறார்கள். அங்கே தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அந்தத் திட்டமும் வந்திருக்கிறதா என்பதை தயவு செய்து அறிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** திட்டங்கள் என்றால் அதை ஆய்வு செய்து பரிசீலித்து முடியுமா, முடியாதா என்று அறிவிப்பதைத் தவிர எங்கள் இலாகாவிற்கு வேறு வேலையில்லை. நிச்சயமாக முடியுமென்றால் செய்து கொடுத்துவிடுகிறோம். இதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கு வரப்பிரசாதமாக இருக்கின்ற ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நீண்ட காலமாக நிலுவையிலே இருக்கிறது. ஜப்பான் நாட்டு குழுகூட வந்திருக்கிறது. அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுவரையிலே அறிவிக்கவில்லை. அதை நடப்பாண்டிலே......

பிற்பகல் 5-25

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன், மானியக் கோரிக்கைகளில் சில திட்டங்கள் அடையாளமாக அறிவிக்கப்படுகின்றனவே தவிர, நடக்கப்போகின்ற வேலைகளை எல்லாம் சொல்லுவதற்கு மானியக் கோரிக்கைகள் இல்லை. நிச்சயமாக எல்லாவற்றுக்கும் முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ளப்படும். ஊரக வளர்ச்சி மானியக் கோரிக்கையின் எண் 27-ன் மீது 18 சட்டமன்ற உறுப்பினர்களால் 74 வெட்டுத் தீர்மானங்களும், குடிநீர் வழங்கல் மானியக் கோரிக்கை எண் 48-ன் மீது 22 சட்டமன்ற உறுப்பினர்களால் நூற்றுச் சொச்சம் வெட்டுத் தீர்மானங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தனை பேர்களும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, என்னுடைய மானியக் கோரிக்கைகளை ஏற்று, நான் கேட்டிருக்கின்ற தொகையை அனுமதிக்க வேண்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீரன் ஒருவருக்குத்தான் விளக்கம் கேட்க அனுமதி கொடுப்பேன். மற்றவர்கள் எல்லாம் ஏற்கெனவே பேசியிருக்கிறீர்கள். அதனால் அனுமதி கிடையாது.

* **திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், ஒரு விளக்கு மின் திட்டத்தை, தாழ்த்தப்பட்ட மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வாழும் ஏழை குடிசைகளுக்கும் நீட்டித்துத் தர அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு இலட்சம் என்பதே முடியாத காரியம். நாங்கள் நிர்பந்தம் செய்கிறோம். அதற்குள் இதுவும் வரும். மேலும், விழுப்புரம் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் திருவண்ணாமலை பாதாள சாக்கடைத் திட்டம் ஆகியவற்றை நிச்சயமாக இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது என்று நான் அறிவிப்பதற்கு முன்னால், பேரவைத் தலைவருக்கு பேச்சுரிமை இல்லை என்றாலும், நன்றி சொல்லுகின்ற உரிமை உண்டு, கடமை உண்டு. ஆகவே, மதுரை மாநகராட்சி மக்கள் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு என்று அறிவிக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை வெட்டுத் தீர்மானத்திற்காக அழைக்கிறேன். நான் ஏற்கெனவே வாய்ப்பு கொடுத்துவிட்டேன். உங்களுக்கு கொடுத்தால் 10 பேருக்குக் கொடுக்க வேண்டும். இப்போது வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறீர்களா? இல்லையா?



### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27 ஊரக வளர்ச்சி, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெறப்படுகிறது.

திரு. டி. மணி. இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.789,69,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 48-குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48-குடிநீர் வழங்கல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.184,31,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

### (இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49-நகராட்சி நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.



**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 375,67,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை, (31-3-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 5.29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

120. சென்னை, சிம்கோ பொறியியல் நிறுவனம் செலுத்த வேண்டிய வரியினை சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் '02-11-1996-ஆம் நாளிட்ட 349-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959)53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

121. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் 1995-96-ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1970-ம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

122. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1995-96-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

123. 1996-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 2) (வருவாய் வரவினங்கள்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

124. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956] 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

87. மானியக் கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

88. ஊரக வளர்ச்சி பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம் 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

89. மானியக் கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

90. மானியக் கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம், பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

91. நகராட்சி நிருவாகம், பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் செயல்திறன் பற்றிய குறிப்பு, 1996-97. (தமிழ், ஆங்கிலம்)

92. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல் வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)





## இணைப்பு-1

**(71 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**ஊரக வளர்ச்சி**

**1997-98 கொள்கை விளக்கக் குறிப்பு**
**கோரிக்கை எண் 27**

### ஊரக வளர்ச்சி

ஊரக வளர்ச்சி என்பது குறிப்பிட்டதொரு நிகழ்ச்சியன்று. அது தொடர்ச்சியானதொரு நடைமுறை ஆகும். ஒரு மக்களாட்சி அமைப்பில், அதிலும் குறிப்பாக இந்தியா போன்ற ஒரு நாட்டில் வலுவான ஊரக அடிப்படை மிக அவசியம். மத்தியிலும், மாநிலங்களிலுமுள்ள அரசுகள் ஊரக ஏழை மக்களின் பெருளாதார, சமூக வாழ்க்கையின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலேயே மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட கால அளவில், ஊரக வளர்ச்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ.249 கோடியாகும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவில் பேரூராட்சிகளின் வளர்ச்சிக்கும் சேர்த்து ரூ.400 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1997-2002), இத்தொகை அதிகரிக்கப்படக்கூடும். இது கிராமங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளைத் தெள்ளென விளக்கும்.

2. வளர்ந்து வரும் ஒரு சனநாயக நாட்டில் மக்களின் இயக்கம் அடிமட்ட நிலையிலிருந்து அதாவது கிராமங்களிலிருந்து தொடங்க வேண்டுமென்று மகாத்மா காந்தி நம்பினார். அவர் கிராம ராஜியம் உருவாக வேண்டுமெனக் கனவு கண்டார். இதற்கு முதல் தேவை ஊராட்சி அமைப்புகள் ஆகும். இந்த உள்ளூர்த் தன்னாட்சி அரசு அமைப்புகளுக்குக் கடைசியாக, 1986-ஆம் ஆண்டு பிப்ரவரியில் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக் காலம், 1991 பிப்ரவரியில் முடிவடைந்தது. தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்தும், பொதுத் தேர்தலின்போது கொடுத்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டும், தற்போதைய அரசு, 1996 அக்டோபரில், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்குத் தேர்தல் நடத்தியது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு விட்டனர். 97,014 வார்டு உறுப்பினர்களும், 12,584 ஊராட்சித் தலைவர்களும், 6,499 ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களும் 648 மாவட்ட

ஊராட்சி உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் 32,331 ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பெண்களும், 24,100 வார்டு உறுப்பினர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருமாவர். பொதுமக்களுக்கு ஆற்றவேண்டிய சட்டப்படிக்கான கடமைகளை விரைந்து நிறைவேற்றுவதில் உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, உள்ளாட்சி மன்றங்களிடம் கூடுதல் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. நடைபெறவுள்ள சட்டமன்றப் பேரவையின் நடப்பு வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது இது குறித்த முடிவை அரசு வெளியிடும்.

3. 1992-ஆம் ஆண்டு எழுபத்து மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், ஏனையவற்றுக்கிடையே, மாநிலங்களில், மாநில நிதி ஆணையம் ஒன்றை அமைக்க வகை செய்கிறது. அதன்படி, அரசு, உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான வழிவகைகள் குறித்துப் பரிந்துரை செய்வதற்காக 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மாநில நிதி ஆணையம் ஒன்றை நியமித்தது. இந்நிதி ஆணையம் பல்வேறு அரசுத் துறைகள், தனியார் முகவரமைப்புகளுடன் கலந்தாலோசனை செய்த பின்னர், 1996 நவம்பரில் அரசுக்கு அதன் அறிக்கையை அளித்தது. சட்டமன்றப் பேரவையின் நடப்பு வரவு-செலவுத் திட்ட கூட்டத்தொடரில் இந்நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மீதான அரசின் முடிவு அறிவிக்கப்படும்.

4. தற்போது, இம்மாநிலத்தில் 384 ஊராட்சி ஒன்றியங்களும், 12,584 ஊராட்சிகளும் உள்ளன. ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்த அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. சமுதாயச் சொத்துக்களை ஏற்படுத்தி பராமரிப்பதே பல ஆண்டுகளாக இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாக இருந்து வந்தது. ஆண்டுகள் செல்லச் செல்ல, மக்களின் தேவைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து, இந்திய அரசு வழங்கும் நிதியுதவியுடனும், யுனிசெப், டானிடா போன்ற முகவரமைப்புகளின் நிதியுதவியினைக் கொண்டும் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற வேலை இல்லாதவர்களுக்கும் போதுமான அளவு வேலைவாய்ப்புப் பெறாதவர்களுக்கும் தொடர்ந்து நிலையான வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்தல், ஊரகத் துப்புரவு, குடிநீர் வழங்கல், ஊரக எரிசக்தித் திட்டங்கள், ஊரகப் பகுதிகளிலுள்ள மகளிர்-குழந்தைகள் மேம்பாடு ஆகியவற்றுக்கான பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தத் தொடங்கியது. இவற்றுள் குடிநீர் வழங்கல், உள்ளூர்ச் சாலைகள், தெருவிளக்குகள், கால்நடை



வளர்ப்பு, சிறுபாசனத் திட்டங்கள் போன்ற கிராமப் பணித் திட்டங்களும் அடங்கும். இவற்றையெல்லாம் ஊராட்சி ஒன்றியங்கள் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகின்றன.

பல்வேறு மாநிலத் திட்டங்கள் மற்றும் மத்திய அரசு உதவி பெறும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, 1997-98-ஆம் ஆண்டில் மானியக் கோரிக்கை எண் 27-ஊரக வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ.789.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

செயல்திட்ட வாரியான விவரங்கள் பின்வரும் அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ளன:-

## அத்தியாயம்-1

### சுயவேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்கள்

### (அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP)

இத் திட்டம் மத்திய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன் இம்மாநிலத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஊரக மக்கள், அதாவது ரூ.11,000-க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உடைய குடும்பம் ஒவ்வொன்றும் தமக்கென்று வருவாய் அளிக்கும் சொத்துக்களை உருவாக்கிக்கொள்ள அவர்களுக்கு மானியமும், வங்கிக் கடனும் வழங்கியுதவுவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சிறு மற்றும் குறு விவசாயிகள் ஊரக கைவினைஞர்கள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர். இவ்வாறு பயன் பெறுவோர்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 50 சதவீதமும், பெண்கள் 40 சதவீதமும், ஊனமுற்றோர் 3 சதவீதமும் ஆவர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதிக அளவு மானியத் தொகை ரூ. 6,000 என்றும் வறட்சியான பகுதிகளில் வாழும் மக்களுக்கு ரூ. 5,000 என்றும் ஏனைய பகுதிகளில் வாழ்பவர்களுக்கு ரூ. 4,000 என்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டத்தைப் பொறுத்து, மானியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வருமானம் பெருக்கும் உடைமைகளை உருவாக்குவதில் பயன் பெறுவோரின் விருப்பத்திற்கு ஏற்றபடி உடைமைகளைத் தேர்வு செய்து வாங்கிக் கொள்ள எல்லா மாவட்டங்களிலும் 50 சதவீத ஒன்றியங்களில் உதவித் தொகையைப் பணமாக அவர்களிடமே வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

**குடும்பக் கடன் வசதித் திட்டம் (FCP)**

தெரிந்தெடுத்த குடும்பங்களின் தகுதியுடைய அனைத்து உறுப்பினர்களுக்கும் நிதியுதவி செய்வதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டம் 1991-92-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், பெரியார், சேலம், தருமபுரி, தென் ஆற்காடு-வள்ளலார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி, செங்கற்பட்டு, தஞ்சாவூர், திண்டுக்கல்-மன்னர் திருமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் சராசரியாக ரூ. 20,000 முதல் ரூ. 25,000 வரை வழங்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 500 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும். 1995-96-லிருந்து திட்ட இலக்கு நிர்ணயிப்பதை மத்திய அரசு கைவிட்டுவிட்டது.

இத்திட்டத்தின்கீழ் 28-2-1997 முடிய 51,550 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், 46,537 பெண்கள் மற்றும் 1,565 ஊனமுற்றோர் ஆகியோர் பயனடைந்தனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 37.69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 28-2-1997 நிலவரப்படி ரூ. 36.02 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக ரூ. 37.69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் (TRYSEM):**

**(1) பயிற்சி (Training)**

இத்திட்டம் 1979 முதல் 1991 வரையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஒரு துணைத் திட்டமாக செயல்படுத்தப்பட்டது. 1991-92 முதல், இத்திட்டம் மைய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன் தனித் திட்டமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வறுமைக் கோட்டுக்கும் கீழுள்ள குடும்பங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஊரக இளைஞர்கள் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த பணிகள், தொழில்கள், பணிகள் மற்றும் வாணிகம் ஆகிய துறைகளில் சுயவேலை வாய்ப்பினை மேற்கொள்வதற்கு ஏதுவாக அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பல்வேறு துறைகளில், மூன்று மாதம் முதல் ஓராண்டுக் காலம் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் அளிக்கப்படுகிறது. இவ்வாறு பயிற்சி பெறுபவர்கள் உதவித் தொகையும், கருவிகளும் பெறத் தகுதியுடைவர் ஆவர். 1996-97-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 3.09 கோடி ஒதுக்கப்பட்டிருக்க, 1997 பிப்ரவரி வரையில் ரூ. 1.32 கோடி செலவில், 4,768 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் 10,647 பேர் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.



1997 மார்ச் 27]

இத்திட்டத்திற்கு 1997-98-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.2.49 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(2) அடிப்படை வசதிகள் (INFRA)**

டிரைசெம் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கும் மைய அரசு மற்றும் மாநில அரசின் கீழ் வரும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு உதவித்தொகை வகையில் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக இந்திய அரசால், 1986-ஆம் ஆண்டு முதல் தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அரசால் நடத்தப்படும் நிறுவனங்களுக்கு முழு அளவில் நிதியுதவியும், ஏனைய நிறுவனங்களுக்கு 50 சதவீத நிதியுதவியும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உதவித்தொகை, டிரைசெம் திட்டத்தின் கீழ் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காவது பயிற்சி அளிக்கும் பயிற்சி நிறுவனங்களுக்குப் பணிக்கொட்டகைகள் மற்றும் வகுப்பறைகள் கட்டவும், சாதனங்கள் மற்றும் வாகனங்கள் வாங்கவும் பயன்படுத்தப்படுகிறது. 1993-96-ஆம் ஆண்டுகளில் 263 நிறுவனங்களுக்கு ரூ. 5.62 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1996-97-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 1.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தலைப்பின்கீழ், 1997-98-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

**(இ) ஊரகப் பகுதி வாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (DWCRA)**

நிலையான அடிப்படையில் சுய வேலை வாய்ப்பிற்குரிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம், ஊரகப் பகுதி வாழ் பெண்களின் பொருள்ாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன், இத்திட்டமானது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாக 1983-84ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஏனைய

வறுமை ஒழிப்புத் திட்டங்களில் கையாளப்படும் தனி நபர் அணுகுமுறை போன்று அல்லாமல், இணக்கப் பணியை மேற்கொள்ளக்கூடிய அமைப்பாளர் ஒருவரின் கீழ் 10 முதல் 15 பெண்கள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்தி, அதன் வாயிலாக இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு முறை வழங்கும் ஒட்டுமொத்த மானியமாக 25,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இத் தொகையை, மத்திய அரசு, மாநில அரசு மற்றும் யுனிசெப் ஆகியவை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. 1997-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையிலும் 28 மாவட்டங்களில் 18,025 பெண்கள் பயன்பெறும் வகையில் 1,265 குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.2 கோடி மாநில அரசின் பங்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு (IEC)**

மத்திய அரசு, ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு என்கிற இன்னொரு புதிய கூறு ஒன்றை 1995-96-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள ஊரகப் பெண்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் வகுக்கப்பட்ட சேமிப்பு மற்றும் கடன் வசதி நடவடிக்கைகளை அவர்களது நாட்டத்திற்குக் கொண்டு வந்து, சேமிக்கும் பழக்கத்தை அவர்களிடையே உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற பெண்களில், குறிப்பாக ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் குழுக்களாகச் செயல்படும் பெண்களே, இத்திட்டப் பயன்களைப் பெறுபவர்களாவர். இத்திட்டத்திற்காகும் செலவை, மத்திய அரசும் மாநில அரசும் முறையே 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளும். 1996-97-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, திருச்சிராப்பள்ளி, சிதம்பரனார், புதுக்கோட்டை, திண்டுக்கல்-மன்னர் திருமலை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 50,000 ரூபாயை வழங்கியுள்ளது. மாநில அரசும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்குத் தனது பங்குத்தொகையை வழங்கியுள்ளது.



இத்திட்டத்திற்காக 1997-98-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(உ) ஊரகப் பகுதி வாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குழந்தைகள் நலம் பேணும் நடவடிக்கைகள்**

ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் நலப்பயனுக்காக, குழந்தைகள் நலம் பேணும் நடவடிக்கைகள் என்கிற இன்னொரு துணைத் திட்டம் ஒன்றை 1995-96-ஆம் ஆண்டில் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு :-

(i) ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிபுரிகின்ற பெண்களின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள குழந்தைகள் காப்பகங்கள் அமைத்தல்;

(ii) இடையிலேயே பள்ளிப்படிப்பை விட்டுவிடும் ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத் தொகுதி உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் தொடர்ந்து கல்வியறிவு பெறச்செய்வது மற்றும் அக்குழு உறுப்பினர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தருவது ஆகியவற்றிற்குக் குறிப்பாக முக்கியத்துவம் அளித்து, ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்படி அமைந்த குழுப் பெண்களுக்காக கல்விமையங்களை அமைத்தல்;

(iii) ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்படியமைந்த குழு உறுப்பினர்களின் பெண் சிசுக்களைக் கவனிப்பதில் காட்டப்படும் பாலினப் பாகுபாட்டைக் குறைப்பதற்காக, அவர்களுக்குத் தடுப்பூசி போடுதல், சத்துணவு அளித்தல் முதலிய பணிகளில் தற்போது நிலவிவரும் கடும்பற்றாக்குறையை நிறைவு செய்து பெண் குழந்தைகளுக்குச் சிறப்பு நாட்டமும், முக்கியத்துவமும் அளித்தல்.,

(iv) ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்படி அமைந்த குழு உறுப்பினர்களில் உடல் ஊனமுற்ற சிறார்களுக்குச் சிறிதளவு நிவாரணம் வழங்குதல்;

(v) பெண் குழந்தைகளை உடல் ரீதியாகத் தவறாகப் பயன்படுத்துதல் தொடர்பாகக் குறை தீர்க்கத் தொடரப்படும் வழக்குகளில் உடனடி நிவாரணமும், சட்ட உதவியும் வழங்குதல்.

இத்திட்டம் குறித்தாகும் செலவை. மத்திய அரசும் மாநில அரசும் முறையே 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளும். திட்டத்தின் கீழ் அமைந்த குழு ஒன்று, 15,000 ரூபாய்க்கு மேற்படாத மானியத்தொகையை ஒட்டுமொத்தமாக ஒரே தடவையில் பெறத் தகுதியுடையதாகும். இத்திட்டத்திற்காக 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மட்டும் 50,000 ரூபாய் வழங்கியுள்ளது. மாநில அரசும், மேற்படி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குத் தனது பங்குத்தொகையை வழங்கியுள்ளது.

**(ஊ) கிராமக் கைவினைஞர்களுக்கு நவீனக் கருவிகள் வழங்குதல்:-**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தச்சர், குயவர், செருப்பு தைக்கும் தொழிலாளி, கருமார் மற்றும் பொற்கொல்லர் போன்ற கிராமக் கைவினைஞர்களுக்கு நவீனக் கருவிகளை வழங்கும் நோக்குடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாக இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கைவினைஞர் ஒவ்வொருவரும், 2,000 ரூபாய் உதவித்தொகையைப் பெறத் தகுதியுடையவராவார். இத்தொகையானது, மத்திய அரசாலும் பயனீட்டாளராலும் 9:1 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 1992-93-ஆம் ஆண்டில் ரூ.32 இலட்சமாக இருந்தது, 1995-96-ல், 81 இலட்சம் ரூபாயாக உயர்ந்தது. மத்திய அரசானது, 1996-97-ல் 13 மாவட்டங்களுக்கு 12,480 கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில் 2.25 கோடி ரூபாயை வழங்கியுள்ளது. 34,480 கைவினைஞர்களுக்கு மொத்தம் 6.21 கோடி ரூபாய் செலவில் நவீனக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**(எ) வேலை உறுதித்திட்டம் (EAS)**

இத்திட்டம், மத்திய அரசின் 80 சதவீத நிதியுதவியுடன் 1993-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. விவசாயப் பணிகள் நடைபெறாத காலங்களில் உழவர் குடும்பம் ஒன்றில் குறைந்தது இருவருக்கு ஓர் ஆண்டில் 100 நாட்களுக்கு அந்த வட்டாரப் பகுதிக்குள்ளேயே வேலை வாய்ப்பளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக, ஊராட்சி அலுவலகத்தில் பதிவு செய்திருக்கும், 18 முதல் 60 வயது வரையுள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரு குடும்ப அட்டை வழங்கப்படும்.





மொத்தமுள்ள 384 வட்டாரங்களில் 1996-97-ஆம் ஆண்டில் 282 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மைய அரசு ரூ 108.95 கோடியும் மாநில அரசு ரூ. 27.24 கோடியும் 1996-97-ஆம் ஆண்டுக்கு வழங்கின. இத்திட்டத்தின் மூலம் 28-2-1997 முடிய 1.13.128 ஆதிதிராவிடர்கள், 15,246 பழங்குடியினர் மற்றும் பிற இனத்தைச் சார்ந்த 1,27,515 நபர்கள் பயனடைந்துள்ளனர். விடுபட்ட 102 வட்டாரங்களிலும் மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 1996-97-ஆம் ஆண்டில், பிப்ரவரி மாதம் முடிய 49 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 3,938 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தில் சமூகக்காடு வளர்ப்புத் திட்டம் செயல் படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மாநில அரசின் பங்குத் தொகையாக, 1997-98-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 34.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-2

### ஊதிய வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல்-சொத்துக்களை உருவாக்குதல் திட்டங்கள்

இவ்வகையின் கீழ்வரும் திட்டங்கள், ஊரகப் பகுதிகளில் உள்ள வேலை வாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கேற்ற வேலையில்லாத மக்களுக்குக் கூடுதலாக ஆதாயம் தரும் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், ஊரகப் பொருளாதார அடிப்படை வசதிகளை வலுப்படுத்துவதன் மூலம் தொடர்ந்த வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல் மற்றும் வறிய நிலையிலுள்ள மக்கள் நேரடியாகவும் மற்றும் தொடர்ந்தும் பயன்பெறும் வகையில் ஆதாயம் தரத்தக்க சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதற்கும் பொதுவாக முக்கியத்துவம் அளிக்கின்றன.

**(அ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (JVVT):**

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இத்திட்டம் 1989 ஏப்ரல் திங்களில் தொடங்கப்பட்டது. இத்திட்டம், ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கும் கீழேயுள்ள மக்களுக்கென்றே இலக்கிடப்பட்டிருந்தபோதிலும், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மகளிருக்கு இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

[1997 மார்ச் 27

இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவில் 80 சதவீதத்தை மத்திய அரசும் 20 சதவீதத்தை மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. ஊரக ஏழை மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் மத்திய அரசின் பங்குத்தொகை மாவட்டங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது. மாவட்டங்களுக்காக வழங்கப்படும் தொகை, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றால் 65:15:20 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மாவட்ட மற்றும் கிராம ஊராட்சிகளுக்கிடையே நிதி மாற்றம் (Diversion) செய்து கொள்வது அனுமதிக்கத்தக்கதல்ல.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கென்று ஒதுக்கப்படும் பங்குத் தொகை, பின்வரும் இனவாரியான பணிகளுக்குச் செலவிடப்பட வேண்டும்:

| | |
|---|---|
| சமூகக் காடுகள் உட்பட பொருளாதார ரீதியில் பயன் தரத்தக்க சொத்துக்களை உருவாக்கும் பணிகளுக்கு. | 60 சதவீதம். |
| ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கு. | 22.5 சதவீதம் |
| சாலைகள் மற்றும் கட்டிடங்கள் உட்பட ஏனைய பணிகளுக்கு. | 17.5 சதவீதம |

இத்திட்டத்தின்கீழ், வேலையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு ரூ.22 ஊதியம் பெறத் தகுதியுடையவராவார். 1996-97-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 71.16 கோடியில் 28-2-1997 முடிய ரூ. 36.41 கோடி செலவிடப்பட்டுள்ளது. 355.43 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன. 1997 பிப்ரவரி திங்கள் வரையில் இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர்/பழங்குடியினர், மகளிர் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோர் மொத்தம் 3,52,637 நபர்கள் பயனடைந்துள்ளனர். 105 கி.மீ. சாலையும் 35 பள்ளிக் கட்டிடங்களும் 9 பொது விநியோக முறைக் கடைகளும், 16,028 தொலைக்காட்சி அறைகளும் கட்டி முடிக்கப்பட்டன. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1997-98-ஆம் ஆண்டிற்கான மத்திய ஒதுக்கீடு ரூ. 125.63 கோடி ஆகும். மாநில அரசு வழங்கும்



1997 மார்ச் 27]

உரிய பங்குத்தொகை ரூ. 31.40 கோடியாக இருக்கும். இவ்வாறாக, மொத்த ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 157.03 கோடி மேற்சொன்ன திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக ஊராட்சிகளுக்கு கிடைக்கிறது.

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வரும் சமூகக் காடுவளர்ப்புத் திட்டம், உரிய நிலத்தைத் தெரிந்தெடுத்தல், தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்தல், வேலி அமைத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றிய பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டச் செயல்பாடு மாவட்ட ஆட்சியாளர்களால் கண்காணிக்கப்படுகிறது.

### (ஆ) இந்திரா வீட்டு வசதித் திட்டம் (IAY):

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் ஒரு துணைத்திட்டமாக 1989 ஏப்ரல் திங்களிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டம், 1-1-1996 முதற்கொண்டு தனியானதொரு திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளிலுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்கும், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும், மற்றும் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழைகளுக்கும் இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணி, இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையாகும். இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்காக யாதொரு வடிவமைப்பையும் மத்திய அரசு வரையறை செய்யவில்லை. ஆனால் வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் கூரையுடன் கூடிய வீடுகளைக் கட்ட, நிர்ணயித்துள்ள ரூ. 20,000-க்கும் மேற்பட்ட செலவிற்காக, மாநில நிதியிலிருந்து ரூ. 7,000-த்தை மாநில அரசு வழங்குகிறது. இந்நோக்கத்திற்காக, மாநில நிதியிலிருந்து மாவட்டங்களுக்கு ரூ.50.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

1996-97-ஆம் ஆண்டிற்காக, ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கென்று 60,000 வீடுகளும், ஏனைய வகுப்பினருக்கு 11,596 வீடுகளும் கட்டப்பட வேண்டுமென்று, மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் 26-3-1997 முடிய 19,951 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இதனால் 216.47 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன. இதற்காக மத்திய அரசு ரூ.76.98 கோடியையும், மாநில அரசு ரூ. 19.24 கோடியையும்

வழங்கியுள்ளன. 1996-97-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய இத்திட்டத்தின் கீழ் ரூ. 72.59 கோடி செலவழிக்கப்பட்டது.

1997-98-ல் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ 33.04 கோடி மாநில அரசின் பங்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**(இ) பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம் (MWS):**

1988-89-ஆம் ஆண்டில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்/ ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாகத் தொடங்கப்பட்ட இத்திட்டம், 1-1-1996 முதல் ஒரு தனித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை எளியவர்கள், ஓரளவு நிலம் வைத்திருக்கும் குறு விவசாயிகள், கொத்தடிமையிலிருந்து வடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஆகியோர் திறந்தவெளிப் பாசனக் கிணறுகளை இலவசமாக அமைத்துக்கொள்ள வகைசெய்து தருவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாதோருக்கு அளிக்கப்படும் நிதியுதவி, ஆண்டுதோறும் இத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியில் 1/3 பங்கிற்கு மேற்படக்கூடாது. கிணறுகள் தோண்ட சாத்தியப்படாத பகுதிகளில், சிறுபாசனப் பணிகள் மற்றும் நீரைத் தேக்கிப் பயன்கொள்ளும் கட்டுமானங்களை மேற்கொள்ள வழிகாட்டிக் குறிப்புகள் வகை செய்கின்றன.

1996-97-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு மைய அரசு ரூ.26.36 கோடியும், மாநில அரசு ரூ. 6.59 கோடியும் வழங்கியுள்ளன. இதன் மூலம் பிப்ரவரி 1997 வரை ரூ. 27.47 கோடி செலவில் 2,048 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1997-98-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக ரூ. 7.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம் - 3

### கிராமப்பணிகள் திட்டம் (Village Works Programme)

**(அ) இணைப்புச் சாலை**

ஊராட்சி ஒன்றியங்கள், இத்திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்தும் பணியை மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றன. இப்பணி, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதால், 1996-97 மற்றும் 1997-98-ஆம் ஆண்டுகளில் ரூ. 1,000 மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மதகுப் பாலங்கள், தரைப்பாலங்கள் போன்றவை அமைக்கும் பணிகளும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(ஆ) உள்ளூர்ச் சாலைகள் மானியம்**

ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரிப்பது, பழுதுபார்ப்பது, அமைப்பது தொடர்பாக, தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 182-ஆம் பிரிவின் கீழ், அரசு ஆண்டுதோறும் மானியம் வழங்குகிறது. தற்போது ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் இம்மாநிலத்திலுள்ள சாலைகளின் மொத்த நீளத்தில் (89.734 கி.மீ.) 52 சதவீதம் அளவுக்குப் பராமரித்து வருகின்றன. சாலைகளைப் பராமரிப்பதற்காகக் கிராம ஊராட்சிகளுக்கு மானியம் எதுவும் வழங்கப்படுவது இல்லை. 1971-ஆம் ஆண்டு வரையில் நபர் ஒருவருக்கு 40 காசு என்ற அளவில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்ட மானியம், மக்கள் தொகை—கி.மீ. தூரம் (Population-*cum*-Mileage) என்ற அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டது. பராமரிப்புப் பணி தவிர, புதிதாக சரளைக்கல் சாலைகள், தார்ச்சாலைகள் அமைத்தல், மேம்படுத்துதல் முதலியவை போன்ற மூலதனப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 1990-91-ஆம் ஆண்டில் ரூ. 5.32 கோடியாக இருந்த மானிய அளவு, 1996-97-ஆம் ஆண்டில ரூ. 22 கோடியாக உயர்த்தப்பட்டது.

1996-97, 1997-98-ஆம் ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றிய/ஊராட்சிச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றவும், 10,000 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகளை மேற்கொள்ளவும் அரசு முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக 1996-97-ஆம் ஆண்டில் 5,000 கி.மீ. நீளத்திற்கு ஊராட்சி ஒன்றிய/ஊராட்சிச் சாலைகளுக்குத் தார்ச்சாலைகள்

அமைக்கப்படும். இதற்குரிய செலவு, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், உள்ளூர்ச் சாலைகள் மானியம், வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம், பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஈடு செய்யப்படும். இப்பணிகள் நடந்தேறி வருகின்றன.

### இ. உள்ளூர்ப் பாசன மானியம்

ஊராட்சி ஒன்றியங்கள், தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 133(1) பிரிவின் படி, சிறு பாசனப்பணி பாதுகாப்பு மற்றும் பராமரிப்பது தொடர்பான பணிகளை நிறைவேற்றி வருகின்றன. அதற்கிணங்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள அனைத்து சிறுபாசன ஆதாரங்களையும் பராமரிப்பது தொடர்பான திட்டம் வகுக்கப்பட்டு, 1964-65 முதற்கொண்டு, ஐந்தாண்டுச் சுழல் முறை ஒன்று பின்பற்றப்படுகிறது. தற்போது ஊராட்சி ஒன்றியங்கள் 3,28,000 ஹெக்டேர் ஆயக்கட்டுப் பகுதியைக் கொண்டுள்ள 23,761 சிறு பாசன ஏரிகளைப் பராமரித்து வருகின்றன. 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பாசன ஏரிகள் தவிர, ஊராட்சி ஒன்றியங்கள் 9,415 முன்னாள் ஜமீன் ஏரிகளையும் பராமரித்து வருகின்றன. பொதுப்பணித் துறை வரையறுத்துள்ள வரைமுறைகளைப் பின்பற்றி 1996-97-ஆம் ஆண்டில் இந்த ஏரிகளை நிலைப்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ரூபாய் 2.35 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளூர்ப்பாசன மானியத்தின் கீழ் ரூ. 2.35 கோடி, சிறுபாசன ஏரிகளை சீர் அமைக்க மற்றும் புதுப்பிக்க ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஈ) ஊரகக் குடிநீர் வழங்கல் (RWS)

#### (i) ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக செயற்படுத்தப்படும் திட்டங்கள்

துளைக்கிணறுகள் தோண்டுதல், பழைய குழாயைத் தொடருவதற்கு பதிலாக புதிய குழாய் தொடர் அமைத்தல்/குழாய்த் தொடரை நீட்டித்தல் ஆகியவை மூலமாக அனைத்துக் குடியிருப்புகளுக்கும் நாளொன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்குவதே அரசின் கொள்கையாகும். மாநிலத்தில் அடிக்கடி பருவ மழை பொய்ப்பதால் ஊராட்சி ஒன்றியங்கள் சட்டப்படிக்கான இக்கடமையைச் செய்ய வேண்டிய நெருக்கடி நிலைமைக்கு உள்ளாயின. இத்திட்டத்தின்கீழ் பணிகளை எடுத்துக் கொள்வதற்காக 1989-90-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் அரசு இணை மானியம் அல்லாத மானியமாக (Non-matching Grant)



ரூ. 1 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 1996-97 மற்றும் 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டங்களிலும், ரூபாய் 1 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கு குடிதண்ணீர் வழங்க 1996-97-ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி குறித்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்காரணத்திற்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 40.28 கோடி வழங்குமாறு அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் 1.49 இலட்சம் கைப்பம்புகளையும் 29,405 விசைப்பம்புகளையும் பராமரித்து வருகின்றன. இப்பம்புகளைப் பராமரிப்பதற்கும், பழுது பார்த்து புதுப்பிப்பதற்கும் 1996-97-ஆம் ஆண்டில் அரசு ரூபாய் 5.65 கோடி ஒப்புதலளித்துள்ளது.

#### (ii) தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரகக் குடிநீர் வழங்கல்

இது உலக வங்கி உதவி செய்யும் திட்டமாகும். இது 1991-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் சேலம், தருமபுரி, தென் ஆற்காடு வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், திருச்சிராப்பள்ளி (கூட்டு), புதுக்கோட்டை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். (கூட்டு), வட ஆற்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், திண்டுக்கல்-மன்னர் திருமலை ஆகிய மாவட்டங்கள் ஏழாண்டு கால அளவில், அதாவது 1991-98-ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 12,500 துணைக் கிணறுகளில் 31-1-97-ஆம் நாள் நிலவரப்படி 11,422 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 47.68 கோடியாகும்.

### (உ) தெரு விளக்குகள்

தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பணி, தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 110 (b) பிரிவில் குறிப்பிடப்பட்ட முக்கியமான குடிமைப் பணியாகும். சோடியம் ஆவி விளக்குகள், பாதரச ஆவி விளக்குகள் உட்பட மொத்தம் 9,27,074 தெரு விளக்குகளை ஊராட்சிகள் பராமரித்து வருகின்றன. மின் கட்டணங்களைச்

[1997 மார்ச் 27

செலுத்துமளவுக்கு ஊராட்சிகளின் நிதி நிலைமை நன்றாக இல்லாததால், முதலில் மாவட்ட ஆட்சித்தலைவர் அளவில் விநியோகிக்கப்படும் மானியங்களிலிருந்து நேரடியாக, தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் செலுத்தி, பின்னர் கிராம ஊராட்சிகளிடமிருந்து அத்தொகையை ஈடுசெய்ய வழிவகை செய்யப்படும். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கவேண்டிய நிறுவனங்களுக்கும், விலை வீதங்களுக்கும் ஒப்புதலளிப்பதற்காக மாநகராட்சித் தலைமை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர், தமிழ்நாடு மின்வாரியத் தலைமைப் பொறியாளர் ஆகியோர் அடங்கிய உயர்நிலைக் குழு (High Level Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**(ஊ) கால்நடை வளர்ப்பு மானியம் :**

கால்நடை மருந்தகங்கள் கட்டுவது தொடர்பாக ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள திட்டங்களுக்கு இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காகக் குறிப்பிடப்பட்ட இணைப் பங்குத்தொகை அளிக்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் முன்வரவேண்டும். திட்டத்தை நிறைவேற்றிய பின்னர் அரசு மானியம் வழங்கும். முதல் கால்நடை மருந்தகத்தைப் பொறுத்தவரையில் மதிப்பிடப்பட்ட தொகையில் 75 சதவீதமும், இரண்டாவது கால்நடை மருந்தகத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதமும், அரசு மானியமாக வழங்கும். 1995-96 வரை ஆண்டொன்றுக்கு ரூ. 7 இலட்சம் என்ற வீதத்தில் அரசு ஒப்புதலளித்த மானியம், 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பாதியாகக் குறைக்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் ரூ. 3.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(எ) சமூகக் கல்வி மானியம் :**

நம் மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் 384 தகவல் மையங்களும், ஊராட்சிகளில் 12,612 சமூகக் கல்வி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களுக்கு, தமிழரசு, திட்டம், பஞ்சாயத்து செய்தி, பஞ்சாயத்து ராஜ் ஆகிய பத்திரிகைகள் வழங்க இணை மானியம் அல்லாதவகையில் அரசு நிதி உதவி அளிக்கிறது.



1997 மார்ச் 27]

இம்மானியம் மாநிலத் தலைமையிடங்களில் நடைபெறும் அகில இந்தியத் தொழிற் கண்காட்சியிலும், குடியரசு தின அணி வகுப்பு விழாவிலும் பங்கேற்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. 1995-96-ல் ரூ. 32.90 இலட்சமாக இருந்த இம்மானியத்தை, அரசு, 1996-97-ல் ரூ. 34 இலட்சமாக அதிகரித்துள்ளது.

1997-98-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீட்டில், ரூ. 34 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மானியத்தை மாவட்டங்களுக்கு அனுமதிக்கும் அதிகாரத்தை, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

## அத்தியாயம்-4

### ஊரக எரிசக்தித் திட்டம்

### (அ) மேம்பட்ட அடுப்புகள் தயாரிப்புத் தேசியத் திட்டம் (NPIC)

விறகு மரங்களைப் (Fuel wood) பாதுகாத்து விறகு மரங்களை உரிய அளவில் பயன்படுத்தும் நோக்கத்துடனும், சமையலறையிலிருந்து புகையை நீக்கும் நோக்கத்துடனும், காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடனும், அடுப்புகளை அமைத்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல் ஆகிய பணிகளில் சுயவேலை வாய்ப்புப் பணியாளர்களை நியமிப்பதன் மூலம் ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடனும், மத்திய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டம் 1983 டிசம்பரில் தொடங்கப்பட்டது. இம்மாநிலத்தில் இரண்டு வகை அடுப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பொதுவான இனத்தின் நேர்வில் நிலையான வகை அடுப்புக்கு ரூ. 50 மற்றும் கையில் எடுத்துச் செல்லத்தக்க (Portable model) வகை அடுப்புக்கு ரூ. 50 உதவித்தொகை அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு ரூ. 75 உதவித்தொகை அளிக்கப்படுகிறது. 1995-96 வரையில் 17.90 இலட்சம் அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 1996-97-ல் 2.25 இலட்சம் அடுப்புகளை அமைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 1996-97-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1.31 கோடியில் பிப்ரவரி முடிய ரூ. 1.25 கோடி செலவில் 48,345 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 1996-97-ஆம் ஆண்டிற்கான மைய அரசு உதவித் தொகையின் முதல் தவணைத் தொகை வகையில், மைய அரசு ரூ. 30 இலட்சம் வழங்கியுள்ளது.

1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1.46 கோடி இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) எரிவாயு உற்பத்தி தேசியத் திட்டம் (NPBD):

இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மத்திய அரசின் 100 சதவீதம் நிதி உதவியுடன் இத்திட்டம் (மத்திய அரசுத் துறைத் திட்டம்) 1981-82 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது. அரசு, இத்திட்டத்தை 20 அம்சத் திட்டத்தில் ஒன்றாகச் சேர்த்ததன் மூலமாக, புதுப்பிக்கத்தக்க முக்கிய எரிசக்தி ஆதாரமாக கரிம எரிவாயு பயன்படுவது அரசின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்தல், வளமுடைய இயற்கை உரங்களைத் தயாரித்தல், துப்புரவுக் கழிப்பிடங்களைக் கரிம எரிவாயு உற்பத்தித் தளவாடங்களுடன் இணைப்பதன் மூலம், துப்புரவு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தல் ஆகியவை இந்த ஊரக எரிசக்தித் திட்டத்தின் நோக்கங்களாகும். 1995-96-ஆம் ஆண்டு வரை 2,54,182 தளவாடங்கள் நிறுவப்பட்டன. மத்திய அரசு, 1996-97-ல் 6,000 தளவாடங்கள் நிறுவப்பட வேண்டும் என்று திட்ட இலக்கு நிர்ணயித்தது. இது பின்னர், 1997 ஜனவரியில் 4,000 ஆகக் குறைக்கப்பட்டது. துப்புரவுக் கழிப்பிடங்களுடன் இணைக்கப்பட்ட கரிம எரிவாயுத் தளவாடங்களைப் பயன்படுத்துவதை செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கும் நோக்கத்துடன், ஊரகப் பகுதிகளில் உள்ள பள்ளிகளிலும் விடுதிகளிலும் மல எரிவாயுத் தளவாடங்களைச் சிறு அளவில் செயல்படுத்தும் புதிய திட்டமொன்று 1996-97-ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு கழிப்பிடங்களுடன் இணைக்கப்பட்ட கரிம எரிவாயுத் தளவாடங்கள், நீர் சேமிப்புத் தொட்டி ஆகியவற்றைக் கட்டுவதற்குப் பெறத்தக்க உயரளவு உதவித் தொகை ரூ. 10,000 ஆகும். தளவாடம் ஒன்றுக்கு ரூ. 2,800 என்கிற வீதத்தில், 1996-97-ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 1.12 கோடி ஆகும். மத்திய அரசு, உதவித் தொகைகளின் முதல் தவணையாக, ரூ. 70 இலட்சம் வழங்கியுள்ளது. பிப்ரவரி 1997 முடிய 1,797 சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக, 1996-97 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டது. மத்திய அரசு, 1997-98 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு, இலக்கு ஆகியவற்றைத் தெரிவிக்கவில்லை.

நடைபெற்று வருகின்ற இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக, 1997-98-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.68 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.





## அத்தியாயம்-5

## ஊரகத் துப்புரவுத் திட்டம்

### (அ) ஊரகத் துப்புரவு மத்தியத் திட்டம் (CRSP):

இது மத்திய அரசும் மாநில அரசும் சம பங்கில் நிதியுதவி அளித்துச் செயல்படுத்தி வரும் திட்டமாகும். ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்குக் கழிப்பிட வசதிகளையும், துப்புரவு கழிப்பிடத் தொகுப்பு வளாகங்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் திறந்தவெளிகளில் மலஜலம் கழிப்பதைத் தவிர்க்க கிராமப்புற ஏழை மக்களை ஊக்குவிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் 1987-லிருந்து இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. 26,136 வீட்டுக் கழிப்பிடங்களையும், 353 பள்ளிக் கழிப்பிடங்களையும் கட்டுவதற்கு, 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 7.26 கோடி ஒதுக்கப்பட்டது. இவற்றில் 28-2-1997 முடிய ரூ. 2.26 கோடி செலவில் 19,926 வீட்டுக் கழிப்பிடங்களும், 24 பள்ளிக் கழிப்பிடங்களும், 60 பெண்கள் கழிப்பிட வளாகங்களும், 218 மாதிரிக் கழிப்பிடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 7.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) குடிநீர் வழங்கல்-துப்புரவு குறித்த டேனிடா திட்டங்கள் (WASDEP):

தென் ஆற்காடு-வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள முறையே பரங்கிப்பேட்டை, மரக்காணம் ஆகிய வளர்ச்சி வட்டாரங்களில் ரூ. 8.22 கோடி மொத்தச் செலவில் டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் 1990-91-ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த ஊரகத் துப்புரவுக் குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம், 30-9-1996 அன்று முடிவுக்கு வந்தது. டேனிடா நிதியுதவியுடன் இம்மாநிலத்திலுள்ள தென் ஆற்காடு-வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் ஆகிய மாவட்டங்களில் வாஸ்டெப் (WASDEP) என்ற புதிய திட்டமொன்று செயல்படுத்தப்படுகிறது. மொத்தம் ரூ. 42.97 கோடி மூலதனச் செலவில் 1-10-1996-லிருந்து நான்காண்டு கால அளவில் இத்திட்டம், படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இத்திட்டப் பகுதியில், தொடர்ந்து குடிநீர் வழங்கச் செய்வதும், மேம்பட்ட துப்புரவு வசதிகளை ஏற்படுத்துவதுமே, இந்தப் புதிய திட்டத்தின் நோக்கமாகும். 30,000 தனி

நபர் வீட்டுக் கழிப்பிட வசதிகளையும், 700 சமுதாயக் கழிப்பிட வசதிகளையும் செய்து கொடுக்கக் கருதப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தி, கிராமப்புற ஏழை மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான செலவை டேனிடா, தமிழ்நாடு அரசு, கிராம ஊராட்சிகள் முறையே 78:13:9 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளும். இவ்வரசு தனது மூலதனச் செலவுப் பங்குடன், நிர்வாகச் செலவையும் ஏற்கிறது. புதுமையான இத்திட்டத்தைச் செயல்படுத்த 1996-97-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான டேனிடாவின் பங்காகவும், இம்மாநிலத்தின் பங்காகவும் ரூ. 1.20 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 1.97 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**(இ) தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செய்தி, கல்வி, தகவல் தொடர்பு குறித்த திட்டத்தைச் செயல்படுத்துதல் (IEC):**

பாதுகாப்பான குடிநீர் மற்றும் கிராமப்புற துப்புரவு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, நாடு முழுவதும் உள்ள 65 மாவட்டங்களில், ஊரகப் பகுதிகள் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் வழங்கு திட்டம் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் பெரியார், தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல் மன்னர்-திருமலை ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 1.36 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இச்செலவை மத்திய அரசும், மாநில அரசும் சம அளவில் பகிர்ந்து கொள்ளும். இத்திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்க ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்போது இந்தப் பிரிவின் பொறுப்பை ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (குடிநீர் வழங்கல்) வகிக்கிறார். இந்தப் பிரிவு அதன் பணியைத் தொடங்கியுள்ளது. 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.36 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு 1997-98-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்திலும் இதேயளவு நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



## அத்தியாயம்-6

## ஏனைய திட்டங்கள்

**(அ) பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டம் (MPLADS):**

மத்திய அரசு, 1993-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தின்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் (மக்களவை மற்றும் மாநிலங்களவை) அவர்களது தொகுதி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஆண்டொன்றுக்கு ரூ. 1 கோடி மானியத்தொகை பெறத் தகுதியுடையவர்களாவர். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், இத்திட்டத்தை சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. ஏனைய மாவட்டங்களைப் பொறுத்த வரையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் இத்திட்டத்திற்குப் பொறுப்பேற்றுள்ளன. மத்திய அரசு நிதியை நேரடியாக மாவட்டங்களுக்கு வழங்குகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களது தொகுதியில் அவ்வாண்டு மேற்கொள்ளக் கருதியுள்ள பணிகள் பற்றிய பட்டியலை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு / சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாநிலங்களவை உறுப்பினர்கள், இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக, மாநிலத்திலுள்ள எந்த மாவட்டத்தை வேண்டுமானாலும் தெரிவு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு பணிக்கென ஆகும் செலவு ரூ. 10 இலட்சத்திற்கு அதிகரிக்கக்கூடாது. சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகள், உறுப்பினர்கள் அளித்த செயற் குறிப்புகளின் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்த பின்னர், அப்பணிகளைத் துறையின் மூலமாகவே நிறைவேற்றுவர். இத்திட்டத்தின்கீழ், எடுத்துக் கொள்ளப்படும் பணிகளின் பட்டியலில், பள்ளிக் கட்டிடங்கள், கிராமச் சாலைகள் அணுகுச் சாலைகள், பாசனக் கால்வாய்கள், பேருந்து நிழற்குடைகள் கிராமக் குளங்களில் தூர் எடுத்தல் முதலிய பணிகள் அடங்கும். மேலும், உயர்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறிகள் அமைத்தல் பள்ளிகளில் ஹேம் (HAM) குழாம் அமைத்தல் போன்ற சில மின்னணுவியல் திட்டங்களும் இதில் அடங்கும்.

[1997 மார்ச் 27

1993-94 முதல் 95-96 முடிய எடுக்கப்பட்ட 10,294 பணிகளில் 7,897 பணிகள் முடிக்கப்பட்டன. மத்திய அரசு, 1996-97-ஆம் ஆண்டிற்காக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், முதல் தவணையாக ரூ. 50 இலட்சம் வழங்கியது. இதன், இறுதித் தவணைத் தொகை விரைவில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### (ஆ) பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம் (DDP):

குறிப்பிடப்பட்ட துறைகளின் சில வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக, மாவட்ட அளவில் முடிவு எடுப்பதையும், திட்டமிடுவதையும் பரவலாக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, இத்திட்டம், இம்மாநிலத்தில் (சென்னை தவிர) 1993-94-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இவை மாவட்டங்களுக்குள் அமைந்த உள்ளூர்ப் பகுதிகளுக்குப் பெரிய அளவில் விரைந்து பயனளிக்கும் திட்டங்களில் சிறிய அளவில் முதலீடு தேவைப்படுகிற திட்டங்களாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், எழுபத்தி மூன்று மற்றும் எழுபத்தி நான்காம் திருத்தச் சட்டங்களுக்கு இணங்க இயற்றப்பட்ட, தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம், 1994-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் ஆகியவற்றால் இத்திட்டத்தின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. இத்திட்டம், அதிகாரங்களையும், அலுவல்களையும் உள்ளூர் சுயாட்சி நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளித்து, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தயாரிப்பதில் அவற்றிற்கு முக்கிய பங்கு அளிக்கக் கருதுகிறது. இத்திட்டம் எளிய முறையில் தொடங்கப்பட்டது. இது 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தெரிவித்துள்ள மாவட்டத் திட்டமிடலுக்கு முன்னோடியாக அமைகிறது. அரசு 1993-94-ஆம் ஆண்டிற்காக, இத்திட்டத்தின் கீழ் ரூ. 20 கோடி வழங்கியது. இத்தொகை 1996-97-ஆம் ஆண்டில் ரூ. 60 கோடியாக அதிகரிக்கப்பட்டது. இத்தொகை ஊரக மற்றும் நகரப்புறப் பகுதிகளுக்கு முறையே 60:40 என்ற விகிதாச்சாரத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு பணிக்கென ஆகும் மதிப்பீட்டுச் செலவுத்தொகை ரூ. 5 இலட்சத்திற்கு அதிகரிக்கக் கூடாது. சாலைகள் மற்றும் பாலங்களுக்காக மாவட்டத்திற்கான மூலதனச் செலவில் 20 சதவீதத்திற்கு



1997 மார்ச் 27]

மேற்படாமல் செலவிடலாம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், கால்நடை மருந்தகங்கள், துணைநிலையங்கள் ஆகியவற்றிற்கான கட்டிடங்கள் கட்டுதல், கட்டிடங்களைப் புதுப்பித்தல், பேருந்து நிழற்குடைகள் அமைத்தல், சமூகக் கூடங்கள், மதிய உணவுக் கூடங்கள், ஊரக மருந்தகங்கள் ஆகியவற்றைக் கட்டுதல் முதலியவை இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட இயலும் சில முக்கியமான பணிகளாகும். பிப்ரவரி 1997 முடிய ரூ. 122.33 கோடி செலவில் மொத்தம் 13,502 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1996-97-ஆம் ஆண்டு பிப்ரவரி 1997 முடிய ரூ. 12.33 கோடி செலவில் 665 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத் திட்டத்திற்காக, 1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-7

### மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம்

1996-97-ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையில் மக்கள் நலப் பணியாளர்கள் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும் என்றும் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 மதிப்பூதியத்தில் 25,000 கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. 1989-91-ஆம் ஆண்டுகளில் நடைமுறையில் இருந்து வந்த இத்திட்டம் 13-7-91 முதல் கைவிடப்பட்டது. இதனால் பணியிழந்தவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்கவும், முதியோர் கல்வித் திட்டம், மதுவிலக்குப் பிரச்சாரம், தெருவிளக்கு பராமரிப்பு, சத்துணவுத் திட்டப் பணிகள் போன்ற பணிகளுக்கு அவர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவும், இவ்வாண்டில் நபர் ஒருவருக்கு மாதம் ரூ. 500 மதிப்பூதியத்தில், ஒப்பந்த முறையில், ஓராண்டிற்கு, 25,000 மக்கள் நலப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு பிப்ரவரி 1997-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் பணியாளர்கள் மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்ற அமர்த்தப்படுவர்.

## அத்தியாயம்-8

### பயிற்சி மையங்கள்

ஊரக வளர்ச்சித் துறைப் பணியாளர்கள் தங்கள் திறனையும் அறிவையும் வளர்த்துக்கொள்ளப் பின்வரும் இடங்களில், 5 ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள் (RETCS) செயல்பட்டு வருகின்றன அவையாவன:

(i) பவானிசாகர்

(ii) கிருஷ்ணகிரி

(iii) பட்டுக்கோட்டை

(iv) டி.கல்லுப்பட்டி

(v) எஸ்.வி. நகரம்

கிருஷ்ணகிரியிலும், பவானிசாகரிலும் உள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள், விவசாயப் பண்ணைகளையும் சமுதாயத்துடன் பராமரித்து வருகின்றன. மத்திய அரசு, ஊரக விரிவாக்கப் பயிற்சி மையம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 இலட்சம் வீதம் ஒவ்வோராண்டும் தொடரினச் செலவு வகையில் ரூ. 5 இலட்சம் வழங்குகிறது. மேற்சொன்ன ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்களுடன் மாநில ஊரக வளர்ச்சி மையம் (SIRD) என்ற மாநில அளவிலான தலைமைப் பயிற்சி மையம் ஒன்றும் அண்ணா மாவட்டத்திலுள்ள மறைமலை நகரில் 18-3-1991 முதல் செயல்பட்டு வருகிறது. இதில், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவித் தரத்திற்கு மேற்பட்ட பதவி வகிக்கும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில், பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கான எல்லா நவீன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. தொடரா இனச்செலவுகளுக்கு 100% மானியமும், தொடரும் இனச்செலவுகளுக்கு 50% மானியமும் மைய அரசு அளிக்கிறது.

1996-97-ஆம் ஆண்டு, இம்மையம் (SIRD), 43 பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. இப்பயிற்சித் திட்டங்கள் தவிர வறுமை ஒழிப்புத் திட்டங்கள் குறித்த பல்வேறு கருத்தரங்குகளும், இம்மையத்தில் நடைபெற்று வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்குத்



தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பேற்ற பின்னர், அவர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் (Orientation Training Programme) நடத்த அரசு விழைந்தது. எனவே அனைத்து ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் ஆகியோருக்கு அவரவர்கள் தலைமையிடங்களிலேயே பயிற்சி அளிக்கப்பட்டது. இது தவிர, "கிராம ஊராட்சி நிர்வாகம்" என்ற தலைப்பில் 'கையேடு' (Hand Book) ஒன்றையும் அச்சிட்டு, பயிற்சியை முடித்த மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளுக்கும், அரசு வழங்கியுள்ளது. தங்கள் பணிகளைத் திறம்படவும், செம்மையாகவும் நிறைவேற்ற அவர்களுக்கு இக்கையேடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இப்பயிற்சி மையத்திற்கு ரூ. 42.34 இலட்சம் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

## இணைப்பு-2

(71-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### குடிநீர் வழங்கல் 1997-98 கொள்கை விளக்கக் குறிப்பு
### கோரிக்கை எண் 48
### குடிநீர் வழங்கல்

**முன்னுரை**

பொது மக்களுக்குத் தேவையான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவது அரசின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பினை நன்குணர்ந்த தமிழக அரசு 'தமிழ்நாடு குடிநீர் வாரியம்' மற்றும் 'சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்' ஆகிய இரு சட்டபூர்வ அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இவை, சென்னை மாநகராட்சி உள்ளிட்ட தமிழகத்திலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல், வடிகால் அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு செய்து திட்டங்கள் வகுத்து செயல்படுத்தி வருகின்றன. இதுவரை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்' 20-12-1996 முதல் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் (த.கு.வ.வா)**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14-4-1971 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியம் இத்தனை ஆண்டு காலங்களில், குடிநீர் வடிகால் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை ஏற்றல், திட்டங்களை வடிவமைத்தல், திட்டங்களை செயலாக்குதல் ஆகிய பணிகளில் சிறப்பான முன்னேற்றம் எய்தியுள்ளது. இவ்வாரியம் விமானத்திலிருந்து ஆய்வு செய்து வரைபடம் தயாரித்தல், தொலையுணர்வு போன்ற வகைகளில் குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிவதில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி வருகிறது. வாரியம் ஏற்றுக் கொண்ட பெருமுயற்சியின் காரணமாக, இம்மாநிலத்தின் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் முற்றிலுமாகக் குடிநீர் வழங்குவது என்னும் குறிக்கோளை நோக்கித் தமிழகம் சீராக முன்னேறிச் செல்கிறது.



1997 மார்ச் 27]

**(1) ஊரகக் குடிநீர் வழங்கல்**

ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டங்கள் மைய அரசு வழங்கும் முழு மான்ய நிதி உதவியைக் கொண்டு "விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்" கீழும் மற்றும் மாநில அரசின் "குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்" கீழும் முழு மான்யமாகச் செயல்படுத்தப்படுகிறது. இது தவிர, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்குக் கடனாக நிதியுதவி அளித்து வருகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஆய்வுகளின் அடிப்படையிலும், ஊரகக் குடிநீர் வழங்கல் கோட்பாடுகளுக்கிணங்கவும், ஊரகப் பகுதிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் வகுக்கப்படுகிறது.

ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர் வசதி நிலை குறித்த ஆய்வு. வாரியத்தால் கடைசியாக 1992-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் அடிப்படையில் 1-4-1996 அன்று இருந்த நிலைமை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| முழுமையான குடிநீர் வசதி பெற்றவை | .. | 34,459 |
| பகுதியாகக் குடிநீர் வசதி பெற்றவை | .. | 32,018 |
| குடிநீர் வசதி பெறாதவை | .. | 154 |
| மொத்தம் | .. | 66,631 |

ஊரகக் குடியிருப்புகளில் முழுமையான குடிநீர் வசதியளிக்கும் பணி, இரண்டு வழிகளில் நடத்தப்பட வேண்டியுள்ளது.

(அ) எஞ்சியுள்ள 32,018 பகுதியளவு குடிநீர் வசதிபெற்ற குடியிருப்புகளை முழுமையாகக் குடிநீர் வசதி பெற்றவையாக ஆக்கும் பணி, மற்றும்

(ஆ) நீரில் அதிக அளவு இரும்புச் சத்து, ஃபுளோரைடு மற்றும் உவர்ப்புத்தன்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்.

குடிநீர் வசதி பெறாத அனைத்துக் குடியிருப்புகளும் 31-3-1997-க்குள் முழுமையான குடிநீர் வசதி பெறும். அதன்படி 31-3-1997 நிலவரப்படி, தமிழகத்தில் எந்தக் குடியிருப்பும் குடிநீர் வசதியற்ற குடியிருப்பாக இருக்காது.

[1997 மார்ச் 27

பகுதியாகக் குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள், அவற்றின் குடிநீர் வழங்கும் அளவின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 1-4-1997 நிலவரப்படி, பகுதியாகக் குடிநீர் பெறும் குடியிருப்புகளின் நிலைமை கீழ்க்கண்டவாறு இருக்கக்கூடும்:-

(அ) பகுதியாகக் குடிநீர் வசதி பெற்றவை

(நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வசதி பெற்றவை) 9,898

(ஆ) பகுதியாகக் குடிநீர் வசதி பெற்றவை

(நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 11 லிட்டர் முதல் 39 லிட்டர் வரை குடிநீர் வசதி பெற்றவை) 22,120

நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் 1997-98 மற்றும் 1998-99 ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு முழுமையாகக் குடிநீர் வசதி அளிக்கும் பணிகள் முடிக்கப்படும்.

நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 11 லிட்டர் முதல் 39 லிட்டர் வரை குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளுக்கு, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி மூன்று ஆண்டுகளில் குடிநீர் வசதி அளிக்கும் பணிகள் முடிக்கப்படும்.

இதன்படி, பகுதியாகக் குடிநீர் வசதி பெற்ற அனைத்துக் குடியிருப்புகளும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் முழு அளவு குடிநீர் வசதி பெறுமாறு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

1997-98-ஆம் நிதியாண்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வசதி பெறும் 5,000, பகுதியாகக் குடிநீர் வசதியுள்ள குடியிருப்புகளுக்கு ரூ. 170 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும். இதில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான சிறப்புக் கூறுத் திட்டத்தின் கீழ் ரூ. 42.50 கோடி ஒதுக்கீட்டில் 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் அடங்கும்.

இது நீங்கலாக, ஊரகப் பேரூராட்சிகளில் குடிநீர் வசதியளிக்கும் பொருட்டு, ரூ. 20 கோடி செலவிட வேண்டியுள்ளது.



1997 மார்ச் 27]

**(2) ஊரகக் குடியிருப்புகளுக்கான சிறப்புத் திட்டங்கள்**

**(i) அதிக அளவு ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிப்புகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டம்**

சேலம், தருமபுரி, திருச்சி, பெரும்பிடுகு முத்தரையர், கரூர் தீரன் சின்னமலை, கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மாவட்டங்களில் அடங்கிய 3,032 ஊரகக் குடியிருப்புகளில் நிலத்தடி நீர் அதிக அளவு ஃபுளோரைடால் பாதிக்கப்பட்டுள்ளது. சேலம், தருமபுரி, கரூர் தீரன் சின்னமலை, திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் ஆகிய மாவட்டங்களில் அடங்கிய 569 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியளிப்பதற்காக மைய அரசின் ஒப்புதலின்பேரில் ஒரு சிறப்புத் திட்டம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ. 41.43 கோடி ஆகும். இந்தத் திட்டம் 75% மைய அரசின் மானியமாகவும், 25% மாநில அரசின் மானியமாகவும் நிதி பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

31-3-1997 நிலவரப்படி, 309 குடியிருப்புகளில் குடிநீர் வசதியளிக்கப்படும். எஞ்சிய 260 குடியிருப்புகளுக்கு 1997-98-ஆம் நிதியாண்டில் ரூ. 10.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் தொடரப்பட்டு முடிக்கப்படும்.

**(ii) உப்பு நீரை நன்னீராக்கும் திட்டம்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவும் பெரும் குடிநீர்ப் பிரச்சினையைக் களைய உப்பு நீரை நன்னீராக்கும் இயந்திரம் நிறுவி குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மைய அரசின் தொழில் நுட்பக் குழுமத்தின் கீழ் 44 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 11 உப்பு நீரை நன்னீராக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதையடுத்து, ரூ. 49.72 கோடி செலவில், உப்பு நீரால் பாதிக்கப்பட்டுள்ள 558 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 45 இயந்திரங்களை நிறுவும் பணியினை பாரத கனமின் நிறுவனத்திற்குத் தமிழக அரசு ஒப்படைத்துள்ளது. இப்பணி தற்போது முன்னேற்றத்தில் உள்ளது.

இந்த 45 இயந்திரங்களில், 2 சிறிய அளவிலான உப்பு நீரைக் குடிநீராக்கும், இயந்திரங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 1997-98-ஆம் நிதியாண்டில், மேலும் 10 சிறிய இயந்திரங்கள் ரூ. 25

[1997 மார்ச் 27

கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டு செயல்படும். நரிப்பையூரில் ஒரு மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட பெரிய அளவிலான உவர் நீரைக் குடிநீராக்கும் திட்டப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு, தற்பொழுது விரைவாக நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(iii) கடலோர மீனவர் குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம்**

160 கடலோர மீனவர் குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம் ரூ. 6.40 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக மைய அரசால் 75 விழுக்காடு மானியமும், மாநில அரசால் 25 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டப் பணிகள் 1995-96-ஆம் நிதியாண்டில் துவங்கப்பட்டு 1996-97-ஆம் நிதியாண்டில் முடிக்கப்படும்.

கூடுதலாக 1997-98-ஆம் நிதியாண்டில், ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் சுமார் 100 மீனவர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் தோராய மதிப்பீடு ரூ. 3.10 கோடி ஆகும்.

**(iv) ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கான நீராதாரங்கள் கண்டுபிடித்தல்**

நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வழங்கப்பட்டு வரும் குடியிருப்புகளுக்கு 1997-98 மற்றும் 1998-99 ஆகிய இரு ஆண்டுகளில் குடிநீர் வசதியளிக்கப்பட வேண்டும் என்ற அரசின் அறிவுறுத்தலின் பேரில், பிப்ரவரி 1997-ல் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும்படி களப் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். இதன் மூலம் ஜூலை 1997 இறுதிக்குள்ளாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வழங்கப்பட்டு வரும் அனைத்து குடியிருப்புகளிலும் நீராதாரங்கள் அமைக்கப்பட்டு, மதிப்பீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஆகஸ்ட் 1997-ல் திட்டப்பணிகள் துவக்கப்படும்.

**(3) ஊரகப் பேரூராட்சிகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டம்**

அரசு, 265 பேரூராட்சிகளைக் குடிநீர் வசதியளிக்கும் பொருட்டு, ஊரகப் பேரூராட்சிகளாக வகைப்படுத்தியுள்ளது. இந்த ஊரகப்



1997 மார்ச் 27]

பேரூராட்சிகளில், குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் கீழ் முழு மான்யமாகக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1-4-1997-ல், 168 ஊரகப் பேரூராட்சிகளில் முழுமையான குடிநீர் வசதிகள் அளிக்கப்பட்டுவிடும். 1997-98-ஆம் நிதியாண்டில், 52 ஊரகப் பேரூராட்சிகளில், ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**(4) புனரமைப்புப் பணிகள்**

கடந்த பல ஆண்டுகளாக, குடிநீர்த் திட்டங்களைப் பராமரிக்கும் பணிகளில் தகுந்த கவனம் செலுத்தப்படாததால், பல கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்ட திட்டங்கள் சிறப்பான முறையில் பயன்படுத்த இயலவில்லை. மேற்கண்ட திட்டங்கள், உரிய பராமரிப்பிற்குத் தேவையான நிதி வசதி மற்றும் போதிய தொழில் நுட்பத் திறனற்ற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பராமரிக்கப்படுகின்றன. முதன் முறையாக இவ்வாறான திட்டங்களைப் புனரமைப்பு செய்யும் பொருட்டு, 1996-97-ல் தமிழக அரசு ரூ. 52 கோடி மதிப்பீட்டில் பெரிய அளவில் ஊரகக் குடிநீர்ப் புனரமைப்புத் திட்டங்கள் செயலாக்கும் பணியை மேற்கொண்டது. மேற்கண்ட பணிகளை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் 4 மாதங்களில் நிறைவேற்றி சாதனை படைத்தது. சுமார் 3,100 மின்னிறைப்பான் திட்டங்களும், 225 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் புனரமைக்கப்பட்டன. இவ்வாறு புனரமைப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் மூலம், அக்குடியிருப்புகளில் குடிநீர் வசதி நிலை வெகுவாக உயர்ந்தது. இதே முறையில், மாநகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்துக் குடிநீர்த் திட்டங்களும் போதிய அளவு பயன்தரும் வகையில், வரும் நிதியாண்டுகளிலும் புனரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை போதிய அளவு பயிற்சி பெற்ற பணியாளர்கள் நியமிக்கப்படாத காரணத்தால், குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பில் கவனம் செலுத்தப்படாத நிலை இருந்து வந்தது. இந்த நிலைமையைச் சீர்செய்யும் பொருட்டு, தமிழக அரசு பல்வேறு நிலைகளைச் சார்ந்த 2,037 தொழில் நுட்பப் பணியாளர்களை, 1996-97-ஆம் ஆண்டில் நியமித்து, பல்வேறு குடிநீர்த் திட்டங்களை சிறந்த முறையில் பராமரிக்க ஏற்பாடு செய்துள்ளது.

[1997 மார்ச் 27

### (5) கூட்டுக் குடிநீர்த் திட்டப் பராமரிப்பு

உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்பட்டு வந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உட்பட தமிழகத்திலுள்ள அனைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பையும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மேற்கொள்ளும் வகையில், 1995-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தமிழக அரசால் உத்தரவு வழங்கப்பட்டது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் போதிய நிதியின்மை, போதிய தொழில் நுட்பப் பணியாளர்கள் இல்லாமைபோன்ற காரணங்களால் சிறந்த முறையில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தால் பராமரிக்க இயலவில்லை. இத்தகைய நிலையை நீக்கும் வகையில், தமிழ்நாடு அரசு முதன் முறையாக 1996-97 மற்றும் 1997-98-ஆம் ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 15 கோடி நிதியைக் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பராமரிப்புப் ப்ணிகளுக்கென ஒதுக்கியுள்ளது.

### (6) நகரகக் குடிநீர்த் திட்டங்கள்

நகரகக் குடிநீர்த் திட்டங்கள், கடன் மற்றும் மான்யங்கள் பெற்று செயல்படுத்தப்படுகின்றன. நகரகக் குடிநீர்த் திட்டங்களின் செயலாக்கத்திற்கான நிதி வரையறை கீழ்க்கண்டவாறு:-

*நகராட்சிகள்:*

திட்ட மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடன் உதவியாகவும், எஞ்சிய மூன்றில் ஒரு பங்கு மாநில அரசின் கடனாகவும் பெறப்படுகிறது.

*நகரப் பேரூராட்சிகள்:*

திட்ட மதிப்பீட்டில் மூன்றில் இரண்டு பங்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனாகவும் எஞ்சிய மூன்றில் ஒரு பங்கு மாநில அரசிடமிருந்து மான்யமாகவும் பெறப்படுகிறது. 1996-97-ல், 18 நகராட்சிகள் மற்றும் 46 நகரப் பேரூராட்சிகளையும் உள்ளடக்கிய 64 நகரங்களின் குடிநீர்த் திட்டங்கள். ரூ.29.95 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. இவற்றுள் 5 நகராட்சிகள் மற்றும் 13 நகரப் பேரூராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டங்கள், மார்ச்சு 1997-க்குள், சுமார் 2,80,000 மக்கள் பயன்பெறும் வண்ணம், பயனுக்குக் கொண்டு வரப்படும்.



1997 மார்ச் 27]

1-4-1997 அன்றைய நிலவரப்படி நகரப் பகுதிகளின் குடிநீர் நிலைமை கீழ்க்கண்டவாறு:-

| வ. எண் | இனம் | மொத்த எண்ணிக்கை | குடிநீர் வசதி செய்யப் பட்டவை | குடிநீர்வசதி பகுதியாகப் பெற்றவை |
|---|---|---|---|---|
| (1) | மாநகராட்சி | 5 | 5 | .. |
| (2) | நகராட்சி | 104 | 101 | 3 |
| (3) | நகரப் பேரூராட்சி | 370 | 325 | 45 |
| | மொத்தம் | **479** | **431** | **48** |

#### (i) நகராட்சிகள் மற்றும் நகரப் பேரூராட்சிகள்

21 நகராட்சிகள் மற்றும் 49 நகரப் பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த, 1997-98-ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 36.50 கோடியாகும். இந்த நிதி ஒதுக்கீட்டில் சுமார் 1,60,000 மக்கள் பயன்பெறும் வண்ணம், 5 நகராட்சிகள் மற்றும் 20 நகரப் பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டங்களைப் பயனுக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

#### (ii) துரிதப்படுத்தப்பட்ட நகரகக் குடிநீர்த் திட்டம்

நகர வளர்ச்சித் துறையினால், மைய அரசால் பரிந்துரை செய்யப்பட்ட துரிதப்படுத்தப்பட்ட நகரக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ரூ. 91.83 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் 13 திட்டங்களுக்கு ரூ. 6.91 கோடி மதிப்பீட்டில் ஆணை வழங்கப்பட்டு, 1996-97-ஆம் நிதியாண்டில் ரூ. 4.36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 1.83 கோடி மைய அரசு மற்றும் மாநில அரசால் சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 1997-க்குள், 4 திட்டங்கள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1997-98-ஆம் ஆண்டிற்குள் மீதமுள்ள 9 திட்டங்கள், ரூ. 3.16 கோடி நிதி ஒதுக்கீட்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதல் திட்டங்களுக்காக மைய அரசிடமிருந்து ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

#### (iii) நகரகக் கழிவு நீர்த்திட்டம்

கழிவு நீர்ச் சாக்கடைத் திட்டம் முழுமையாகவும் பகுதியாகவும், 4 மாநகராட்சிகள், 11 நகராட்சிகள், 1 ஊராட்சி நகரியம் ஆக மொத்தம் 16 இடங்களில் தற்போது உள்ளது.

[1997 மார்ச் 27

கோயம்புத்தூர், சேலம் மாநகராட்சிகள் கழிவு நீர்ச் சாக்கடைத் திட்டத் தொடர் பணிக்காக, 1997-98-ஆம் நிதி ஆண்டில் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (7) காவிரி நதி நீர் மாசுபடுதலைக் கட்டுப்படுத்தும் சிறப்புத் திட்டம்

மைய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் குறிப்பின்படி, தமிழ்நாட்டில் காவிரி ஆற்றுப் பகுதியில் ஐந்து இடங்களில் ஆற்று நீர் மாசுபடுதலைக் கட்டுப்படுத்தும் வகையில் திட்ட அறிக்கை ஒன்று ரூ. 38.20 கோடிக்குத் தயாரிக்கப்பட்டது. மைய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் தெரிவு செய்யப்பட்ட 5 இடங்களும் கீழ்க்காணும் நகரங்களில் அமைகின்றன. இந்த நகரங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை கீழ்வருமாறு:-

| | | | ரூபாய் கோடியில் |
|---|---|---|---|
| (1) | பள்ளிப்பாளையம் | .. | 5.69 |
| (2) | குமாரபாளையம் | .. | 6.24 |
| (3) | பவானி | .. | 3.68 |
| (4) | ஈரோடு | .. | 15.69 |
| (5) | திருச்சி | .. | 6.90 |
| | மொத்தம் | .. | **38.20** |

மாசுக் கட்டுப்பாடுத் திட்டத்தில் கீழ்க்காணும் பணிகள் அடங்கும்:-

(1) கழிவு நீரைத் தடுத்து திருப்புதல்

(2) சுத்திகரிப்புப் பணி

(3) சீரமைக்கப்பட்ட (விறகை ஆதாரமாகக் கொண்ட) எரியூட்டு மேடை

(4) குறைந்த செலவிலான கழிப்பறை வசதி

(5) நதி முக மேம்பாடு

(6) காடு வளர்த்தல்



1997 மார்ச் 27]

கழிவு நீர் வடிக்கால்களைத் தடுத்தல், திருப்புதல் மற்றும் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் ஆகிய பணிகளின் பொறுப்பும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ரூ. 30.41 கோடி மதிப்பீட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மைய அரசு, தடுத்தல் மற்றும் திருப்புதல் பணிக்கான 7 திட்டங்களுக்கு, ரூ. 10.13 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழக அரசும், மைய அரசும் சரிபாதியாகச் செலவை ஏற்றுக் கொள்ளும். இத்திட்டம் நான்கு ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கான முதல் வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3.46 கோடி ஆகும்.

### (8) தமிழ்நாடு ஊரகக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஊரகப் பகுதிகளில் சுகாதாரத் திட்டங்கள்

ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டங்கள் அமைக்கும் பொருட்டு தமிழக அரசு நிதி உதவி பெறுவதற்கு உலக வங்கியை அணுகி உள்ளது. உலக வங்கியும் மேற்படித் திட்டங்களைச் செயல்படுத்தக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டங்களுக்கு இவ்வாண்டில் உலக வங்கியின் அனுமதி பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### (9) ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ. 572 கோடிக்கு தயாரித்து, அயல்நாட்டு (ஜப்பான்) நிதி உதவி கோரி மைய அரசிற்கு, ஒப்புதல் வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. 1997-1998-ஆம் ஆண்டில் அயல் நாட்டுப் (ஜப்பான்) பொருளாதாரக் கூட்டுறவு நிதியத்திலிருந்து உதவி பெறுவதற்கான திட்டத்தின் கீழ், இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டம் தருமபுரி மாவட்டத்திலுள்ள 2 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் 13 ஒன்றியங்களில் உள்ள 4,152 கிராமங்கள் பயன்பெறும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

## (10) நிறுவன நிதி

குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் கடன்கள் வழங்கியுள்ளது. நகர்ப்புறத் திட்டத்திற்கு கடன் வசதிகளை அளிக்கின்ற ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் அண்மைக் காலத்தில் கடனுதவி அளிப்பதற்காக பல ஊரகத் திட்டங்களையும் பரிசீலித்துக் கடன் உதவி அளித்துள்ளது. 1969-70-ஆம் ஆண்டு முதல் 1995-96-ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் ரூ. 392.66 கோடி அளவிற்கு கடன்களை நகரக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களுக்காகவும் (ரூ. 155.47 கோடி) ஊரகக் குடிநீர் திட்டங்களுக்காகவும் (ரூ. 237.19 கோடி) வழங்கியுள்ளது. 1996-97-ஆம் ஆண்டில் ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு ரூ. 54.81 கோடி கடனுதவி வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல் 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 60 கோடி ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெறப்படும்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் (HUDCO) இதுவரை 8 உலக வங்கி உதவிக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ. 30.78 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது.

## (11) தமிழகத்தில் குடிநீர் விநியோகத்திற்கு மழை நீரை சேகரிக்கும் முறைகள் பற்றிய தொகுப்பு

வீணாகக் கடலில் கலக்கும் அதிகப்படியான மழை நீரைத் தேவைக்கேற்ப சேகரித்துப் பிற்காலத்தில் அந்நீரை குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுத்தும் முறையே மழை நீர் சேகரிப்புமுறை என்பதாகும். இதுபோன்ற மழைநீர் சேகரிப்பு முறை உப்பு நீர் மற்றும் நீர் ஆதாரமே இல்லாத இடங்களுக்கு மிகச் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. வீட்டுக் கூரைகளில் மற்றும் கிராமப்புற ஊரணிகளில் சேமிக்கப்படும் மழைநீர் சேமிப்பு முறைகள், நடைமுறையிலுள்ள பொதுவான மழைநீர் சேகரிக்கும் முறைகளாகும்.

கிராமப்புறங்களில் அமைந்துள்ள பாரம்பரியமான ஊரணிகளைக் கண்டறிந்து அதைக் குடிநீர்த் தேவைக்கு ஏற்ப ஆழப்படுத்தி, வேலியிட்டுப் பாதுகாத்து மழைநீரைச் சேகரித்து மேம்படுத்த வேண்டும். இந்த ஊரணிகளில் சேமிக்கப்படும் மழைநீர் ஊரணியின் ஒரு மூலையில் அமைக்கப்படும் சிறு கிணறுகளில், வடிகட்டி அமைப்பு வழியாக ஊடுருவும் பொழுது சுத்திகரிக்கப்பட்டு, குடிநீராகச் சேகரிக்கப்படும்.



1997 மார்ச் 27]

மேற்கூறிய சேகரிப்பு முறைகள், தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்முறைப்படுத்தப்படவுள்ளது. இம்முயற்சியை கிராம மக்களும் வரவேற்றுள்ளனர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கீழ்க்காணும், மழை நீர் சேகரிப்பு செய்யும் திட்ட அறிக்கைகளைத் தயார் செய்து, அதை மைய அரசின் பரிசீலனைக்கும், செலவிடப் போகும் தொகையை இராஜீவ் காந்தி தேசியக் குடிநீர்த் தொழில் நுட்பக் குழுமம் வாயிலாகப் பெறுவதற்கும் அனுப்பியுள்ளது:

| திட்ட அறிக்கை | தொகை (ரூபாய் இலட்சம்) |
|---|---|
| (1) வீட்டுக் கூரைகளில் விழும் மழை நீரைச் சேகரித்து அதை குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுத்தும் திட்ட அறிக்கை | 28.45 |
| (2) கிராமப்புற ஊரணிகளில் மழை நீரைச் சேமித்து குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுத்தும் முறை | 27.77 |
| (3) மழைநீர்ச் சேகரிப்பு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஊரணிகளை ஆழம் மற்றும் விரிவுபடுத்தி, குடிநீர்ப் பயனுக்கு கொண்டு வரும் திட்ட அறிக்கை | 185.00 |

## 'டங்கா' (TANKA) என்ற மழைநீர் சேமிப்பு முறை

'டங்கா' என்பது இராஜஸ்தான் மாநிலத்தில் பயன்படுத்தப்படும் மழைநீர் சேமிப்பு முறையாகும். டங்கா என்பது ஒரு சிறிய குளம் ஆகும். இக்குளத்திற்குத் தேவையான தண்ணீரை அதைச் சுற்றியுள்ள பகுதியில் இருந்தே பெற்று சேமித்து வைக்கப்படுகிறது. இதுபோன்ற மழைநீர் சேமிப்பு முறைகள், மழைநீர் மிகவும் சொற்ப அளவே பெறப்படும் இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் மிகவும் பிரபலமானதாகும். இதுபோன்ற திட்டத்தை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளிலும் மற்றும் உப்பு நீரால் பாதிக்கப்பட்ட இடங்களிலும் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது.

மிகச்சொற்ப ஆழத்தில் இருக்கும் நீர்த்தாங்கியிலிருந்து நிலநீர் எடுக்கும் இம்முறையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழகத்தின் அண்ணா மற்றும் நாகை-காயிதே மில்லத் ஆகிய இரு மாவட்டங்களிலும், முறையே ஒவ்வொரு நீர் உறிஞ்சு கிணறு அமைத்து அதன் மூலம் நிலநீர் வழங்க

உத்தேசித்துள்ளது. இம்முறை தமிழகத்தின் கடற்கரை ஓரங்களில் ஆங்காங்கே அமைந்துள்ள சிறிய நீர்த் தாங்கிகளிலிருந்து நிலநீர் எடுக்க மிகச்சிறந்த அமைப்பாகும்.

## (12) தொலை உணர்வு ஆய்வு

களப்பணியில் நிலநீர் வளம், புவி பௌதீக ஆய்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இந்த ஆய்வில் ஏற்படும் சில குறைகளை நிவர்த்தி செய்யத் தொலை உணர்வு ஆய்வு வழிவகுக்கின்றது. தொலை உணர்வு ஆய்வு என்பது பூமியின் மேற்பரப்பைப் பற்றிய நம்பகமான தகவல்களை, பூமியை நேரடியாக ஆராயாமல் மின்காந்த சக்தி அலைகளின் மூலம் ஆராய்வதாகும்.

தொலை உணர்வு ஆய்வு சாதனங்களான செயற்கைக்கோள் படம் மற்றும் வான்வெளி நிழற்படங்களைப் பயன்படுத்தி நில அமைப்பு, நீராதாரம், அதன் அமைவு, நிலநீர் வளம் ஆகியன குறித்த நிலநீர் வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றது.

இத்தொழில் நுட்பம், நிலத்தடி நீர்நிலை பற்றி அறிந்திட உபயோகப்படும் ஒரு நவீனத் தொழில்நுட்பம் ஆகும். இந்த நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வரைபடங்கள் தயாரித்துள்ள சில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும்.

நாம் தொலைஉணர்வு சாதனங்கள் மூலம் ஏற்கெனவே தமிழகத்தின் அனைத்து வட்டங்களுக்கான நிலநீர் வரைபடங்கள் தயாரித்துள்ளோம். தமிழகத்தில் மிகக் கடுமையான நீராதாரம் குறைந்த ஒன்றியங்களாக, 110 ஒன்றியங்களை இனம் கண்டு அவற்றுள் 70 ஒன்றியங்களுக்கான வரைபடங்களைத் தற்பொழுது வாரியம் தயாரித்து முடித்துள்ளது. இந்த வரைபடங்கள் களப்பணியின் புவி பௌதிக ஆய்வின் மூலம் நிலநீர் வளம் மற்றும் நீராதாரம் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வரைபடங்களின் பயன்பாடு மற்றும் நீராதாரம் குறித்த முடிவுகள் களப் பயணியாளர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

இந்தத் தொலை உணர்வு ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் புவி பௌதிக ஆய்வு, 96 முதல் 97 விழுக்காடுகள் வெற்றி ஈட்டியுள்ளது.

தமிழக அரசின் வேண்டுகோளுக்கிணங்க, அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வு மையமும், தமிழ்நாடு குடிநீர்



வடிகால் வாரியமும் இணைந்து நிலத்தடி நீரை மேம்படுத்தும் இடங்களைக் குறிப்பிடும் திட்டம் ஒன்றினை செயல்படுத்த எண்ணியுள்ளது. தமிழக அரசின் ஆணை எண் 680, நாள் 31-10-96-ன்படி, ரூ. 3.4 கோடி அண்ணா பல்கலைக்கழகத்திற்கும் ரூ. 10.59 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் வழங்கி இரண்டு ஆண்டுகளில் முடிக்க ஆணை பெற்றுள்ள திட்டத்தை பிறப்பித்துள்ளது. இத்திட்டப்படி தமிழகத்தின் 384 ஒன்றியங்களில் நிலநீர் மேம்படுத்தத் தகுதியான இடங்களைத் தேர்வு செய்து கொடுப்பதற்காக தொலை உணர்வு நுட்பமும், புவிமேற்பியல் தகவல் பலகை முறைகளும் கையாளப்படும். அண்ணா பல்கலைக்கழகத்தின், தொலை உணர்வு மையம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை ஆராய்ந்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இத்திட்டத்திற்காக அனைத்து ஒன்றியங்களுக்கும் நிலநீர் மற்றும் புவியியல் ஆதார வரைபடங்களைத் தயாரித்து அண்ணா பல்கலைக் கழகத்தின் தொழில் நுட்ப மையத்திற்கு வழங்கவிருக்கிறது.

## (13) நீர் பரிசோதனைக் கூடங்கள்

பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பணியின்கீழ், நீர் தர மேலாண்மை என்பது குடிநீர் வடிகால் வாரியத்தின் மிக முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. இக்குறிக்கோளை எட்டும் பொருட்டு, வாரியத்தில் 13 மாவட்ட அளவிலான நீர் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர கிராமங்களில் செயல்பட ஒரு நீர் ஆய்வுக்கூட ஊர்தியும் உள்ளது. இந்தச் சோதனைக்கூடங்களில், வேதியியல் மற்றும் நுண்ணுயிர் பரிசோதனை செய்யும் வசதிகள் உள்ளன. இப்பரிசோதனைகள் நீர், கழிவுநீர், மற்றும் மாசிபடிந்த நீர் ஆகிய நீர் மாதிரிகளின் தரம் அறியச் செய்யப்படுகின்றன.

குடிநீர் வடிகால் வாரியத்தில், நீர்த் தன்மை கண்காணிப்புப் பணிகள் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றன. கையிறைப்பான் மற்றும் மின்விசை இறைப்பான்களின் நீர்மாதிரிகள், சோதனை செய்யப்பட்டுக் குடிப்பதற்கு உகந்ததா என்பதற்கான சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 10,000 முதல் 15,000 நீர் மாதிரிகள் இச்சோதனைக் கூடங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட சோதனைக்கூடங்கள் தவிர, பெரிய நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களில், தினசரி நீர்த்தர கண்காணிப்புக்காக தனி ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. பெரிய நீர்ச்சுத்திகரிப்பு நிலையங்களான கோயம்புத்தூர், சேலம், மதுரை, ஒசூர், தூத்துக்குடி

ஆகிய இடங்களில் மேற்கண்டவாறு தினசரிக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

**(14) தளவாடக் கொள்முதல் விலை ஒப்பந்தம்**

வாரியப் பணிகளுக்குத் தேவையான வார்ப்பிரும்புக் குழாய்கள் (CI pipes), முலாம் பூசிய இரும்புக் குழாய்கள் (GI pipes) கல்நார்க் குழாய்கள் (AC pipes), பாலிவினைல் குளோரைடு குழாய்கள் (PVC pipes) போன்ற பல்வேறு தளவாடப் பொருட்களை ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்கையில் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்த்திடும் பொருட்டு, இவற்றினைக் கொள்முதல் செய்ய ஆண்டு விலை ஒப்பந்தங்கள் செய்து கொள்ள ஒப்புதல் அளிக்க வாரியத்தால் முன்மொழியப்பட்டுள்ளது.

களப்பொறியாளர்களிடமிருந்து எப்பொழுதெல்லாம் தேவைக்கான பட்டியல் பெறப்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் உடனடியாக விலை ஒப்பந்தம் செய்த நிறுவனங்களுக்குக் கொள்முதல் உத்தரவு உடனடியாக வழங்கப்படும். 1997 ஏப்ரல் மாதத்தில் விலை ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விலை ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளிப்பதன் மூலம் பொருட்களை விரைவில் கொள்முதல் செய்து பணியைத் துரிதப்படுத்த முடியும்.

**(15) இராமநாதபுரம் மாவட்டத்தின் புதையுண்ட கால்வாய்களின் நிலநீர் வளத்தைப் பயன்படுத்தும் முறை**

இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பபட்ட மாவட்டங்களில் ஒன்றாகும். இம்மாவட்டத்தின் குடிநீர்த் தட்டுப்பாடு யாவரும் அறிந்த ஒன்று. தற்சமயம் தொலை உணர்வு தொழில் நுட்ப ஆய்வுப்படி இராமநாதபுரம் மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பல புதையுண்ட கால்வாய்கள் இருப்பதாக அறியப்படுகிறது. இப்புதையுண்ட கால்வாய்களின் நிலநீர் இருப்பைக் கண்டறியவும், செயற்கையாக நீர்நிரப்புத் திறனைக் கணக்கிடும் ஆய்வுகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுகள் முடிவுற்றபின், இப்புதையுண்ட கால்வாய்களிலுள்ள நிலநீரைக் குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுத்தும் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**(16) ஒப்பந்தப்புள்ளி முறையில் மாற்றங்கள்**

தற்பொழுது நடைமுறையில் உள்ள ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டு, அதிக அளவில் ஒப்பந்தக்காரர்கள்



பதிவு செய்வதையும், ஒப்பந்தப்புள்ளிகளில் பங்குபெறுவதையும் ஊக்குவிக்க, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது:-

(i) ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களுக்கு விலை நிர்ணயம் செய்து வழங்கிய முறை மாற்றப்பட்டு, தற்பொழுது ஒப்பந்தக்காரர்களுக்குப் பணிகளுக்குரிய ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

(ii) பணி மதிப்பின் 2 விழுக்காடு முன்வைப்புத் தொகையாக வசூலிக்கப்பட்டது மாற்றப்பட்டு, ஒரு விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது; மற்றும்

(iii) ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்வதில் தெளிவான நிலையைக் கொணரும் பொருட்டு, விழுக்காடு ஒப்பந்தப்புள்ளி முறை (percentage tender system) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**(17) மனிதவள மேம்பாடு**

மனிதவள மேம்பாட்டுக் குழுமத்தின் முக்கிய நோக்கங்களாவன:

(அ) கையிறைப்பான்கள் பராமரிப்பும், இயக்குதலும்

(ஆ) சுகாதாரக் கல்வி

(இ) ஊரகச் சுற்றுப்புறச் சுகாதாரம்

(ஈ) நீர்த்தன்மை பராமரிப்பு

(உ) சமுதாயப் பங்கேற்பு

மனிதவள மேம்பாட்டுக் குழுமத்தின் கீழ், கீழ்க்காணும் பணிகள் நவம்பர் 1996-லிருந்து செயலாக்கப்படுகின்றன:-

(i) மைய அரசு (இராஜீவ் காந்தி தேசிய குடிநீர் வழங்கு குழு) மற்றும் மற்ற மாநிலங்கள், இந்தியப் பயிற்சி இணைப்பு மையங்கள் ஆகியவற்றுடன் சீரிய முறையில் தொடர்பு கொண்டு செயலாக்க நடவடிக்கைகள்;

(ii) கீழ்மட்ட பயிலுவோர்க்கான பயிற்சிகளை நடத்துவதற்கு ஏற்ற முறையில் பயிற்றுவிப்போர்க்குப் பயிற்சிகள் அளித்தல்;

(iii) விவரங்கள் சேமித்தல்; மற்றும்

(iv) மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கீழ்மட்ட பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாம்கள் நடத்துதல்.

### (18) தர உத்தரவாத விழிப்புணர்வுக் குழு

வாரியத்தால் பெறப்படும் தளவாடங்களின் தரத்தினை ஆய்வு செய்யவும், பணிகளின் தரத்தினை ஆய்வு செய்யவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காகவும், நவம்பர் 1996 முதல், **தர உத்தரவாத விழிப்புணர்வுக் குழு** ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### (19) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ. 321 கோடிக்குத் தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. தமிழ்நாடு மட்டுமே உலக வங்கி நிதியுதவியினை 100 விழுக்காடு, குடிநீர்த் திட்டங்களுக்குச் செலவழித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், உலக வங்கி நிதியுதவியின் கீழ் திருச்சியில் சுமார் ரூ. 97 இலட்சம் செலவில் ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இயங்கிவரும் ஆராய்ச்சி வளர்ச்சி மற்றும் பயிற்சி மையத்திற்கு ரூ.1.32 கோடி செலவில் நவீன வசதிகளுடன் சிறந்த பயிற்சி அளிக்கும் பொருட்டு கூடுதல் வசதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் ஆராய்ச்சி வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம் எதிர்வரும் காலங்களில் சிறந்து விளங்குமெனக் கருதப்படுகிறது.

### (20) புதிய ஆழ்துளையிடும் கருவிகள்

தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், 40 கடினப்பாறையில் துளையிடும் கருவிகளும், மற்றும் 18 படிவுப் பாறையில் துளையிடும் கருவிகளும், ஆக மொத்தம் 58 ஆழ்துளையிடும் கருவிகள் உள்ளன. இவற்றில், மிகப் பழையது ஆனதால் செப்பனிட அதிக செலவு பிடிக்கும் 14 கடினப் பாறை துளையிடும் கருவிகள், பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளன. பலவகைப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு நீர் ஆதாரங்களைத் தேடவேண்டிய நிலையில் ஆழ்துளைக் கிணறுகள், அமைக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளதால், ஆழ்துளையிடும் கருவிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த வேண்டியுள்ளது.





இதற்காக, இந்த நிதி ஆண்டிலேயே ரூ. 7.85 கோடிக்கு புதிய 12 கடினப்பாறை ஆழ்துளைக் கருவிகளையும் மற்றும் 10 படிவுப்பாறை ஆழ்துளைக் கருவிகளையும் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆழ்துளையிடும் பணிகள் மேலும் சிறப்படையும்.

### (21) குடிநீர்க் குழாய்களில் நீர்க்கசிவு பற்றிய தொகுப்பாய்வு

உலக வங்கி நிதி உதவியுடன் 1994-95-ஆம் ஆண்டு குடிநீர்க் குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகள் பற்றிய தொகுப்பாய்வு தொடங்கப்பட்டது. உலக வங்கி அளித்துள்ள விஞ்ஞானக் கருவிகளின் மூலம் குடிநீர்க் குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகள் கண்டறியப்படுவதால் கணிசமான நீர் வீணாவது கண்டறியப்படுகிறது. இந்த நீர்க்கசிவுகளை அறியும் முறை இதற்குமுன் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போதுள்ள விஞ்ஞான கருவிகளின் மூலம் நீர்க் கசிவுகள் கண்டறியப்பட்டு, சரிசெய்யப்பட வேண்டிய முறைகள் பற்றிய பயிற்சி, குடிநீர் வாரியப் பொறியாளர்களுக்கும் குடிநீர்த் திட்டப் பராமரிப்பிலுள்ள சில மாநகராட்சி / நகராட்சி ஊழியர்களுக்கும் கொடுக்கப்படவுள்ளது. மேலும், இப்பயிற்சி எஞ்சியுள்ள மற்ற நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. இவ்வகையான பயிற்சி எதிர்காலத்தில் முழுமைபெறும்போது பொது மக்களுக்கு அதிக அளவில் குடிநீர் வசதி செய்யவும், அதிக அளவில் நிதி ஆதாரத்தினை மாநகராட்சி/ நகராட்சிகளுக்கு ஏற்படுத்திக் கொள்ளவும் வழிவகை செய்யும்.

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியம்.

பெருநகரக் குடிநீர்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியம், 1978-ஆம் ஆண்டிலிருந்து சென்னை மாநகரப் பகுதியில் குடிநீர் வழங்கல் - கழிவு நீரகற்றல் திட்டங்களை வகுத்து செயற்படுத்தி, பராமரிப்பதற்குப் பொறுப்பு வகித்து வருகிறது. சென்னை மாநகரின் அண்டையிலுள்ள 20 நகர்ப்பகுதிகளில் குடிநீர் வழங்கல் - கழிவு நீரகற்றல் பணிகளை நிறைவேற்றிப் பராமரிக்கும் பணியை அரசு 1996 ஆகஸ்டில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் - கழிவு நீரகற்றல் வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது.

[1997 மார்ச் 27

1996-97-ஆம் ஆண்டில் மாநகரக் குடிநீர் வழங்கும் முறையில் ஏற்பட்ட பெருமளவிலான முன்னேற்றங்களில் ஒன்று, நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவான 24 கோடி லிட்டர் 30-9-1996-ஆம் நாள் முதல் நாளொன்றுக்கு 44 கோடி லிட்டராக அதிகரிக்கப்பட்டது ஆகும். இந்த உயர்வினால் குடிநீர் விநியோகத்தில் பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த 4-5 மாதங்களில் சுமார் 5,000 புதிய குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் வாரியம், தற்போது குடிநீர் வழங்குவதற்கும், கழிவு நீரகற்றல் பணிகளுக்கும் பெருந்திட்டத்தை செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. அதேசமயத்தில், பெருந்திட்டத்தை நாளது வரையிலாக்கவும், வருங்காலத்தில் ஏற்படும் மக்கள் தொகைப்பெருக்கம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு இதனை மாற்றியமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வாரியம் செயற்படுத்தும் முக்கிய திட்டங்களில் பின்வருபவையும் அடங்கும்:

**1. உலக வங்கியின் நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் திட்டம்**

சென்னை குடிநீர் வழங்கல் - துப்புரவு முதலாவது திட்டம், 1988-ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டம் 31-3-1996 அன்று முடிவுக்கு வந்தது. இத்திட்டப் பணியின் மொத்தச் செலவு ரூ. 246.62 கோடியாகும்.

இத்திட்டப் பணியின்கீழ் பின்வரும் பெரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன:

(1) மாநகரக் குடிநீர் வழங்குதலைப் பெருக்குவதற்காக புதிய இடங்களில் 30 துளைக் கிணறுகள் அமைத்தல்;

(2) மாநகரக் குடிநீர் வழங்குதலைப் பெருக்குவதற்காக தற்போதுள்ள கிணற்றுப் பகுதியில் 19 துளைக் கிணறுகள் அமைத்தல்;

(3) தற்போதுள்ள ஏரிகளுக்கு ஆரணி ஆற்றிலிருந்து மழைநீரைத் திருப்பி விடுவதற்கான அடிப்படை வசதிகளை உருவாக்குதல்;

(4) செங்குன்றத்தில் நிலத்தடி நீர்தொட்டி (Under Ground Tank) நீரேற்று நிலையம் முதலியவை போன்ற தொடர்புடைய ஏனைய பணிகளுடன் நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் அளவு நீரைச் சுத்திகரிப்பதற்கான தளவாடம் அமைத்தல்;



1997 மார்ச் 27]

(5) குடிநீர் விநியோக முதன்மைக் குழாய்களைப் புதுப்பித்தல் மற்றும் 330 கி.மீ. தூரத்திற்குப் புதிய குடிநீர் முதன்மைக் குழாய்கள் அமைத்தல்;

(6) நெடுந்தொலைவிற்குச் செல்லும் முதன்மைக் குழாய்களை வலுப்படுத்துதல்;

(7) 230 கி.மீ. தூரத்திற்குக் கழிவு நீர் சேகரிப்புக் குழாய் அமைப்பிற்கு வகை செய்தல்;

(8) நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்துவதற்காக, கொற்றலை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல்.

**2. ஹட்கோ மற்றும் எம்.ஐ.டி.சி ஆகியவற்றின் நிதியுதவியுடன் எடுத்துக் கொள்ளப்படும் திட்டங்கள்**

(1) செங்குன்றத்திலிருந்து சுத்தமான நீரை போரூர், கே.கே.நகர் ஆகிய இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கான முதன்மைக் குழாய்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டப் பணியின் மொத்தச் செலவு ரூ. 61.16 கோடியாக இருக்க, இது வரையில், ரூ. 38.60 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் நடந்தேறி வருகின்றன. 1998 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் இப்பணி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(2) வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி, கண்ணப்பர் திடல் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும், மூன்று மண்டல நீர் சேமிப்புத் தொட்டிகள் கட்டும் பணிகள் ரூ. 25.55 கோடி மொத்தத் திட்டச் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு, இதுவரையில் ரூ. 7.71 கோடி செலவு ஏற்பட்டுள்ளது. வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் கட்டப்படும் மண்டல நீர் சேமிப்பு இடம், முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. திருவல்லிக்கேணி, கண்ணப்பர் திடல் ஆகிய இடங்களில் மண்டல நீர் சேமிப்புத் தொட்டி கட்டும் பணி நடந்தேறி வருகிறது. 1998-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**3. மாநில அரசின் கடன் உதவியுடன் நிறைவேற்றப்படும் திட்டங்கள்**

மொத்தம் ரூ. 30 கோடி செலவில், மாநில அரசின் கடன் உதவியுடன் வேளச்சேரி, இராதாகிருஷ்ண நகர் (தெற்கு) ஆகியவற்றிற்குக் கழிவு நீர் வசதிகள் செய்து கொடுக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, அப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

[1997 மார்ச் 27

## 4. செயற்படுத்தப்பட்டு வரும் புதிய திட்டப் பணிகள்

(1) மணலியில் நீரேற்றுக் குழாயின் மூலம் நீரைச் சேமித்தல் (Pumped Storage):

இத்திட்டம் தொடர்பாக விரிவான தொழில் நுட்ப ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொழில் நுட்ப ஆய்வு முடிக்கப்பட்டவுடனே, இத்திட்டம் செயற்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

### (2) சென்னை மாநகரில் கழிவு நீர்க் குழாய் வசதி இல்லாத தெருக்களுக்குக் கழிவு நீர்க் குழாய் வசதிகளை செய்து கொடுத்தல்:

இத்திட்டம் இவ்வாண்டில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி இவ்வாண்டிலேயே முடிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (3) ஆதி-ஆந்திரர்களின் குடியிருப்புகளுக்குக் கழிவு நீர்க் குழாய் வசதிகள் செய்து கொடுத்தல்:

சென்னை மாநகரில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்ட 23 இடங்களில் மொத்தம் 20,936 மீட்டர் தூரத்திற்கு இப்பணி இவ்வாண்டிலேயே முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 5. உலக வங்கி நிதியுதவி பெற்று செயலாக்கப்படும் திட்டங்கள்:

(1) இரண்டாவது சென்னைக் குடிநீர்த் திட்டம்;

குடிநீர் வழங்கும் அமைப்பை மேம்படுத்துவதுடன் வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டு வர மொத்தம் 1,638 கோடி ரூபாய் செலவில் முதற்கண் வடிவமைக்கப்பட்ட இத்திட்டம், தற்போது 513.90 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் வகையில் உலக வங்கியுதவியுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி 1,000 கோடி ரூபாய் செலவாகக்கூடிய குழாய் இணைப்புப் பணி தற்போதைய இத்திட்டத்திலிருந்து விட்டுவிடப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கல் கட்டமைப்பை மேம்படுத்துதல், குடிநீர் சேமிப்புப் பணிகளை நிறைவேற்றுதல் ஆகிய இரு நோக்கங்களை எய்தும் வகையிலான பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன. அவற்றுள் பின்வருவனவும் அடங்கும்:-

(i) சென்னைக் குடிநீர் முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்டு முடிக்கப்படாத பணிகளை நிறைவேற்றுதல்;



1997 மார்ச் 27]

(ii) சுத்திகரிக்கப்பட்ட குடிநீரைக் கொண்டு செல்லும் குழாய்களை அமைத்தல்;

(iii) மண்டலத் தலைப் பணிகளை அமைத்தல்;

(iv) குடிநீர் வழங்கும் முதன்மைக் குழாய்களை வலுப்படுத்துதல்;

(v) குடிநீர்க் கசிவைக் கண்டுபிடித்துக் குழாய்களைப் பழுதுபார்த்தல்;

(vi) ஆலோசனைப் பெறுதலும் விரிவான தொழில் நுட்ப ஆய்வும்.

1997-98-ஆம் ஆண்டில் ரூ. 69.90 கோடி செலவில் மண்டலங்களில் குடிநீர்த் தேக்கங்கள் கட்டுதல், குடிநீர் அனுப்புகை முதன்மைக் குழாய்களை அமைத்தல், குடிநீர் விநியோக அமைப்புகளை வலுப்படுத்துதல் ஆகிய திட்டங்களை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முழுவதும் 2001-ஆம் ஆண்டுவாக்கில் முடிக்கப்பெறும்.

### *(2) சென்னைக் குடிநீர் வழங்கல் . துப்புரவுப் பணி மூன்றாம் திட்டம்:*

இத்திட்டம், சென்னை மாநகரிலும், அதனைச் சுற்றியுள்ள நகர்ப்பகுதிகளிலும் குடிநீர் வழங்கல் துப்புரவுப் பணி அமைப்புகளை மேம்படுத்துதலையும், கிருஷ்ணா நதி நீர்க் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் இறுதியாக எதிர்ப்பார்க்கப்படும் 12 மில்லியன் கன அடி நீரைச் சமமாகப் பங்கீடு செய்யப்படுவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், குறைந்த செலவிலான துப்புரவுப் பணியும், திடக்கழிவு நிர்வாகத்திற்கான திட்டங்களும், நிறுவன அமைப்புகளை வலுப்படுத்தும் பணியும் அடங்கும்.

உலக வங்கியிலிருந்து நிதியுதவி பெறுவது தொடர்பாக மதிப்பீட்டுப் பணிகளை உலக வங்கிக் குழு விரைவில் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 1997-ஆம் ஆண்டில் முடிவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### *(3) கழிவு நீரகற்றும் புதிய திட்டங்கள்:*

கழிவு நீரகற்றும் வசதியில்லாத கொடுங்கையூர், கானகம்-தரமணி, வியாசர்பாடி போன்ற பகுதிகளுக்கு ரூ.38 கோடி செலவில் கழிவு நீரகற்று வசதிகளை அமைப்பதற்கான நிருவாக ஒப்புதலை தமிழக அரசு வழங்கியுள்ளது. இப்பணி, வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் 1997-98-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்படும்.

(4) தமிழக அரசு, ரூ.11.94 கோடி செலவில், டாக்டர் இராதாகிருஷ்ணா நகருக்கு (வடக்கு) கழிவு நீரகற்று வசதிகளை செய்து கொடுப்பதற்கான நிருவாக ஒப்புதலை வழங்கியுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியை 1998-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வாக்கில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) 1997-98-ஆம் ஆண்டில், ரூ.12 கோடி செலவில், தற்போதுள்ள கழிவுநீர் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

### 6. வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து நிதியுதவி பெறும் திட்டம்

வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து நிதியுதவி பெறும் திட்டத்தின் கீழ், 1996-97-ஆம் ஆண்டில், ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன், ரூ.572 கோடி செலவில் கழிவு நீரகற்று சீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடக்க ஆலோசனைப் பணிகள், விரிவான பொறியியல் பணிகள் ஆகியவற்றுடன் இத்திட்டம், 1996-97-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில், ரூ. 10 கோடி செலவிலான பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2000-ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.





## இணைப்பு-3

(*71 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க*)

### நகராட்சி நிருவாகம்

### பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (1997-98)

### கோரிக்கை எண் 49

தமிழகத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் 1996-97 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேர்தல், உள்ளாட்சித்துறையின் மிக முக்கியமான நிகழ்ச்சி ஆகும். 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் 6 மாநகராட்சிகளுக்கும், 102 நகராட்சிகளுக்கும் மற்றும் 634 நகரப் பஞ்சாயத்துகளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் உறுப்பினர்களும் 25-10-1996 அன்று பதவி ஏற்றுக்கொண்டனர். இந்த உள்ளாட்சித் தேர்தல்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சிறப்பான நிர்வாகத்தை அளிக்கவும் மற்றும் நகர்ப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் ஏதுவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு ரூ.50.00 இலட்சம் தொகையினை ஒதுக்கீடு செய்தது. பேச்சுத்திறமை, ஆளுமை போன்ற தலைமைப் பண்புகளை வளர்க்கும்பொருட்டும், பெண்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்தும் பெண் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குத் தனியாக பயிற்சி அளித்தது, இதில் ஒரு சிறப்பு அம்சமாகும்.

2. தற்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக 7 சட்டங்கள் அமலில் உள்ளன. இவை, ஒரு மாநகராட்சிக்கு ஒரு சட்டம் வீதம் 6 மாநகராட்சிகளுக்கு 6 சட்டங்களும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ஒரு சட்டமும் ஆகும். மேலும், சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919 ஆம் ஆண்டும், மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ஆம் ஆண்டும் இயற்றப்பட்டவை ஆகும். இந்தக் காரணத்தால் இவை தற்போதைய மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகத்தின் தேவைகளுக்கேற்ப இல்லை. இதனை மனதில் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் மற்றும் டிசம்பர் முதல் தேதியில் சென்னையில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாட்டில், மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும்

[1997 மார்ச் 27

பொதுவான சட்டம் இயற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்தார்கள். அதன்படி, இந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டமுன்வடிவு நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படும்.

3) உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தில் 1996-97-ம் ஆண்டில் ஏற்பட்ட மற்றுமொரு முக்கியமான நிகழ்ச்சியானது, மாநில நிதி ஆணையம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது மற்றும் அதன் பரிந்துரைப்படி அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதும் ஆகும். உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுள் அவற்றின் மோசமான நிதிநிலைமை முக்கியமான ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மாநில நிதி ஆணையத்தின் முக்கியப் பரிந்துரையான நிதியைப் பகிர்ந்தளிப்பது சம்பந்தமான முடிவை அரசு ஏற்றுக் கொண்டதன் விளைவாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலைமை பெருமளவுக்கு மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 65% அமைப்புகள் தங்களால் பராமரிப்பு செலவினத்தைக் கூட சரிகட்ட முடியாத நிலைமை உள்ளது. நிதிகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் பேரூராட்சிகளுக்கு ஆண்டுக்கு ரூபாய் 100 கோடியும், நகராட்சிகளுக்கு ரூபாய் 80 கோடியும், மாநகராட்சிகளுக்கு ரூபாய் 80 கோடியும் மாநில அரசால் அளிக்கப்படும்.

4. இதுதவிர, இந்த அமைப்புகள் 1997-98-ம் ஆண்டிலிருந்து கேளிக்கை வரியிலிருந்து அதிக சதவீதத்தின் தொகையையும் பெறும். உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகளுக்கான பராமரிப்புச் செலவினங்களுக்காக அளிக்கப்படும் இந்நிதி, முழுமையான அளவில் தேவையைத் தீர்க்காது என்றாலும், இது இந்த அமைப்புகளின் நிதி நிலைமையை பெரிதும் மேம்படுத்தும். இந்நிதியைப் பெற்றபின் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பு மேலும் அதிகமாகும். இனிவரும் காலங்களில் இந்த அமைப்புகள் நிலுவைத் தொகையினை வசூல் செய்யவும், நிதி நிலைமையைச் சீராக சமாளிக்கவும், நிதி ஆதாரங்களைப் பெருக்கவும் முயற்சிகள் எடுக்க வேண்டும். மேலும், மக்கட் தொகை மற்றும் நபர் ஒன்றுக்கு வசூல் செய்யப்படும் வருவாய், உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்கல், துப்பரவு, சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் போன்ற அத்தியாவசிய வசதிகளுக்காக செய்யப்படும் செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்படும்.



1997 மார்ச் 27]

5. அத்தியாவசிய வசதிகளை மேம்படுத்துவதற்கும் நிர்வாகத்தைச் சீரமைப்பதற்கும் வருவாய் இனங்களைப் பெருக்குவதற்கும் மாநில நிதி ஆணையம் உரிய பரிந்துரைகளை செய்துள்ளது. இவற்றில் முக்கியமானது சொத்து வரி சம்பந்தப்பட்டதாகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வரவில் 52.83% சொத்து வரி ஆகும். வாடகை மதிப்பு அடிப்படையில் சொத்துவரி நிர்ணயிப்பதும் வரிவிதிப்பிற்கு போதுமான சட்டப் பாதுகாப்பு இல்லாமையும், வரிவிதிப்பு பெரும்பாலும் தனிநபர் முடிவிற்கு விடப்படுவதாலும் இந்த வரியிலிருந்து போதுமான அளவிற்கு நிதிகளைப் பெற முடியவில்லை. இது சம்பந்தமாக மாநில நிதி ஆணையம் வாடகை அடிப்படையில் சொத்துவரி விதிக்கும் விதியை மாற்றி கட்டுமானப்பகுதி, கட்டுமான அளவு, பயன்பாடு முதலிய அலகுகளை உள்ளடக்கிய ஒரு புதிய முறையைக் கையாள பரிந்துரைத்துள்ளது. வரி நிர்ணயிப்பதில் ஒளிவு மறைவின்றியும், நியாயமாக இருக்குமாறும் அதே சமயம் ஆண்டுக்கு ஆண்டு ஓரளவுக்காவது கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையிலும் நகர்ப்புற ஊராட்சி அமைப்புகளுக்கான புதிய சட்டமுன்வடிவில் உரிய பிரிவுகள் சேர்க்கப்படும்.

6. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும் என மாண்புமிகு உறுப்பினர்கள் பலமுறை வலியுறுத்தி உள்ளனர். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 74-வது திருத்தத்தின் 243 W பிரிவு இதுபற்றியதாகும். இந்தப் பிரிவின்படி அந்தந்த உள்ளாட்சிப் பகுதிகளில் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் போன்ற பணிகளை உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கலாம். மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 12-வது அட்டவணையில் கூறப்பட்டுள்ள பொருட்களையும் சேர்த்து, பிற பொருட்கள் சம்பந்தமான அரசு திட்டங்கள் செயலாக்குவதன் பொறுப்பையும் இந்த அமைப்புகளுக்கு அளிக்கலாம். இது சம்பந்தமாக அரசு ஏற்கனவே சில முடிவுகளை எடுத்துள்ளது. அவற்றுள் முக்கியமானவை கீழே வருமாறு:—

(அ) தனிநபர் பயன்பெறக்கூடிய எல்லா அரசு நலத்திட்டங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட நிதி, மாவட்டத்தில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்திற்கான பயனாளிகள் நகர்ப்புற அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(ஆ) மாவட்ட பரவலாக்கும் திட்டத்தின் கீழ் நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, முடியுமானால் அவைகளாலேயே செயல்படுத்தப்பட வேண்டும்.

[1997 மார்ச் 27

(இ) நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில், பணிகள் செய்வதற்கான நிர்வாக ஒப்பளிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏற்பு போன்றவற்றில் அதிகாரம் பலநிலைகளில் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன.

(ஈ) மாவட்டங்களில் மாவட்டத் திட்டக்குழுவும், பெருநகர்ப் பகுதிகளுக்கு பெறுநகர்த் திட்டக்குழுவும் விரைவில் அமைக்கப்பட உள்ளன.

(உ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலான அதிகாரம் அளிப்பது பற்றிய பொருள், மாநிலத் திட்டக்குழுவின் ஆய்வில் உள்ளது. அதன் பரிந்துரைகள் பெறப்பட்டதும் அரசு அதனை ஆய்வு செய்து அதன்மீது துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இவ்வாறு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிர்வாகத்தில் பெரும் மாற்றங்களைச் செய்வதன் மூலம் அவற்றின் நிதிநிலைமையைத் திருப்திகரமாக மாற்றவும் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய திறமையான நிர்வாகத்தை அளிக்கவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நகராட்சி நிருவாகம்

மாநிலத்திலுள்ள 104 நகராட்சிகளும், அவைகளுடைய வரவினத்தைப் பொறுத்து, பல நிலைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையிலும் எத்தனை நகராட்சிகள் என்றும், என்ன வரவின் அடிப்படையில் அவைகள் பாகுபடுத்தப்பட்டுள்ளனவென்பது குறித்தும் விவரங்கள் இணைப்பு-1 இல் தரப்பட்டுள்ளன.

2. மாநிலத்தின் அனைத்து நகராட்சிகளிலும் சேர்த்து 1995-96 ஆம் ஆண்டில் மொத்த வரவினம் ரூ. 295 கோடியாகவும், செலவினம் ரூ. 291.83 கோடியாகவும் இருந்தது. இணைப்பு-2-ல் 1995-96 ஆம் ஆண்டில் நகராட்சிகளின் மொத்த வரவு செலவு திட்ட விவரங்கள் தரப்பட்டுள்ளன. இந்த வரவு செலவு கணக்கு பார்த்தால் நகராட்சிகளில் நிதிநிலை உபரியாக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தினாலும், உண்மையான நிலை என்னவென்றால் போதிய நிதியின்மையால் அவசியம் செலவிட வேண்டிய பல செலவினங்கள் நகராட்சிகளால் செய்யப்படாமல் இருந்ததுதான். உதாரணமாக, மின் கட்டணம் செலுத்தப்படாமலும், குடிநீர்ப் பராமரிப்புக் கட்டணம் செலுத்தப்படாமலும், பணியாளர்களின் ஓய்வூதியத்திற்கான பணிக்கொடை செலுத்தப்படாமலும் பல நகராட்சிகள் இருந்துள்ளன.



1997 மார்ச் 27]

3. பராமரிப்புச் செலவிற்காகவும், வளர்ச்சிப் பணிகளுக்காகவும் நகராட்சிகளுக்குத் தேவையான செலவுகளுக்கு ஆதரவாகச் சொந்த வருமானத்துடன் மான்யமாகவும், கடனாகவும் மாநில அரசு நிதி உதவி வழங்குகிறது. 1996-97 ஆம் ஆண்டில் இவ்வாறு வழங்கப்பட்ட நிதியுதவிகள் குறித்த விவரங்கள் இணைப்பு 3-ல் தரப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 42.36 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் (1995-96) இத்தொகை ரூ. 6.28 கோடியாக மட்டுமே இருந்தது.

### சாலைகள்

நகராட்சிகள் பராமரிக்கும் 6,306 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் மூன்றில் ஒரு பங்கு கற்சாலைகளாகவும், மண் சாலைகளாகவும் இருக்கின்றன. இவை அனைத்தையும் தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டுமானால் ரூ. 79.75 கோடி தேவைப்படும். 1996-97 ஆம் ஆண்டில் 61 நகராட்சிகளில் 61.85 கி.மீ. நீளமுள்ள சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்ற பணிகள் துவங்கப்பட்டன. இதே நிலையில் போனால் நகராட்சிகள் பராமரிக்கும் சாலைகள் அனைத்தையும் தார்ச் சாலைகளாக மாற்ற பல வருடங்கள் ஆகலாம். நகராட்சிகளில் நிதிப் பற்றாக்குறை இப்பிரச்சினையை மேலும் பெரிதாக்குகிறது.

சாலைகள் அமைக்கவும், பராமரிக்கவும், 1996-97 ஆம் ஆண்டில் நகராட்சிக்கு மாநில அரசு கீழ்க்கண்ட நிதி உதவியை வழங்கியுள்ளது:

**சாலைகள் அமைப்பு**

| | மான்யம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூ. லட்சம்) | | |
| முக்கிய சாலைகளை பராமரிக்கவும் மேம்படுத்தவும் | .. | 50 | 50 |
| தற்போதுள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற | 30 | 50 | 80 |
| | | | (ரூ. கோடி) |
| பராமரிப்பு | | | |
| நகராட்சி சாலைகளைப் பழுது பார்த்து புதுப்பிக்க சிறப்புத் திட்டம் | | | 3.00 |

[1997 மார்ச் 27

நடப்பு ஆண்டிலிருந்து மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக்கு ஏற்ப பராமரிப்பு மான்யங்கள் அனைத்தும் மொத்தமாக இணைக்கப்பட்டு மாநில அரசு நகராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யவிருப்பதால் நகராட்சிகளின் சாலை பராமரிப்புக்கு இந்த ஆண்டு முதல் அரசு அளிக்கும் நிதியிலிருந்து தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### குடிநீர் வழங்குதல்

104 நகராட்சிகளில் தற்போது 101 நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் அமலில் உள்ளது. மக்கள் தொகை பெருக்கம், நீர் ஆதாரங்கள் சுருக்கம் போன்ற பல காரணங்களால் தற்பொழுதுள்ள குடிநீர் வழங்கு திட்டங்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. 38 நகராட்சிகளில் ரூ. 5.17 கோடி செலவில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் குடிநீர்த் திட்டங்களைச் சீரமைக்க உள்ளது. ரூ. 44.03 கோடி செலவில் 19 நகராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தால் குடிநீர் அபிவிருத்தித் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 1996-97 ஆம் ஆண்டு குடிநீர் அபிவிருத்தி செய்வதற்கு 70 நகராட்சிகளுக்கு ரூ. 2.34 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### தெருவிளக்குப் பராமரிப்பு

நகராட்சிகளில் தெருவிளக்குகள் மாற்றுதல் உள்ளிட்ட அனைத்து தெருவிளக்குப் பணிகளையும் அந்தந்த நகராட்சிகள் செவ்வனே செய்து வருகின்றன. கூடுதலான தெருவிளக்குகள் அமைப்பதற்கு 1996-97 ஆம் ஆண்டில் 81 நகராட்சிகளுக்கு ரூ. 2.90 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### பொதுக் கழிப்பிடங்கள்

நகராட்சிகளால் தற்போது 1,826 பொதுக் கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 1,032 கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி உள்ளது. நகராட்சிகளால் பராமரிக்கப்படும் எல்லா கழிப்பிடங்களுக்கும் பல கட்டங்களில் தண்ணீர் வசதி அளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. 1997-98 ஆம் நிதியாண்டில் 19 நகராட்சிகளுக்குப் பொதுக் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி அளிப்பதற்கு அரசு ரூ. 50.00 இலட்சம் சிறப்பு மானியமாக வழங்கவுள்ளது.



1997 மார்ச் 27]

மேற்கூறப்பட்ட முக்கியமான அடிப்படை வசதியைத் தவிர, குடிசைப் பகுதிகள், பிற்படுத்தப்பட்டப் பகுதிகள் முன்னேற்றத்திற்கும் பொதுச் சுகாதார நிலையங்கள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் பராமரிப்பிற்கும் நகராட்சிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யும். 1996-97 ஆம் ஆண்டில் நகராட்சிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்த விவரம் கீழே வருமாறு:—

| வ.எண். (1) | அமலில் உள்ள திட்டங்கள். (2) | 1996-97 ஆம் ஆண்டின் வரவு-செலவு ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்.) (3) | நகராட்சிகளின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 1. | நகராட்சிகளிலுள்ள குடிசைப்பகுதிகளின் முன்னேற்றத்திற்கு | 80.00 | 26 |
| 2. | ஒருங்கிணைந்த பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிப்பணிக்காக | 18.00 | 7 |
| 3. | தாய்சேய் நல விடுதிகளின் முன்னேற்றத்திற்காக | 15.00 | 8 |
| 4. | பொதுக் கழிப்பிடங்கள் பராமரிப்பதற்காக. | 16.00 | 8 |
| | மொத்தம் | 129.00 | |

### அடிப்படை வசதிகளுக்குச் சிறப்பு மான்யம்

நகராட்சிகளின் அடிப்படைத் தேவைகளுக்காக அரசு 1996-97 ஆம் நிதியாண்டில் ரூ. 9.15 கோடி நகராட்சிகளுக்கு வழங்கியுள்ளது. இந்தத் தொகையில் நகராட்சிகளின் துப்புரவுப் பணிகளுக்காக வாகனங்கள் வாங்குவதற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 3.75 கோடியும் அடங்கும்.

### ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

மத்திய அரசால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1979-80) தொடங்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து ஏழாவது மற்றும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. தற்போதும்

[1997 மார்ச் 27

நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புறப் பகுதிகளிலிருந்து நகர்ப்புறங்களுக்குக் குடியேறுவதைக் குறைக்கும் பொருட்டு தேர்வு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாகும்.

இத்திட்டம் 5 இலட்சம் வரையிலான மக்கள்தொகை உள்ள நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு 20,000 வரை மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் 5 இலட்சம் வரை மக்கள் தொகை உள்ள நகரங்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதலீடு செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னுரிமை வளர்ச்சிப் பணிகள் பின்வருமாறு:—

1. வணிக வளாகங்கள்
2. போக்குவரத்து மற்றும் கொண்டு செல்லும் வசதி
3. மனைவளர்ச்சி மற்றும் அடிப்படை வசதிகள்
4. சுற்றுலா வசதிகள்
5. கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால்கள்
6. திடக்கழிவு பராமரிப்பு மேலாண்மை

நகராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கும் ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையங்களை மேம்படுத்துவதற்கும் இத்திட்டத்தின் கீழ் ரூ.6.72 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட நகராட்சிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன:—

1. பவானி
2. திருப்பூர்
3. காஞ்சிபுரம்
4. கடலூர்
5. விருத்தாசலம்
6. திருத்துறைப்பூண்டி
7. கூத்தாநல்லூர்
8. இடப்பாடி
9. தென்காசி மற்றும்
10. காரைக்குடி



1997 மார்ச் 27]

இதர வருமானம் தரக்கூடிய திட்டங்கள் கீழ்க்கண்ட நகராட்சிகளில் செயல்படுத்தப்படுகின்றன:—

| வ.எண். (1) | நகராட்சி (2) | திட்டம் (3) |
|---|---|---|
| 1. | பவானி | கடைகள், சிறு அரங்குகள், தினச்சந்தை, வணிக வளாகம். |
| 2. | விருத்தாசலம் | தினச்சந்தை மற்றும் வணிகவளாகம் கட்டுதல் |
| 3. | குமாரபாளையம் | வணிகவளாகம், தினச்சந்தை, வாரச்சந்தை, சரக்கு அறை. |
| 4. | இடப்பாடி | பேருந்து நிலையத்தில் வணிகவளாகம், தினச்சந்தை, வணிகவளாகம். |
| 5. | காரைக்குடி | கடைகள் மற்றும் சரக்கு அறைகள் கட்டுதல். |
| 6. | தென்காசி | கடைகள் கட்டுதல். |

கீழ்க்கண்ட நகராட்சிகளுக்குப் புதிய திட்டங்கள் செயல்படுத்த பரிசீலனையில் உள்ளது:—

1. வேலூர்
2. திண்டுக்கல்
3. பெரியகுளம்
4. வாலாஜாப்பேட்டை
5. நெல்லிக்குப்பம்

**ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் மறுவாழ்வுத் திட்டம்**

நகராட்சிகளின் நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக நகராட்சிகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த இயலவில்லை. பாதாளச் சாக்கடை இருக்கும் இடங்களில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இதன் விளைவாக பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் சிறப்பாக செயல்பட முடியவில்லை.

குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் நகர்ப்புறங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:—

(அ) மனிதக் கழிவை கையில் எடுத்து, தலையில் சுமந்து செல்லும் துப்புரவு பணியாளர்களை இப்பணியிலிருந்து விடுவித்து மாற்று வேலை அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதும்.

(ஆ) நகர்ப்புறங்களை எல்லாவிதமான சுகாதாரக் கேடுகளிலிருந்தும் விடுவித்து சுகாதாரமான ஒரு சுற்றுப்புறச் சூழ்நிலையை ஏற்படுத்துவதும் ஆகும்.

தற்போது இத்திட்டம் நகரம் முழுமைக்கும் பயனளிக்கும் வகையில், மத்திய அரசின் மானியம் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கழக (ஹட்கோ) நிறுவனத்தில் கடனுதவி பெற்று மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகின்றன. இதுவரையிலும் வழங்கப்பட்ட மொத்த தொகை பின்வருமாறு:

| | |
|---|---|
| மான்யம் | ரூ.13.86 கோடி |
| கடன் | ரூ.42.90 கோடி |

1,55,602 தனியார் கழிப்பிடங்களும், 436 பொதுக் கழிப்பிடங்களும ரூ.63.67 கோடி செலவில் கட்டுவதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில 30-11-96 வரை 77 நகராட்சிகளில் 83,234 தனியார் கழிப்பிடங்களும 145 பொதுக் கழிப்பிடங்களும் ரூ.24.57 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. இந்தத் திட்டம் நிறைவு பெற்ற நகராட்சிகளில உள்ள துப்புரவுப் பணியாளர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு மாற்றுப் பணிகளில் அமர்த்தப்படுகின்றனர். ஆதிதிராவிட நல வாரியத்தின் மூலம் கடன் வழங்கி சுயவேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

## நேரு வேலைவாய்ப்புத் திட்டம்:

நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கோடு நேரு வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது கீழ்க்காணும் மூன்று திட்டங்களைக் கொண்டதாகும்:





### (அ) (1) நகர்ப்புற நலிவுற்ற மக்களுக்கு சிறுதொழில் மூலம் சுயவேலைவாய்ப்பிற்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

இத்திட்டம் 1989-ல் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறுதொழில் தொடங்க 25 விழுக்காடு மானியமும், 75 விழுக்காடு வங்கிக்கடனும் வழங்கப்படுகிறது. பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருக்கு ரூ.5000/- வரையிலும் ஏனையோருக்கு ரூ.4000/- வரையிலும் மான்யத் தொகை வழங்கப்படுகிறது. இதில் 60 விழுக்காடு மானியத்தை மத்திய அரசு ஏற்கிறது. மீதம் உள்ள 40 சதவீதத்தை மாநில அரசு ஏற்கிறது.

1989-90-லிருந்து இதுநாள் வரையிலும் நகராட்சிகளுக்கும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கும் ரூ.25.79 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 30-11-96 வரை 1,04,410 பேர் பயன் அடைந்துள்ளனர். இதில் 31,323 மகளிர் ஆவர்.

### (2) நகர்ப்புற ஏழைகட்கு சிறுதொழில்களுக்கான பயிற்சி அளிக்கும் திட்டம்

நகர்ப்புற ஏழை மக்களுக்குப் பல்வேறு சிறுதொழில்களில் தக்க பயிற்சியினை அளித்து அதன்மூலம் அவர்கள் சிறுதொழில்கள் தொடங்கவோ அல்லது போதுமான வருவாயுடன் கூடிய வேலைவாய்ப்புத் தேடிக்கொள்ளவோ வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நபர் ஒருவருக்கு ரூ.1200/- பயிற்சிக்காக செலவிடப்படுகிறது.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ.4.17 கோடி நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டு 22,279 பேர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 30 விழுக்காடு பெண்களாகும்.

### (ஆ) நகராட்சிப் பொதுப்பணிகளைச் செய்வதன் மூலம் நலிவுற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை உடைய நகராட்சிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடு நகராட்சிகளிலுள்ள பொதுச் சொத்துக்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுத்துவது ஆகும். இத்திட்டத்திற்கு மத்திய அரசும், மாநில அரசும் 60:40 விழுக்காட்டில் நிதியுதவி அளித்து வருகிறது.

[1997 மார்ச் 27

1996-97 ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தின் கீழ் ரூ.27.08 கோடி நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 10,443 பணிகள் எடுக்கப்பட்டு 9,225 பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. மீதம் உள்ள 1,218 பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலையில் உள்ளன.

**(இ) (1) நலிவுற்ற மக்களின் உறைவிட மேம்பாட்டிற்கு நிதியுதவி வழங்கும் திட்டம்**

நகர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் உறைவிடங்களின் கூரை, சுவர்கள், தரை முதலியவற்றைப் புதுப்பிப்பதற்கும் வீட்டினை விரிவுபடுத்துவதற்கும் மற்றும் புதிய உறைவிடங்கள் அமைத்துக் கொள்வதற்கும் ரூ.10,500/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இதில் ரூ.9,500/- வீட்டுவசதி மற்றும் நகரப்புற வளர்ச்சிக் கழக (ஹட்கோ) நிறுவனத்தின் கடன், மத்திய அரசின் மான்யம் ரூ.600/-, மாநில அரசின் மான்யம் ரூ.400/- ஆகும். 1989-90 ஆம் ஆண்டு 30-11-1996 வரை ரூ.37.99 கோடி செலவில் 91,087 உறைவிடங்கள் மேம்படுத்தப்பட்டன. மற்றும் 56,066 உறைவிடங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

**(இ) (2) வீடு மற்றும் கட்டடத் தொழில்களில் பயிற்சி அளித்தல்**

சிறுதொழில்கள் பயிற்சி அளிப்பதைப் போன்றே கொத்தனார், கம்மியர், தச்சர், வீட்டு மின்னிணைப்புப் பணி, குழாய்ப்பணிகள் (பிளம்பிங்) போன்ற கட்டடத் தொழில்களிலும் நகர்ப்புற ஏழைகட்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுநாள் வரையிலும் நகராட்சிகளுக்கு ரூ.2.38 கோடி வழங்கப்பெற்று இதன் மூலம் 11,731 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் 30 விழுக்காடு மகளிர் ஆவர்.

**நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித் திட்டம்**

இத்திட்டம், 1992 செப்டம்பர் முதல் தமிழக நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு மத்திய அரசு திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம் யாதெனில் தேசிய திட்ட செயலாக்க இலக்கு மற்றும் மாநில திட்ட செயலாக்க இலக்கு ஆகியவைகளை அடையும் வண்ணம், குழந்தைகளுக்கான தேசிய திட்டத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து பணிகளைச் செயல்படுத்துவதற்காகவும் சமுதாயத்தை ஈடுபடுத்தி நகரங்களில் வசிக்கும் மிகவும் ஏழ்மையான, பின்தங்கிய மற்றும் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பத்திலுள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவதும் ஆகும்.



1997 மார்ச் 27]

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 20 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிப் பகுதிகளில் (இணைப்பு - 4) பணிகள் மேற்கொள்ள ரூ.12.37 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்**

பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் தற்போது 41 நகரங்களில் (38 நகராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகள்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகரங்களின் பட்டியல் இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 6,143 அண்டை வீட்டுக்குழுக்களும் 760 உள்ளூர் குழுக்களும், 52 சமுதாய வளர்ச்சி சங்கங்களும் அமைக்கப்பட்டு உள்ளன.

நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின் அடிப்படையில் 50 சிக்கனக்கடன் வழங்கும் சங்கங்கள் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும் பெறப்பட்ட மொத்த நிதியில் ரூ.17.38 கோடி இத்திட்டத்தில் உள்ள 41 நகரங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் சமுதாயப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிப்பதற்காக கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.22.26 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்**

உலகவங்கி நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.167.20 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் தாத்தக்க திட்டங்கள் மற்றும் மேம்பாட்டு வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவைகளை செயல்படுத்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1989 முதல் செப்டம்பர் 1996 முடிய 85 நகராட்சிகள் (இதில் 1-6-1995 லிருந்து அமைக்கப்பட்ட திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 மாநகராட்சிகள் மற்றும் அதில் இணைந்துள்ள 5 நகராட்சிகளையும் சேர்த்து) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள் மற்றும் சென்னை பெருந‌கர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றிற்குப் பல்வே திட்டங்களைச் செயல்படுத்த ரூ.246.92 கோடிக்கான நிர்வாக அனு அரசால் வழங்கப்பட்டுள்ளது. உலகவங்கி நிதியுதவியுடன் செயல்படு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி தற்போது உலகவங்கி நிதி உதவியுட

செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதிச்சேவைகள் நிறுவனமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியானது தன்னிச்சையாக இயங்கும் நிதிநிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. இந்நிதி நிறுவனம் பொறுப்பாட்சி மற்றும் சொத்து மேலாண்மை நிறுவனம் என இரண்டு அடுக்குகளைக் கொண்டது. பொறுப்பாட்சி என்பது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி எனவும் சொத்து மேலாண்மை நிறுவனம் என்பது தமிழ்நாடு உள்கட்டமைப்பு சொத்து நிறுவனம் எனவும் பெயரிடப்பட்டுள்ளது. நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதிக்கு மாற்றம் செய்யப்படும். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் சிறப்பு அம்சமாக 'மானிய நிதி' ஒன்று அமைக்கப்பட்டு அது தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படவுள்ளது. இந்நிதி வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் பயனடையும் வகையில் மானிய அடிப்படையிலான திட்டங்களுக்கு அளிக்கப்படும். மேலும் இந்நிதி நகர்ப்புற நிறுவனங்களில் தொழில்நுட்பம், நிர்வாக உத்திகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்தும் திறமைகள் போன்றவற்றில் முன்னேற்றம் அளிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

## தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்

போதுமான நிதிவசதியில்லாத நகராட்சிகளுக்கு நிதியுதவி அளிக்கும் நோக்கத்துடன் 21-3-1990 அன்று தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் மாநகராட்சிகள் / நகராட்சிகளில் பயனளிக்கும் திட்டங்களுக்கும் வருமானம் அளிக்கத்தக்கத் திட்டங்களுக்கும் மற்றும் நகர மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனமான ஹட்கோவிடமிருந்து கடனாக நிதியைப் பெற்று மாநகராட்சி/ நகராட்சிகளுக்குக் கடன் வழங்கி வருகிறது.

இந்நிறுவனமானது 31-12-1996 வரை ரூ.105.71 கோடி, நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் நடைபாதை குடியிருப்போர் மறுவாழ்வுத் திட்டத்திற்கும் நிதியுதவி அனுமதித்து, அதில் 31-12-1996 வரை கடன் மற்றும் மானியமாக மொத்தம் ரூ.71.36 கோடி வழங்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுக் கழகமானது நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி வழங்கும் பணியை மேற்கொள்ளும் ஒரே அரசு நிறுவனமாக மாற்றி அமைக்கும் கொள்கை முடிவினை அரசு எடுத்துள்ளது. இனிமேல் இக்கழகமானது தனிநபர் பயன்பெறும் திட்டங்களுடன் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கும், சென்னை மெட்ரோ பாலிட்டன் பகுதிப் பெருநகரத் திட்டத்திற்கு நிதி வழங்கும் பொறுப்பையும் வகிக்கும்.

## தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனமானது நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பல்வேறு வகை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் நகராட்சி நிர்வாகத்தில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் நகராட்சி அலுவலர்களுக்கும் மற்றும் சமுதாயப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பது மட்டுமின்றி புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் சிறப்பு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தது. தற்பொழுது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 102 நகர்மன்ற தலைவர்களுக்கும் 3,391 நகராட்சி உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பேச்சுத்திறமை, ஆளுமை போன்ற தலைமைப் பண்புகளை வளர்த்திடும் பொருட்டும், பெண்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்தும் பெண் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பலவிதமான பயிற்சிகள் நடத்தவும், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் இந்நிறுவனத்தில் வசதிகளை மேம்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி இந்நிறுவனத்தில் கூடுதலாக தங்கும் அறைகள், விரிவுரை நிகழ்த்தும் அறை மற்றும் அலுவலர்களுக்கு அறைகள் போன்றவைகளைக் கட்டுவதற்கு ரூ.35.00 இலட்சம் வழங்கப்பட உள்ளது. கட்டுவதற்கு தேவையான நிதியில் ஒரு பகுதி நகராட்சிகளிலிருந்து பெறப்படும். மேலும் கணிப்பொறி மூலம் பயிற்சி அளிப்பதற்கும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

[1997 மார்ச் 27

## இணைப்பு - 1

### நகராட்சிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நிலையிலும்

| வ. எண். | நிலை | ஆண்டு வருவாய் | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மூன்றாம் நிலை | ரூ.10 இலட்சத்திற்கு மேல் | 16 |
| 2. | இரண்டாம் நிலை | ரூ.20 இலட்சத்திற்கு மேல் | 30 |
| 3. | முதல்நிலை | ரூ.40 இலட்சத்திற்கு மேல் | 30 |
| 4. | தேர்வுநிலை | ரூ.100 இலட்சத்திற்கு மேல் | 15 |
| 5. | சிறப்பு நிலை | ரூ.200 இலட்சத்திற்கு மேல் | 13 |
| | | மொத்தம் | 104 |

## இணைப்பு - 2

### அனைத்து நகராட்சிகளின் வரவு-செலவு விவரங்கள் (1995-96)

| வ.எண் | வரவினம் | வரவு (ரூபாய் கோடியில்) | வ.எண். | செலவினம் | செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1. | சொத்துவரி | 76.53 | 1. | பொதுநிர்வாகம் (பொது சுகாதாரம் உட்பட) | 35.36 |
| 2. | தொழில்வரி | 11.07 | 2. | பொதுப்பணிகள் | 39.25 |
| 3. | வண்டி வாகன வரி | 0.99 | 3. | கல்வி | 2.60 |
| 4. | இதர நிறுவனங்கள் மூலம் வசூலிக்கப் பட்டவை | 52.47 | 4. | குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் | 37.87 |



1997 மார்ச் 27]

| வ.எண் | வரவினம் | வரவு (ரூபாய் கோடியில்) | வ.எண். | செலவினம் | செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 5. | கட்டண வசூல் | 16.44 | 5. | நகரமைப்புத் திட்டம் | 15.04 |
| 6. | மான்யம் மற்றும் நன்கொடைகள் | 15.44 | 6. | பிற இன்றியமையாத செலவினங்கள் | 78.83 |
| 7. | சொத்துக்கள் மூலம் வருவாய் | 9.28 | 7. | விருப்புரிமை பணிகள் | 3.56 |
| 8. | சிறப்பு சேவை மூலம் வருவாய் | 20.12 | 8. | வருமானம் தரும் திட்டங்கள் குறித்த செலவு | 11.79 |
| 9. | வருமானம் தரக்கூடிய இனங்கள் மூலம் வருவாய் | 12.85 | 9. | அறக்கட்டளை மூலம் வருவாய் | 0.90 |
| 10. | இதர வருவாய் | 12.36 | 10. | கடன்கள் | 11.32 |
| 11. | அறக்கட்டளை மூலம் வருவாய் | 0.79 | 11. | முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | 55.31 |
| 12. | கடன்கள் | 4.18 | | | |
| 13. | முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | 62.30 | | | |
| | மொத்த வருவாய் | 295.02 | | மொத்த செலவு | 291.83 |

[1997 மார்ச் 27

## இணைப்பு - 3

### நகராட்சிகளுக்கு அரசின் மூலம் பலதரப்பட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் மானியம் விவரம் (1996-97)

| வ.எண். | திட்டம் | தொகை | மானியம் | கடன் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | **திட்டம்—** | | | |
| 1. | முக்கிய சாலைகள் அமைத்தலும் மேம்படுத்துதலும் | 50.00 | - | 50.00 |
| 2. | ஏற்கனவே உள்ள சாலைகளைப் புதுப்பித்தலும் தார்த்தளமாக்குதலும் | 80.00. | 30.00 | 50.00 |
| 3. | குடிசைப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் | 80.00 | 80.00 | .. |
| 4. | பின்தங்கிய பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் | 18.00 | 18.00 | .. |
| 5. | மழைநீர் வடிகால் அமைத்தல் | 19.00 | 19.00 | .. |
| 6. | தாய்-சேய் நல விடுதிகளில் கூடுதல் வசதி மற்றும் பராமரிப்பு செய்தல் | 15.00 | 15.00 | .. |
| 7. | பொதுக்கழிப்பிடங்களுக்கு மேம்பாடு மற்றும் பராமரிப்பு செய்தல் | 16.00 | 16.00 | .. |
| 8. | பேருந்து நிலையங்களையும் சந்தைகளையும் சென்றடைய சாலைகள் அமைத்தல் | 50.00 | 50.00 | .. |
| 9. | நகராட்சிச் சாலைகள் பராமரிப்பு செய்வதற்கான சிறப்புத் திட்டம் | 300.00 | 300.00 | .. |
| 10. | அடிப்படை வசதிகள் அளிக்க சிறப்பு மான்யம் | 915.00 | 915.00 | .. |
| 11. | 10 வது நிதிக்குழுவின் பரிந்துரைப்படி அடிப்படை சேவைகளுக்கு | 873.00 | 873.00 | .. |
| | மொத்தம் | 2416.00 | 2316.00 | 100.00 |



1997 மார்ச் 27]

| | | | | |
|---|---|---|---|---|
| | **திட்டம் இல்லாதவை—** | | | |
| 1. | விற்பனை வரி மீது மேல்வரி | 1820.00 | 1820.00 | .. |
| | மொத்தம் | 4236.00 | 4136.00 | 100.00 |

## இணைப்பு - 4

### நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித் திட்டம் செயல்படுத்தப்படும் நகரங்கள்

**நகராட்சிகள்—**

(1) ஆலந்தூர்

(2) அம்பத்தூர்

(3) ஆவடி

(4) பல்லாவரம்

(5) காஞ்சிபுரம்

(6) கடலூர்

(7) திருப்பூர்

(8) திண்டுக்கல்

(9) தஞ்சாவூர்

(10) கும்பகோணம்

(11) ராஜபாளையம்

(12) சிவகாசி

(13) குமாரபாளையம்

(14) நாகர்கோயில்

(15) திருவொற்றியூர்

[1997 மார்ச் 27

**நகராட்சிகள்—தொடர்ச்சி**

(16) தாம்பரம்

(17) வேலூர்

(18) திருவண்ணாமலை

(19) கரூர்

(20) தூத்துக்குடி

மாநகராட்சிகள்—

(1) மதுரை

(2) கோயம்புத்தூர்

(3) திருச்சிராப்பள்ளி

(4) சேலம்

(5) திருநெல்வேலி

## இணைப்பு-5

### பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் நகரங்கள்

| வ. எண் | நகராட்சி/பேரூராட்சி | வ. எண் | நகராட்சி/பேரூராட்சி |
|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | 7. | உதகமண்டலம் |
| 2. | புதுக்கோட்டை | 8. | அருப்புக்கோட்டை |
| 3. | பவானி | 9. | கோவில்பட்டி |
| 4. | வாணியம்பாடி | 10. | மயிலாடுதுறை |
| 5. | குடியாத்தம் | 11. | பழனி |
| 6. | விழுப்புரம் | 12. | ஆம்பூர் |



1997 மார்ச் 27]

| வ. எண் | நகராட்சி/பேரூராட்சி | வ. எண். | நகராட்சி/பேரூராட்சி |
|---|---|---|---|
| 13. | திருச்செந்தூர் (பேரூராட்சி) | 28. | உடுமலைப்பேட்டை |
| 14. | பரமக்குடி | 29. | பட்டுக்கோட்டை |
| 15. | அரக்கோணம் | 30. | தேவர் சோழா (பேரூராட்சி) |
| 16. | விருதுநகர் | 31. | மன்னார்குடி |
| 17. | கடையநல்லூர் | 32. | ஆத்தூர் |
| 18. | ஸ்ரீவில்லிபுத்தூர் | 33. | திருப்பத்தூர் |
| 19. | சிதம்பரம் | 34. | தென்காசி |
| 20. | போடிநாயக்கனூர் | 35. | ஆரணி |
| 21. | தேனி அல்லிநகரம் | 36. | செங்கல்பட்டு |
| 22. | மேட்டுப்பாளையம் | 37. | புளியங்குடி |
| 23. | திருச்செங்கோடு | 38. | ராமநாதபுரம் |
| 24. | திண்டிவனம் | 39. | விருத்தாசலம் |
| 25. | கிருஷ்ணகிரி | 40. | கம்பம் |
| 26. | அம்பாசமுத்திரம் (பேரூராட்சி) | 41. | பண்ருட்டி |
| 27. | தர்மபுரி | | |

## பேரூராட்சிகள் நிர்வாகம்

தமிழகத்தில் உள்ள 635 பேரூராட்சிகளில் மொத்த நகர்ப்புற மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் வசித்து வருகின்றனர். பேரூராட்சிகள் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் நான்கு நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பட்டியல் 1-ல் பேரூராட்சிகளின் எண்ணிக்கை மற்றும் நிலைக்கான அடிப்படை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

[1997 மார்ச் 27

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடந்ததையொட்டி பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தினர்களும், 634 தலைவர்களும் தமிழ்நாட்டிலுள்ள பேரூராட்சிகளில் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920-ன் படியான பேரூராட்சிகள் நிர்வாகம் குறித்து அனைத்து பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்களுக்கும் ஒரு நாள் பயிற்சி நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்கள்**

1994-95-ம் ஆண்டுக்கான அனைத்துப் பேரூராட்சிகளின் மொத்த வருமானம் ரூ. 99.18 கோடியும், மொத்த செலவினம் ரூ. 95.84 கோடியும் ஆகும். பட்டியல் 2-ல் வரவு செலவுக்கான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியலமைப்பு சட்டம் 74 திருத்தத்தின்படி பேரூராட்சிகள் அனைத்தும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆகையால், இந்த உள்ளாட்சி அமைப்புகள் இதுவரை விதித்து வந்த வீட்டு வரிக்கு பதிலாக தற்போது சொத்து வரி விதிக்கலாம். அனைத்து பேரூராட்சிகளும் இதனைப் பரிசீலித்து ஏப்ரல் 1997 முதல் சொத்து வரி விதிப்பு முறைக்கு மாற்றம் செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் இவைகளின் வருமானம் கூடுதல் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சாலைகள் அபிவிருத்திக்கு பேரூராட்சிகளுக்கான நிதி உதவி**

14,000 கிலோ மீட்டருக்கும் மேலான சாலைகள் மாநிலம் முழுவதும் உள்ள பேரூராட்சிகளின் பராமரிப்பில் உள்ளன. 96-97-ம் ஆண்டில் ரூ.90 லட்சம் நிதி உதவி திட்டத்தின் கீழ் சாலைகள் அபிவிருத்திக்காக வேலைகள் செய்யப்பட்டுள்ளன. இத்தொகை நீங்கலாக அடிப்படை வசதிகளுக்கான ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 25 கோடியில் இருந்து ரூ. 3.54 கோடிக்கு மேல் சாலைகள் அபிவிருத்திக்கு பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதி உதவியில் இருந்து 260 கி.மீ. சாலை வேலைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறிய குடிநீர்த் திட்டங்களுக்கான உதவி**

ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூ. 2 லட்சம் வீதம் சிறிய குடிநீர் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு என 7 பேரூராட்சிகளுக்கு நிதி உதவி



1997 மார்ச் 27]

வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் திறந்தவெளி கிணறுகள் அல்லது கைப்பிடியுடன் கூடிய ஆழ்துளை கிணறுகள் மற்றும் குழாய் விஸ்தரிப்பு பணி ஆகியவை. புதியதாக உருவாகி உள்ள குடியிருப்புகள் அல்லது பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் இல்லாத குடியிருப்புகளுக்கு அமைக்கப்படுகிறது. 1996-97-ஆம் ஆண்டில் 7 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தெருவிளக்குகள் பராமரிப்பிற்கென பேரூராட்சிகளுக்கான உதவி**

தெருவிளக்கு பராமரிப்பு பேரூராட்சிகளின் முன்னுரிமைப் பட்டியலில் உள்ள இனமாகும். மாநிலத்தில் உள்ள பேரூராட்சிகளில் பராமரிக்கப்படும் தெருவிளக்குகள் விவரங்கள்:

| | | |
|---|---|---|
| 1. | உயர்கம்ப மின்விளக்குகள் | 71 |
| 2. | சோடியம் ஆவிவிளக்குகள் | 3365 |
| 3. | மெர்குரி ஆவிவிளக்குகள் | 6376 |
| 4. | 4' குழல் விளக்குகள் | 205460 |
| 5. | குவி விளக்குகள் | 94 |
| 6. | சாதா விளக்குகள் | 6712 |
| | மொத்தம் | **222078** |

1996-97-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 42.00 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இது நீங்கலாக அடிப்படை வசதிகள் திட்டத்திற்கான ரூபாய் 25 கோடியில் ஒரு கணிசமான தொகையான ரூபாய் 6.36 கோடி தெருவிளக்குகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

**பேரூராட்சிகளுக்கான கட்டணக் கழிப்பிடம் கட்டுதல்**

வெளியிடங்களிலிருந்து பெருவாரியான மக்கள் திருவிழா, வியாபாரம், சந்தை ஆகிய காரணமாக கூடக்கூடிய பேரூராட்சி பகுதிகளில் சுத்தமான சுற்றுப்புற சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் குளியல் அறையுடன் கூடிய கட்டணக் கழிப்பிடங்கள் கட்டுவதற்காக 1996-97-ம் ஆண்டில் ரூ. 10 லட்சம் அரசு அங்கீகரித்துள்ளது.

[1997 மார்ச் 27

**கோயில் நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்:**

பேரூராட்சிப் பகுதிகளில் சுமார் 100 பிரபலமான கோயில்கள் உள்ளன. இப்பகுதியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடுகின்றனர். இப்பகுதிகளில் தேவையான அடிப்படை வசதிகள் அமைத்துக் கொடுக்கும் பட்சத்தில் சிறந்த சுற்றுலா தலமாக அமையக்கூடிய வாய்ப்புகளை கொண்ட கோவில் நகரங்களாக உருவாக வழிவகை உள்ளன. இதனை முன்னிட்டு சாலை, குடிநீர், கட்டணக் கழிப்பிடங்கள் ஆகியவற்றை இந்தக் கோவில் நகரங்களில் அமைப்பதற்கு 1996-97-ஆம் ஆண்டில் ரூ.8 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. விரைவில் முடியும் தருவாயில் உள்ளன.

**ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்:**

பேரூராட்சிகள் வருமானத்தைப் பெருக்கவும், அவை தற்சார்பு உடையதாக அமையவும் அரசு ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தில் பேரூராட்சிகளுக்கு பேருந்து நிலையம், வணிக வளாகம், காய்கறி கடைகள், தங்கும் இட வசதிகள் ஆகியவை கட்டும் இந்த பிரதிபலன் பெறத் தக்க முயற்சிகளுக்கு அரசு கடன் உதவி வழங்குகிறது. இந்தக் கடன் வசதியை 20 ஆண்டு தவணைகளில் 16% வட்டியுடன் திரும்பச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தில் 1991-92-ம் ஆண்டு முதல் 1996-97-ம் ஆண்டு வரை 151 பேரூராட்சிகள் ரூ.22.54 கோடி கடனுதவி பெற்று பயன் அடைந்துள்ளது.

**சிறிய மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி திட்டம்:**

இந்திய அரசு நிதி உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் 11 பேரூராட்சிகள் 1996-97-ம் ஆண்டில் இத்திட்டத்தினால் பயன் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அடிப்படை வசதிகள் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் 1996-97-ம் ஆண்டிற்கு பேரூராட்சிகளின் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்வதற்கென ரூபாய் 25.00 கோடி வழங்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—



1997 மார்ச் 27]

| | திட்டம். | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1. | சாலை | 3.54 |
| 2. | வடிகால்கள் | 1.43 |
| 3. | குடிநீர் | 12.57 |
| 4. | தெருவிளக்குகள் | 6.36 |
| 5. | பொது சுகாதார வாகனங்கள் | 1.10 |
| | மொத்தம் | **25.00** |

இப்பணிகள் அனைத்தும் முடிவடையும் தருவாயில் உள்ளன. 1997-98-ஆம் ஆண்டிற்கும் இதே போன்று ரூபாய் 25.00 கோடி நிதி உதவி இத்திட்டத்தை செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

**கால்நடைக் கொட்டகை கட்டுதல்:**

1996-97-ம் ஆண்டில் 2 பேரூராட்சிகளில் சாலை, வடிகால் வசதிகளுடன் கூடிய கால்நடை கொட்டகை கட்டுவதற்கு ரூபாய் 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பத்தாவது நிதிக்குழுவின்படியான நிதி உதவி:**

மத்திய அரசின் 10-வது நிதிக் குழுவின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியம் ரூபாய் 10.74 கோடியில் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் இதே அளவுக்கான நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

**பகுதி 2 திட்டம், 1997-98:**

கீழ்க் குறிப்பிட்டுள்ள 2 திட்டங்கள், 1997-98-ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | கட்டண கழிப்பிடங்களுக்கு நீர் வசதி செய்து கொடுத்தல் | ரூ.4.50 லட்சம். |
| 2. | உலர் கழிப்பிடங்களுக்கு நிரந்தர நீர்வசதி ஏற்படுத்திக் கொடுத்தல். | ரூ.60.00 லட்சம். |

[1997 மார்ச் 27

## இணைப்பு 1

| வ. எண் | நிலை | ஆண்டு வருமானம் (ரூ. லட்சத்தில்.) | பேரூராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சிறப்பு நிலை | 20.00 மேல் | 28 |
| 2. | தேர்வுநிலை | 10.00 மேல் | 283 |
| 3. | முதல்நிலை | 8.00 மேல் | 233 |
| 4. | இரண்டாம் நிலை | 4.00 மேல் | 91 |
| | | மொத்தம் | 635 |

## இணைப்பு 2

| வ. எண் | வரவு | தொகை (கோடியில்) | வ. எண் | செலவு | தொகை (கோடியில்.) |
|---|---|---|---|---|---|
| 1. | வரியினங்கள் | 27.05 | 1. | பணியமைப்பு | 32.35 |
| 2. | வரியில்லாத இனங்கள் | 56.83 | 2. | தெருவிளக்குகள் | 9.13 |
| 3. | இதர இனங்கள் | 15.30 | 3. | குடிநீர் | 12.20 |
| | | | 4. | பொதுச் சுகாதாரம் | 8.47 |
| | | | 5. | நிர்வாகச் செலவுகள் | 4.23 |
| | | | 6. | சாலைகள் | 5.50 |
| | | | 7. | அரசு கடன் திருப்பி செலுத்தியது | 0.94 |
| | | | 8. | இதர இனங்கள் | 23.02 |
| | மொத்தம் | 99.18 | | மொத்தம் | 95.84 |



1997 மார்ச் 27]

### மாநகராட்சிகள் நிருவாகம்

தமிழ்நாட்டில் தற்போது 6 மாநகராட்சிகள் உள்ளன. இவற்றில் சுமார் 40 லட்சம் மக்கட்தொகையுடன் உள்ள சென்னை மாநகராட்சியும் சுமார் 3.75 லட்சம் மக்கட்தொகையுடனான திருநெல்வேலி மாநகராட்சியும் இவற்றில் அடங்கும்.

ஒவ்வொரு மாநகராட்சியின் பரப்பளவு, மக்கள் தொகை, 1995-96-ம் வருடத்திய வரவு மற்றும் செலவு, இவற்றில் உள்ள சாலையின் நீளம், தெருவிளக்குகள் எண்ணிக்கை மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

| மாநகராட்சியின் பெயர் | பரப்பளவு (ச.கி.மீ.) | மக்கள் தொகை 1991 கணக்கெடுப்பின்படி (லட்சத்தில்.) | சாலையின் நீளம் (கி.மீ.) |
|---|---|---|---|
| சென்னை | 174 | 38.41 | 2202 |
| மதுரை | 51.85 | 9.53 | 484 |
| கோயம்புத்தூர் | 105.60 | 8.16 | 683.50 |
| சேலம் | 91.34 | 5.85 | 448 |
| திருச்சிராப்பள்ளி | 146.90 | 6.66 | 599.67 |
| திருநெல்வேலி | 108.65 | 3.69 | 514.508 |

| மாநகராட்சியின் பெயர் | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | 1995-96 வருடத்திய வரவு-செலவு (ரூபாய் கோடியில்.) | | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சென்னை | 90686 | 215 | 159 | 19710 |
| மதுரை | 16313 | 26.82 | 23.15 | 6920 |
| கோயம்புத்தூர் | 32000 | 64.88 | 64.05 | 4231 |
| சேலம் | 14900 | 15.31 | 14.76 | 2381 |
| திருச்சிராப்பள்ளி | 20154 | 26.16 | 20.63 | 2847 |
| திருநெல்வேலி | 11740 | 13.34 | 7.99 | 1565 |

[1997 மார்ச் 27

## சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி, நாட்டிலுள்ள மாநகராட்சிகளில் 300 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட பழமையான மாநகராட்சிகளில் ஒன்றாகும். இம்மாநகராட்சியின் எல்லைகள் 174 சதுர கிலோமீட்டர் பரந்து விரிந்துள்ளது. 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கள் தொகை 38.41 லட்சம் ஆகும்.

2. சென்னை மாநகராட்சிக்கு 1997-98 ஆம் ஆண்டு ரூ. 300 கோடி வருமானம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருவாயில் செலவினத் தொகை ரூ. 303 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இம்மாநகராட்சியானது ரூ. 185 கோடிக்கணக்கான மூலதனப் பணிகளுக்கான திட்டங்களைத் திட்டியுள்ளது.

3. தமிழ்நாடு நகர அடிப்படை வசதிக் கழகம் மற்றும் பெருநகரத் திட்டங்களிலிருந்தும் கடன் மற்றும் தீவிர வரி வசூல் மூலமாக மூலதனத் திட்டத்திற்கு நிதியுதவி திரட்ட சென்னை மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

### சாலைகள்

4. சென்னை மாநகராட்சி 302 கிலோ மீட்டர் தொலைவிற்கான பேருந்து வழித்தடச்சாலைகளையும், 1900 கிலோ மீட்டர் உட்புற சாலைகளையும் பராமரித்து வருகிறது. 1997-98-ல் சாலைப் பணிகளுக்கு ரூ. 53 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தெரு விளக்குகள்

தற்போது பல்வேறு வகையைச் சேர்ந்த 92,074 தெரு விளக்குகள் உள்ளன. ஒவ்வொரு வகையின் கீழ் உள்ள விளக்குகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | 40 வாட் குழல் விளக்குகள் | 53,112 |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் (உயர் கம்பங்கள்) 400 வாட் | 477 |
| 3. | சோடியம் ஆவி விளக்குகள் 250 வாட் | 22,566 |
| 4. | சோடியம் ஆவி விளக்குகள் 150 வாட் | 4,634 |



1997 மார்ச் 27]

| | | |
|---|---|---|
| 5. | சோடியம் ஆவி விளக்குகள் 70 வாட் | 10,524 |
| 6. | மற்ற வகை | 761 |
| | மொத்தம் | 92,074 |

தெரு விளக்குகளில் மேம்பாட்டுப் பணிகள் அண்மை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தெரு விளக்குகளின் முக்கிய அமைப்பு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் முக்கிய சாலை சந்திப்புகளில் அதிக வெளிச்சம் தரும் உயர் கம்ப விளக்குகளுக்கு வகை செய்வதன் மூலம் தெரு விளக்குகளை மேம்படுத்துவதற்கும் 20,400 சோடியம் ஆவி விளக்குகளும் 5,000 குழல் விளக்குகளும் போடுவதற்கு ரூ. 25 கோடி செலவிடப்படும்.

### பாலங்கள்

6. சென்னை மாநகரில், போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு பார்த்தால், பாலங்களை மேம்படுத்துவதும், புதிய பாலங்கள் கட்டுவதும் மிகவும் அவசியமாகிறது. சென்னை மாநகராட்சி 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 30 கோடி செலவில் பாலங்களை மேம்படுத்தவும்/புதிதாகக் கட்டவும் உத்தேசித்துள்ளது.

### மழைநீர் வடிகால்கள்

7. மழைக் காலங்களில், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும் சாலைகளைப் பாதுகாக்கவும், சென்னை மாநகராட்சி சுமார் 663 கி.மீ. தொலைவிற்கு மழைநீர் வடிகால்களைப் பராமரித்து வருகிறது. தாழ்வான பகுதிகளில் தற்போதுள்ள மழை வடிகால்களை மேம்படுத்தவும், புதிய மழைநீர் வடிகால்களைக் கட்டவும் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 20 கோடி மதிப்பீட்டுச் செலவில் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்திய தொழில் நுட்பக் கழகத்தின் உதவியோடு மழைநீர் வடிகால் சீர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

### திடக்கழிவு நிர்வாகம்

8. திறமையான துப்புரவுப் பணி நிர்வாகம், சிறப்பானதொரு அடிப்படை சுகாதார மேம்பாட்டைக் காணும். சென்னை மாநகரில் 2500 டன் கழிவுப் பொருட்கள் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்றன.

[1997 மார்ச் 27

சுமார் 7500 துப்புரவுப் பணியாளர்கள் மூலம் இக்கழிவுப் பொருட்கள் சேகரித்து அகற்றப்படுகின்றன. நடப்பாண்டில் வாகனங்கள் வாங்கவும் மற்ற பணிகளுக்கும் ரூ. 10 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பொதுச் சுகாதாரம்

9. பொதுச் சுகாதாரத்திற்கான தேவைகளையும், மகப்பேறு குழந்தை நலத்திற்கான தேவைகளையும் நிறைவு செய்வதற்காக சென்னை மாநகராட்சி 62 மருந்தகங்களையும், 93 சுகாதார மையங்களையும் பராமரித்து வருகிறது. 93 சுகாதார மையங்களில் தொடக்க சுகாதார பாதுகாப்பு வசதி உள்ளது.

## மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சி துவக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. சென்னைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய மாநகரமான மதுரை 51.85 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். 1997-98 ஆம் நிதியாண்டில் மாநகராட்சியின் வருமானம் ரூ. 31.03 கோடியாகவும், செலவினம் ரூ. 38.34 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### சாலைகள்

மதுரை மாநகராட்சி 484 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. மதுரை மாநகர சாலைகள் ரூ. 4 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

### தெரு விளக்குகள்

மதுரை மாநகராட்சி 12,416 குழல் விளக்குகளையும் 3,898 சோடியம் ஆவி விளக்குகளையும் தெரு விளக்குகளாகப் பராமரித்து வருகின்றது. 1997-98-ம் ஆண்டில் 1,000 குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மாநகரத்தின் 3 பிரதான இடங்களில் ரூ. 25 லட்சம் செலவில் உயர் கோபுர மின் விளக்குகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மழைநீர் வடிகால்கள்

போதிய அளவு மழை நீர் வடிகால்கள் இல்லாமல் இருப்பது இம்மாநகரத்தின் முக்கிய குறையாகும். எனவே, தமிழ்நாடு நகர்ப்புற



1997 மார்ச் 27]

வளர்ச்சி நிதிக் குழுமத்திலிருந்து பெற்ற கடன் நிதியிலிருந்து ரூ. 2 கோடி செலவில் பிரதானச் சாலைகளில் மழைநீர் வடிகால்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொள்ள தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம் ஆய்வுகளை செய்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### புதிய பேருந்து நிலையப் பணி

மதுரை வேலூர் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையப் பணிக்கு இதுகாறும் மதுரை மாநகராட்சி ரூ. 3.05 கோடியை மாநகராட்சி நிதியிலிருந்து செலவழித்துள்ளது. இத்திட்டத்தின் முதற் கட்டப் பணியை முடிப்பதற்கு இன்னும் ரூ. 5 கோடி தேவைப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### குடிநீர்

வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 14 மேல்நிலைத் தொட்டிகளில், 8 மேல்நிலைத் தொட்டிகளில் மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. மீதமுள்ள 6 தொட்டிகளிலும் குடிநீர் ஏற்றி விநியோகம் செய்ய அரசரடி முதல் ஜோசப் பூங்கா வரை தனி பிரதான குழாய்களை ரூ. 2.693 கோடி செலவில் பதிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு இப்பணியை மேற்கொள்ள முன்பணமாக ரூ. 50 லட்சம் செலுத்தப்பட்டுள்ளது. குடிநீர் பிரதானக் குழாய்கள் அமைத்து, இதுநாள் வரை குடிநீர் இணைப்பு பெறாத குடியிருப்புகளுக்கு சுமார் 10,000 எண்ணிக்கையில் வீட்டு இணைப்புகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 1997-98-ம் ஆண்டில் சுமார் 10 கிலோமீட்டர் நீளத்திற்கு பிரதானக் குழாய்கள் அமைத்து குடிநீர் இணைப்புகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### திறந்தவெளி சாக்கடை

மாநகராட்சி விஸ்தரிப்புப் பகுதிகளில் சுமார் 10 கிலோமீட்டர் நீளத்தில் ரூ. 40 லட்சம் மதிப்பீட்டில் திறவைச் சாக்கடைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது பாதாளச் சாக்கடை பராமரிப்பில் உள்ள இடர்பாடுகளை அவ்வப்போது நீக்குவதற்கு லாரியில் நிறுவப்பட்ட "சூவர் கிளீனிங் இயந்திரங்கள்" 2 எண்ணிக்கை ரூ. 35 லட்சம் செலவில் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

## கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி 1981 மே மாதம் தோற்றுவிக்கப்பட்டது. இம்மாநகர் 105.60 ச.கி.மீ. பரப்பளவும் 1991-ஆம் ஆண்டு கணக்குப்படி 12 லட்சம் மக்கட்தொகையும் கொண்டுள்ளது.

**சாலைகள் :**

இம்மாநகராட்சி 683.50 கி.மீ. நீளம் உள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. இதில் 70.00 கி.மீ. பேருந்து தடங்கள் ஆகும். மீதம் உட்புறச் சாலைகள் ஆகும். 1997-98-ஆம் ஆண்டில் 20 கி.மீ. நீள பேருந்து தடங்கள் ஆஸ்பால்டிக் கான்கிரீட் தளங்களாக ரூ.2 கோடி செலவில் புதுப்பிக்கவும் சுமார் 110 கி.மீ. நீள உட்புற சாலைகளை ரூ.3.80 கோடி செலவில் புதுப்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிய மனைப்பிரிவு பகுதிகளில் சுமார் 36 கி.மீ. நீளத்திற்கு ரூ.2.50 கோடி செலவில் புதிய சாலைகள் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நடைபாதைகள், சிறுபாலங்கள் ஆகியவற்றை ரூ.1.6 கோடி செலவில் அபிவிருத்தி செய்யவும் பராமரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் :**

தற்போது இம்மாநகராட்சி பகிர்மானக் குழாய்களை அமைத்து வீட்டிணைப்புகள் மூலமாகவும், பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்படாத மற்றும் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படாத வீட்டுமனை பிரிவுகளிலும் லாரிகள் மூலமும், குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, ரூ.1838 லட்சங்கள் செலவில் சுமார் 100 கி.மீ. நீளம் பகிர்மான குழாய்கள் அமைக்கவும், ஏற்கனவே உள்ள பகிர்மான குழாய்களையும் நீர்த் தொட்டிகளையும் பழுது பார்க்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சி மழைநீர் வடிகால் மற்றும் நகரின் ஒரு பகுதியில் புதை வடிகால் திட்டமும் பராமரித்து வருகிறது. இந்நிதியாண்டில் சுமார் 100 கி.மீ. நீள மழைநீர் வடிகால்களைப் பராமரிக்கவும், சில புதிய மனைப்பிரிவுகளில் 45 கி.மீ. நீளத்தில் புதிய வடிகால்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1997 மார்ச் 27]

**மின்சாரம் :**

இந்நிதியாண்டில் அவசியப்படும் இடங்களில் புதிதாக குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அடிப்படை வசதிகள் :**

அரசு கடன் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகளுக்கான பணிகள் மேற்கொள்ள ரூ.3.00 கோடி செலவில் அரசு நிதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அரசிடம் ரூ.1.14 கோடி மான்யமாகப் பெற்று 10-வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி மாநகராட்சியில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிவுறும் தருவாயிலுள்ளன.

சாலைகள்

குடிநீர் விநியோகம்

தெருவிளக்குகள் அமைத்தல்

திடக்கழிவு பராமரித்தல் (Solid Waste Management)

**ஊக்கப் பரிசுகள் :**

அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளிலிருந்து அதிகப்படியான மதிப்பெண்கள் (10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில்) பெறும் மாணவ/மாணவியர்களுக்கு பரிசுகளும் ரொக்க ஊக்க பரிசும் அளிப்பதற்கும், மாநகராட்சிப் பள்ளிகளின் அதிகப்படியான தேர்ச்சி விழுக்காடு பெறும் முதல் 3 பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர், ஆசிரியர்களை சிறந்த முறையில் கௌரவிக்கவும், (10, 12-ஆம் வகுப்பு) 80% மேல் தேர்ச்சி விழுக்காடு பெறும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் நற்சான்றிதழ் அளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

**பொதுச் சுகாதாரம் :**

*கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:*

1. மாநகர சுகாதாரப் பிரிவுக்கு 5 கழிவுநீர் லாரிகள் வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
2. குப்பை, கூளங்கள், மாற்று நிலையங்கள் இராமநாதபுரம் மற்றும் கழிவுநீர் பண்ணைகளில் ரூ.60 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

3. மாநகராட்சி சீதாலட்சுமி மகப்பேறு மையத்தில் ரூ.6.00 லட்சம் செலவில் ஸ்கேன் கருவி வாங்கிப் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. பாதாளச் சாக்கடை அடைப்பை நீக்கம் செய்யும் கருவி (சூவர் கிளினிங் மெஷின்) மற்றும் சாலையை சுத்தம் செய்யும் கருவி ஆகியன ரூ.14.00 லட்சம் செலவில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புறநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 34.75 கோடிக்கு திட்டங்களாக கோயம்புத்தூர் மாநகராட்சியால் எடுத்துக் கொள்ள திட்டமிட்டுள்ளது.

**சேலம் மாநகராட்சி**

மாங்கனி மாநகரமான சேலம் 91.34 ச.கி.மீ. பரப்பளவும், 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 5,85,350 மொத்த மக்கள் தொகையும் கொண்டு தமிழ்நாட்டில் 5-வது பெரிய மாநகரமாக விளங்குகிறது. சேலம் மாநகராட்சியாக 1-6-1994-ல் அறிவிக்கப்பட்டது. சேலம், மாநகராட்சியில் முந்தைய சூரமங்கலம் நகராட்சி, ஜாரிகொண்டாலம்பட்டி பேரூராட்சி மற்றும் 21 பஞ்சாயத்துக்கள் அடங்கியுள்ளன.

**சாலைகள் :**

சேலம் மாநகராட்சியில் 448 கி.மீ. கொண்ட சாலைகள், வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள் அபிவிருத்திக்காக 1997-98-ம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் ரூ.2.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கட்டிடம் :**

சேலம் மாநகராட்சியில் 1996-97-ம் ஆண்டில் ரூ.26.14 லட்சத்தில் தாய், சேய் நலவிடுதி மற்றும் குழந்தைகள் நல மையம், துவக்கப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் பழுதுபார்த்தல் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அங்காடிக் கடைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் கட்டப்பட்டுள்ளது. 1997-98-ம் ஆண்டுக்கு ரூ.1.40 கோடி கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**தெருவிளக்குகள் :**

சேலம் மாநகராட்சியில் 14,900-க்கும் மேற்பட்ட பல்வேறு வகையான தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1996-97-ம் ஆண்டுக்கு



1997 மார்ச் 27]

உதிரி பாகங்கள் மற்றும் பராமரிப்புக்காக ரூ.58.10 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கூடுதல் தெருவிளக்குகள் அமைக்க ரூ.1.00 கோடி செலவிடப்படவுள்ளது.

**குடிநீர் விநியோகம் :**

சேலம் மாநகராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், மேட்டூர் அணையிலிருந்து வழங்கப்படுகிறது. 58 கி.மீ. தொலைவிலுள்ள காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுத்து மாநகராட்சிப் பகுதியிலுள்ள 18 மேல்நிலைத் தொட்டிக்கு அனுப்பப்படுகிறது. 1993-94-ம் ஆண்டில் 36,419 எண்ணிக்கையிலிருந்து குடிநீர்க் குழாய் இணைப்புகள் 1995-96-ம் ஆண்டில் 39,000 ஆகவும் உயர்ந்துள்ளன. 1996-97-ம் ஆண்டில் 42,000 குடிநீர்க் குழாய் இணைப்புகள் உள்ளன.

மேட்டூர்-ஆத்தூர் ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 60 கோடி மதிப்பீட்டில் உலக வங்கியினால் வடிவமைக்கப்பட்டு இறுதியாக்கப்பட்டது. இக்கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டத்தில் சூரமங்கலம் உள்ளிட்ட சேலம் மாநகராட்சி, ஆத்தூர் நகராட்சி மற்றும் 264 வழியில் அமைந்துள்ள கிராமங்கள் பயனடைகின்றன. இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிப் பகுதியில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் குடிநீர் வழங்குவதன்மூலம் பொதுமக்கள் தேவை நிறைவு செய்யப்படும்.

**பொதுச் சுகாதாரம் :**

பொதுச் சுகாதாரப் பிரிவில் 1996-97-ம் ஆண்டு ரூ.5.91 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1997-98-ம் ஆண்டிற்கு ரூ.7.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1997-98-ம் ஆண்டில் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் 28 துணை சுகாதார மையங்கள் புதியதாக் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பணியாளர்கள் ஊதியம், உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய செலவினங்களுக்கு ரூ. 22 லட்சம் தேவையாக உள்ளது. 1997-98-ம் ஆண்டில் தற்போது உள்ள 3 உரக்கிடங்குகளை (Compost Yards) ரூ.30 லட்சம் செலவில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.10 லட்சம் செலவில் 2 நடமாடும் மருத்துவ ஊர்தி (Mobile Medical Vans) போதிய மருத்துவ வசதியுடன் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1997-98-ம்

[1997 மார்ச் 27

ஆண்டில் ரூ. 100 லட்சம் செலவில் மாநகராட்சிப் பகுதியில் 20 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நகர அபிவிருத்தி திட்டம்**

சேலம் மாநகராட்சி நகர அபிவிருத்தி திட்டப் பணிகளுக்காக அரசாணை எண் எம்.எஸ்.691, நாள்: 30-10-89-ல் ரூ. 5.92 கோடி இம்மாநகராட்சியின் கீழ்க்கண்ட பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தப் பணிகள் முடிவடைந்துவிட்டன.

| | | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1. | அச்சுவான் ஏரியில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல் | 1.93 |
| 2. | பார உந்து நிலையம் | 0.56 |
| 3. | சந்தைப் பேட்டை வளாகத்தில் கடைகள் கட்டுதல் | 0.60 |
| 4. | கழிவுநீர் பராமரிப்பு | 0.33 |
| 5. | சாலைப் பணிகள் | 2.50 |
| | மொத்தம் | 5.92 |

**மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு**

இத்திட்டத்தின் கீழ் பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்காக ரூ.22.34 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் 31-3-97-க்குள் செய்து முடிக்கப்படும்.

**அடிப்படை வசதிகள் திட்டம்**

சேலம் மாநகராட்சிக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு அரசினால் ரூ.5.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சி கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள உள்ளது.



1997 மார்ச் 27]

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கல் | 50 |
| 2. | துப்புரவுப் பணிகள் | 170 |
| 3. | சாலைகள் | 155 |
| 4. | சாலை உருளை மற்றும் கருவிகள் வாங்க | 25 |
| 5. | தெரு விளக்குகள் | 100 |
| | மொத்தம் | 500 |

**பத்தாவது நிதிக்குழு**

பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் கீழ் இம்மாநகராட்சிக்கு ரூ.80 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட 69 வடிகால் பணிகளும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**

1-6-94 முதல் திருச்சிராப்பள்ளி நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட பின்பு இதன் பரப்பளவு 23.26 சதுர கிலோ மீட்டரிலிருந்து 46.90 சதுர கிலோமீட்டராக விரிவுபடுத்தப்பட்ட இதன் மக்கள் தொகை 1991-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 6.66 லட்சமாக உயர்ந்துள்ளது

**சாலைகள்**

இம்மாநகராட்சியில் 599.67 கிலோ மீட்டர் நீளம் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் 1996-97-இல் மொத்தம் 96.97 கிலோ மீட்டர் நீளம் சாலை பராமரிப்பு வேலைகள் நடைபெற்று வருகிறது. 1997-98-ல் 90.00 கிலோ மீட்டர் நீளம் சாலை பராமரிப்பு பணிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தெருவிளக்குகள்**

தற்போது இம்மாநகராட்சியில் 20,514 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1996-97-ல் புதிதாக 190 தெருவிளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1997-98-ல் புதிதாக 1,200 மெர்குரி மற்றும் சோடியம் வேப்பர் விளக்குகள் பொருத்தவும் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

## தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோகம் விஸ்தரிப்பு செய்தல்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதி முழுவதும் போதுமான அளவு பொது குடிநீர் குழாய் வசதி செய்யப்பட்டுள்ளது. இதன் தலைமை நீரேற்று நிலையம் கம்பரசம்பேட்டை காவிரி கரையில் அமைக்கப்பட்டு இதன் மூலம் அந்தந்த 17 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் பம்ப் செய்து வழங்கப்பட்டு வருகிறது. அடிக்கடி மின்தடை ஏற்படுவதால், மாநகராட்சி பகுதியில் முழு அளவில் குடிநீர் விநியோகம் செய்ய முடியவில்லை. இதற்காக ரூ. 118.00 லட்சம் செலவில் மூன்று ஜெனரேட்டர்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**அடிப்படை வசதிகள் மற்றும் 10-வது நிதிக்குழு கமிஷன் மான்ய திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட வேலைகளின் விவரம்**

அரசு இம்மாநகராட்சிப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு ரூ.5.50 கோடியும் மற்றும் ரூ.71.00 லட்சம் மத்திய அரசு தனது 10-வது நிதிக்குழுவின் கீழ் மான்யமாகவும் அளித்துள்ளது.

இந்த நிதி உதவியில் கீழ்கண்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன:

| | | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| சாலைகள் | 285 | வேலைகள் | 472.01 |
| தெரு விளக்குகள் | 1200 | எண்ணிக்கை | 27.70 |
| குடிநீர் விநியோகம் விஸ்தரிப்பு | 15 | எண்ணிக்கை | 70.89 |
| பொது சுகாதாரம் குப்பை வண்டிகள் மற்றும் இதர பணி | 20 | எண்ணிக்கை | 46.40 |
| | | மொத்தம் | 617.00 |

10-வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் மொத்தம் 91 வேலைகள் (சாலை வசதி மற்றும் பாலங்கள்) செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் விவரம்:



1997 மார்ச் 27]

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| சாலைகள் | 26.49 |
| கட்டிடம், சிறுபாலங்கள் 71 வேலைகள் மற்றும் குடிநீர் விநியோகம் | 56.18 |
| மொத்தம் | 82.67 |

**வாகனம் மற்றும் தளவாடச் சாமான்கள்**

அருகில் உள்ள நகராட்சி மற்றும் பஞ்சாயத்துக்களைச் சேர்த்து மாநகராட்சியாக உயர்த்தப்பட்டாலும் அடிப்படை தேவையான பொது வேலைக்கான லாரிகள், குப்பை லாரிகள் மற்றும் கல்லேஜ் லாரிகள் போதுமானதாக இல்லை. எனவே, ஏற்கெனவே திருச்சிராப்பள்ளி நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வந்த வாகனங்களில் சிலவற்றை சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்க பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

எனவே இம்மாநகராட்சிக்கு (44 எண்ணிக்கைகள்) மினிஹாட்மிக்ஸ் பிளாண்ட், டீசல்ரோடுரோலர், பொதுப்பணி லாரிகள், குடிநீர் விநியோக லாரிகள், கல்லேஜ் லாரிகள் மற்றும் ஆய்வு வாகனம் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### திருநெல்வேலி மாநகராட்சி

1-6-1994 முதல் திருநெல்வேலி மாநகராட்சி செயல்படத் துவங்கியுள்ளது. மொத்தப் பரப்பளவு 108.65 ச.கி.மீ. 1991-ம் வருடத்திய மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி மக்கட்தொகை 3,68,550. இதன் நிர்வாகம் நான்கு வார்டு அலுவலகங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. 55 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

**2. சாலைகள்**

இம்மாநகராட்சி 514.058 ச.கி.மீ. சாலைகளை பராமரித்து வருகின்றது. 1996-97-ம் ஆண்டில் புதிய சாலைகள் அமைக்கவும் ஏற்கனவே உள்ள சாலைகளை பராமரிப்பு செய்யவும் ரூ.38.00 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1997-98-ம் ஆண்டில் 34.80 கி.மீ. சாலைகளை ரூ.175 லட்சம் செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 27

### 3. குடிநீர் விநியோகம்

இம்மாநகராட்சி தாமிரபரணியை நீர் நிலையாகக் கொண்டு நான்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிலையங்களை, திருநெல்வேலி, பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் பகுதிகளுக்காகப் பராமரித்து வருகின்றது. நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு தலைமை நீர் தேக்கத்தில் குடிநீர் வரத்தைப் பொறுத்து 60 லிட்டர் முதல் 90 லிட்டர் வரை குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. தற்பொழுது 1162 அடி பம்புகளும், ஆழ்துளைக் கிணறுகளும், 32700 வீட்டுக் குடிநீர் இணைப்புகளும், 935 பொதுக் குழாய்களும், உள்ளன. 240.30 கி.மீ. பகிர்மான குழாய் உள்ளது. மாநகராட்சிப் பகுதிகளில் சில இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் இல்லாமல் உள்ளது. 1996-97-ல் குடிநீர் விநியோகப் பராமரிப்பிற்கு ரூ.262 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1997-98-ம் ஆண்டிற்கு ரூ.321 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளின் குடிநீர் அபிவிருத்திக்கென அரசு சுமார் ரூ. 6.63 கோடி திட்டத்தினை அனுமதித்து அதனை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தவுள்ளது. இது போன்றே தச்சநல்லூர் வார்டு பகுதிகளுக்கு மற்றொரு திட்டம் ரூ.1.14 கோடிக்கு அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த உள்ளது. இந்த இரு திட்டங்களும் மார்ச்சு 99-க்குள் முடிவடையும் என எதிர்நோக்கப்படுகின்றது. இத்திட்டங்கள் பூர்த்தியடைந்த. உடன் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு விடும்.

### திடக்கழிவு நிர்வாகம்

இம்மாநகராட்சியில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 64 மெட்ரிக் டன் கழிவுகள் சேகரிக்கப்பட்டு பழையப் பேட்டை, பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் ஆகிய மூன்று மாநகராட்சி உரக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

### தெரு விளக்கு

இம்மாநகராட்சியால் தெரு விளக்குப் பராமரிப்பில் பழுதடைந்த மின்சார விளக்குகளை மாற்றும் பணி மட்டும் செய்யப்பட்டு வருகின்றது. மின்வாரியம் மூலம் டிரான்ஸ்பாரம் மற்றும் மின் கம்பிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. 1997-98-ம் ஆண்டிற்கு புதிதாக 35[illegible] சோடியம் ஆவிவிளக்குகள் பொருத்த ரூ.25.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

216 649.
சென்னை-600 008